# வேலாயுதம்



1895 — 2010





## 115ஆவது ஆண்டு நிறைவு விழா

## சிறப்பு மலர்




**யா / வேலாயுதம் மகா வித்தியாலயம்**

**பழைய மாணவர் சங்கம் - கொழும்பு**

உ



# பாடசாலைக் கீதம்

பல்லவி

ஞானமிளிர் பாடசாலை நலம் பெறவே
புகழொடு கலையகம் வாழியவே

(ஞான)

அனுபல்லவி

அன்புடன் அறிவுமிக்க சிறந்த ஆற்றலும்
சீர்புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயம்

(ஞான)

சரணம்

காரணர் வேலாயுதம் சேயவர் அருணாசலம்
எனமேவு பெரியார் கல்வி அழகொளியாய்
கலையறிவே விஞ்ஞான போதமே
கவின்கலைகளும் பெற்று பலபெரு வளமொடு

(ஞான)

நெறிதரு நிலைகளும் நிலைபெறச் செய்திடும்
காளியர் கோன்காத்த சைவ கலாச்சாரம்
காசினி மகிழ்ந்திட பொங்கு ஈசன் அருள்தங்கு
அருளொளியாய் அன்புருவாய் அறிவொடு நிறைந்து

(ஞான)

உ

சிவமயம்



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

# வேலாயுதம்

## 115ஆவது ஆண்டு சிறப்பு மலர்

## 2010

பருத்தித்துறை


யா / வேலாயுதம் மகா வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம் – கொழும்பு



நிறுவுனர்

பெரியார். வைரமுத்து வேலாயுதபிள்ளை



முகாமையாளர்
திரு. வே. அருணாசலம் அவர்கள்

# நுழைவாயிலில்....



இந்துக்களின் கல்விப் பாரம்பரியத்தைப் பறை சாற்றுகின்ற கல்விக் கூடங்களில் 1895ல் ஸ்தாபிக்கப்பட்ட "வேலாயுதம் மகாவித்தியாலயமும்" முதன்மையானது. வடமராட்சியில் இந்து சமயக் கல்வியுடன் ஆங்கிலக் கல்வியையும் பிரகாசிக்க வழிசமைத்த பெரியார் திரு. வைரமுத்து வேலாயுதபிள்ளை அவர்களாகும். அன்று அவரது கல்வித் தொண்டுக்குக் கைகொடுத்த பெருமக்கள் அனைவரையும் நாம் என்றும் நினைவு கூருவோம்.

**"கல்வி அழகே அழகு"**

வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் 115வது நிறைவு ஆண்டில் கல்லூரி பற்றிய தகவல்களை ஒரு வரலாற்றுத் தொகுப்பாக வெளிக் கொண்டு வருவதே "வேலாயுதம்" மலரின் நோக்கமாகும். முன்னாள் ஆசிரியர்கள், அதிபர்கள், பழைய மாணவர்கள், அதிகாரிகள் மூலம் சேகரித்த விடய தானங்களைத் தருவதுடன், அறிஞர் பெருமக்களின் ஆய்வுடன் கூடிய கட்டுரைகளையும் இம் மலரில் தருகின்றோம். கடந்த கால, நிகழ்காலப் புகைப்படங்களையும் இம்மலரின் மூலம் தொகுத்துள்ளோம்.

எமது கல்லூரி ஆற்றிய சேவைகள், புரிந்த சாதனைகள், முகம் கொடுத்த சோதனைகள் பற்பல, பல்லாண்டு காலம் எடுத்த பெருமுயற்சி செய்த வெற்றிகளை "வேலாயுதம்" மலரின் மூலம் மிகச் சிறப்பாகப் பதிவாக வெளிக் கொண்டு வரும் சாதனமாக இது விளங்கும்.

இலங்கையின் தலைநகரில் அமைந்துள்ள வேலாயுதம் மகாவித்தியாலய – பழைய மாணவர் சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அனைத்து நல்லுள்ளங்களின் பெருமுயற்சியின் வெளிப்பாடாக "வேலாயுதம்" மலர் மிளிரும் என்பதில் ஐயமில்லை.

இம் மலரை வெளிக் கொண்டு வரத் தூண்டுகோலாகவும், தூணாகவும் விளங்கியவர் முன்னாள் கல்லூரி அதிபரும், கொழும்புக் கிளைப் பழைய மாணவர் சங்கத் தலைவருமான திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்கள். அவர் கல்லூரியுடன் இணைந்த தன்மையும் அவர்களின் ஞாபகத் தன்மையும் "வேலாயுதம்" மலரில் வெளிப்படுகின்றது. இம்மலர் வெளிவருவதில் உதவிய மற்றைய உறுப்பினர்கள். திரு. பால. வைரவநாதன், திரு. மு. தயாபரன், திருமதி. வசந்தி தயாபரன், திரு. இரா. இரவீந்திரன், பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. மு. சிவலிங்கம் ஆகியோர் போற்றப்பட வேண்டியவர்கள்.

இவ் அழகிய மலரை உங்கள் கைகளில் மலர வடிவமைத்து அச்சேற்றிய "யுனி ஆர்ட்ஸ்" நிறுவனத்திற்கும், நிதி உதவிய கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினருக்கும் மற்றைய உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கல்லூரி மலரை வெளியிட மண்டபத்தை உதவிய கொழும்புத் தமிழ் சங்கத்தினருக்கும், ஸ்தாபகர் உரை நிகழ்த்துகின்ற கலாநிதி. எஸ். சிவலிங்கராசா, யாழ் பல்கலைக்கழகம் அவர்களுக்கும், மலரை வெளியிட்டு வைக்க வருகை தந்த திரு. பாலசுந்தரம் சிவாஜி பிரதி ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அவர்களுக்கும் சங்க உறுப்பினர்கள் நன்றியறிதல் உடையவர்களாகும்.

வேலாயுதம் கல்வி பணி சிறக்க

சிவா. கிருஷ்ணமூர்த்தி J.P

*மலர் ஆசிரியர், மலர்க் குழு சார்பாக.*

# நல்லை ஆதீனகுரு முதல்வரின்
# அருளாசிச் செய்தி

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்களையும் புரிகின்றார். அவற்றைத் தமது சக்தியைக் கொண்டு நிறைவேற்றுகின்றார். அதன் பயனாகக் கல்விச் செல்வத்துக்குச் சரஸ்வதிதேவியை அதிதேவதையாக நியமித்தார்.

ஆகவே, கல்வியைப் பெற்றுக் கொள்ள நாங்கள் சரஸ்வதித் தாயைப் போற்றித் துதிக்கவேண்டும். இந்தக் கல்வி ஒன்றுதான் அடுத்த பிறவியிலும் தொடர்ந்து வருகின்றது.

இந்த வகையில் கல்வியை நல்ல வகையில் கற்பித்து மாணவ உலகுக்கு அரிய சேவையாற்றி வருகின்ற புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயம் 115ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு உளம் மிக மகிழ்கின்றோம். 1895இல் ஸ்தாபிக்கப் பெற்ற இவ்வித்தியாலயம் தனி மனிதர் ஒருவரின் முழுமனதுடனான அர்ப்பணிப்பு நிறைந்த சேவை மனப்பான்மையினால் இப்பொழுது துரித வளர்ச்சியடைந்து முன்னணியில் திகழ்கின்றது என்பதை எண்ணும்போது உளம் உவகையுறுகின்றது.

இதன் ஸ்தாபகரான ஸ்ரீமான் வயிரமுத்து வேலாயுதம் B. A. அவர்கள் தாமே ஆசிரியரா கவுமிருந்து அளப்பரிய சேவையாற்றி ஏழை மாணவ மாணவியர்க்கு ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் முகமாக இலவசமாகக் கல்வி முறையைக் கொண்டு வந்து இதன் முன்னேற்றத்துக்காக அயராது உழைத்திருக்கின்றார்.

அன்று அவர் ஆரம்பித்த நல்ல கல்விப்பணி இன்றும் நின்று நிலவிப் பல்வேறு நன் மாணாக்கர்களை உருவாக்கித் துரிதவளர்ச்சி கண்டு இவ்வித்தியாலயம் தலை நிமிர்ந்து நிற்ப தைப் பார்க்கும் போது உள்ளம் இறும்பூதெய்துகிறது.

புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாதது. இந்தக் கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கலைமகளான சரஸ்வதி அன்னையை வணங்க வேண்டும்; வாழ்த்தித் துதிக்க வேண்டும்.

அந்த அருட்தாயின் திருவருட்கடாக்ஷம் மட்டும் கிடைத்து விட்டால் கல்விச் செல்வம் பரிபூரணமாக வளர்ச்சியுறும். அந்தக் கலைவாணியின் கருணை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்துக்குக் கிட்ட வேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்குவதுடன் நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

இவ்வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வெளியிடும் ஆண்டு மலர் சிறப்புற அமைய எமது நல்லாசிகள் உரித்தாகட்டும். இங்குள்ள அதிபர், ஆசிரியர், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று மங்களகரமாக வாழ நாம் ஆசி வழங்கி மகிழ்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,**

# Sri Ramakrishna Sarada Sevashrama Point - Perdo, Sri Lanka.

வேலாயுதம் பாடசாலை ஆடிப்பூர நன்னாளில் 1895ம் ஆண்டு ஆங்கில மாதம் ஆவணி 7ஆந் திகதி ஆரம்பமானது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவசமயத் துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது.

அந்த வழியில் சைவ மரபைத் தழுவிய இப் பாடசாலை இன்று வேலாயுதம் மகா வித்தியாலயமாக மிளிர்கிறது. 115 ஆண்டுகளை இம் மகா வித்தியாலயம் பூர்த்தி செய்துள்ளது.

எதிர்காலச் சந்ததியினர், சிவபெருமானை முழுமுதலாகக் கொண்ட மரபினர் போற்றும் வகையில் பணிபுரிய எல்லாம் வல்ல புலோலி பசுபதீஸ்வரர், ஸ்ரீ பருவதவர்த்தனி அம்மையாரையும் மனதார வேண்டுகின்றோம்.

*அன்புள்ள, அன்னையின் அடியவன்,*

**சித்ரூபானந்தா.**

# பருத்தி நகர் பங்குத்தந்தையின்
# ஆசிச்செய்தி

ஆலமரமாய் கிளை பரப்பிப் பல நாடுகளிலும் விழுதூன்றி நன் மாணாக்கர்களை உருவாக்கிய பேறுடைய யா / வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அதனது 115 ஆவது ஆண்டு நிறைவில் ஆசி வழங்குவதையிட்டுப் பெருமிதம் அடைகின்றேன். "உன்னைப் போல் உன் அயலானை நேசி" எனும் இயேசுவின் வார்த்தைகளுக்கேற்ப விழுமியங்களைத் தன்னகத்தே கொண்ட சமூகமொன்றை உருவாக்கும் பணியில் இப்பாடசாலை ஆண்டாண்டு காலமாக வீறுநடை போடுகின்றது.

பரிதவிக்கும் மக்களின் அல்லல் போக்கும் நல்ல சமாரியன்களாக இப்பாடசாலை மாணாக்கர்களில் பலரை நான் சந்திக்கின்றேன். இந்த வகையில் மென்மேலும் இந்த அறிவாலயம் தம் சேவையில் சிறக்க இறைவனின் பேரருளை வேண்டுகின்றேன்.

**Fr. S. Sebanesaratnam**
*Parish Priest*
*CATHOLIC CHURCH*
*Point - Pedro.*

# *Message From Hon. Governor, Northern Province*



I am very much pleased to send a congratulatory message to the souvenir published to commemorate the **115th year** of the establishment of the Point Pedro Velautham Maha Vidyalayam, which was founded by philanthropist late Mr. V. Velauthampillai on 07.08.1895. Since then, I am informed, the school has grown by leaps and bounds, producing several professionals, administrators and eminent personalities in diverse fields serving the local community and the country at large.

Keeping in view the noble objectives of the founder, the school administration has been authorized to start an English stream from the year 2010.

I wish, that the school will continue in the service of the children of the area upholding religious and social values and continue it's noble journey successfully.

I also wish that the organizers, the parents and the teachers concerned succeed in their commemoration celebrations.

**G.A. Chandrasiri**
*Governor,*
*Northern Province.*

# "கல்வி அழகே அழகு"

பருத்தித்துறை நகர்தனில் யாழ் சாலையில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் வேலாயுதம் மகா வித்தியாலயம் இன்று தனது 115 ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு நான் பேருவகை அடைகின்றேன். இவ் வித்தியாலயத்தின் வரலாறு மிகவும் தொன்மைமிக்கதும் சிறப்புமிக்கதும் ஒன்றாக உள்ளது. அதாவது அந்நிய ஆட்சிக் காலம் தொடங்கி வடமராட்சிப் பிரதேசத்தில் தமிழ் மொழிமூல மாணவர்களுக்குக் கலங்கரை விளக்கமாக விளங்கி இப் பாடசாலை பல நெருக்கடிகள் மத்தியிலும் தனது மகத்தான சேவையினை வழங்கியுள்ளது.

அன்றைய காலகட்டத்தில் மட்டுமின்றி 1995 இல் நிகழ்ந்த பாரிய யாழ் இடப்பெயர்வில் வருகை தந்த மாணவர்களுக்கான கல்வித் தேவைகளை நிறைவு செய்வதற்கும் தொடர்ந்து ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்தவர்களுக்கு அபயமளிக்கவும் மற்றும் 2009 வரை நிகழ்ந்த யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அடைக்கலம் அளிக்கவும் இக் கல்விக்கூடம் எமது சமூகத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவை ஒரு முன்னுதாரணமாகும். கல்வித் தேவையை மட்டுமன்றிச் சமூகத்திற்கு உரிய வேளையில் தேவையான பொருத்தமான பங்கினை இவ் வித்தியாலயம் வழங்கி வந்திருக்கின்றதென்றால் அது மிகையாகாது.

இப் பாடசாலையின் இலச்சினையில் பொறிக்கப்பட்டுள்ள "கல்வி அழகே அழகு" என்ற மகுட வாசகத்திற்கிணங்க எத்தனையோ அறிஞர்களையும் துறைசார் வல்லுனர்களையும் இத் தேசத்திற்கு உவந்தளித்திருக்கிறது. இன்னும் பலநூறாண்டு காலம் இக் கல்வியகம் தனது சேவையினையும் பொறுப்பினையும் நமது சமூகத்திற்கு ஆற்றவேண்டுமென்பதே எனது பேரவா. இத்தகைய மிக நெடிய வரலாற்றைப் பல இன்னல்களுக்கு மத்தியிலும் கடந்துவந்த வட மாகாணத்திலுள்ள வெகுசில பாடசாலைகளில் இந்தப் பாடசாலையும் ஒன்றாகும். இத்தகைய அளப்பரிய பணிகளைக் கொண்ட வரலாற்றில் இந்தக் கல்விக் கோயிலும் தனது பெயரினைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துக்கொள்கிறது எனத் துணிந்து கூறலாம்.

இப் பெருமைகளையும் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்ட இந்த மகா வித்தியாலயத்தின் 115 ஆவது ஆண்டு விழாவினை இவ் ஆண்டில் கொண்டாடுவதையிட்டு நான் எனது உளங்கனிந்த வாழ்த்துக்களையும் சமூகத்தின் சார்பில் நன்றிகளையும் இவ் வித்தியாலயக் கல்வித் தாயின் மலர்ப்பாதங்களில் சமர்ப்பிப்பதில் களிப்புறுகின்றேன்.


**ஆ. சிவசுவாமி**

*பிரதம செயலாளர்*

*வடமாகாண சபை.*

# கல்வி விழுமியங்களை வழங்கும் ஆலயம்

யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் 115 ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றிப் பல கல்விமான்களை உருவாக்கியுள்ளது. 115 வருடங்களுக்கு முன்பு பருத்தித்துறைச் சிவன் கோவிலுக்கு அருகாமையில் புலோலி ஆண்கள் பாடசாலையாகச் சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடன் தாபிக்கப்பட்டது. பல ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கல்வி பயின்று சமூகவியல்பினராகியுள்ளனர். சமூகத்திற்குத் தேவையான தொழில் சார்ந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், முகாமைத்துவ உதவியாளர்களை உருவாக்கியதுடன் சைவப் பாரம்பரியப் பண்புகளையும் மாணவர்களில் வளர்த்தது என்றால் மிகையாகாது. வடமராட்சி கிழக்கு மாணவர்கள் பலரும் உயர்தர வகுப்பிற் சேர்ந்து பயில்வதற்கு உதவிய ஒரு கலாலயமாகும். இப் பாடசாலையை வளர்க்க அருந்தொண்டாற்றி ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதுடன் தற்போதைய அதிபர், ஆசிரியர்களும் முன்னோரின் பாதையில் நின்று மாணவர்களை வழிப்படுத்திச் சமூகத்திற்கு ஏற்றவர்களாக மாற்றியமைக்கின்றனர். கல்வித் தொண்டாற்றும் இக் கலைக் கோவில் இன்னும் பல நூற்றாண்டுகள் விழுமியக் கல்வி வழங்க எனது வாழ்த்துக்கள்.

**இ. இளங்கோவன்**

*செயலாளர்,*

*கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,*

*வட மாகாணம்.*

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු / பொது தொலைபேசி / General Telephone } 021-22 / 021-22

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.


මගේ අංකය / எனது எண் / My No. } Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No. }

දිනය / திகதி / Date } 12.03.2010

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



"கல்வி இன்றேல் வாழ்க்கை இல்லை" என்ற வாசகம் இன்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தினால் காணுமிடமெங்கும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையே அன்று "கேடில் விழுச் செல்வம் கல்வி, ஒருவற்கு மாடல்ல மற்றையவை" என்று கல்வியெனும் அதிகாரத்தில் உறுதிபட உரைத்தான், வள்ளுவன். எக்காலமும், எல்லோராலும் மேலாய் உணரப்பட்ட கல்வியைத் தனது சமுதாயத்திற்குத் திறம்பட வழங்க வேண்டுமெனும் மேலான நோக்கில், இற்றைக்கு 115 ஆண்டுகளுக்கு முன்னர் வைரமுத்து வேலாயுதபிள்ளை அவர்களினால் நிறுவப்பட்ட புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை காலத்தின் பரிணாமத்தோடு, வேலாயுதம் மகாவித்தியாலயமாய் மலர்ந்து கல்வித்துறையில் தனது சேவைகளைத் திறம்பட வழங்கி வருகின்றது.

"ஆனா சொல்லித் தந்தாள், எங்கள் அருமையான அம்மா" என்று சின்னஞ்சிறார்கள் மழலை மொழியில் பாடும்போது தமக்கு அரிச்சுவடி கற்றுத்தந்த ஆரம்பப் பாடசாலை அனைவருக்கும் அம்மாவின் தோற்றத்தில் நினைவில் வருகிறது. இத்தகைய எண்ணத்தின் வெளிப்பாடாகவே இன்று பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம், தமது கல்விக்கு வித்திட்ட அன்னையாம் இப் பாடசாலையின், வளர்ச்சியையும், வளர்ச்சிக்கு வழிசமைத்தோரையும் என்றும் நினைவுகூருமுகமான ஆவணப்படுத்தலாக மலரொன்றினை வெளியிடத் தலைப்பட்டுள்ளனர்.

பதினான்கு மாணாக்கருடன் அரும்பிய இப் பாடசாலை இன்று உயர்தர வகுப்புக்களுடன் உயர்ந்து, கல்வித்துறையில் வியத்தகு வளர்ச்சி கண்டு நிறுவுநரின் கனவை நனவாக்கி வருகின்றது. ஓலைக்கொட்டிலுடன் தொடங்கிய இப்பாடசாலை இன்று அடுக்கு மாடிக்கட்டடமாய், நவீன வசதிகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு நிமிர்ந்து நிற்கின்றது.

115ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் மாண்பு பகருமுகமாக "நன்றி மறப்பது நன்றன்று" என்ற நன்னோக்கில் அப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினால் வெளியிடப்படும் இம் மலரின் வாயிலாக இப்பாடசாலையின் சிறப்பினைப் பலரும் அறிந்திடவும், இதன் கல்விச் சேவை மேன்மேலும் சிறந்திடவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க. கணேஷ்

*அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர், யாழ் மாவட்டம்.*

# நூற்றாண்டு காலம் கல்வித் தொண்டாற்றிய ஆலயம்

115 வருடங்கள் கல்வித் தொண்டாற்றிய யா / வேலாயுதம் மகாவித்தியாலயம் தனக்கேயுரித்தான தனித்துவம், கலாசாரம் என்பவற்றைக் கொண்டது. பருத்தித்துறை நகரில் சைவசமயத்தைக் கல்வியூடாக வளர்ப்பதற்குத் தாபிக்கப்பட்ட பாடசாலையாகும். இது ஆரம்பத்தில் ஆங்கிலக் கல்விப் பாடசாலையாகச் செயற்பட்டது. இதனாலேயே இப்பாடசாலை யா / புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை என அழைக்கப்பட்டது. இப்பாடசாலையிற் கல்வி கற்ற பலரையும் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியாளர்கள், கணக்காளர்கள் என ஒரு பெரிய பட்டியல் கொண்டோரை உருவாக்கியது. இப்பாடசாலை கல்வித்தொண்டாற்றியது எனக்குறிப்பிடும் போது, இப்பாடசாலையின் முக்கிய மனித வளங்களான அதிபர், ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையையே குறிப்பிடுகிறேன்.

இப்பாடசாலையில் எனது காலத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. சே. ஏகாம்பரநாதன், அமரர் திரு. சி. தேவராஜா, திரு. இ. ஞானசேகரம்பிள்ளை, திரு. ஆ. ஜெகநாதன் ஆகியோர் தங்கள் தன்னலமற்ற சேவையை நல்கியுள்ளனர். அதிபர்களின் முழுநேர வேலைத்தலமாக இப்பாடசாலை இருந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இப் பாடசாலைக்கு வரும் ஏழைப்பிள்ளைகளின் அறிவுக் கண்களைத் திறக்கும் ஒரு கோயிலாகவே கருதக்கூடிய பாடசாலைதான் யா / வேலாயுதம் மகா வித்தியாலயமாகும். இப் பாடசாலைக்குப் பக்கபலமாக இருப்பவர்கள் இப்பாடசாலையின் பழைய மாணவர்களாவார். அவர்களின் கண்காணிப்பு, பொருளுதவி என்பன போற்றக் கூடியவை. இப் பாடசாலைக்கு அதன் தாபகர் குடும்பம் அருகிலுள்ள தமது வீட்டையும் வழங்கியமையும் இப்பாடசாலையின் வளம் பெருகுவதற்கு இப் பாடசாலையின் நலன் விரும்பிகளின் தாராள மனதும் முக்கியமானவைகளாகும். இச் சந்தர்ப்பத்தில் எமது கோட்டக் கல்வி அலுவலகம் இயங்க உதவியமையை நன்றியுடன் நினைவு கூரவேண்டியுள்ளது. இப் பாடசாலைக்கு அயராது உழைத்து அமரராகிய அதிபர்கள், ஆசிரியர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம். இப் பாடசாலை சகல வளங்களையும் பெற்றுப் பன்னெடுங்காலம் தொண்டாற்ற இறையாசியை வேண்டுவதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வே. தி. செல்வரத்தினம்**
*மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,*
*யாழ். மாவட்டம்.*

# வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் திரு. இ. வரதீஸ்வரன் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் நூற்றுப் பதினைந்துஆண்டு நிறைவு விழா காணும் இவ்வேளை வாழ்த்துக் கூறுவதில் அளவிலா மகிழ்ச்சியடைகிறேன். இப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் ஒன்றாக வளர அயராது பாடுபட்ட புகழ்பூத்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் ஒருங்கே கொண்டு விளங்கிய யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் தமது பாரம்பரியங்களையும் மரபுகளையும் சிதைவடையாமற் பேணிக்காத்து வரலாற்றுச் சின்னமாக ஒரு மலரினையும் வெளியிடுவது பாராட்டுதலுக்குரியதாகும்.

சிறந்த கல்விப் பணிப்பாளர்கள், கல்வி, வங்கி, நிர்வாக அதிகாரிகள், அதிபர்கள், சமயப்பற்றுமிக்க கல்விமான்கள் பலரை உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்குண்டு. இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வரும் இப்பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவிப்பதோடு வடமராட்சி மண்ணிலே சிறப்பிடம் பெறும் பாடசாலையாக இன்னும் பல நூறாண்டுகள் விளங்க வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்.

**இ. வரதீஸ்வரன்.**
*பிரதேச செயலாளர்,*
*பருத்தித்துறை.*

# வாழ்த்துச் செய்தி

யா / வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் நூற்றுப் பதினைந்தாவது ஆண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1895ம் ஆண்டு சைவச் சூழலின் ஏழைச்சிறார்கள் ஆங்கில கல்வியைப் பெறவேண்டும் என்ற சீரிய நோக்குடன் யா / புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை, சைவப் பெருமகன் திருவாளர் வ. வேலாயுதம்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுப் பின்னர் அவரது பெயரால் யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் என்ற பெயரைத் தாங்கிச் சிறப்புடன் மிளிர்கின்றது.

காலத்துக்குக் காலம் இவ்வித்தியாலத்தில் ஆளுமை மிக்க அதிபர்களும், தலை சிறந்த ஆசிரியர்களும் மாணவர்களை வழிகாட்டி வந்துள்ளனர். இதன் பயனாகப் பல்துறை விற்பன்னர்களையும் பண்பாளர்களையும் வளர்த்தெடுத்த பெருமை இவ்வித்தியாலயத்துக்கு உண்டு. இவர்கள் ஊரும் உலகமும் உய்யச் சிறந்த சேவை நல்கி வருகின்றனர்.

மிகவும் நெருக்கடியான கால கட்டத்திலும் தனது பௌதீக வளங்களைக் கல்விச் சேவைக்காகப் பகிர்ந்து கொண்ட மாண்பு இவ்வித்தியாலத்திற்கு உண்டு.

யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் மேலும் பல சாதனையாளர்களை உருவாக்கி ஊரும் உலகும் பயனடைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**செல்வி. தி. பெரியதம்பி**
*ஓய்வு பெற்ற*
*மாகாணக் கல்விப் பணிப்பாளர்*

# ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (யாழ்மாவட்டம்) திரு. சி. சிவராசா அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

யா / வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் நூற்றுப்பதினைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நோக்கில் இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் வெளியிடும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1895ம் ஆண்டு இப்பாடசாலையின் ஸ்தாபகராகிய கொடைவள்ளல் திரு. வை. வேலாயுதம் அவர்களால் பருத்தித்துறையையும், அதனைச் சூழவுள்ள கிராமங்களின் சைவ ஏழைப்பிள்ளைகளின் கல்வியை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை" இன்று பெரிய ஆலவிருட்சமாக வளர்ந்து வேலாயுதம் மகா வித்தியாலயமாகப் பயனுறு சேவையாற்றுகின்றது. சைவப்பாரம்பரியத்தைப் பேணுவதில் இவ்வித்தியாலயம் முதனிலை பெறுகின்றது. நாட்டிற்கு வளம் சேர்க்கும் பலதுறைகளையும் சார்ந்த பல சான்றோர்களை உருவாக்கியுள்ளது. இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் மிளிர்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கம் காட்டும் அக்கறையும் ஆர்வமும் போற்றுவதற்குரியதாகும். வித்தியாலயத்தின் தேவைகளைக் கண்டறிந்து அதனைப் பெற்றுக் கொடுப்பதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இம் மலர் வெளியீட்டுக்கு உழைத்து வரும் பழைய மாணவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

'கல்வி அழகே அழகு' என்பது இவ்வித்தியாலயத்தின் மகுட வாசகமாகும். சமுதாயத்தில் ஒருவன் சிறப்படையக் கல்வி அவசியம் என்பதனை இம்மகுட வாசகம் எடுத்துக் காட்டுகின்றது. இக் கோட்பாட்டைக் கட்டி வளர்த்து வரும் இவ்வித்தியாலயம் எதிர் காலத்திலும் தளராது வளர்ச்சியடைந்து மேன்மேலும் கல்விப் பணியையும் சமுக நலனையும் வளர்த்துச் சிறப்படைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

*"வசந்தகம்"*
*அல்வாய் மேற்கு,*
*அல்வாய்.*

**சி. சிவராசா**
*ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,*
*யாழ் மாவட்டம்.*

# யா / பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் விடுக்கும் செய்தி



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய நூற்றுப் பதினைந்தாவது இந்த ஆண்டு மலர் உங்கள் மனங்களிலும் எண்ணங்களை வரையும் என்பது என் நம்பிக்கையாகும். இவ் வித்தியாலயப் புகழைப் பலருக்கும் தெரியப்படுத்தும் பெருமையும் - புகழும் கொழும்புக் கிளைப் பழைய மாணவர் சங்கத்திற்கு உரித்தாகும்.

"தாம் இன்புறுவ(து) உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்" என்பது வள்ளுவன் வாக்கு

"தாம் இன்புறுவதற்குக் காரணமாகிய கல்வியினாலேயே இவ்வுலகமும் மேன்மை பெற்று இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்தோர் உள்ளம் ஆனந்தம் கொள்ளும்" என்பதற்கிணங்க, இங்கு கல்வி கற்று சாதனையாளர்களாக, வீரர்களாக, விரிவுரையாளர்களாக, கல்விமான்களாக, நிர்வாக உத்தியோகத்தர்களாக, சைவமும் - தமிழும் வளர்க்கும் நல்லோர்களாக, வல்லோர்களாக, திகழும் எம் கலைக்கோயில் தந்த செல்வங்களான பழைய மாணவர்களின் கல்விப் பணியினையும், எம் வித்தியாலயத்தின் தேவையறிந்து ஆற்றும் தொண்டுகளையும் இத்தருணம் நினைவு கூர்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

மாற்றமுறும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுப்பதுடன், எமது மரபுகள் பேணப்பட்டு, இந்து - தமிழ் பாரம்பரியங்களை நிலைக்களனாக்கி, அதனூடு தன் கல்வி - இணைப்பாட விதானச் செயற்பாடுகளைச் செவ்வனே செயற்படுத்தும் வித்தியாசமான இவ்வித்தியாலத்தின் நூற்றுப்பதினைந்தாவது ஆண்டு விழா என்னும் ஆனந்த அருவியில் உங்களில் நானும் ஒருவனாகி இணைந்து நீராடுவதில் மனம் புளகாங்காகிதம் அடைகின்றது.

சாதி, மத வேறுபாடின்றி ஏழை - மத்திய தரச் சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவே இப்பாடசாலை அரும்பாடுபட்டு வந்துள்ளது. அதே குறிக்கோளுடனேயே ஏழைச் சிறார்களை அரவணைக்கும் பாடசாலையாகவே இப்பொழுதும் திகழ்கின்றது. அநாதரவான சிறார்களை அரவணைக்கும் அன்னையாக வடமராட்சி நகரில் ஓங்கி

விளங்கும் யா / வேலாயுதம் மகா வித்தியாலய வளர்ச்சிக்காகக் காலத்திற்கு காலம் அருங்கருத்துக்களையும் உதவிகளையும் வழங்குவதுடன் இத்தருணம் இம் மலரினை வெளியிடும் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினைப் பாராட்டுவது எம் நன்றிக் கடனாகும்.

எமது வித்தியாலயம் பன்முகப்படுத்தப்பட்டு, மாணவர் தொகை அதிகரிக்கப்பட்டு பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது. கல்வி - ஒழுக்கம் - இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் எமது ஆசிரியர்கள் மாணவர்களை நன்கு இனங்கண்டு சிறந்த முறையில் வழிப்படுத்தி, பயிற்சியளித்து, அவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதற்கு மேற்படி சங்கம் ஊக்கமளித்து, உதவியளித்து வருவது நன்றியறிதலுடன் நினைவு கூர வேண்டியவையாகும்.

ஒருவனின் அழியாத அழகு கல்வியாகும். இந்த அழியாத அழகையே தன் மகுட வாசகமாகக் கொண்டு, “கல்வி அழகே அழகு” என்று எம் வித்தியாலயம் திகழ்கின்றது. இதன்மூலம் மென்மேலும் எம் சமூகத்தை அழகுறச் செய்வதற்குப் பழைய மாணவர் சங்கத்தின் பணியும் இன்றியமையாததாகின்றது. இப்பணி கடந்த காலத்தைவிட எதிர்காலம் மிஞ்ச வேண்டுமென எம் வித்தியாலயக் குல தெய்வமான விநாயகப் பெருமானின் அருளை வேண்டுவதுடன், இத்தருணம் எம் பாடசாலை ஸ்தாபகரையும் நினைவு கூருகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**ச. திரவியராசா.**
*அதிபர்,*
*யா / வேலாயுதம் ம. வி*

# My Alma Mater's Service to Society



It is with a deep sense of gratitude and pleasure that I write this message to be included in the publication marking the 115th year of active and productive service to the society that is being rendered by my Alma Mater, viz., Velautham Maha Vidyalayam or Puloly Boys' English School as it was once known. Reaching one hundred and fifteen years is a great occasion which deservedly warrants an event to be held in a significant and grand scale to mark it.

The School had a small but sure and steady beginning in an environment which was competitive and which demanded certain degree of courage to stand up for a worthy cause to protect and promote the cultural and religious values of a society. It was the unremitting courage of his unshakable conviction which drove the Founder of this School, the late Mr. V Velautham to establish this educational institution which has been producing many great people while providing the much needed education to hundreds of thousands of children. Making available the invaluable light of education and knowledge to people is a much valued and better remembered service than giving money or provisions. It is with a deep sense of respect and reverence that we remind ourselves of the farsightedness of that great man who founded the School.

We also salute all those principals, teachers and administrators for their dedicated and valiant service which enabled the continued maintenance of the School and services to the people. It would have been nothing but mere huts, sheds and buildings made out of clay and thatched leaves or cement blocks and tiles, if not for those principals, teachers and administrators who made them to be well respected and majestic institution imparting indelible and priceless education, knowledge and good behaviour in the molding minds of its pupils. It is a great pride that the light so lit, one hundred and fifteen years ago, continues to scatter education and knowledge to a vast number of students through the dedicated and committed services of the successive batches of principals and teachers. As an utmost beneficiary of their tireless services I express my greatest gratitude to all of them.

The School has weathered a turbulent and testing period of time due to turn of events over which it had no control. They had impeded its great march, though the events had not blocked its services completely. The road ahead is now somewhat clear but the task continues to be enormous but responsible and respectable. I take this opportunity to wish all those in whose hands are the reigns of this School a great success in their service to the society and humankind. Please continue to with the good service and keep the flag flying high!

*Patron*
*Velautham MV OBA*
*Colombo Branch*

**N. Selvakkumaran**
*(Dean, Faculty of Law, University of Colombo)*

# பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத்தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



1895ஆம் ஆண்டு மன்மத வருடம் ஆடிப்பூரத்திலன்று (07.08.1895) உயர் திரு. வைரமுத்து வேலாயுதம்பிள்ளையால் அவரின் இல்லத்தில் 14 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை. அப்பாடசாலையைப் பொதுமக்கள் "வேலாயுதம் ஸ்கூல்" என அழைத்தனர். பின்பு நிறுவனர் நாமம் நிலைத்திருக்க வேண்டுமெனப் பழைய மாணவர்களும், பெற்றார் ஆசிரிய சங்க உறுப்பினர்களும் கல்வி அமைச்சுக்கு விண்ணப்பித்தனர். 1976 ஆம் ஆண்டு வேலாயுதம் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

இக் கல்லூரி படிப்படியாக வளர்ந்தது. அதில் பயின்ற மாணவர்கள் புகழுடன் பலதுறைகளிலும் பிரகாசித்தனர்; பிரகாசிக்கின்றனர். நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பெற்றோர் இடம் பெயர்ந்தனர். மாணவர் தொகை குறைந்தது. இயல்பு நிலை ஏற்படத் தொடங்கியது. மாணவர் பாடசாலையை நாடினர். மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. அதிபரும் ஆசிரியர்களும் மாணவர் பெறுபேறுகளைப் பழைய நிலைக்குக் கொண்டு வர உழைக்கின்றனர். எனவே 115 ஆவது அகவையை எட்டியுள்ள பாடசாலை இன்னும் வளர்ந்து உச்ச நிலையை அடைய வாழ்த்துகிறேன்.

115 ஆண்டுகள் பூர்த்தி அடைந்ததை நினைவு கூரும் முகமாகப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை 'வேலாயுதம்' என்ற பெயரில் ஒரு மலரை வெளியிட முனைகிறது. அப்பணியை வரவேற்கிறேன். பாடசாலையின் முன்னேற்றத்துக்காக வேண்டியவற்றை வழங்குகிறது. இனி வரும் ஆண்டுகளில் இன்னும் கல்வித் தரத்தை உயர்த்தச் சங்கத்துக்குச் செயற்குழுவும் உறுப்பினர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும். "வேலாயுதம்" சிறப்பு அம்சங்களுடன் என்றும் மலர்ந்து நிலைபெற வாழ்த்துகிறேன்.

**சே. ஏகாம்பரநாதன்**

# வாழ்த்துச் செய்தி



யா / வேலாயுதம் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்க (தாய்ச்சங்கம்) த் தலைவர் என்ற ரீதியில் கொழும்புக் கிளையினால் எமது பாடசாலையின் 115 ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியிடப்படும் மலரிற்கு எனது வாழ்த்தினைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்நிய காலனியாதிக்க மிஷனரிகளின் கிறிஸ்தவ மயமாக்கல் சிந்தனைகளினால் பாதிப்புற்ற சைவ இளந்தலைமுறையின் கல்வித் தாகத்தினைத் தீர்ப்பதற்குப் பயன்தரும் நன்னீர்ச் சுனையாக அமரர் வேலாயுதம் பிள்ளை அவர்களின் பரோபகாரத்தினால் தோற்றம் பெற்ற இப் பாடசாலை கடந்த பன்னிரண்டு தசாப்தங்களாக ஆற்றிய சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

இப் பாடசாலை ஏழை மாணவர்களின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து எமது பிரதேசத்தின் மிகச் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகப் பல துறைகளிலும் பிரகாசித்து வந்தமை கடந்தகால வரலாறு.

**"கல்வி அழகே அழகு"**

என்ற மகுடவாசகம் எம்மைக் கடந்த காலங்களில் வழி நடத்தியதுடன், எமது காலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக்க பங்களிப்பு எமது பாடசாலை சமூகத்தில் ஒரு சிறந்த நிலையினைப் பெறுவதற்கு உதவியாக இருந்தது.

கடந்த சில காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற சூழல் எமது பாடசாலைச் செயற்பாடுகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தினாலும், தற்போது புதிய அதிபர் திரு. திரவியராசா அவர்களின் தலைமையில் மீண்டும் தனது பழைய பெருமையை நோக்கித் தனது காலடித் தடங்களைப் பதித்து வருகின்றது என்பது பெருமகிழ்வு தரும் விடயமாகும்.

மேலும் எமது பழைய மாணவரும், முன்னாள் அதிபருமாகிய திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்களின் வழிகாட்டலுடன் எமது கொழும்புக் கிளை மட்டுமல்ல, கனடா, அவுஸ்திரேலியாக் கிளைகளும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கி வருகின்றன. எமது தாய்ச் சங்கத்தின் செயற்பாட்டிற்கு எமது செயலாளர் திரு. குகநாதன் அவர்களும் எமது கொழும்புக் கிளைத் தலைவர் திரு. சே. ஏகாம்பரநாதன் மற்றும் செயலாளர் திரு. மு. சிவலிங்கம் அவர்களும் மிகச் சிறந்த பங்களிப்பினை வழங்கி வருவதனை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்மை வாழவைத்த பாடசலையின் புகழ் வாழ எம்மாலான உயர் பங்களிப்பினை அனைத்துப் பழைய மாணவர்களும் வழங்குவோமாக.!

**கே. பி. ஆனந்தநடேசன்**
*தலைவர், வேலாயுதம் மகாவித்தியாலயம்,*
*பழைய மாணவர் சங்கம், பருத்தித்துறை.*

# Message from President-Velautham M.V OBA (PPA) - Canada Branch



It gives me great pleasure in sending this message on behalf of the Past Pupils' Association -Canada Branch, for inclusion in the magazine brought out by the OBA Colombo Branch to commemorate the 115th year of excellent service by Velautham M.V. in the field of education to a large community in Vadamaradchy. Our Alma Mater continues to serve a large community of students from underprivileged homes and middle class families residing along the eastern coast of Vadamaradchy extending from Thondaimanar to Uduthurai , and from the Point Pedro township, and suburbs like Thumpalai, Puloly North, Puloly South, Puloy East, Puloly West, Arthiadi, Thambasitty, Alvai, Viyaparimoolai etc. The quality of education provided at this school is no second to the education provided in other popular secondary schools in the region. Several alumni of our Alma Mater had served and are still serving in high positions as Scientists, Professors, Educationists, Doctors, Engineers, Administrators, Accountants, Technicians, Teachers etc. in foreign countries and in Sri Lanka. The school has not only imparted a high level of knowledge but also inculcated a high level of self-discipline and cultural values to its students.

We, the past students residing in Canada have been longing to assist the school to continue its valuable service by providing support in varied ways to meet at least part of the school's needs to maintain the high standards and further the visions of the founder. There was a long felt need to organize ourselves into an organization in Canada to make our contributions to our Alma Mater in a meaningful way. Hence we have organized ourselves into a recognized Past Pupils association and we had our second Annual general meeting on December 12th 2009. At present we have 51 life members and 24 annual members. We hope our ranks will swell to larger numbers in the future. Within a short period of time we have assisted our school in several ways like donating a Multi Media Projector, assistance to mid-day meals program, erection of a boundary wall, and establishing scholarship funds to assist deserving assistance to further their education. Also we have opened a fixed deposit account in Colombo to be operated

by The Colombo Branch of the OBA in consultation with the Canada Branch. The interests accruing from the fixed deposit funds will be utilized to meet the school's needs. It is proposed to augment the fixed deposits and scholarship funds in the near future to enhance our assistance to our Alma Mater.

We have also organized a website for our school. We hope that this will bring all our past students scattered around the globe to get to know what is happening at the school and what the school's needs are, so that each and every past student can play a role in assisting the school. The website will also help us to share news about our alumni.

We, the past students living in Canada are very proud of our Alma Mater and we are indebted to our Alma Mater for the benefits we have reaped by learning at the school and the positions we have reached today. We are anxious to repay the school in whatever way possible to assist the school to provide a high quality education as in the past and serve the larger community in the milieu of present day technological advancement.

We wish all the success to the executive committee of the Colombo Branch of the OBA in bringing out this magazine. We also appeal to all past students wherever they are to put their might in assisting the school to maintain its glory and service to our community in the field of education.

*Thank you.*

**K.Ponnampalam**

*President,*

*Velautham M.V. Past Pupils' Association,*

*Canada Branch*

# பழைய மாணவர் சங்க அவுஸ்திரேலியாக் கிளைத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி



வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் எட்டு ஆண்டுகள் கல்வி கற்று வித்தியாலயத்தை விட்டு வெளியேறி முப்பத்தைந்து ஆண்டுகளின் பின் வித்தியாலயத்தின் 115ஆவது மலர் வெளியீட்டில் அவுஸ்திரேலியா கிளைத் தலைவர் என்ற முறையில் முதல்முதலாகச் செய்தி வெளியிடக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டு பெருமைப்படுகிறேன்.

அவுஸ்திரேலியாவிலுள்ள பழைய மாணவர்கள் வித்தியாலயத்திற்கு எங்களால் எவ்விதத்தில் ஆவன செய்வதென்று ஆராய்ந்து கொண்டிருந்த நேரத்தில் முன்னாள் அதிபரும் தற்போதைய கொழும்புக் கிளைத் தலைவருமான திரு. சே. ஏகாம்பரநாதன் 2008ல் சிட்னி மாநகருக்கு வந்திருந்தார். அச்சமயம் பழைய மாணவர்கள் சிலர் திரு. ஏகாம்பரநாதனிடம் வைத்திருந்த மரியாதையும் அன்பும் காரணமாக ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்து அவரை வரவேற்றுக் கௌரவித்தோம். இக் கூட்டத்தில் திரு. ஏகாம்பரநாதன் அவுஸ்திரேலியாவிலும் பழைய மாணவர் சங்கக் கிளை ஒன்றை ஆரம்பிக்குமாறு எங்களை உற்சாகப்படுத்தி அவுஸ்திரேலியாக் கிளையை ஆரம்பித்து வைத்த பெருமை திரு. ஏகாம்பரநாதனுக்கே உரித்தாகும்.

நிர்வாகக் குழு, அங்கத்தவர்களிடம் நன்கொடைப் பணம் சேகரித்து 2009இல் வித்தியாலயத்திற்கு உதவுவதற்காகக் கொழும்புக் கிளைக்கு அனுப்பி வைத்தது. கொழும்புக் கிளை மூலமாக வித்தியாலயத்தின் அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இவ்வருடம் உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரின் ஊதியத்தைக் கொடுப்பதற்கு எங்கள் கிளை பொறுப்பேற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவிலுள்ள அங்கத்தவர்கள் தொகை அதிகஅளவில் இல்லாத காரணத்தால் நிர்வாகக்குழு, கிளைகள் இல்லாத, முக்கியமாகச் சிங்கப்பூர், நியூசிலாந்து ஆகிய நாடுகளில் உள்ளவர்கள் சிலருடன் தொடர்பு கொண்டு அவர்களையும் எங்கள் பட்டியலில் சேர்த்து மேலும் அங்கத்துவத்தை விஸ்தரிக்க முடிந்தவரை முயற்சி செய்கிறது. நிர்வாகக் குழு இவ்வருடப் பொதுக் கூட்டத்தை அங்கத்தவர்களின் குடும்பங்கள் சேர்ந்த ஒன்று கூடலாக இராப் போசனம் ஒன்றை நடாத்துவதாகத் தீர்மானித்துள்ளது.

கொழும்புக் கிளை, வித்தியாலயத்தின் தற்போதைய மாணவர்களின் வளர்ச்சிக்காக அவ்வப்போது தேவையான உதவிகளை முக்கியமாக அரசாங்கத்தின் மூலமாகக் கிடைக்காதவற்றைச் செய்து அவர்களை உற்சாகப்படுத்திச் சில பரிசில்களையும் வழங்கி வருவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். கொழும்புக் கிளை தொடர்ந்து தனது பணியைச் செய்யும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. நாங்கள் கொழும்புக் கிளையுடன் தொடர்ந்தும் தொடர்பு கொண்டு வித்தியாலயத்தின் அத்தியாவசிய தேவைகளை அறிந்து எங்களால் இயன்ற உதவிகளைச் செய்வோம் என்று கூறி எனது செய்தியை முடித்துக் கொள்கிறேன்.

நன்றி.

*அன்பின்*

**நமசிவாயம் இராமகிருஷ்ணன்**

*தலைவர் – அவுஸ்திரேலியாக் கிளை*

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின்
# வாழ்த்துச் செய்தி

கல்வியுலகின் கலங்கரை விளக்காகத் திகழும் யா/வேலாயுதம் மகாவித்தியாலயமானது நூறாண்டில் தனது உன்னத சேவையினை உலகிற்கு வழங்கி, இன்று தனது 115 ஆவது ஆண்டில் காலடி பதித்துக் கல்விச் சேவையினை வழங்கி வருகின்றது. இக் கல்விக்கூடமானது "கல்வி அழகே அழகு" என்ற மகுட வாசகத்திற்கு அமையக் கல்வியுடன் ஒழுக்கத்தில் சிறந்த மாணவ சமூகத்தினை உலகிற்கு வழங்கி வந்துள்ளது, என்பதற்கு இன்று உலகின் பல பாகங்களிலும் பதவி வகித்து வரும் பழைய மாணவர்கள் சான்றாகும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்ற இந்துப் பாரம்பரிய தத்துவத்திற்கு அமைவாகவும், செய்நன்றி அறிதலின் பிரதிபலனாகவும் உருவாக்கப்பட்டுச் சிறப்பான செயற்பாடுகளை முன்னெடுக்கும் பழைய மாணவர் சங்கமானது யா / வேலாயுதம் ம. வி. யின் வளர்ச்சியில் பெறுமதிமிக்க பல்வேறு பங்களிப்பினை வழங்கி வருவது யாவரும் அறிந்ததே. அதற்கு மகுடம் வைத்தது போல் இப் பாடசாலையின் 115 ஆவது வருடப் பூர்த்தியினை நினைவில் நிறுத்தி இம் மலரினை வெளியிடுவது காலத்தின் தேவையும், சிறப்பான பணியுமாகும். அவ்வகையில் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் இக் கல்விப் பணிக்கு வாழ்த்துக் கூறுவதுடன், அவர்களது கல்விப்பணி மேன்மேலும் தொடர்ந்து, வளர்ந்து சிறக்க எனது ஆசியினைக் கூறுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**கி. அருளானந்தம்**
*செயலாளர்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,*
*யா / வேலாயுதம் ம. வி,*
*பருத்தித்துறை*

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வேலாயுதம் மகா வித்தியாலய வரலாறு | 01 |
| 2. | வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் பங்களிப்பு | 12 |
| 3. | பிரித்தானியர் கால யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்த வியாபதிக் கெதிரான சைவப்பதிற்குறிகள் | 19 |
| 4. | வடமராட்சியின் கல்வியும் சமூக முனைவுப்பாடும் | 22 |
| 5. | ஆங்கில மொழி மூலக் கல்வி | 27 |
| 6. | நான் படித்த வேலாயுதம் பள்ளிக்கூடம் : அரை நூற்றாண்டுக்கு முன் | 36 |
| 7. | செ. கதிர்காமநாதனின் 'வெறுஞ்சோற்றுக்கே வந்தது' சில பார்வைகள் | 39 |
| 8. | ஈழத்தின் பழந்தமிழ் இலக்கியம் ஒன்று திருக்கரைசைப் புராணம் | 43 |
| 9. | பணச்சலவை – ஒரு நோக்கு (Money Laundering) | 47 |
| 10. | Education, Community Service and Alumni Collaboration | 51 |
| 11. | வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம் | 56 |
| 12. | Mr. M.A. Thangarajah the Architect of Science Education at Velautham M.V | 65 |
| 13. | "தமிழ் எழுத்துக்கலையின் தோற்றமும் வளர்ச்சி வரலாறும் – ஒரு மொழியியலாய்வு நோக்கு" | 70 |
| 14. | அருள் திருமுருகனின் எழிலும், அவன் பெருமையும் | 78 |
| 15. | செம்மொழி – தமிழ்மொழி – எம்மொழி | 83 |
| 16. | என்னை வாழவைத்த வேலாயுதம் மகா வித்தியாலயம் | 85 |
| 17. | பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் பணிகளும் வளர்ச்சியும் | 89 |
| 18. | பாடசாலை வளர்ச்சியில் அபிவிருத்திச் சங்கங்களினதும் பழைய மாணவர் சங்கங்களினதும் பங்கு | 93 |
| 19. | My Link with Velautham M.V | 97 |
| 20. | அமரர் சின்னையா தேவராசா | 99 |
| 21. | Puloly Velautham M.V | 101 |
| 22. | நெஞ்சத்தில் நிலைத்திருக்கும் நினைவலைகள் | 103 |
| 23. | எனது வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் வேலாயுதம் மகா வித்தியாலயம் | 107 |
| 24. | 'வேலாயுதம் பாடசாலை'யிற் கற்ற மாணவனின் ஓரளவு மழுங்கிய நினைவுகள் (1948–1951) பிறப்பும் ஆரம்பக் கல்வியும் | 110 |
| 25. | என் வாழ்வுடன் இணைந்த வேலாயுதம் மகாவித்தியாலயம் | 115 |
| 26. | Rebuilding war torn areas - A Recollection | 118 |
| 27. | Reminiscences of My School Days at the Velautham Maha Vidyalayam | 121 |
| 28. | இந்துப் பாரம்பரியத்தை வளர்த்த கல்விக் கலைக் கோயில்கள் | 125 |
| 29. | வேலாயுதம் மகா வித்தியாலயம் | 131 |
| 30. | ஓர் பழைய மாணவனின் மனக் குறிப்பேட்டிலிருந்து... | 133 |
| 31. | கற்பித்தல் – கற்றல் வேண்டும் (ஒரு மீள் பார்வை) | 137 |
| 32. | எனது பாடசாலை, எனது வாழ்க்கை, எனது நினைவுகள் | 139 |
| 33. | யாழ்/ வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்க – கொழும்புக்கிளை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், அவுஸ்திரேலியா வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. நவரட்ணராசா ஜெயச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை | 141 |

# முன்னாள் அதிபர்கள்



க. சுப்பிரமணியம்



வே. நடராசா (1946)



திரு. த. இராமநாதபிள்ளை
1.1.1947 - 31.8.1961



திரு. மு. ஆ. தங்கராசா
1.9.1961 - 31.12.1970



திரு. வ. தம்பிப்பிள்ளை
1.1.1971 - 7.2.1977



திரு. சே. ஏகாம்பரநாதன்
8.2.1977 - 7.7.1991



திரு. சி. தேவராசா
8.7.1991 - 23.6.1994



திரு. இ. ஞானசேகரம்பிள்ளை
27.6.1994 - 29.11.2001



திரு. அ. ஜெகநாதன்
30.11.2001 - 27.1.2009

## தற்போதைய அதிபர்



திரு. ச. திரவியராசா
28.01.2009

# வேலாயுதம் மகா வித்தியாலய வரலாறு
# 07.08.1895 - 30.06.2010

**கே. ஏகாம்பரநாதன்**

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆங்கிலேய ஆட்சி நிலவிய காலம். ஆங்கிலேயர் நாட்டின் கல்வித்துறையை முன்னேற்றுவதில் மும்முரமாக ஈடுபட்டனர். அத்துடன் கிறீஸ்தவ மதத்கல்வி மேம்பாட்டுக்காகவும் உழைத்தனர். சைவ சமயம் இதன் காரணமாகப் பொலிவிழந்தது. எனவே தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் புத்துயிர் அளிக்க யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே பெரியோர்களால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வகையில் தோன்றிய ஒரு பாடசாலை "புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை." இதன் பெயர் 15.09.1976 இலிருந்து "வேலாயுதம் மகா வித்தியாலயம்" என மாற்றப்பட்டது. ஆனால் ஆரம்பக் காலத்திலிருந்து "வேலாயுதம் ஸ்கூல்" என்றே பொதுமக்கள் பேச்சுவழக்கில் அழைத்து வந்தனர். அழைத்து வருகின்றனர். "கல்வி அழகே அழகு" என்பது பாடசாலையில் மகுடவாசகம்.

வித்தியாலய நிறுவுனர் வேலாயுதர், புலோலி கிழக்கில் வாழ்ந்த வைரமுத்து என்னும் பெரியாரின் புதல்வனாவர். வேலாயுதர், அருணாசலம் என்னும் கனவானின் மகள் நாகமுத்து என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு அருணாசலம் என்னும் பெயரை உடைய ஒரு புத்திரனும் விசாலாட்சி என்னும் நாமம் பொருந்திய ஒரு புத்திரியும் பிறந்தனர். அருணாசலம் சென்னைப் பிறெசிடென்சிக் கல்லூரியில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர். புலோலியூர் குமாரசுவாமிப் புலவரின் மகன் தணிகாசலம், விசாலாட்சியைத் திருமணம் செய்தார். இத் தம்பதியினருக்குப் பத்மநாபன், இராமச்சந்திரன் என்னும் நாமங்கள் கொண்ட புத்திரர் இருவரும் கமலாம்பிகை என்னும் பெயரை உடைய புத்திரியும் பிறந்தனர். தணிகாசலத்தின் சகோதரர்கள் சிவப்பிரகாசம், பரஞ்சோதிப் பிள்ளை என்பவர்களாகும்.

சென்னையில் கல்வி கற்றுப் பட்டதாரியாகி ஊர் திரும்பிய வேலாயுதர் அவர்கள் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்தார். கிறீஸ்தவ மதக் கல்வி மேம்பட்டு இருந்தது. ஏழைச் சைவச்சிறார்கள் ஆங்கிலத்தைக் கற்கவும் உயர் கல்வி பெறவும் சமய அறிவு பெறவும் வழி தெரியாதவர்களாய் அல்லற் பட்டனர். எனவே அந்நிலையை வேலாயுதர் கண்டார். ஒரு பாடசாலை நிறுவி அவர்கள் துயர் நீக்க எண்ணம் கொண்டார். இதன் பயனாகவே தோன்றியது புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை. தாம் வாழ்ந்த இல்லத்தில் மன்மத வருடம் ஆடிப்பூரத் தினத்திலன்று 07.08.1895 ஆம் திகதி ஆரம்ப விழா நிகழ்ந்தது. பதினான்கு மாணவர்கள் முதல் நாள் அனுமதிக்கப்பட்டனர். ஒரு மாதத்தினுள் மாணவர் தொகை நூறாக அதிகரித்தது. ஶ்ரீமான் கோணப்பர் கணபதிப்பிள்ளையும், ஶ்ரீமான் வல்லிபுரம் வேலுப்பிள்ளையும் பண்டிதர் அரு. சோமசுந்தரம்பிள்ளையும் ஆரம்ப கால ஆசிரியர் கள். சென்னையில் இருந்து வந்த திரு. K. சுந்தராச்சாரியார் எல்லோராலும் போற்றப்பட்ட சிறந்த ஆங்கில ஆசிரியர். பின்பு அவர் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். அக் காலத்தில் வேலாயுதருக்குப் பல பனம் காணிகள் இருந்தன. அக்காலத்தில் இங்கு மேதர் அன்ட் கம்பனியினால் நடாத்தப்பட்ட சீனிக் கம்பனிக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டன. அப்பணம் இப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.

வகுப்புக்கள் மூன்றாம் வகுப்புத் தொடக்கம் எட்டாம் வகுப்பு வரை இருந்தன. வேலாயுதர் அவர்கள் முகாமையாளர், அதிபர், ஆசிரியர் ஆகியோருக்குரிய முத்திறப்பணிகளையும் சிலவேளைகளில் ஆற்றினார். கல்வி பயின்ற ஏராளமான ஏழை மாணவர்களுக்கு அவர் இலவசமாகப் புத்தகங்களும் எழுது கருவிகளும் வழங்கினார். மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. அவர்களுக்குரிய வேதனங்களை அவர் கொடுத்தார் அரச அங்கீகாரம் ஐந்து ஆண்டுகளின் பின்பு கிடைத்தது. பின்பு ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டிய வேதனத்தில் ஒரு பகுதியை வசதியுள்ள பிள்ளைகளிடமிருந்து பெற்றார். ஏழைப் பிள்ளைகளிடமிருந்து பணத்தை ஒரு போதும் அறவிட்டிலர். அவரின் மகன் அருணாசலமும் மகள் விசாலாட்சியும் அங்கேயே கற்றனர்.

வேலாயுதர் அமரரானதும் அன்னாரின் மகன் அருணாசலம் பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். பதிவுகள் இல்லாததால் திகதிகள் தெரியவில்லை. இவரும் தந்தையைப் போன்றே முத்திறம் பதவிகளையும் வகித்தார். அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்கும் வரை பாடசாலை வளர்ச்சிக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தார். தந்தையின் பாடசாலையிலுள்ள இல்லத்தில் தங்கி வாழ்ந்த திரு. அருணாசலம் அரசாங்கப் பாடசாலையானதும் மனவேதனையுடன் தமது இன்னொரு இல்லத்துக்குச் செல்ல வேண்டி நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆங்கிலப் பாடத்தைச் சிறப்பாகக் கற்பித்தவர் 01.08.1939 இலிருந்து திரு. வே. அருணாசலம் தலைமை ஆசிரியராக இருந்தார் என்பதை அவர் சம்பவத் திரட்டில் இட்ட கையொப்பத்திலிருந்து தெரிகிறது.

திரு. வே. அருணாசலம் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் அவரின் தந்தை காலத்தில் சேவை ஆற்றிய சில ஆசிரியர்களும் பணியாற்றினர். இவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் உறுதுணையாக இருந்து அவருடன் இணைந்து பாடசாலை முன்னேற்றத் துக்கு உழைத்தனர். அவர்கள் பெயர்கள் வருமாறு : திருவாளர் ச. கணபதிப்பிள்ளை, சைவப்புலவர் V. சுப்பிரமணியம், C. சுப்பிரமணியம், கு. தணிகாசலம், சோ. அருணாசலம், ச. செல்லையா, வ. காசிநாதர், V. கந்தப்பு, க. உலகநாதர், வே. முருகேசப்பிள்ளை, பண்டிதர் இ. கனகசபாபதி, பூபால் M.A ஆகியோராகும்.

மாணவர் எட்டாம் வகுப்புச் சித்தியடைந்ததும் இலண்டன் கேம்பிறிச் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படும் மற்றிக்குலேசன் பரீட்சை, ஈ.எஸ்.எல்.சி, எஸ்.எஸ்.எல்.சி பரீட்சை போன்றவற்றுக்குத் தோற்ற வேண்டும். ஆங்கிலம் போதனா மொழியாக இருந்தது. தமிழ் ஒரு பாடமாகும்.

29.01.1946 இல் திரு. S. பசுபதி ஐயரும் 04.06.1946 இல் திரு. வே. நடராசாவும் அதிபர்களாக இருந்திருக்கின்றனர். சம்பவத் திரட்டுச் சான்று பகர்கிறது.

புலோலி மேற்கு அத்தியடியைச் சேர்ந்த திரு. கந்தப்பர் வேல்முருகு ஆரம்பகால மாணவன். சைவப் பெரியார் உயர்திரு. சு. சிவபாத சுந்தரனாரும் கலாநிதி கு. சிவப்பிரகாசமும் பழைய மாணவர்களே. பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத்தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை இப்பாடசாலையில் கற்றவர். உணவு அமைச்சின் நிரந்தரச் செயலாளராக இருந்த திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை B.A (Hons) London C.C.S, O.B.E அவர்களும் பழைய மாணவர், யாழ்ப்பாணச் செயலகத்தில் உள் நாட்டு வியாபார உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. K.S. வேல்முருகு பாடசாலை முகப்பிற்குச் சிரம் தாழ்த்திச் செல்லும் இயல்பு உடையவர். முன்னாள் ஆசிரியரும் இறுதியில் வவுனியாப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்த திரு. சி. பொ. சிவபாதம், முன்னாள் ஆசிரியரும் விஞ்ஞானக் கல்வி அதிகாரியாகப் பின் பணியாற்றிய திரு. க. பொன்னம்பலம், பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக

இருந்த திருவாளர்கள் ச. செல்லத்துரை, சே. ஏகாம்பரநாதன் ஆகியோர் இப்பாடசாலையில் கற்றோராகும்.

## திரு. த. இராமநாதபிள்ளை B.A.(Lond) 01.01.1947 - 31.08.1961

திரு. த. இராமநாதபிள்ளை முகாமையாளரால் 01.01.1947 இலிருந்து அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் ஆங்கில அறிவு நிறைந்தவர். தூய வெண்ணிறத் தேசிய உடை அணிந்தவர். அவரைக் காமராஜர் போன்ற தோற்றம் உள்ளவர் எனச் சொல்வர். "உலக வரலாறு" என்ற பெயரில் மூன்று பாகங்கள் எழுதியவர். அத்துடன் யவன மஞ்சரி, அளவை விளக்கம், உளநூலும் கல்வியும், இலக்கிய இலக்கண ஆய்வுரைகள், சைவசமய ஆய்வுரைகள், இந்து நாகரிகமும் பண்பாடும் என்னும் நூல்களின் ஆசிரியருமாவர்.

இவர் காலத்தில் திருவாளர்கள் மு.ஆ தங்கராசா B.Sc (Lond) (உப அதிபர்), பொ. சபாரத்தினம் B.Sc, பலாலி பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற க. ஆறுமுகம், பண்டிதர் இ. கனகசபாபதி, N. நாராயணபிள்ளை சென்னையைச் சேர்ந்த பிரபல ஆங்கில ஆசிரியர் N.J இராஜகோபால், M.A. கேரளாவைச் சேர்ந்த தாவரவியல், விலங்கியல் ஆசிரியர், K. இராமகிருஷணப் பணிக்கர், கணிதம் ஆங்கிலம் கற்பித்த சி. பத்மநாதன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த க. துரைரத்தினம் B.A. கேத்திரகணிதப் பொறிமுறை வரைதல், மோட்டார் வாகனத் தொழில் நுட்பம் ஆகிய பாடங்களைக் கற்பித்த க.முருகுப்பிள்ளை, வே. ஈசுரபாதம் வ. தம்பிப்பிள்ளை, உடற் பயிற்சி ஆசிரியர் வ. சு. கதிர்காமத்தம்பி, சே. ஏகாம்பரநாதன், க. பொன்னம்பலம் பாராளுமன்ற மாதிரியைப் பாடசாலையில் அறிமுகப்படுத்திய ஆங்கிலம், குடியியல் ஆசிரியர் வை. கிருஷ்ணபிள்ளை, விஞ்ஞான ஆசிரியர் மு. குமாரசாமி ஆகியோர் பழைய ஆசிரியர்களுடன் இணைந்து சேவையாற்றியோராகும்.

திரு. மு. ஆ. தங்கராசா ஆசிரியராக மாற்றம் பெற்று வந்தபின் உப அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் விஞ்ஞானப் பிரிவை முன்னேற்றக் கருதினார். அவர் அதிபர் திரு. த. இராமநாத பிள்ளையுடனும் முகாமையாளர் திரு. வே. அருணாசலத்துடனும் கலந்துரையாடி எஸ். எஸ். ஸி. வகுப்பு ஆரம்பிக்கத் தீர்மானித்தனர். இதன் பிரகாரம் 1948 ஆம் ஆண்டு அவ் வகுப்பு ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது. அம் மாணவர்கள் 1949 டிசெம்பர் மாதம் பரீட்சைக்குத் தோற்றினர். பாடசாலைப் பொன்விழா 20.09.1949 இல் நிகழ்ந்தது.

மாணவர்கள் கல்வித்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் நன்கு பிரகாசித்தனர். திரு. வ. கு. கணபதிப்பிள்ளை தலைமையில் ஒரு கரப்பந்தாட்டக் குழு அமைக்கப்பட்டது. இக்குழு 1952 ஆம் ஆண்டின் வடமராட்சிக் கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றி வெற்றி ஈட்டியது. யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப் பட்ட போட்டியிலும் முதலிடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து அகில இலங்கைப் பாடசாலைகளுக் கிடையிலான இறுதிப் போட்டியிலும் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றது. அதற்குரிய கேடயம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கையின் தேசாதிபதி சோல்பரிப் பிரபு அவர்களினால் யாழ் முற்றவெளியில் வழங்கப் பட்டது. அதே ஆண்டில் வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டிகளிலும் பரிசுகள் கிடைத்தன. சேர சோழ, பாண்டியர் இல்லங்களாகப் பிரித்து மெய்வன்மைப் போட்டிகள் நிகழ்ந்தன. பாடசாலை மெய்வன்மைப் போட்டிகளில் இப் பாடசாலையிலேயே குத்துச் சண்டை, மல்யுத்தம், ஜூடோ சண்டை, கபடி விளையாட்டு ஆகியவற்றைப் பார்த்து இரசிக்கலாம். கபடி விளையாட்டை முதன் முதலில் அறிமுகப்படுத்திய பெருமை ஆசிரியர் திரு. வ. சு. கதிர்காமத் தம்பியைச் சாரும்.

ஆசிரியர் திரு. வை. கிருஷ்ணபிள்ளை குடியியல் கற்பித்தார். மாணவர்களுக்கும்

பாராளுமன்ற அமர்வுகளையும் பற்றி விளக்கக் கருதினார். சிரேஷ்ட மாணவர்களுக்கிடையில் பாராளுமன்ற மாதிரியை அமைத்துச் சபாநாயகரைத் தெரிவு செய்து அரசாங்கக் கட்சி எதிர்க்கட்சி ஆகியவற்றை உருவாக்கி இருவாரங்களுக்கொருமுறை கூட்டங்களை நடாத்தி விவாதம் செய்ய ஒழுங்கு செய்தார்.

பாடசாலைக்குக் கல்விப் பரிசோதகர் வந்து ஆண்டுக்கொரு முறை பங்குனி மாதத்தில் எல்லாப் பாடங்களின் முன்னேற்றத்தைப் பற்றிப் பரிசோதிப்பர். (Annual Returns) பதிவேடுகளையும் பார்வையிடுவர். அத்தினத்துக்கு முதல் பாடசாலை வளவுக்குள் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானுக்குப் பூசை பாடசாலைச் சமூகம் நடாத்தி வருவது மரபு.

1953 ஆம் ஆண்டு எஸ். எஸ். ஸி. வகுப்பில் கற்று ஆண்டு இறுதியில் நடைபெற்ற அரசாங்கப் பொதுப் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தவர். கதிர்காமு செல்வவிநாயகம் என்னும் மாணவர். அவர் அரசாங்கப் பொது இலிகிதர், சேவைப் பரீட்சைக்குத் தோற்றி முதலாம் இடத்தைப் பெற்றார். மலேசியாப் பல்கலைக்கழகத்தில் பொருளாதார விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொருளாதார ஆலோசகராகக் கடமையாற்றியவர். திரு. அ. மாணிக்க வாசகர் இங்கே கற்றுப் பின் ஹாட்லிக் கல்லூரிக்குச் சென்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத் துறையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தார். தொலைத் தொடர்பு பணிப்பாளர் நாயகமாகப் பணியாற்றியவர். கல்வி அமைச்சின் கணக்காளர் பதவி வகித்த திரு. இராஜ சுப்பிரமணியம் இப் பாடசாலைப் பழைய மாணவர். கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு. வை. கா. சிவப்பிரகாசம் M.A அவர்களும் உப அதிபராக இருந்த திரு. சி. அந்தோனிமுத்துவும் இங்கு கற்றோராகும். பொறியியலாளர் திரு. A. சங்கரப்பிள்ளை, சுகாதாரத் திணைக்களத்தினதும் வடகிழக்கு மாகாண சபையினதும் பிரதம கணக்காளராகப் பணியாற்றிய திரு. கா. நடராசா, பட்டயக் கணக்காளர் திரு. V. சேனாதிராசா, வைத்தியக் கலாநிதி செ. யோகநாதன், வைத்தியக் கலாநிதி சி. சிறீதரன் ஆகியோர் இங்கே பயின்றோர்.

**திரு. மு. ஆ. தங்கராசா** B.Sc (Lond)
**அதிபர் 01.09.1961 -- 31.12.1970**

திரு. த. இராமநாதபிள்ளை 31.08.1961 இல் இளைப்பாறினார். முகாமையாளர் திரு. வே. அருணாசலம் உப அதிபராக இருந்த திரு. மு. ஆ. தங்கராசாவை 01.09.1961 இலிருந்து அதிபராக நியமித்தார். உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் இவ்வாண்டு வெவ்வேறு திகதிகளில் பொறுப்பேற்றது. அதற்கமைய இப்பாடசாலை 15.12.1961 இல் அரசாங்கப் பாடசாலையானது. முகாமையாளரது நிர்வாகம் நீங்கியது. அதிபர் பாடசாலை நிர்வாகியாகினார். முகாமையாளர் திரு. வே. அருணாசலம் தாம் இது காலம் வரையும் வாழ்ந்த பாடசாலை இல்லத்திலிருந்து வெளியேறினார்.

ஆசிரியர் மாற்றங்கள் நிகழ்ந்தன. மாற்றம் பெற்று வந்த பின்வரும் ஆசிரியர்கள் முன்னைய ஆசிரியர்களுடன் இணைந்தனர். மஹாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சி பெற்ற திரு. இ. மகேசன், உயர் வகுப்புகளில் கணிதம் கற்பித்த திரு. க. சிவபாதசேகரம், திரு. க. விநாயகம்பிள்ளை, திரு. S. கனகசபை, தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகியன கற்பித்த திரு. S. சிவபாதசுந்தரம், சங்கீத ஆசிரியர் இசைமணி ஆ. கார்த்திகேசு, விலங்கியல் ஆசிரியர் திரு. S. றோய் காந்தராஜ், திரு. R. கருணாகரன், திரு. க. நல்லதம்பி ஆகியோர்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் முதன் முதல் இப்பாடசாலையில் 1963 ஆம் ஆண்டு க. பொ. த. ப. சாதாரண வகுப்புக்குப் பிரயோக கணிதம் ஒரு பாடமாகக் கற்பிக்க ஆரம்பமாயிற்று. இம் மாணவர்களின் பதின்மர் 1964 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி அனைவரும்

சித்தியடைந்தனர். உயர் தர வர்த்தக வகுப்பும் இவ்வாண்டு ஆரம்பிக்க அனுமதி கிடைத்தது. சங்கீதமும் ஒரு பாடமாகக் கற்பித்தனர்.

திரு. மு. ஆ. தங்கராசா அதிபராக இருந்த காலத்தில் பாடசாலை அமைப்பில் மாற்றங்களும் அபிவிருத்திகளும் நிகழ்ந்தன. பாடசாலை நலன்புரிச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 'சம்பந்தர் மண்டபத்'தை 11.02.1963 இல் கல்விப் பணிப்பாளர் திரு. சி. உ. சோமசேகரம் திறந்துவைத்தார். 1964 ஆம் ஆண்டு கிடுகினால் வேயப்பட்டும் பதிவாக இருந்த அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் மண்டபங்கள் உயர்த்தப்பட்டு ஓட்டுக் கூரைகளாயின. 04.05.1964 இல் ஆறு ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட விளையாட்டு மைதானமாக இருந்த 'கும்பான்' என்னும் ஆதனத்தைக் கல்வி அதிகாரி அதிபரிடம் கையளித்தார் வசதி சேவைகள் நிதியில் இருந்து சேமித்த நிதியைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட "அருணாசலம் மண்டபம்" (அலுவலகத்துக்கும் சுந்தரர் மண்டபத்துக்கும் நடுவில் இருந்தது) வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தணிகாசலம் 05.11.1964 இல் திறந்து வைத்தார். பாடசாலைக்கு அருகே இருந்த நிலத்தைத் தாமும் அப்போது இருந்த ஆசிரியர்களும் உவந்து அளித்த நிதியைக் கொண்டு வாங்கிப் பாடசாலைக்கு ஆக்கினார். இரசாயன, பௌதிக, உயிரியல் ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட்டன. 1966 ஆம் ஆண்டு வகுப்பறைகளுக்கு ஒலி பெருக்கிச் சாதனங்களும் அமைத்துக் காலை மாலை தேவார பாராயணமும் தேவையான நேரங்களில் மாணவர்களுக்குரிய அறிவித்தல்களும் பணிமனை யிலிருந்து ஒலிபரப்பாயின.

1966 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 31 பேர் விசேட சித்தி எய்தினர். இப் பாடசாலை யாழ் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றது. க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்பு ஆரம்பிப்பதற்கு அனுமதி கிடைத்தது. அம் மாணவர்கள் 1968 ஆம் ஆண்டு பரீட்சைக்குக் தோற்றினர். கணித பிரிவிலிருந்து பொறியியற் துறைக்கு முதன் முதலாகத் தெரிவு செய்யப் பட்டோர் மூவர் வி. செல்வேந்திரன், க. இராமச் சந்திரன், ஏ. கணேசு ஆகியோர். வைத்தியத் துறைக்குக் க. பரிமேலழகன் தெரிவானார்.

வசதி சேவைப்பணத்தைக் கொண்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பயன்படக் கூடிய புதிய நூல்கள் அடங்கிய நூல் நிலையம் ஒன்றை அமைத்தார். திரு. க. பொன்னம்பலம், திரு. சே. ஏகாம்பரநாதன் ஆகியோரைக் கொழும்புக்கு அனுப்பி ஆங்கில, தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்தார். திரு. க. பொன்னம்பலத்தை நூல் நிலையப் பயிற்சி பெற அனுப்பினார். அப்பயிற்சியின் இறுதிப் பரீட்சையில் அவர் முதற்பிரிவில் சித்தி எய்தினார். நூல் நிலையத்தை ஒழுங்கில் அமைத்தார். அதனால் நூல்களை இலகுவாக அலுமாரிகளிலிருந்து எடுக்கக் கூடியதாயிருந்தது. Asia Foundation இலிருந்தும் புத்தகங்கள் கிடைத்தன. இங்ஙனம் எல்லாத்துறைகளையும் முன்னேற்றக் கர்த்தாவாக இருந்த திரு. மு. ஆ. தங்கராசா 31.12.1970 இல் இளைப்பாறினார்.

இப் பாடசாலையின் காரியாலய காரிய சேவகர் திரு. ஆ. தங்கவேலு, ஆய்வு கூட உதவியாளர் திரு. சி. இராசையா, காவலாளிகள் திரு. ஆ. கிட்டிணர், திரு. க. முத்துவேலு, தொழிலாளர் திரு. க. குலசிங்கம் ஆகியோர் பாடசாலைக்கு அர்ப்பணிப்புடன் உழைத்தனர். சிறிது காலம் ஆய்வு கூட உதவியாளராகச் சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. S. சிவசுப்பிர மணியமும் நூல் நிலைய உதவியாளராகத் திரு. கந்தையா என்பவரும் பணியாற்றினர். எழுது வினைஞர் திரு. T. சிவப்பிரகாசம் பாடசாலையுடன் இணைந்தவர். அதிபர் திரு. மு. ஆ. தங்கராசாவுக்கு வலக்கை போன்றவர். இவர்கள் அனைவரையும் மறக்கமுடியாது.

வட இந்து மகளிர் கல்லூரியினை அரசாங்கத்துக்குக் கையளிக்காது அது தனிப்பட்ட பாடசாலையாக இயங்கியது. அப்பாடசாலை

ஆசிரியர்கள் திருமதி. முருகேசம் பிள்ளை, திருமதி. நல்லதம்பி, திருமதி. விக்கினராசா ஆகியோர் இப் பாடசாலைக்கு மாற்றப்பட்டனர்.

**திரு. வ. தம்பிப்பிள்ளை** B.A.Dip.in.Ed.
**அதிபர் 01.01.1971 - 07.07.1977**

திரு. மு. ஆ. தங்கராசா இளைப்பாறியதும் திரு. வ. தம்பிப்பிள்ளை அதிபராக நியமனம் பெற்றார். அவர் சிறந்த ஒரு கணித ஆசிரியர். கலைத்துறை, விஞ்ஞானத்துறை இரண்டிலும் அறிவு நிரம்பப் பெற்றவர். பாடசாலைக்கு ஆசிரியர்கள் சமூகமளிக்காது இருப்பின் அவர்கள் கற்பிக்கும் பாடநேரங்களில் அவர் அவர்கள் வகுப்புகளுக்குச் சென்று கற்பிப்பார். பின்வரும் ஆசிரியர்கள் மாற்றம் பெற்று வந்தனர். திருவாளர்கள் வே. மதிபாலசிங்கம், ச. சி. இராமசாமி, த. ந. பஞ்சாட்சரம், Vector பொ. வேலாயுதம், N. இராசரத்தினம், N. இராமச் சந்திரன், தி. சிவபாதசுந்தரம், அ. சின்னத்துரை, ச. ரிபூசியஸ், சா. சேவற்கொடியோன் (உப அதிபர்), நா. வைத்தியானந்தன், வ. பூபாலசுந்தரம், த. சங்கரப்பிள்ளை, செ. நவரத்தினசிங்கம், க. கந்தையா, ப. குணரத்தினம், கோ. வித்தியா சாகரம், சி. இராஜேந்திரா, க. நடராசா, K. குலசிங்கம், க. ச. குலசிங்கம், ஜோ. அருட்பிரகாசம், வ. வே. நவரத்தினக் குருக்கள் ஆகியோராகும்.

இவர் காலத்தில் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து சோ. சிவபாதம், கு. சிவயோகன் ஆகியோர் பொறியியற்றுறைக்கும் எஸ். சிறீலோகராசா வைத்தியத்துறைக்கும் K. இரகுநாதன் மிருக வைத்தியத் துறைக்கும் தெரிவாகினர். ஏ. விநாயகராசா உயிரியற் பட்டதாரியாகிப் பின் டெல்லியில் உள்ள நேருப் பல்கலைக்கழகத்தில் M.Sc பட்டம் பெற்றுள்ளார்.

வித்தியாலயத்தின் எழுபத்தைந்தாவது நிறைவுப் பவள விழா, நிறுவுனர் தினம், பரிசளிப்பு விழா ஆகியன ஒன்று சேர 31.10.1971 இல் சிறப்பாக நிகழ்ந்தது. இவ்விழாவுக்குக் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும் கல்வி மா அதிபதியுமாகிய கலாநிதி பிரேமதாச உடகம அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். வட மாநிலக் கல்வி அதிபதி திரு. மகாதந்தில அவர்களும் முன்னாள் ஆசிரியரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. க. துரைரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்தனர்.

இப் பாடசாலையில் சாரணீயத்தை ஆரம்பித்து இயக்கி வந்த திரு. த. பத்மநாபன் ஓய்வு பெற்றதும் அவ்வமைப்பு இல்லாமற்போயிற்று. திரு. வ. பூபாலசுந்தரம் மாற்றம் பெற்று வந்ததும் சாரணீயத்துக்குப் புத்துயிர் கொடுத்தார். அதை உன்னத நிலைக்குக் கொண்டு வந்தார். அவர்கள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிகளை ஈட்டினார். 1974 ஆம் ஆண்டில் 12 ஜனாதிபதி விருதுகளைப் பெற்று வடபிரதேசத்தில் முதலாம் இடம் கிடைத்தது. 1976 ஆம் ஆண்டில் 7 ஜனாதிபதி விருதுகள் சாரணர் பெற்றனர்.

1972 ஆம் ஆண்டு தட்டாதெரு மிஷன் பாடசாலை புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையின் ஆரம்பப் பாடசாலையாக இணைக்கப்பட்டது. பின்பு எதிர்பார்த்த பயன்அளிக்காததால் 1974 ஆம் ஆண்டில் இணைப்பு நீக்கப்பட்டது. எனினும் அப்பாடசாலையின் ஆசிரியர் திரு. ப. க. ஆறுமுகம் இப் பாடசாலையுடன் இணைந்தார்.

வானொலித் தொழில் நுட்பம் பருத்தித்துறைப் பிரதேசத்தில் இப்பாடசாலையில் ஆசிரியர் திரு. நா. வைத்தியானந்தனால் கற்பிக்கப்பட்டது. மாணவர் ஆர்வத்துடன் கற்றனர்.

1976 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சினால் அனுராதபுரத்தில் நடத்தப்பட்ட அகில இலங்கைக் குழுப் பாடல் சங்கீத இறுதிப் போட்டியில் எமது மாணவர்கள் பங்கு பற்றினர்.

அதே ஆண்டு (1976) பாடசாலைக்குத் தென்திசையிலிருந்த அப்பர் மண்டபம்

அகற்றப்பட்டுக் கிழக்குப் புறமாக உள்ள ஆறு வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டிடமானது.

நிறுவுனரை நினைவு கூரும்முகமாகப் பாடசாலையின் பெயரை "வேலாயுதம் மகா வித்தியாலயம்" என மாற்ற வேண்டும் எனப் பழைய மாணவர் சங்கமும் பெற்றோர், ஆசிரிய சங்கமும், தீர்மானித்தர். கல்வி அமைச்சுக்கு அனுப்பிய தீர்மானத்தின் பிரகாரம் 1976 இல் பாடசலைப் பெயர் மாற்றப்பட்டது. திரு. வ. தம்பிப்பிள்ளை 07.02.1977 இல் இளைப்பாறினார்.

**சே. ஏகாம்பரநாதன் B. A. Hons Dip. in.Edu**
**அதிபர் 08.02.1977 - 07.07.1991**

உப அதிபராக இருந்த திரு. சே. ஏகாம்பரநாதன் 08.02.1977 இலிருந்து பதில் அதிபராக நியமிக்கப்பட்டார். 20.04.1982 வரையும் அப்பதவியில் இருந்தார். 21.04.1982 இலிருந்து இவருக்கு சிறீலங்கா கல்விச் சேவை வகுப்பு 5 பதவி உயர்வு கிடைத்தது. ஆசிரியர்களில் தகுதி உடையோரைப் பகுதித்தலைவர்களாக்கித் தமது கடமைகளைப் பகிர்ந்து அளித்து நிர்வாகத்தை நடத்தினார்.

இவர் காலத்தில் பின்வருவோர் மாற்றம் பெற்று இணைந்தனர். திருவாளர்கள் வே. கிருஷ்ணன், சி. தேவராசா, சி. தியாகராசா, ச. சிவஞான சுந்தரம், பொ. சிவசெந்திநாதன், க. சிதம்பரநாதன், மா. இராஜஸ்காந்தன், ஆ. ஜெகநாதன், க. தவயோகநாதன், ச. கைலாசபதி, இரா. சந்திர சேகரசர்மா, S. பாலகிருஷ்ணன், திருமதி. ஜெ. குலசிங்கம், திருமதி. க. செல்வரத்தினம், செல்வி. இ. செல்வவிநாயகம், செல்வி அ. கனகரத்தினம், செல்வி. வி. மாரிமுத்து, திருமதி. S. நளினிசாந்தி, செல்விகள் பு. சுப்பிரமணியம், சா. சின்னையா, திரு. ரி. சிவானந்தன், ஜோ. அருட்பிரகாசம், திருமதி A. மேரி வசந்தா, திருமதி. A. சாள்ஸ், சி. அ. இரத்தினம், M. M. அல்போன்ஸ், செல்வி R. சிற்றம்பலம், செல்வி S. பரமலிங்கம் ஆகியோராகும்.

இப் பாடசாலையில் நிறுவுனரது புத்திரி விசாலாட்சி கற்றார். ஆண் ஆசிரியர்களே ஆரம்பத்திலிருந்து கடமையாற்றினர். முதன் முதல் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் கணவன் வெளிநாடு செல்ல 18.11.1983 இல் மாற்றம் பெற்றுவந்தார். அதன் பின் பல ஆசிரியைகள் இப் பாடசாலைக்கு மாற்றப்பட்டுப் பெண் ஆசிரியர் பரம்பரை உருவானது.

இவர் பதவி வகித்த காலத்தில் தே. மோசிகீரன், ந. ஜெயச்சந்திரன், இ. மணி வண்ணன், S. இரவீந்திரதாஸ், V. K. பூரண குமாரன், ஏ. சண்முகராசா, சி. தர்மகுலசிங்கம் ஆகியோர் பொறியியற்றுறைக்கும் R. மதிவாணன் கணக்காளராகவும் S. இளங்கோ வைத்தியத் துறைக்கும் R. நெடுமாறன் விவசாய விஞ்ஞானத் துறைக்கும் V. கணேசலிங்கம் வர்த்தகத் துறைக்கும் தெரிவாகினர்.

உயரம் பாய்தலில் அகில இலங்கை மெய்வன்மைப் போட்டியில் பாடசாலைக்கு இரண்டாம் இடம் கிடைத்தது.

வித்தியாலயத்தின் தென் திசையில் உள்ள அப்பர் மண்டபத்தின் மிகுதிப் பகுதி 24.05.1977 இல் மேலே பிராத்தனை மண்டபமாகவும் கீழே வகுப்பறைகளும் அடங்கக் கூடியதாக மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டது. 22.06.1978 இல் சீர்காழி கோவிந்தராஜன் இசைவிருந்து அளித்தார். பாடசாலையின் முகப்பில் உள்ள இரண்டு மாடிக்கட்டிடத்துக்கு 13.12.1978 இல் பழைய மாணவனும் முன்னாள் ஆசிரியரும் பிரதம கல்வி அதிகாரியும் பின்பு வவனியாப் பிரதேசக்கல்விப் பணிப்பாளருமாகிய திரு. சி. பொ. சிவபாதம் அத்திவாரமிட்டார். நல்லை ஞானசம்பந்தர் ஆதினமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் 29.09.1979 இல் சரஸ்வதி பூசை அன்று பக்க வாத்திய சகிதம் விரிவுரை ஆற்றினார். இவ்வாண்டு, அகில இலங்கைச் சங்கீத, நடன, நாடகப் போட்டியில் மாணவர் பங்கு பற்றினர். கிராமியப் பாடலில் முதலிடம் கிடைத்தது. 1980 ஆம் ஆண்டு மாவட்ட மட்ட நாடகப் போட்டியில் இரண்டாம் இடமும் அகில இலங்கைச் சங்கீதப்

போட்டியில் இரண்டாம் இடமும் பாடசாலை பெற்றது. 20.11.1981 இல் நடைபெற்ற அகில இலங்கைச் சங்கீத நடன நாடகப் போட்டியில் மத்திய பிரிவு மாணவர் இசைப்போட்டியில் முதலிடம் பெற்றனர்.

முகப்பிலுள்ள இரண்டு மாடிக்கட்டிடத் திறப்பு விழா 14.02.1981 அன்று நிகழ்ந்தது. பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம், நிறுவுனரின் பேரனும் இப்பாடசாலை முன்னாள் ஆசிரியருமான திரு. த. பத்மநாபன், அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன் ஆகியோர் திறந்துவைத்தனர். அதைத் தொடந்து அதிபர் தலைமையில் நிகழ்ந்த கூட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. நா. துரைச்சாமி, திரு. இராஜ. சுப்பிரமணியம், பழைய மாணவன், விஞ்ஞானக் கல்வி, அதிகாரி திரு. க. பொன்னம்பலம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

பாடசாலைக்குத் தெற்கேயுள்ள தாபகரின் மகள் விசாலாட்சியின் (குமாரசுவாமி தணிகாசலம் மனைவி) மூன்று பரப்பு விஸ்தீரணம் உடைய ''பெரிய வளவு'' என்னும் ஆதனமும் வீடும். அவரின் புத்திரர்கள் தணிகாசலம் பத்மநாபன், தணிகாசலம் இராமச்சந்திரன் ஆகியோர்களால் 1981 ஆம் ஆண்டு ஆடிமாதம் 18 ஆம் திகதி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்குத் தரும நன்கொடையாக எழுதப்ப ட்டது. அவர்கள் காலமானதும் அவர்கள் சார்பாக அவர்களின் ஒன்றை விட்ட சகோதரன் பரஞ்சோதிப்பிள்ளை சிவஞானசேகரப்பிள்ளை 02.06.1984 அன்று அதிபர் சே. ஏகாம்பரநாதனிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

24.10.1985 இல் வேலாயுதம் மகா வித்தியாலயத்தை மூலதாரப் பாடசாலையாகக் கொண்டு புலோலியில் உள்ள பத்துப் பாடசாலைகள் அடங்கிய புலோலிக் கொத்தணி யைக் கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் ஆரம்பித்து வைத்தார். அக் கொத்தணி 01.11.1985 இலிருந்து இயங்கியது.

06.12.1990 அன்று பாடசாலை முன் வீதியில் வான் தாக்குதல் நிகழ்ந்து ஆங்கில ஆசிரியர் திரு. ஜோர்ஜ் அருட்பிரகாசம் அகாலமரணமானார். எனவே 08.12.1990 இலிருந்து இப் பாடசாலை புற்றனை மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியில இயங்க ஆரம்பித்தது. 15.01.1991 இலிருந்து பிற்பகல் பாடசாலையாக மதியம் ஒரு மணியில் இருந்து மாலை ஐந்து மணிவரை நடைபெற்றது. பெற்றோரின் தீர்மானத்திற் கேற்பப் பழைய இடத்தில் 04.03.1991 இலிருந்து வகுப்புகள் நடைபெற்றன.

அதிபர் சே. ஏகாம்பரநாதன் வடமராட்சிக் கல்விக் கோட்டத்துக்கு 08.07.1991 இலிருந்து உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றார்.

### திரு. சி. தேவராசா B.Sc (Madras)
### அதிபர் 08.07.1981 - 23.06.1994

1988.07.07 இலிருந்து உப அதிபராக இருந்த திரு. சின்னையா தேவராசா திரு. சே. ஏகாம்பரநாதன் பதவி உயர்வு பெற்றதும் 08.07.1991 இல் அதிபராக நியமிக்கப்பட்டார். விஞ்ஞானப் பட்டதாரியான இவர் ஆங்கிலத்தில் புலமை மிக்கவர். மதப்பற்று நிறைந்தவர். சிறந்த சமூக சேவையாளர்.

இவர் காலத்தில் முன்பு இருந்த ஆசிரியர்கள் கடமையாற்றினர். திரு. ப. க. ஆறுமுகம் ஆசிரியர் தினவிழாவில் சிறந்த ஆசிரியராகக் கௌரவிக் கப்பட்டார். நாட்டில் அசாதாரண நிலை நிலவிய போதும் மாணவர் தொடர்ந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். பௌதிக விஞ்ஞானத் துறைக்கு E. ஞானகலாதீபன், R. ஜெயந்தன், N. பத்மாகரன், R. சிறீமதன் ஆகியோரும் வணிகத் துறைக்கு M. கனகராசா, N. கேதீஸ்வரன், G. ஆதித்தன் ஆகியோரும் தெரிவாகினர்.

Mouth Organ வாசிப்பதில் திரு. சி. தேவராசா விற்பன்னராக விளங்கினார். பாடசாலை நிகழ்ச்சிகளிலும் ஏனைய சமய நிகழ்வுகளிலும் கலந்து சபையோரை மகிழ்விப்பார். இவர் 23.06.1994 இல் இளைப்பாறினார்.

**திரு. இ. ஞானசேகரம்பிள்ளை**
**B.A. (Cey) Dip.in.Ed.**
**அதிபர் தரம் I 27.06.1994 - 29.11.2001**

திரு. சி. தேவராசா ஓய்வு பெற்றதும் புற்றளை மகா வித்தியாலய அதிபராகப் பதவி வகித்த திரு. இ. ஞானசேகரம் பிள்ளை 27. 06.1994 இல் மாற்றம் பெற்று வேலாயுதம் மகா வித்தியாலய அதிபரானார். இவர் காலத்தில் முன்பு சேவையிலிருந்து ஆசிரியர்களுடன் திருமதிகள் S. சிவகுமார், V. மகேந்திரன், ச. வீரமணிஐயர் திரு. K. கருணாகரன், திருமதி. வ. அருளானந்தம், செல்வி அ. பரமலிங்கம் ஆகியோர் இணைந்தனர்.

இவரது காலத்தில் பாடசாலையின் நூற்றாண்டு விழா 13.03.1997 இல் நிகழ்ந்தது. பிரதம அதிதியாக யாழ் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. S. சிவராசா கலந்து சிறப்பித்தார். நூற்றாண்டு மலரும் வெளியிடப் பட்டது. பழைய மாணவர் சங்கமும் அபிவிருத்திச் சங்கமும் இணைந்து பணியாற்றின. 1994 ஆம் ஆண்டு பொறியியற் துறைக்கு R. தர்மதாஸ், G. முகுந்தன், பௌதீக விஞ்ஞானத்துறைக்கு T. ஜெயக்குமார், N. ஜெயகீதன், முகாமைத்துவத் துறைக்கு S. ஜெயரூபன், V. முரளி, S. வசந்தன் ஆகியோர் தெரிவாகினர். 1995 ஆம் ஆண்டில் பௌதீக விஞ்ஞானத் துறைக்கு K. பிரபாகரன் வணிகத் துறைக்கு S. ஜெயரூபன், S. வசந்தன், S. அற்புதராஜா, N. ஜெயகீதன் (Quantity Surveying) ஆகியோர் தெரிவாகினர். 1996 ஆம் ஆண்டில் பௌதீகத்துறைக்கு S. பாலசங்கர், முகாமைத்துவத் துறைக்கு N. ஜெயகணேஸ், K. நகுலதாஸ், T. ஜெயேந்திரன், S. பகீரதன், T. இரவீந்திரன், S. சிவச்செல்வன், வணிகத் துறைக்கு B. கனியூட் ஆகியோரும் 1997 ஆம் ஆண்டு பௌதீகத் துறைக்கு T. சுகிந்தன் வணிகத் துறைக்கு ய. யோன் மில்லர், K. சிவராசா, K. சுதாகரன் முகாமைத்துவதுறைக்கு S. சிறிஸ்கந்தராசா, T. மயூரன் (Quantity Surveying) ஆகியோரும் தெரிவாகினர். 1998 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோர்.

| | | |
|---|---|---|
| K. ஆனந்த கிருஷ்ணன் | – | கலை |
| T. ஜீவராசா | – | கலை |
| P. சுஜந்தன் | – | வணிகம் |
| B. கபிலன் | – | முகாமைத்துவம் |
| R. பிரபாகரன் | – | முகாமைத்துவம் |
| S. புலேந்திரன் | – | முகாமைத்துவம் |
| K. ஜதீசன் | – | முகாமைத்துவம் |
| T. தவநிதி | – | முகாமைத்துவம் |

**1999**

| | | |
|---|---|---|
| T. சுபானந்தன் | – | பௌதிக விஞ்ஞானம் |
| N. ஜெயரூபன் | – | முகாமைத்துவம் |

**2000**

| | | |
|---|---|---|
| B. காண்டீபன் | – | பொறியியற்றுறை |

திரு. இ. ஞானசேகரம் பிள்ளை இடமாற்றம் பெற்றுக் கொழும்பு சென்றார்.

**திரு. ஆ. ஜெகநாதன் B.Com**

உப அதிபராக 01.04.1999 இலிருந்து கடமையாற்றிய திரு. ஆ. ஜெகநாதன் 30.11.2001 இலிருந்து அதிபராக நியமிக்கப்பட்டார். அவர் 25.01.1988 இல் மாற்றம் பெற்று வந்தார். பாடசாலை பற்றி நன்கு அறிந்து அப் பாடசாலையில் பதின்மூன்று ஆண்டுகள் இணைப் பாட விதானங்களில் ஈடுபட்டதனால் ஆசிரியர்களு டனும் மாணவர்களுடனும் நெருங்கிப் பழகியவர். சாரணியத்தையும் ஆரம்பித்து மாணவர்களை அதில் ஈடுபடுத்தி நிகழ்வுகளில் பங்குபற்றச் செய்தார்.

இவரது காலத்தில் சில ஆசிரியர்கள் மாற்றலாகி வந்து இணைந்தனர். திரு. P. சூரிய மூர்த்தி, ப. சிவசுப்பிரமணியம், R. இராகுலன், ச. முரளி, K. குகனேசன், S. சிவபாலன், செல்வி ப. செல்லையா, திருமதி. R. சுதர்மினி, திருமதி R. குமாரசாமி ஆகியோராகும்.

இவர் காலத்தில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோர் விபரம் :

| | | |
|---|---|---|
| T. செந்தில்மோகன் | – | கலை |
| T. கார்த்திகேயன் | – | கலை |
| T. மகேஸ்வரன் | – | கலை |
| A. அன்ரனி வின்ஸ்ரன் | – | கலை |
| N. சுகுமார் | – | கலை |
| T. செந்தில்குமார் | – | கலை |
| S. ஞானகணேசன் | – | கலை |
| S. குமரதீசன் | – | கலை |
| சி. பிரசாத் | – | கலை |
| இ. சிறீகரன் | – | கலை |
| கை. நிரோஷன் | – | கலை |
| ஜெ. ஜதீபன் | – | கலை |
| ம. கிருபன் | – | கணிதம் |
| க. இராகவன் | – | கணிதம் |
| இ. வத்சவன் | – | கணிதம் |
| P. மனோராஜ் | – | வணிகம் |
| S. றொனால்ட் சுமித்திரன் | – | வணிகம் |
| P. இலட்சியகுமார் | – | முகாமைத்துவம் |
| P. நவநீதன் | – | வணிகம் |
| து. திருமகன் | – | வணிகம் |
| ஜே. அன்ரன் பிரபாகரன் | – | கலை |
| இ. பிரதீபன் | – | கலை |
| வெ. குணசீலன் | – | கலை |
| த. பிரகலாதன் | – | கலை |

திரு. ஆ. ஜெகநாதன் பல ஆண்டுகளுக்குப் பின் பரிசளிப்பு வைபவமும் நிறுவுனர் தினமும் 10.10.2007 நிகழ்த்தினார். பிரதம அதிதியாகப் பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளரும் பழைய மாணவனுமாகிய திரு. K. P. ஆனந்த நடேசன் கலந்துகொண்டார். 25.10.2008 இலும் அந்நிகழ்வுகள் இடம்பெற்றன. அவ் வைபவத்துக்குப் பழைய மாணவனும் யாழ்ப்பாணத் தொலைத் தொடர்பு நிலைய உதவிப் பொறியியலாளருமான திரு. ச. தங்கராசா கலந்து சிறப்பித்தார்.

மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம் இடங்களைப் பெற்றுப் பின்வரும் மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கேற்றனர். 2005 ஆம் ஆண்டு செல்வன் கென்றி அன்ரனி நெல்சன் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகள் 2007 ஆம் ஆண்டு ப. இராஜேஸ்வரன் 1500 மீற்றர், 5000 மீற்றர், நெல்சன் 100 மீற்றர் போட்டியில் தேசிய மட்டத்தில் 5ம் இடத்தையும் அ. ரவிக்குமார் தட்டெறிதலில் 8ம் இடமும் பெற்றனர். இவர் காலத்தில் ஒலி, ஒளி அறை, மலசலகூடம், 80' x 20' மண்டபம் ஆகியன அரச நிதியிலிருந்து அமைக்கப்பட்டன. கனடாவில் உள்ள பருத்தித்துறைப் பொதுமக்கள் அளித்த நிதி உதவியிலிருந்து நீர்த்தாங்கி ஒன்று கட்டப்பட்டது. நூலகமும் விஞ்ஞான ஆய்வு கூடமும் கொண்ட ஒரு மாடிக்கட்டிடம் NECORD நிறுவனம் நிர்மானித்தது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் வழங்கப்பட்ட கணினிக் கற்கை நிலையமானது பாடசாலை நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் கணினிகளைப் பற்றிய பயிற்சியையும் கற்றல் செயல்பாட்டையும் மேற்கொள்ள உதவுகின்றது. 2008 மே மாதம் இணைய வசதியையும் பெற்றது. மாலை நேரத்திலும் விடுமுறை காலத்திலும் அயற் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கணினிப் பயிற்சியைப் பெற்றனர்.

திரு. ஆ. ஜெகநாதன் 28.01.2009 இல் ஒய்வு பெற்றார். 21 ஆண்டுகள் இப்பாடசாலையில் சேவையாற்றியுள்ளார்.

**திரு. ச. திரவியராசா**

திரு. ச. திரவியராசா 29.01.2009 தொடக்கம் மாற்றம் பெற்று வந்து அதிபராகப் பதவி ஏற்றார். இப் பாடசாலையில் உப அதிபர்களாகக் கடமையாற்றியவர்களே ஒய்வு பெற்றதும் அதிபர்களாக நியமிக்கப்பட்டனர். திரு. இ. ஞானசேகரம் பிள்ளையும் திரு. ச. திரவியராசா ஆகிய இருவர்களுமே அதிபர்களாக மாற்றம் பெற்றனர்.

இவர் காலத்தில் திருவாளர்கள் வ. கருணா மூர்த்தி, ந. துஷ்யந்தன், பொ. சூரியமூர்த்தி, திருமதி சு. சஞ்சியகாந், திரு. S. தேவகுமார், செல்வி S. சேனாதிராசா, திருமதி G. ராஜ்குமார்,

திருமதி. அன்ரனி தேவராசா, திருவாளர்கள் P. சிவானந்தன், S. V. மரியதாஸ் ஆகியோர் வந்து ஆசிரிய சேவையில் இணைந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக மாணவர் இடம்பெயர நேரிட்டது. மாணவர் தொகை குறைந்தது. அமைதி தோன்றியதும் தொகை 530 ஆக அதிகரித்துள்ளது.

நிறுவுனர் தினமும் பரிசளிப்பு வைபவமும் 31.10.2009 இல் நிகழ்ந்தது. வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. உதயகுமார் பிரதம அதிதியாகும். புதிதாகக் கட்டப்பட்ட மாடிக் கட்டிடம் கௌரவ அமைச்சர் திரு. டக்ளஸ் தேவானந்தாவால் 31.10.2009 திறந்து வைக்கப் பட்டது. கனடா பழைய மாணவர் சங்கம் அளித்த நிதியைக் கொண்டு பல்லூடக எறி கருவி Multi Media Projector ஒன்றைப் பாடசாலை பெற்றுக் கொண்டது. மாடிக் கட்டிடத்துக்கு மின்ணிணைப்புக்கும் பாடசாலையின் வடக்கு எல்லை மதில் அமைப்புக்கும் கனடாக்கிளை நிதி அனுப்பி அவ்வேலை பூர்த்தியாயுள்ளன.

பாடசாலைக் கணினிக்கற்கை நிலையம் வடமராட்சி வலயத்தில் முதன்மையான கற்கை நிலையம் என ஆளுனரின் விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

அகில இலங்கை மட்டத்தில் சிறுவர்ளுக்கான கராத்தே (Karate) போட்டியில் செல்வன் இலங்கேஸ்வரன் ஆழிக்குமரன் தங்கப் பதக்கம் பெற்றார். மாகாண மட்டத்தில் நடைபெற்ற கபடிப் போட்டியில் பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றது.

*கொடுங்கோன்மையின் பிடியிலிருந்தும் வறுமையின் வாயினின்றும் எல்லா உழைப்பாளிகளையும் பாதுகாக்கவேண்டும். இந்த இலட்சியங்களுக்காகப் போராடும் மன்றத்தை எந்த அதிகாரமும் அடக்கு முறையும், பலாத்காரமும் அடக்கி ஒடுக்கி விட முடியாது.*

**- லெனின்**

---

*பேச்சுச் சுதந்திரத்தை ஏணியாகக் கொண்டே அநேகமாக ஒவ்வொரு சர்வாதிகாரியும் ஆட்சிப் பீடத்தை அடைகிறார் அப்படி அடைந்ததும் தம்மைத்தவிர மற்றெல்லோருடைய பேச்சுச் சுதந்திரத்தையும் அமுக்கிவிடுகிறார்.*

**- ஹெர்பேர்ட் ஹூவர்**

---

*மோகத்தை எழுப்பும் சம்பவங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தோன்றும்; அப்போது எவன் புலனடக்கத்தின் மூலம் வெற்றி பெறுகின்றானோ அவன்தான் உலகத்தில் வல்லமை வாய்ந்தவனாக விளங்கமுடியும்.*

**- காண்டேகர்**

---

*ஒரே ஒரு பாடந்தான் என்னால் கற்க முடிந்தது, அதையே திரும்பவும் நாள்தோறும் படிக்கிறேன். இன்னலிற் சிக்கி இருந்தால் காயப்பட்டால், ஏதும் தேவைப்பட்டால் ஏழைகளிடம் போங்கள். அவர்கள் தான் உங்களுக்கு உதவி செய்வார்கள்.*

**- ஜோன் ஸ்ரீன் பெக்**

# வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் பங்களிப்பு

- **மு. சிவலிங்கம்,** செயலாளர்

*வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம், கொழும்புக்கிளை.*



எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை ஒன்றினை நிறுவும் நோக்கத்துடன் இதற்கான பூர்வாங்க நிகழ்வான ஒன்றுகூடல் 28.10.2001 இல் பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது. இவ் வைபவத்தை நடாத்துவதற்குக் கால்கோள் இட்ட எமது பாடசாலையின் முன்னாள் அதிபரும் இளைப்பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகிய திரு. சே. ஏகாம்பரநாதன், எமது பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர் திரு. எம். குமாரசாமி, பழைய மாணவர் சிவஸ்ரீ தெ. சண்முகானந்த சர்மா ஆகிய மூவரையும் இவ்வேளையில் குறிப்பிடுதல் வேண்டும். மேற்படி ஒன்று கூடலைத் தொடர்ந்து கொழும்புக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் 05.05.2002 இல் திரு. சே. ஏகாம்பரநாதன் தலைமையில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு 22 பழைய மாணவர்கள் வருகை தந்திருந்தனர்.

மேற்படி கிளையானது 2002 இல் ஆரம்பிக்கப் பட்ட போதிலும் 2005 ஆண்டு தொடக்கமே சுறுசுறுப்புடன் இயங்கத் தொடங்கியுள்ளது. இவ்வாண்டில் 63 பேர் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டனர். அதன் பின்னர் கொழும்புக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டங்கள் ஏப்ரல் அல்லது மே மாதத்தில் ஒழுங்காக நடை பெற்று வந்துள்ளன.

2005ஆம் ஆண்டில் பாடசாலையில் நிருமாணிக்கப் பட்ட தண்ணீர் தாங்கிக்காக நிதி உதவியை கனடாவில் உள்ள பருத்தித்துறை அன்பர்கள் வழங்கியுள்ளனர். திரு. சி. தங்கவேல் தொலைநகல் இயந்திரம் ஒன்றைப் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார். இவ்வாண்டில் பாடசாலையின் அபிவிருத்திக்காக திருவாளர்கள் தெ. தர்ம குலேந்திரன், த. அருளானந்தம், க. செசேந்திரன், சி. தங்கவேல் மூலம் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள அன்பர்கள் உட்பட திருவாளர்கள் க. விவேகானந்தன், இ. சூரியகுமாரன், க. சிவானந்தன், அ. மாணிக்க வாசகர், வே. சேனாதிராசா, மு. சிவலிங்கம் ஆகியோர் நிதி வழங்கியுள்ளனர்.

2006ம் ஆண்டிற்கான பொதுக்கூட்டம் 22.04.2006 இல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற போது எமது பாடசாலை யின் முன்னாள் அதிபர் திரு. ஆ. ஜெகநாதனும் பழைய மாணவர் தாய்ச்சங்கத் தலைவராக இருந்த காலஞ்சென்ற க. சண்முகநாதனும் வருகை புரிந்திருந்தனர். இக்கூட்டத்தின் போது எமது பழைய மாணவரான சட்டத்தரணி இ. உருத்திராவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டு அனுதாபச் செய்தியை அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைப்ப தென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எமது பாடசாலையின் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கத்துடன் கொழும்புக் கிளை பகுதிநேர ஆசிரியர் ஒருவரை நியமிக்கும் முயற்சியை மேற்கொண்டது. இதற்கான நிதியினை

முன்னாள் அதிபர்களின் ஒருவரான காலஞ்சென்ற வே. நடராசாவின் மகனான திரு. ந. சிவகுமாரன் வழங்கி வந்தமையை ஈண்டு குறிப்பிடுதல் வேண்டும்.

01.04.2006 தொடக்கம் 13.03.2007 காலப்பகுதிக் கான ஆண்டறிக்கையில் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.. கல்வி அமைச்சு பாடசாலை வளங்களின் அபிவிருத்திப் பணியில் வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கணினி அறிவை ஊட்டு வதற்காக 22 கணினிகளை வழங்கியது. அதற்குரிய அறையையும் உருவாக்கியது. அக் கணனி அறைக்குக் காற்றாடிகள் பொருத்தித்தர வேண்டு மென எமது சங்கத்திற்கு அதிபர் வேண்டுகோள் விடுத்ததன் பிரகாரம் கணினி சம்பந்தமான பணி களுக்காகத் திருவாளர்கள் அ. மாணிக்கவாசகர், மு. சிவலிங்கம், வே. சேனாதிராசா ஆகியோர் வழங்கிய ரூபா 27,929/= ஐக் கொழும்புக் கிளை அனுப்பியது. பகுதிநேர ஆங்கில ஆசிரியரின் சேவைக்கு நிதி உதவி அளித்த திரு. ந. சிவகுமார் இவ்வாண்டுக்கான தொகையை ரூபா 40,000/= ஆக அதிகரித்து வழங்கினார். இப்பணியைப் பெரிதும் பாராட்டுகிறோம். மேலும் எமது சங்கப்போஷகர் திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை அவர்களும் துபாயில் வசிக்கும் திரு. இ. அபயசிங்கம் அவர்களும் தலா ரூபா 15,000/= நன்கொடை வழங்கினர்.

எமது தாய்ச் சங்கத்தின் தலைவராய் இருந்து சிறந்த பணி ஆற்றிய திரு. க. சண்முகநாதன் அகால மரணமானார். அவருக்கு அனுதாபம் தெரிவித்து எமது சங்கம் "தினக்குரல்" இல் கண்ணீர் அஞ்சலியை பிரசுரித்தது. 18 ஆண்டுகள் எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் களாகக் கடமையாற்றிய திரு. திருமதி. குலசிங்கம் ஆகியோரும் இவ்வுலகை விட்டு நீத்தனர். இவர்களது மறைவை ஒட்டி சங்கம் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றியது.

01.04.2007 தொடக்கம் 31.03.2008 காலத்துக் கான ஆண்டறிக்கையில் இருந்து ஒரு சிறு பகுதியைக் கீழே தருகின்றோம்.

எமது கிளையின் 6 ஆவது ஆண்டு பூர்த்தி யானது 27.04.2008 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது.

**சங்க நிலைமை :-** இப்பொழுது உள்நாட்டி லுள்ள ஆயுட்கால உறுப்பினர்களாக 82 பேரும் வெளிநாட்டிலுள்ள ஆயுட்கால உறுப்பினர்களாக 23 பேரும் ஆக 105 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

**பாடசாலையின் நிலைமை :-** பாடசாலையில் தற்போது 235 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆசிரியர்களின் எண்ணிக்கை 27ஆகும். மாணவர் களின் எண்ணிக்கை குறைந்தமைக்கு நாட்டின் நிலைமையும் பாடசாலை பிரதான வீதியில் அமைந்துள்ள மையும் முக்கிய காரணங்கள் எனக் கூறலாம்.

**கணினியின் பயன்பாடு :-** எமது பாடசாலையின் அபிவிருத்திக்கு கல்வி அமைச்சினால் கணினிகள் வழங்குதல் தொடர்பாக செயற்குழு எடுத்த அயராத முயற்சியின் பலனாக 2006 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் கல்வி அமைச்சினால் 22 கணனிகள் வழங்கப்பட்டமையை இங்கே குறிப்பிடு தல் பொருத்தமானதாகும். இக் கணினிகளின் உச்ச அளவுப் பயன்பாடாக எமது பாடசாலை மாணவர்கள் மட்டுமின்றி வடமராட்சியில் உள்ள ஏனைய பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இவற்றை பயன்படுத்துதலை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறோம்.

**தேர்வுப் பெறுபேறுகள் :-** க. பொ. த (சாதாரண தரம்), க. பொ. த ( உயர்தரம்) ஆகிய தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கும் பரிசில்களை வழங்கி உற்சாகமும் உந்துதலும் அளிக்கும் வண்ணம் சங்கம் செயற்பட்டு வந்துள்ளது. என்பதை குறிப்பிடுதல் வேண்டும். 2006 டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண தரம்) தேர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 5 மாணவர்களுக்கு புத்தகங்களும்

நிதியுதவியும் அளிக்கும் முகமாக அதிபருக்கு ரூபா 17075/= அனுப்பி வைக்கப்பட்டது. 10.11.2007 இல் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவின் போது உரிய மாணவர்களுக்கு இப்பரிசில்கள் வழங்கப் பட்டுள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தர பிரிவில் கலைத்துறையில் 5 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்தனர்.

**நிறுவுனர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் :-** 12 ஆண்டுகளுக்கு பின்னர் கடந்த ஆண்டு 10.11.2007 ஆம் திகதி நிறுவுனர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றுள்ளன. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றோம். இவ் வைபவங்களை நடாத்துமாறு அதிபரிடம் கடந்த இரு வருடங்களாக வேண்டுகோள் விடுத்த போதும் பருத்தித்துறையில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இவற்றை நடாத்த முடியாமல் போய்விட்டது. கடந்த ஆண்டு இறையருளுடன் இவ் வைபவங்கள் நடாத்தக் கூடியதாக இருந்தது.

நிறுவுனர் தின சொற்பொழிவை பழைய மாணவரும் சட்டத்தரணியும் ஆன திரு. சபா. இரவீந்திரன் நிகழ்த்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை இலங்கை வங்கியின் முகாமையாளராகிய திரு. ப. ஆனந்த நடேசன் கலந்து கொண்டார். இவ் இரு நிகழ்வுகளையும் சிறப்பாக நடாத்தும் முகமாக கொழும்பு கிளையானது ரூபா 30000/= ஐ நன்கொடையாக வழங்கியது.

**விளையாட்டுப்போட்டி :-** மேற்படி வைபவங் களைத் தொடர்ந்து 24.02.2008 இல் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி யினைத் திறம்பட நடாத்துவதற்கு உதவும் முகமாகக் கொழும்புக் கிளை பாடசாலை அதிபருக்கு ரூபா 10000/= ஐ வழங்கியது.

**நூல் நிலையம் :-** பாடசாலை நூல் நிலையங் களுக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு, கடந்த பல ஆண்டுகளாக இவற்றினை எமது பாடசாலை க்கு கொழும்பிலிருந்து அனுப்பி வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. சங்கத்தின் உப தலைவராகிய திரு. எம். யோகநாதன் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இவற்றை பாடசாலை நூல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க உதவியதை இவ்வேளையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**அனுதாபம் :-** எமது கிளையின் போஷகராக (Patron) இருந்த கணக்காளர் அ. சோமசுந்தரம் பிள்ளை இவ் உலகை விட்டு நீத்ததைத் தெரிவிக்க விரும்புகிறோம். அத்துடன் பாடசாலையில் உப அதிபராகப் பணிபுரிந்த மா. சேவல்கொடியோன், ஆசிரியராகப் பணிபுரிந்த செ. சிவஞானசுந்தரம் ஆகியோர் எங்களை விட்டுப் பிரிந்தமையையும் குறிப்பிட விரும்புகிறோம். இம் மூவருடன் தொடர்புடைய உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கிளையின் 7ஆவது ஆண்டு பூர்த்தி யானது 03.05.2009 அன்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத் தில் நடைபெற்றபோது சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கையில் இருந்து பெறப்பட்டவை கீழே தரப்பட்டுள்ளன.

**சங்க நிலைமை :-** இப்பொழுது உள் நாட்டி லுள்ள ஆயுள் உறுப்பினர்களாக 82 பேரும் எமது கிளையுடன் இணைந்துள்ள அவுஸ்திரேலியாவில் உள்ள ஆயுட்கால உறுப்பினர்களாக 22 பேரும் வெளிநாட்டு உறுப்பினர்களாக 27 பேருமாக மொத்தம் 131 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

**பாடசாலையின் நிலைமை :-** பாடசாலையில் தற்போது 297 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். ஆசிரியர்களின் எண்ணிக்கை 27 ஆகும். மாணவர் களின் எண்ணிக்கை குறைந்தமைக்கு நாட்டின் நிலைமையும் பாடசாலை பிரதான வீதியில் அமைந்துள்ளமையும் முக்கிய காரணங்கள் எனக் கூறலாம்.

**தேர்வுப் பெறுபேறுகள் :-** 2008 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரணத் தேர்வுக்கு 44 பேர் தோற்றி இவர்களில் 14 மாணவர்கள் 6 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்து உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் தகுதியைப் பெற்றுள்ளனர். அதேநேரம் சாதாரணத் தேர்வில் ஒருமாணவராவது ஆங்கிலப்பாடத்தில் சித்தியடையாமையைச் சங்கம் உன்னிப்பாக கவனிப்பதுடன் இதனையிட்டு ஆதங்கமும் அடைந்துள்ளது.

2008 க.பொ.த உயர்தரத் தேர்வில் கலைப் பிரிவில் 4 மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர். வணிகப் பிரிவில் ஒரு மாணவனும் கலைப்பிரிவில் ஒரு மாணவனும் 3A உடன் சித்தி பெற்றுள்ளனர். இவர்களுள் வணிகப்பிரிவு மாணவன் மாவட்ட மட்டத்தில் 4ஆவது இடத்தை பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றோம். இவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

**விளையாட்டுப்போட்டி :-** 2009 ஆம் ஆண்டிற்கான இல்ல விளையாட்டு போட்டி புதிய அதிபர் திரு. ச. திரவியராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றுள்ளது. இவ் விளையாட்டுப் போட்டியினைத் திறம்பட நடாத்துவதற்கு கொழும்புக் கிளை தனது பங்களிப்பாக ரூபா 15,000/= ஐ வழங்கியமை குறிப்பிடப்பட வேண்டிய விடயம் ஆகும்.

**கணினியின் பயன்பாடு :-** 2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் அரசால் வழங்கப்பட்ட 22 கணனிகளைக் கொண்டுள்ள கற்கை நிலையமானது பாடசாலை நேரத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் எந்தவிதமான கட்டணமுமின்றி கணினிகளைப் பற்றிய பயிற்சியையும் கணினி ஊடாகக் கற்றல் செயற்பாட்டையும் மேற்கொள்ள உதவுகி ன்றது. இந் நிலையம் மாலை நேரத்திலும் விடுமுறை காலத்திலும் சமூகத்தினர் கணினிப்பயிற்சியையும் கணினி ஊடாக கற்றல் செயற்பாட்டையும் மேற்கொள்ள உதவுகின்றது.

**ஆங்கிலப் பாடப் போதனை :-** ஆங்கிலப் பாடத்தைப் போதிப்பதற்கு வழமையாக பாடசாலையில் உள்ள ஆசிரியர்களுக்கு புறம்பாக ஆங்கில ஆசிரியர் ஒருவரின் சேவையினைச் சங்கமானது கடந்த நான்கு ஆண்டுகளாக வழங்கி வருகின்றது. ஆங்கில பாடத்தின் முக்கியத்துவத்தையும் இன்றியமையாத தன்மையையும் நன்கு உணர்ந்து அச்சேவையினை சங்கம் தொடர்ந்து அளித்து வருகிறது.

இவ்வாசிரியருக்குரிய மாதாந்த வேதனமாக ரூபா 3000/= ஐ திரு. சிவகுமாரன் அவர்கள் கடந்த நான்கு வருடங்களாக வழங்கி வருகின்றார். இவ்வாண்டுக்குரிய வேதனத்தையும் வழங்க இணங்கியுள்ளார். இவருக்கு நன்றியைத் தெரிவித்தல் எமது கடப்பாடாகும்.

**நிறுவுனர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் :-** இவ்வாண்டு நிறுவுனர் தின விழாவைக் கொழும்பிலும் பருத்தித்துறையிலும் நடாத்துவதென்று பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் விருப்பத்துக்கு அமைய கொழும்பில் 07.08.2008 இலும் பருத்தித் துறையில் 25.10.2008 இலும் நடைபெற்றுள்ளன. கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரபிள்ளை மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. சே. ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் எமது பழைய மாணவனும் கொழும்புப் பல்கலைக்கழக சட்டப்பீடாதிபதியுமான திரு. நா. செல்வக்குமாரன் "சுதந்திரத்தின் பின்னரான அரசியல் அமைப்புகளும் நல்லாட்சியின் சரிவும்" எனும் பொருளில் அரியதொரு கருத்தாழம் பொதிந்த சொற்பொழிவை நிகழ்த்திச் சபையோரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்று எமது பழைய மாணவன் என்ற ரீதியில் பாடசாலைக்கு பெருமை ஈட்டிக் கொடுத்தார்.

இந்நிகழ்வின் போது இடம் பெற்ற அபிநயாஷேத்திர நடனப்பள்ளி இயக்குனர் செல்வி திவ்யா சிவனேசனும் அவரது மாணவிகளும் வழங்கிய நாட்டிய நிகழ்ச்சியானது சபையோரின் பாராட்டு தலைப் பெற்றமையையும் குறிப்பிடுதல் வேண்டும். இக் கலைநிகழ்ச்சியை ஒழுங்குப்படுத்திய

எமது பழைய மாணவராகிய திரு. பால வைரவ நாதனுக்கு எமது நன்றிகள்.

பருத்தித்துறையில் இடம்பெற்ற நிறுவனர் தின விழாவிற்கு தாய்ச் சங்கத்தலைவர் திரு. சபா. இரவீந்திரன் நிறுவுனர் தினச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இவ் வைபவத்துடன் இணைந்தே ஆண்டுக்குரிய பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. இந் நிகழ்வுகளுக்கான முழுச்செலவான ரூபா 30,000/= ஐ கொழும்புக்கிளை ஏற்றுக் கொண்டது.

**பல்லூடக ஒளிஎறி :-** பழைய மாணவர் சங்க கனடாக் கிளையானது பல்லூடக ஒளிஎறி ஒன்றினை கொள்வனவு செய்து பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு கொழும்புக் கிளையை கேட்டுக் கொண்டதற்கு அமைய எமது சங்கப் பழைய மாணவனும் தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும் ஆகப் பணியாற்றி இளைப்பாறிய வருமாகிய திரு. அ. மாணிக்கவாசகரின் சேவையைப் பெற்றுக் கொண்டது. இவர் பல்வேறு பல்லூடக ஒளிஎறியின் விபரக் குறிப்புக்களை ஆராய்ந்து சங்கத்துக்கு தனது ஆய்வறிக்கை யினைச் சமர்பித்துள்ளார். செயற்குழுவானது இவரின் ஆலோ சனைக்கு அமைய "OCTOMA" இன பல்லூடக ஒளிஎறியையும் மேலதிக மின்குமிழ் ஒன்றையும் கொள்வனவு செய்வதென்று தீர்மானித்துள்ளது. அவற்றுக்கான முழுச் செலவு ரூபா 173,000/= ஆகும். இதனைக் கனடாக்கிளை ஏற்கனவே வழங்கியுள்ளது. பல்லூடக ஒளிஎறியை பெற்றுக் கொள்வதற்கு முன்னின்று உழைத்த இளைப்பாறிய விஞ்ஞானக் கல்வி அதிகாரியும் கனடாக் கிளையை அமைப்பதில் பெரும் பங்கு வகித்தவரும் அக்கிளையின் தலைவரு மாகிய திரு. க. பொன்னம்பலத்திற்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் எங்களது இதயப் பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதனைக் கொள்வனவு செய்யும் பொறுப்பு திரு. அ. மாணிக்கவாசகர், திரு. மு. சிவலிங்கம் (செயலாளர்) ஆகியோரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

**டாக்டர் இராஜேந்திரன் இரவீந்திரனின் நன் கொடை :-** அவுஸ்திரேலியாவிலுள்ள டாக்டர் இராஜேந்திரன் இரவீந்திரன் MBBS, FRCS உடன் கொழும்புக்கிளையானது கடந்த 1 1/2 வருடங்களுக்கு மேலாகத் தொடர்பு கொண்டு 2009 ஆம் ஆண்டு ஜனவரியில் புலோலி கிழக்கு, வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கைக்கு அருகில் அமைந்துள்ள இல்லத்தில் அவருக்குரிய பங்கினை வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் பெயருக்கு உரிமை மாற்றும் பணியினை நிறைவேற்றியுள்ளது. பாடசாலையின் இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. ஜெகநாதன் அவர்கள், டாக்டர் இ. இரவீந்திரன் அவர்களால் அட்டர்னி தத்துவக்காரராக நியமிக்கப் பட்டார். உரிமை மாற்றத்தை உரிய முறையில் நடாத்திய திரு. ஆ. ஜெகநாதன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

**இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. ஜெக நாதனைக் கௌரவித்தல் :-** 20 ஆண்டுகளுக்கு மேலாக எமது பாடசாலையில் சேவையாற்றிய பின்னர் இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. ஜெகநாதன் பாடசாலைக்கு ஆற்றிய சேவையைத் தகுந்த முறையில் கௌரவிக்கும் முகமாகப் பாடசாலையின் இலச்சினை பொறித்த கணையாழி ஒன்றினை அன்பளிப்பாக அவருக்கு வழங்குவதென்று கொழும்புக் கிளையின் தீர்மானத்திற்கு அமைய இக்கணையாழியை எமது சங்கத்தலைவர் பாடசாலைக்கு நேரில் சென்று அங்கு மதிய போசன விருந்து ஒன்றினை ஒழுங்கு செய்து அவ் வைபவத்திற்கு திரு. ஆ. ஜெகநாதன் அவர்களை குடும்ப சமேதரராக வரவேற்று திரு. ஆ. ஜெகநாதனுக்கு இதனை அணிவித்தமையை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அதே வேளையில் 01.02.2009 இல் பதிய அதிபராக பணியேற்றுள்ள திரு. ச. திரவியராசாவை வரவேற்பதுடன் கொழும்புக் கிளையுடன் இணைந்து பாடசாலையின் முன்னேற்றத்துக்கு தமது பூரண ஒத்துழைப்பினை நல்குவார் என எதிர் பார்க்கிறோம்.

**நூல் நிலையம் :-** பாடசாலை நூல் நிலையங்களுக்காக இந்து கலாசார விவகார அமைச்சினால் வழங்கப்பட்ட புத்தகங்களை சங்கத்தின் உதவிச்செயலாளராகிய திரு. எம். யோகநாதன் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி இவ் வருடமும் அவற்றைப் பாடசாலை நூல் நிலையத்திற்கு அனுப்பி வைக்க உதவியதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

எமது கிளையின் 8ஆவது ஆண்டுப் பூர்த்தி 18.04.2010 அன்று பம்பலப்பிட்டி பிராங்போட் பிளேசில் அமைந்துள்ள ஹோட்டல் வெஸ்ரேனில் நடைபெற்றபோது செயலாளரினால் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கையில் இருந்து சில பகுதிகளை கீழே வழங்குகி ன்றோம்.

**சங்க நிலைமை :-** இப்பொழுது உள் நாட்டிலுள்ள ஆயுட்கால உறுப்பினர்களாக 86 பேரும் வெளிநாட்டில் வதியும் ஆயூட்கால உறுப்பினர்களாக 31 பேரையும் சேர்த்து மொத்தமாக 117 பேர் அங்கத்தவர்களாக உள்ளனர்.

**பாடசாலையின் நிலைமை:-** எமது பாடசாலையில் தற்போது 520 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். எமது சென்ற ஆண்டு அறிக்கையில் மாணவர்களின் தொகை 297 ஆக இருந்தமையைக் குறிப்பிட்டிருந்தோம். நாட்டில் மீண்டும் ஏற்பட்டுள்ள சகஜ நிலைமையின் விளைவாக எமது பாடசாலைக்கு அண்மையான இடத்தில் வசித்தோர் மீளக்குடியேறியமை காரணமாக மாணவர்களின் தொகையில் வரவேற்கத்தக்க இவ்அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இருந்த 27 ஆசிரியர்களின் எண்ணிக்கை தற்பொழுது 32 ஆக அதிகரித்துள்ளது.

**தேர்வுப் பெறுபேறுகள் :-** 2009 க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் 2 மாணவர்கள் 3 Aயும், 3 மாணவர்கள் 2 A, 1 B பெற்றுள் ளனர். 2008 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரத் தேர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 4 மாணவர்களுக்கும் 2009 க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற 5 மாணவர்களுக்கும் நிதியுதவியும் கேடயமும் வழங்கி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துள்ளோம். இதன் பொருட்டு ரூபா 17000/= செலவிடப்பட்டுள்ளது.

**பரிசளிப்பு விழா :-** 31.10.2009 இடம்பெற்ற பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதிக் கல்விப் பணிப்பாளரான திரு. செ. உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். அன்றைய தினம் “நிக்கொட்” அமைப்பின் நிதியுதவியால் நிறுவப்பட்ட புதிய இரண்டுமாடிக் கட்டிடத்தை சமூக சேவைகள் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ்தேவானந்தா உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்தார்.

**இல்ல மெய்வல்லுனர் போட்டி :-** வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 20.02.2010 இல் நடைபெற்றது. இளைப்பாறிய அதிபர் திரு. ஆ. ஜெகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி. ஜெகநாதன் அவர்கள் வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

இவ்வேளையில் தேசியமட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குப்பற்றி சாதனையை உருவாக்கிய இரு மாணவர்களின் பெயர்களைக் குறிப்பிடுதல் வேண்டும். 7 ஆம் தரத்தில் கல்விபயிலும் இலங்கேஸ்வரன் ஆழிக்குமரன் “கராத்தே” போட்டியில் தங்கப் பதக்கத்தையும் ஆ. ரவிக்குமார் தேசிய விளையாட்டு போட்டியில் முன்னிலை இடத்தையும் பெற்றுள்ளனர். ஆ. ரவிக்குமாருக்கு ஊக்கமளிக்குமுகமாக எங்களால் ரூபா 1000/= வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினைப் போதிப்பதற்குரிய ஆசிரியர் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் இல்லாமை குறித்து எமது சங்கத்தின் கவனத் திற்கு அதிபர் கொண்டு வந்ததயைடுத்து இத்துறைகளில் சேவைப் புரியக்கூடிய இருவரின்

சேவையை பெற்றுக்கொள்ளும்படி சங்கம் கேட்டுக் கொண்டதற் கிணங்க இத்துறைகளில் சேவைபுரியும் இருவரை அதிபர் தேர்ந்தெடுத்து அமர்த்தியுள்ளார் இவர் களுக்கு பெப்ரவரி மார்ச் மாதங்களுக்குரிய வேதனமாக ரூபா 12000/= வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டிட வேலைகள் நடைபெற்ற போது நுழை வாயில் சேதமடைந்தபடியால் பாலத்தைத் திருத்துவதுடன் முகப்பு ஒன்றை அமைப்பதற்குமாக ரூபா 150000/= ஐ வழங்கியுள்ளோம்.

எமது பாடசாலையை நிறுவிய வள்ளல் வேலாயுதம்பிள்ளையை நினைவுகூரும் முகமாக 25.07.2009 இல் நிறுவுனர் தின விழா விமரிசையாக கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கிளைத் தலைவர் திரு. சே. ஏகாம்பர நாதன் தலைமையில் கொண்டாடப்பட்டது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

எமது பாடசாலை ஆரம்பித்து 115 ஆண்டுகள் நிறைவு எதிர்வரும் ஆகஸ்ட் 2010 வரும் வேளையில் பாடசாலை பற்றிய கட்டுரைகள் படங்கள் அடங்கிய ஒரு மலரை “வேலாயுதம்” என்ற பெயரில் வெளியிடும் முயற்சியில் தலைவர் திரு. சே. ஏகாம்பரநாதன் செயற்குழு உறுப்பினரான திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி, திரு. பால வைரவ நாதன் ஆகியோர் ஈடுபாட்டுடன் உழைத்து வருகின்றனர்.

*தமிழகம் முடிவற்ற ஆராய்ச்சியிலேயே தனது நல்லறிவைப் குழப்பிக்கொண்டே போனால், எத்தனை சிலப்பதிகாரங்கள் திருக்குறள்கள், தொல்காப்பியங்கள் தோன்றினாலும் உண்மையின் விளக்கம் இந்நாட்டில் ஒளிவீசுவது கடினமாகிவிடும்.*

**- மா.பொ. சிவஞானம்**

---

*கதிரவன், நிலவு இவை இரண்டிற்கும் நமக்கு மிகவும் பயனளிப்பது எது? நிலவுதான் மிகவும் பயனளிப்பது; ஏனென்றால் அது ஒளியற்ற இரவு நேரத்தில் ஒளி வீசுகிறது. ஆனால் கதிரவன் பகலில் தானே ஒளி வீசுகிறான்.*

**- குஸ்மா புருட்காவ்**

---

*நான் நாஸ்திகனுமல்ல, பகுத்தறிவுவாதியுமல்ல, எனக்கு கடவுள் நம்பிக்கையுண்டு. என் தந்தையின் சமயத்தைத் தழுவியவன் நான் ஒரு கத்தோலிக்கனாகப் பிறந்தேன். தெய்வ ஆணையின் துணைகொண்டு தேவாலயத்துக்குரிய கடமைகளை என்றும் நிறைவேற்றுவேன்.*

**- நெப்போலியன்**

---

*இலக்கியம் எல்லாக் கலைகளையும் போலவே மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும்; குறிக்கோள்களையும் முயற்சிகளையும் தூண்டிவிட வேண்டும். முற்போக்குக்கு அநுசரணையாக வேண்டும், சமுதாய நீதி மனிதத்துவம், சமாதானம் பெருகி நாடு முன்னேறத் துணைபுரிய வேண்டும்.*

**- ஐறிஸ் ஏர்வின்**

# முன்னாள் ஆசிரியர்கள்



சைவப் பெரியார்
சு. சிவபாதசுந்தரனார்





திரு. ச. கணபதிப்பிள்ளை



பண்டிதர்
இ. கனகசபாபதி






திரு. சோ. அருணாசலம்




சைவப் புலவர்
வி. சுப்பிமணியம் (V.S.)




திரு. ச. செல்லையா



திரு. க. உலகநாதர்



திரு. சி. பத்மநாதன்



திரு. கு. தணிகாசலம்




திரு. த. பத்மநாபன் (T.P.)


# முன்னாள் ஆசிரியர்கள்



திரு. வே. முருகேசபிள்ளை




திரு. மு. குமாரசாமி



திரு.எஸ். றோய் காந்தராஜ்




திரு. சா. சேவற் கொடியோன்
பிரதி அதிபர்



திரு. வ. வே. நவரத்தினக்குருக்கள்



திரு. க. பொன்னம்பலம்



வெக்டர் பொ. வேலாயுதம்

# பிரித்தானியர் கால யாழ்ப்பாணத்தில் புரட்டஸ்தாந்த வியாப்திக் கெதிரான சைவப்பதிற்குறிகள்

**கார்த்திகேசு சிவத்தம்பி**

*தகைசார் ஒய்வுநிலை பேராசிரியர், (சுடப்பட்டு இறந்த சிவபாதசுந்தரத்தின் நண்பர்)*

**பருத்தித்துறை வேலாயுதம் மஹாவித்தியாலய தோற்றம் வளர்ச்சி பற்றிய ஒப்பியற் சிறுகுறிப்பு**

இலங்கையின் போர்த்துக்கேய ஒல்லாந்தர் கால வரலாற்றுக்கும், பிரித்தானியர்கால வரலாற்றுக்கு மிடையே காணப்பெறும் பிரதான வேறுபாடு முதலிரண்டு காலத்திலும் மதமாற்றம் அரசாங்க சேவைக்கான அத்தியாவசிய தேவை யாய்ற்று. அதாவது போத்துக்கேயர் கத்தோலிக்கத் துக்கும், ஒல்லாந்தர்கள் சீர்திருத்த (Dutch Reformed Church) திருச்சபைக்கும் இது முன்னர் தமிழில் "இறப்பிறமாது" திருச்சபை என்றே குறிப்பிடப்பெற்றது. மதம் மாறியோருக்கே அரசாங்கப் பதவிகளை வழங்கிற்று. பாடசாலைகள் பலவற்றைத் தொடங்கிய ஒல்லாந்த ஆட்சியில் அப்பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனங்கள் அத்திருச்சபைக்கு மதம் மாறியோருக்கே வழங்கப்பெற்றன.

ஆனால் பிரித்தானியர் ஆட்சிக்கால நிர்வாகத்தில் இம்முறைமை தளர்த்தப்பெற்றது. ஆங்கிலம் அரசாங்க நிர்வாக மொழியாக விளங்கிற்றெனினும் அதற்கான ஆங்கிலக் கல்வியை ஆங்கிலத் திருச்சபைக்கே மட்டுப்படுத்த வில்லை. இதனால் சைவ ஆங்கிலப் பாடசாலைகள் தோன்றலாயின. யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையில் சைவ ஆங்கிலப் பாடசாலை ஒன்று நிறுவப்பெற்றது. அதுவே பின்னர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி தோன்றுவதற்கு காரணமாயிற்று. இம்முறைமை யாழ்ப்பாணத்தின் கிராமப் பகுதி களிலே பின்பற்றப்படலாயிற்று.

பிரித்தானிய ஆட்சி தொடங்கிய பின் இலங்கைக்கு வந்த அமெரிக்க மிஷன், யாழ்ப்பாணத்திலே மையங்கொண்டு ஆங்கில மொழி மூலமாகக் கற்பிக்கும் பாடசாலைகளை யாழ்ப்பாணத்திலே பலவிடங்களில் தோற்று வித்தது. பிற்காலத்தில் (Jaffna College) யாழ்ப்பாணக்கல்லூரி என அழைக்கப்பெற்ற "வட்டுக்கோட்டைச் செமினறி" (Vatticoatta Seminary) என அழைக்கப்பெற்றது. அவர்கள் உடுப்பிட்டியிலும் தமது பாடசாலைகளை நிறுவினர்.

இங்கு பேசப்பெறுவது, ஆங்கிலேயர் காலத்திலே ஆங்கிலப்பாடசாலை நிறுவிய "Wesleyan Mission" பற்றியதாகும்.

அவ்வாறு தோற்றுவிக்கப்பெற்ற வெஸ்லியன் மிஷன் பாடசாலைகளில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் (St. John's) கல்லூரியும், சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையும் முக்கியமானவையாகும். வணக்கத்துக்குரிய (Hartley) "ஹாட்லி" எனும் போதகர் பெயரால், பருத்தித்துறையில் நிறுவப்பெற்ற "ஹாட்லிக் கல்லூரியும் (Hartley College) அதன் பக்கத்திலேயே சிறுமியர்கல்விக் கெனத் தோற்றுவிக்கப்பெற்ற (Church Missionary) பாடசாலையும் தோன்றின. (இப்பெண்கள் பாடசாலை வடமராட்சிப் பிரதேசத்தில் G. B. S என்றே சனரஞ்சகமாக இன்றும் குறிப்பிடப் பெறுகின்றது (Girls Boarding School)*

* அமெரிக்கத் திருச்சபையினரும் பெண்களுக்கான தனிப்பாடசாலையினை விடுதிப் பாடசாலையாகவே (Boarding School) நிறுவினர். அது உடுவிலில் நிறுவப்பெற்றது. சிறந்த கிறிஸ்தவ இல்லத்தரசிகளாகப் பெண்களை பயிற்றுவதற்கு இப்பெண்கள் பாடசாலைகள் அத்தியாவசியமானவையென்று கருதினர்.

இவ்விடத்திலே புரட்டஸ்தாந்த மதத்துக்கும் ரோமன் கத்தோலிக்க மதத்துக்கும் சுதேசிகளை மதம் மாற்றுவது தொடர்பாகக் காணப்பெறும் வேறுபாடுகளை அவதானித்துக் கொள்ளல் அவசியமாகிறது.

ரோமன் கத்தோலிக்க மரபில் மதம்மாற்றுகையென்பது சம்பந்தப்பெற்ற முழுக் குழுமத்தையும் மாற்றுவதே (Community Conversion) மரபாகவிருந்தது. ஆனால் புரட்டஸ்தாந்தத்தைப் பொறுத்தவரையில் அது பெரும்பாலும் தனியொருக் குடும்ப நிலை (Single Family)யிலேயே செய்யப்பெற்றது. இதனால் உறவுக்குடும்பங்கள் சைவர்களாகவிருக்க, மதம் மாறியவர்கள் கிறிஸ்தவத்தைப் பேணி வந்தனர்.

புரட்டஸ்தாந்தத்துக்கான மதமாற்றுகையில் மதம் மாற்றம் பெறுபவர் விவிலியத்தை (வேதாகமம்) வாசிக்கக்கூடியவராகவிருத்தல் வேண்டும். ஏனெனில் புரட்டஸ்தாந்திய ஒருவர் விவிலியத்தை வாசித்தல் அவசியமாகும். ரோமன் கத்தோலிக்கத்தில் வழிபாட்டு முறைமையில் குழும நிலையும், பிரதானமாகக் குழும நிலை ஆராதனையே (Choral Singing) முக்கியமானதாகும். புரட்டஸ்தாந்த முறைமையில் தனிநிலை விவிலிய வாசிப்பும் வழிபாடும் அதன் தொடக்க காலத்திலிருந்தே முக்கியப் படுத்தப் பெற்றன. இதன் காரணமாகவே புரட்டஸ்தாந்த மிஷன்கள் கல்வியை குறிப்பாக ஆங்கிலக்கல்வியை முக்கியப்படுத்தின. இதனால் ஆங்கிலம் கற்பித்தல் மத, நெறி முறைமைகளில் முக்கியமாயிற்று. இதனாலேயே புரட்டஸ்தாந்த மிஷனறிமார்கள் ஆங்கிலத்திலேயே தொழிற் பட்டனர். இம்மதமாற்ற முறைமைகளில் சமூகச் சிக்கற்பாடொன்றும் காணப்பெற்றது. கத்தோலிக்க மதமாற்றத்திலே இடைநிலை அடிநிலை சாதிக்குழுமங்களே பிரதானமாயின காரைநகர், அச்சுவேலி போன்ற இடங்களில் மேல் நிலை சாதிக்குழுமங்கள் சில கத்தோலிக்கத்துக்கு மதம் மாறினவெனினும் பொதுப் படையாக நோக்குமிடத்து புரட்டாஸ் தாந்தம் பெரும்பாலும் மேல்நிலை சாதிக் (வெள்ளாளர்) குழுமங்களிடையேயே பரப்பப்பெற்றது. அவர்களுக்கான கல்வி வசதிக்காக ஆங்கிலம் கற்பிக்கப் பெற்றது.

அரச சேவையில் சேர்வதற்காக வெள்ளாளக் குடும்பங்கள் பலர் ஆங்கிலம் படிப்பதற்கு மதம்மாற வேண்டிய தேவையேற்பட்டது. மிஷன் பாடசாலைகளில் சேர்வதற்காகவும் மதம்மாற வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஆங்கில அரசாட்சியோ ஆங்கிலக் கல்வியைக் கிறிஸ்தவ மத நிறுவனங்கள் மூலமே கற்கவேண்டுமென்பதையும் வற்புறுத்தவில்லை. அவர்கள் ஆங்கில அறிவைப் பிரதானப் படுத்தினரே தவிர, அது கற்பிக்கப் பெறும் ஸ்தாபனம் பற்றி வற்புறுத்தவில்லை. இதன் காரணமாகவே ஆறுமுகநாவலர் ஆங்கிலப் பாடசாலையொன்றை நிறுவினார். இம்மரபை யொட்டியே புத்தூர், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களிலே சைவப் பெருமக்களே ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலை களை நிறுவினர்.

ஏற்கெனவே ஹாட்லிக் கல்லூரியில் கற்பித்துக்கொண்டிருந்த வேலாயுதம் அவர்கள் அங்கிருந்து விலகி, பருத்தித்துறை ஆத்தியடியைச் சேர்ந்த கோணப்பர் கணபதிப்பிள்ளை என்பவரின் உதவியுடன் Puloly Boys English School எனும் பாடசாலையை நிறுவினார். இதுவே இன்று வேலாயுதம் மஹா வித்தியாலயமாக உயர்ந்து வளர்ந்துள்ளது என்று தெரியவருகிறது.

பருத்தித்துறையையும் அதன் சுற்றுவட்டாரங் களையும் சேர்ந்த சைவ இளைஞர்கள் பலர் இப் பாடசாலையிலே தமது கல்வியைத் தொடங்கின ரென்பதை கல்லூரிவரலாறு மூலம் அறிகிறோம்.

பாடசாலையின் வரலாற்றுக்குறிப்பில் **1968**இலேயே க. பொ. த உயர்தரத்துக்கான விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கத் தொடங்கப் பெற்றன. என்ற குறிப்பு வருகிறது. வடமராட்சி யிலிருந்த சைவ ஆங்கிலப் பாடசாலைகள் பலவற்றில் அக்காலத்தைய S. S. C. வகுப்புவரையே (இப்போதைய க. பொ. த. சாதாரண தரம்) கல்வி

கற்பிக்கப் பெற்றது. இதனால் S. S. C. பரீட்சையின் பின்னர் H. S. C (Higher School Certificate) வகுப்புக்குச் செல்வதற்கு வேறு பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இந்த H. S. C. வகுப்பே பல்கலைகழகப் புகுமுகப் பரீட்சைக்கான வகுப்பாகவும் அமைந்தது.

ஆனால் பல பாடசாலைகளில் முன்னர் H. S. C. எனும் பல்கலைக்கழகப்புகுநிலை வகுப்புக்கள் இருக்கவில்லை. H. S. C. வகுப்புக்களுள்ள பாடசாலைக்குச் செல்லவேண்டியிருந்தது. H. S. C. வகுப்புவரையுள்ள சைவ ஆங்கிலப் பாடசாலைகள் மிகக் குறைவாகவேயிருந்தன. இதனால் மாணவர்கள் S. S. C இன் பின்னர் வேறு கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

ஆனால் அதிர்ஷ்டவசமாக இக்குறைபாடு இப்பொழுது நீங்கி பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புக்களும் அப்பாடசாலைகளிலே தொடக்கப் பெற்றன.

சைவப் பாடசாலைச் சூழலில் ஆங்கிலத்தைக் கற்பது இத்தகைய மாணவர்களின் ஆளுமைகளில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்திற்று என்பது முக்கியமான ஒரு வினாவாகும். இதற்கான பதிலை மாணவ நிலைக்காலங்களிலேயே அறிந்துவிட முடியாது. இம்மாணவர்கள் உயர்நிலைக் கல்வியையே உத்தியோகங்களையோ தேடித் தமது வாழ்க்கைப் போக்கை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வந்ததன் பின்னர் தமது பாரம்பரிய மரபுகளை மறவாது அவற்றைப் புதிய வாழ்க்கைச் சூழலுடன் இணைக்கும் ஆளுமைத்திறன் இவர்களிடத்து வந்துவிடும்.

அதவாது தமது பாரம்பரியமென்ற தளத்திலே நிலைகுலையாமல் நின்றுகொண்டு புதிய சூழல்களைத் தம்வசப்படுத்தி அவற்றுக்கேற்ப வளர்ந்து செல்வார்கள். வேலாயுதம் மகா வித்தியாலாயத்தின் பழைய மாணவரான கோ. ஆழ்வப்பிள்ளை ( C. C. S. ) இதற்கு நல்ல உதாரணமாவார். உத்தியோக வாழ்வில் அதியுயர்ந்த நிலைக்குச் சென்றதன் பின்னரும் தமது பண்பாட்டு வேர்களை மறக்காது முன்னுதாரண புருடர்களாக வாழ்வர்.

நிறைவாகக் கல்வி பற்றிய மிகப் பிரசித்தமான ஆங்கிலப் பொன் மொழியொன்றை நினைவு கூருகிறேன். அது பின்வருமாறு

"Education is that which remains within you after you have forgotten all what you have learnt"
"கல்வியென்பது நீங்கள் கற்றறிந்து கொண்டன யாவற்றையும் மறந்துபோனதன் பின்னர் உங்கள் நெஞ்சிலே எது மீதமாக இருக்கிறதோ அதுதான் கல்வி ஆகும் என்பர்"

**அப்படி மீதமாக நிற்பது யாது**
**மீதமாக நிற்பது புரிந்துணர்வு (Under standing) என்பதேயாகும்.**
**கல்வியின் பயன்பாடு மற்றையோரைப் புரிந்து கொள்வதேயாகும்.**

(இக்கட்டுரையை வேலாயுதம் மஹா வித்தியாலய வரலாற்றில் இடம்பெறும் அருணாசலம் அவர்களது புத்திரராகிய குழந்தை நோய் நிபுணர் சிவபாதசுந்தரத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன். அவர் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு அருகே பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காலமானார். அம்மரணம் பற்றி விசாரணைகள் எதுவுமே நடைபெறவில்லையாம்.)

அதேசமயம் இக்கட்டுரையை எழுதும் பொழுது பல்கலைக்கழகத்தில் ஒரு சாலை மாணவனாக விளங்கிப் பின்னர் VMV ஆசிரியராக பதவியேற்று அதிபராக வளர்ந்த திரு ஏகாம்பரநாதனை மனமார வாழ்த்துகிறேன். இவற்றுடன் இப்பாடசாலையிலே கற்பித்த திரு க. துரைரத்தினம் பா. உ இப்பாடசாலைக் கால தனது அனுபவத்தைச் சிறப்பித்தே கூறிவந்தார் என்பதை நினைவு கூருகின்றேன்.

# வடமராட்சியின் கல்வியும் சமூக முனைவுப்பாடும்

பேராசிரியர் சபா. ஜெயராசா



வடமராட்சி ஒரு தனித்துவமான அலகு என்று குறிப்பிடப்பட்டாலும் அதன் உள்ளமைந்த வேறுபாடுகள் பல நிலைக ளிலே காணப்படு கின்றன. கல்வி மற்றும் பண்பாட்டு நிலைகளில் வேறுபாடு களும் முரண்விசைகளும் உள்ளமைந்து விரவியு ள்ளன. அவ்வாறான பன்மை நிலைகளினூடே ஓர் "எழு நிலை" (ACME) சார்ந்த எண்ணக்கருவாக வடமராட்சி எடுத்தாளப்படுகின்றது.

வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம் சமூக முரணியல்புகளை அடியொற்றி இருநிலைப் பாங்கானதாக வளர்ச்சியடைந்தது. சமூகத்தின் அடித்தளத்து மக்களிடத்து நாட்டார் வழி அறிவுக்கையளிப்பு நிகழ்ந்து வந்தது. நாட்டுக் கூத்து, நாட்டார் இலக்கியம், நாட்டார் மருத்துவம், நாட்டார் வழிபாட்டு முறைகள் முதலியவற்றின் வழியாக அறிவும் அனுபவங் களும் அடித்தளத்து மக்களிடத்தே பரிமாற்றம் செய்யப்பட்டன. வாய்மொழி அறிவுக் கையளிப்பின் செப்பனிடப்பட்ட வடிவம் "கட்டியம்" என அழைக்கப்பட்டது. கட்டி இயம்பலே கட்டிய மாயிற்று.

நாட்டார் அறிவுக் கையளிப்பு வழிபாட்டு நிலையங்களை அடியொற்றி நிறுவனமயப்பாடு அடைந்தது. செல்வச் சந்நிதி, நெல்லண்டை, நாகர்கோயில் முதலாம் இடங்கள் அவ்வாறாகத் தோற்றம் பெற்ற நிறுவனமயப்பாட்டின் தொடர்ச்சியைக் காட்டுகின்றன.

வர்க்க அடிப்படையில் முனைவுப்பாடு கொள்ளல் (Polorisation) சமூக இயக்கத்தின் போது நிகழும் தவிர்க்க முடியாத தோற்றப்பாடு ஆகும். சமூக அடுக்கமைப்பின் உயர்ந்தோரிடத்து வரன் முறைப்படுத்தலுக்கு உள்ளான கல்விச் செயற்பா டுகள் நிலைபேறு கொண்டிருந்தன. திண்ணைப் பள்ளிக் கூடங்கள், குருகுலங்கள், கோயிற் பள்ளிக்கூடங்கள், கோயில் மடங்களை அடியொற்றிய செழுங்கலை நியமங்கள் இருந்தன. ஐரோப்பிய மேலாதிக்கத்தோடு அவை செயலிழந்தன.

எண், எழுத்து, வாசிப்பு, யாப்பு, வானநூல், சோதிடம், தருக்கம் முதலியவை திண்ணைப் பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. வடமராட்சியின் மரபு வழிக் கல்வியில் கணிதபாடம் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தமையைப் பண்டிதர் சச்சிதானந்தன் அவர்கள் பல சந்தர்ப்பங்களிலே சுட்டிக் காட்டியுள்ளார். புவிக்கோளத்திலே குறிப்பிட்ட ஒரு நெடுங்கோட்டை மத்தியாக வைத்தே நாள் – கோள் – பஞ்சாங்கம் கணித்தல் உண்டு. ஆங்கில மரபிலே நேரக் கணிப்புக்கு கிறீன்விச் நெடுங்கோடே மத்தியாகக் கொள்ளப்படும். ஆனால் எமது நாட்டுப் பஞ்சாங்கக் கணிப்பில் வடமராட்சியில் உள்ள மூக்கன் என்ற இடத்தை மத்தியாகக் கொண்டே கணிப்பு மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடப்பட்டது. (யாழ். பல்கலைக்கழக வெள்ளி விழாக் கருத்தரங்கிலே பண்டிதர் சச்சிதானந்தன் வெளியிட்ட கருத்து)

வடமராட்சியின் கல்வியில் Problem என்ற எண்ணக்கருவுக்கு இணையாக "பிணக்கு" என்ற

சொல்லே பயன்படுத்தப்பட்டது. Problem Solving பிணக்குத் தீர்வு எனப்பட்டது. சமகாலத்துக் கல்வியில் "பிரச்சினை விடுவித்தல்" என்ற தொடர் பெருவழக்காகவுள்ளது. பிணக்குத்தீர்விலே கணியப்படுத்தல் முக்கியமானது. அதனை வடமராட்சியில் "கணக்கறியான் பிணக்கறியான்" என்று குறிப்பிடுவர். அனைத்து அறிவுத் தேட்டங்களையும் முன்னெடுப்பதற்கு கணக்கறிவு அவசியம் என்பது தொன்மையான கிரேக்கச் செவ்வியற் கல்வி மரபிலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

ஆகம விதிமுறைப்பட்ட சிவாச்சாரியார்களின் இல்லங்களில் குருகுலப்பள்ளிகள் இயங்கின. வேதம் ஓதுதலும், ஆலயக் கிரியை முறைகளைக் கற்றலும் அங்கே சிறப்பாக இடம்பெற்றன. சமூக நிரலமைப்பைக் கருத்தியல் தளத்தில் அரண் செய்யும் நிறுவனமாகக் குருகுலம் அமைந்திருந்தது. தும்பளை சுப்பிரமணிய சாஸ்திரிகள், கரணவாய் செவ்வந்தி நாததேசிகர், பருத்தித்துறை முத்துக்குமார சுவாமிக்குருக்கள் முதலியோர் இவ்வகையான குருகுலப் பாரம்பரியத்தில் வந்தவர்கள். இவர்களின் வழியாகவே சமஸ்கிருதக் கல்வி வடமாராட்சிப் பகுதியில் மேலோங்கியிருந்தது.

பிறிதொருவகையான குருகுலக் கல்வி தொல்சீர் இசை மரபுடன் தொடர்புபட்டிருந்தது. நாகசுரக்கலை, இசைக்கலை முதலியவற்றைக் குருவின் இல்லத்தில் வாழ்ந்து கற்கும் மரபு நிலை பெற்றிருந்தது. நெல்லியடி, வதிரி, பருத்தித்துறை, வல்வெட்டி, உடுப்பிட்டி முதலாமிடங்களில் இவ்வகைக் குருகுலங்கள் இருந்தன. நெல்லியடியில் வாழ்ந்த நடேசு பிரபல நாயனக்காரராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. (கா. சிவத்தம்பி, 2005) அவர் இல்லத்தில் வாழ்ந்து நாகசுரம் கற்றல் வளர்ச்சியடைந்திருந்தது.

செவ்வியல் இசையைச் சமூகத்தின் அடித்தளத்து மக்களிடத்து எடுத்துச் சென்ற செயற்பாட்டில் நாகசுரக்காரர்களின் பங்களிப்பு முக்கியமானது. இந்தச் செயற்பாடு வரன்முறையான கல்விச் செயற்பாட்டுக்கும் சமூக அடுக்கமைப்புக்குமிடையே இருந்த தொடர்புகளில் அதிர்வுகளையும் சில கோணங்களிலே தகர்ப்பினையும் ஏற்படுத்தலாயிற்று. அதாவது சமூகத்தின் உயர்ந்தோர் மாட்டிருந்த செவ்வியல் இசைப் பயில்வு அடிநிலை மாந்தர்களிடத்தும் பரவலாயிற்று. வதிரியில் வளர்ச்சி பெற்ற செவ்வியல் இசை மரபு இதனை நன்கு வெளிப்படுத்தும்.

இந்த மரபின் வளர்ச்சியானது இசைக் கல்வியில் ஒட்டுமைப்பண்பை (Hybrid) ஏற்படுத்தலாயிற்று. அண்ணாவி தம்பையா (தும்பளை) அண்ணாவி ஆறுமுகம் (அல்வாய்) அண்ணாவி ஆழ்வார் (கரவெட்டி) அண்ணாவி செல்லையா (மாதனை) அண்ணாவி மகாலிங்கம் (துன்னாலை) முதலியோர் செவ்வியல் இசையையும், நாட்டார் இசையையும் ஒட்டுமை செய்து கூத்துக்களிலே பயன்படுத்தினர். இவ்வாறான ஒரு நிகழ்ச்சி வங்காளத்தில் "இரவீந்திர சங்கீதம்" என்ற புதிய இசைவடிவத்தைத் தோற்றுவித்தது. அதாவது செவ்வியல் இசையும் வங்காளத்து நாட்டார் இசையும் ஒன்றிணைக்கப்பட்டு இரவிந்திர சங்கீதம் உருவாக்கப்பட்டது. ஆனால் அத்தகைய ஓர் இசை ஒட்டுமை முயற்சியை உயர்நிலை அறிக்கை மட்டத்தில் முன்னெடுத்திருந்தால் தனித்துவமான ஓர் இசை வடிவத்தை இந்நாட்டிலே தோற்றுவித்திருக்கலாம்.

வடமராட்சியின் கல்வி நிறுவன வடிவங்களுள் அமைந்த பிறிதொரு வகையாக "நிலாப் பள்ளிக் கூடங்கள்" அமைந்தன. நிலாக்கால இரவிலே புலமைமிக்க ஆசிரியர்களின் வீட்டு முற்றத்திலே இவ்வகைப் பள்ளிக் கூடங்கள் இயங்கின. காவியக் கதைகளைப் பிரசங்க முறையிலே ஆசிரியர்கள் அங்கே கையளித்தனர். பொதுவாக யாழ்ப் பாணத்து மரபு வழிக் கல்வியில் இடம் பெற்ற ஒரு சிறப்பு வடிவமாக இவ்வகைப் பள்ளிக்கூடம் அமைந்தது. புராணக் கதைகளை வாய் மொழியாக

நிலை பெறச் செய்த இயக்கத்தில் இவை சிறப்பிடம் பெற்றிருந்தன. வடமராட்சியில் புராண இலக்கிய அறிவு ஆழ்ந்து நிலைப் பேறு கொண்டமைக்கு நிலாப்பள்ளிக் கூடங்கள் மேலான பங்களிப்புச் செய்துள்ளமையை நினைவு கூர வேண்டியுள்ளது.

ஆறுமுகநாவலரது முன் மாதிரியைத் தொடர்ந்து இந்தச் செயற்பாடு ஆகமவரன் முறை தழுவிய ஆலயங்களை நோக்கிப் பெயர்ச்சி கொண்டது. பிரசங்க முறை இவ்வகை ஆலயங் களிலே வளர்ச்சி பெற, கிராமிய வழிபாட்டு நிலையங்களிலே கூத்துக்கள் வழியான புராண அறிவுக் கையளிப்பே தொடர்ந்தது. பிரசங்க முறை சமூக அடுக்கமைப்பின் மேல் முனை தழுவி வளரலாயிற்று. சமூக முனைவுப் பாட்டுக்கும் அறிவுக் கையளிப்புக்கும் உள்ள தொடர்பை இந்த நிகழ்ச்சி மேலும் தெளிவுபடுத்துகின்றது.

அதேவேளை பிறிதொரு வகையான நிலாப்பள்ளிக் கூடமும் வடமராட்சிப் பிரதேசத்திலே நிலைபேறு கொண்டிருந்தது. நிலாக்காலத்து இரவுப் பொழுதில் உடற்கலை வல்ல ஆசிரியர்கள் இளைஞர்களுக்கு மற்போர், சீனடி சிலம்படி வித்தை முதலியவற்றைப் பயிற்றுவித்தனர். இவ் வகைப் பாடசாலைகள் யாழ்ப்பாணத்துப் பல்வேறு கிராமங்களிலும் காணப்பட்டன. (யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வியும் பண்பாடும், 2009) உடல் ஆற்றல்களை வெளிப்படுத்தல் கிராமிய வழிபாட் டுடன் இணைந்த செயற்பாடாயிற்று. சித்திரை நோன்மதி நாளில் அவ்வகை வித்தைகளைக் கற்றோர் கிராமிய வழிபாட்டிடங்களில் அரங் கேற்றம் செய்வர். காளி, கொத்தி, காத்தவராயர், வீரபத்திரர் வழிபாட்டு நிலையங்களில் அவ்வகை அரங்கேற்றம் நிகழ்ந்தது.

மேற்குறித்த உடற்கல்வி அமைப்பும் சமூக நிரலமைப்பின் அடித்தளத்து மக்களிடத்தே காணப்பட்டது. அடுக்கமைப்பில் உயர்ந்தோர் உடற்கல்வியைக் காட்டிலும் உளவலுவை மேம்படுத்தும் கல்வியிலே தீவிர அக்கறை காட்டினர். இந்நிலையிலே கல்வி பற்றிய நோக்கிலும், சமூக அடுக்கமைப்பை அடியொற்றிய துருவப்பாடு அல்லது எதிர் எதிர் முரண்பாடு காணப்பட்டது. அதாவது உள்ளத்தை வலுப்ப டுத்தும் கல்விநோக்கு உயர்ந்தோர் மாட்டு நிலவியது. உடலை வளம்படுத்தும் கல்வி நோக்கு அடித்தளத்து மக்களிடத்தே காணப்பட்டது.

காலனித்துவ ஆட்சி வடமராட்சியின் கல்வி யிலே பல்வேறு உட்புகுத்தல்களை மேற்கொண்டது. கத்தோலிக்க திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, அமெரிக்க மிசன் திருச்சபை, முதலியவை தாம் செயற்பட்ட சூழலிலே பாடசாலைகளை அமைத்தனர். மெதடிஸ்த திருச்சபை அமைத்த ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியனவும், அமெரிக்க மிசன் திருச்சபை அமைத்த உடுப்பிட்டி அமெரிக்க மிசன் ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி ஆகியனவும், கத்தோலிக்க திருச்சபையினர் அமைத்த சேக்ரட்ஹாட் கல்லூரி, முதலியனவும் ஆங்கில மொழி வழிக்கல்வியை முன்னெடுத்தன. அதேவேளை தாய் மொழி வழிக்கல்வியையும் திருச்சபைகள் ஒரே நேரத்தில் முன்னெடுத்தன. அவ் வகையான இருமைப் போக்கும் சமூக முனைவுப்பாடுகள் தழுவியே மேற்கொள்ளப்பட்டன.

சமூக அடுக்கமைப்பில் மேலுயர்ந்தோர் ஆங்கில மொழி வழிக் கல்வியைக் கற்று அரச உத்தியோகங்களைப் பெற்றுக் கொண்டனர். அதன் வழியான எழுகுழாத்தினரின் (Elites) ஆக்கம் வடமராட்சியில் நிகழ்ந்தது. மறுபுறம் தாய் மொழி வழிக் கல்வியைப் பெற்றோர் சமூக நிரலில் அடிநிரலில் வாழ்ந்தோராய் இருந்தனர். அதி உச்சமாக அவர்களால் தமிழ் ஆசிரியர் பதவியை மட்டுமே காலனித்துவ ஆட்சிக் காலத்திலே பெற்றுக் கொள்ள முடிந்தது. அந்நிலையிலும் காலனித்துவக் கல்வி முறை சமூக

ஏற்றத்தாழ்வுகளை மீளாக்கம் செய்யும் கல்வி முறையாகவே அமைந்திருந்தது.

காலனித்துவ காலத்தில் எழுச்சி கொண்ட சைவக் கல்வி நடவடிக்கைகள் வடமராட்சிப் பிரதேசத்திலும் செல்வாக்குகளை ஏற்படுத்தின. எழுத்தறிவித்தலும் கல்வி வழங்கலும் உயர்ந்த அறப்பண்புகளாகக் கருதப்பட்டன. வடமராட்சியில் வாழ்ந்த புரவலர்கள் தன்னார்வத்துடன் சைவப் பாடசாலைகளைத் தோற்றுவிக்கலாயினர். அவ்வகையிலே தோற்றம் பெற்ற கல்வி நிலையமாக வேலாயுதம் மகா வித்தியாலயம் அமைந்தது.

சைவப் பின்விசையிலே தோற்றம் பெற்ற பாடசாலைகள் பல்வேறு தனித்துவ வெளிப்பாடுகளுக்குத் தூண்டுதல் வழங்கின. அவையாவன.

1). காலனித்துவத்துக்கு எதிரான கருத்தியல் விசைகளைத் தூண்டியமை.

2). தற்காலத்துப் பின்காலனியத் (Post Colonial) திறனாய்வுகளிலே குறிப்பிடப்படும் மாற்றுக் குரல்களுக்கு வடிவம் கொடுத்தமை.

3). வளர்ந்து வரும் உலக அறிவைத் தமிழிலே தரும் ஆக்கங்களை மேற்கொண்டமை – இவ்வகையில் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார், அதிபர் இராமநாதபிள்ளை ஆகியோரின் எழுத்தாக்கங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள்.

4). மேலைப் புல ஆய்வு முறைகளை அடியொற்றித் தமிழியல் ஆய்வை நவீனப்படுத்தியமை. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களின் பணிகள் இவ்வகையிலே சுட்டிக்காட்டப் படத்தக்கவை.

5). வடமராட்சியின் கிராமிய அடையாளங்களை மீட்டுருவாக்கியமை உதாரணமாக, பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்களின் காதலி ஆற்றுப்படையைக் குறிப்பிடலாம். பேராசிரியர், வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

6). தமிழ் மொழி தழுவிய ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கு விசையூட்டியமை பண்டிதர் வீரகத்தி, கவிஞர் செல்லையா, தென் புலோலியூர் கணபதிப்பிள்ளை, தெணியான், பண்டிதர் சச்சிதானந்தன் போன்ற பலரை வகை மாதிரியினராகக் குறிப்பிடலாம்.

சைவக் கல்வி இயக்கம் தமிழ் மொழி வழிக் கற்பிக்கும் பெருமளவினரான ஆசிரியர்களை வடமராட்சியிலே உருவாக்கியது. கரவெட்டி ''ஆசிரியக் கிராமம்'' என்றும் அழைக்கப்பட்டது. ஆசிரியத்துவ சம நோக்கு வரும் வரை ஆங்கில ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கு மிடையே ஊதிய நிலையிலும் அந்தஸ்து நிலையிலும் பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன. அந்த வேறுபாடும் சமூக அடுக்கமைப்பை அடியொற்றிய வேறுபாடுகளாக அமைந்தன.

கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து வடமராட்சியின் கல்வியில் மேலும் பரவலாக்கம் நிகழலாயிற்று. காலனித்துவ ஆட்சிக் காலத்திலே ஹாட்லிக் கல்லூரியே உயர்கல்வியை நோக்கிய நகர்ச்சியை ஏற்படுத்தியது. கன்னங்கராவின் சீர்திருத்தங் களைத் தொடர்ந்து நிகழ்ந்த தாய்மொழிக் கல்வியின் ஏற்றம் வடமராட்சியிலே வேலாயுதம் மகா வித்தியாலயம், சிதம்பராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், விக்னேஸ்வராக் கல்லூரி, உடுப்பிட்டி ஆண்கள் மற்றும் மகளிர் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி முதலியவற்றின் எழுச்சிகளுக்கு வழிவகுத்தது.

சுதந்திர காலத்தைத் தொடர்ந்து யாழ்ப் பாணத்துக் கல்வியில் ஏற்பட்ட ஈர்ப்பு விசை வடமராட்சியின் கல்விச் செயற்பாட்டிலும் தாக்கவிளைவுகளை ஏற்படுத்தியது. விஞ்ஞான ஈர்ப்பு விசையைச் சமநிலையில் விளங்கிக் கொள்ளாது, கலைப்பாடங்கள் மீது வெறுப்புக் காட்டினர். தமிழர்கள் மத்தியிலே தலைசிறந்த

சமூக விஞ்ஞானிகள் வளர்ச்சியுறாத நிகழ்ச்சிக்கு அவ்வகை அணுகு முறையும் ஒரு பிரதான காரணியாயிற்று.

சமகாலக் கல்வியிலே தோற்றம் பெற்றுள்ள தீவிர போட்டிமுறைமை வடமராட்சியிலும் நேரடியான தெறிப்புக்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. அந்நிலையிற் சமூகத்தின் அடித்தளத்து மக்களைக் காட்டிலும் மத்திய தரத்தினரே கல்வி சார்ந்த போட்டியின் தீவிர பங்காளிகளாகியுள்ளனர்.

**நோக்கியவை :**

இராமலிங்கம் வள்ளி நாயகி, யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி (கொழும்பு, குமரன் புத்தக இல்லம் 2006)

கணபதிப்பிள்ளை, பேராசிரியர் க. இலங்கைத் தமிழ் வரலாறு (பேராதனை, 1956)

கலாமணி, த (இணையாசிரியர்) திருவுடையாள் – 2 (கரவெட்டி, கலாசாரப் பேரவை – வடமராட்சி தெற்கு, மேற்கு 2009)

எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கியவளமும், (பருத்தித் துறை, வடமராட்சிக் கல்வி வட்டம், 1984)

வரதராஜன், எஸ். ம. வடமராட்சியின் இசைப் பாரம்பரியம் (கரவெட்டி, இராசம்மா மாரியாம் பிள்ளை நினைவு வெளியீடு, 2005)

ஜெயராசா, சபா. யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வியும் பண்பாடும் (கொழும்பு, சேமமடு பதிப்பகம், 2009)

Saumya Kodagoda, Bibliography of Educational reports on Sri Lanka, (Colombo, National library of Sri Lanka, 1987)

*நாட்டிற் பல திற அறிஞர் தோன்றுகிறார். ஒவ்வோர் அறிஞர் ஒவ்வொரு துறையில் நாட்டை ஓம்புகிறார். அவை எல்லாவற்றையும் வளர்ப்பவர் பாவலரே ஆவார். தொழிலாளரிடத்துத் தொழிலைக் காணலாம். மற்றவரிடத்தும் மற்ற மற்றக் கலைகளைத் தனித்தனியே காணலாம். கம்பன் பாடிய இராமாயணத்தில் என்ன இல்லை? உலகம் இருக்கிறது என்று சுருங்கச் சொல்லலாம்.*

**- திரு. வி.க.**

---

*உலகம் வாழத் தெரியாதவர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும். வாழத் துடிப்பவர்களுக்குக் குறுக்கே நிற்கும். பழிப்பவர்களுக்குப் பயந்தால் இவ்வுலகில் வாழவே முடியாது.*

**- அகிலன்**

---

*யான் கண்கண்ட உயிர்த் தெய்வம், எல்லோருக்கும், உயிர் வளர்க்கின்ற உழவர்களே. புரோகிதர்கள் காட்டும் உயிர் அற்ற உருவங்களில் இல்லை.*

**- தாகூர்**

---

*கலையின் துணைகொண்டே நாம் எமது வாழ்வின் பூரணத்துவத்தை மலர்ச்சியாக்கலாம்; அதுதான் உண்மை வாழ்வின் கீழ்நிற்கும். ஆபத்துக்களினின்றும் பாதுகாக்கும் கேடயமாகும்.*

**- ஒஸ்கார் வைல்டு**

# ஆங்கில மொழி மூலக் கல்வி

**பேராசிரியர் மா. நடராசசுந்தரம்**

*முகாமைத்துவத் துறை, யாழ் பல்கலைக்கழகம்*

நவீன முகாமைத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு நாம் இப்பொழுது வாழுகின்ற சூழல் அதன் தாக்கங்கள் பற்றிய அறிவு முக்கியமானது. இன்று இயந்திர உலகில் இருந்து விடுபட்டுத் தகவல் தொழில்நுட்ப உலகில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். சகல துறைகளிலும் அடிப்படையில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. கணினியின் முக்கியத்துவமும் அதன் தாக்கமும் தொழில் நிறுவனங்களில் முக்கியத் துவம் பெறுகின்றன. குறிப்பாக ஆங்கில மொழி இக்கால கட்டத்தில் மிக முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இதன் விளைவாக இன்று பல்வேறு மட்டங்களிலும் ஆங்கிலக் கல்வியினை விருத்தி செய்வதற்கான முன்னேற் பாட்டு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய உலகில் ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் நாடுகளில் இன்று ஆங்கிலத்தினைப் பல்கலைக் கழக மட்டங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதற்குப் பயன்படுத்துகின்றனர். ஒரு கால கட்டத்தில் முற்றாகவே ஆங்கில மொழியினை எதிர்த்து வந்த இந்நாடுகள் இன்று அவற்றினைப் பயன்படுத்தி இன்று அதனைக் கற்றுப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட் டனர். ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தினை உலக ரீதியாக உணரக் கூடியதாக இருக்கின்றது. இதேபோல வளர்ந்து வரும் நாடுகளில் குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மொழியின் முக்கியத்துவம் மீண்டும் தலைதூக்கி நிற்பதனை நாம் உணரக் கூடியதாக இருக்கின்றது.

ஆங்கிலம் போன்ற உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த அந்நிய மொழிகளைக் கற்பது பற்றி பல ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். பலருடைய ஆய்வின் முடிவுகளின் படி தாய்மொழியினை முறையாகக் கற்றவர்கள் தான் அந்நிய மொழிகளை முறையா கக் கற்றுக் கொள்ள முடியும் என்ற ஒரு அடிப்படையான கருத்தைத் தெரிவிக்கின்றனர். 2001ம் ஆண்டு ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் இவ்விடயம் ஆராயப்பட்ட பொழுது தாய்மொழியைப் பயிற்றுமொழியாகக் கொள்வ தென்பது சமூக கலாச்சாரம் மற்றும் கல்விசார் காரணங்களைப் பொறுத்த வரையில் அதி முக்கியத்துவம் வாய்ந்தது என முடிவு செய்யப் பட்டது. மேலும் "உலகளாவிய ஒரு மொழியானது (ஆங்கிலம்) அதன் சர்வதேச தொடர்பாடலில் ஏகபோக உரிமையினைப் பெறுமிடத்து அதனால் மொழி, மற்றும் கலாச்சார பன்மைத்துவம் ஒவ்வொரு நாட்டிலும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது. தாய்மொழி உட்படப் பிற மொழிகளைக் கற்பதற்கான ஊக்கம் சிதைக்கப்ப டுகின்றது". மேலும் இந்த மகாநாட்டில் உயர்ந்த மொழி, இழிந்த மொழி என்ற முறையில் மொழிகளைப் பாகுபடுத்த முடியாது என்றும் இந்த மகாநாடு வலியுறுத்தியுள்ளது. மேலும் பல ஆய்வாளர்கள் குறிப்பாக Sanbaraore என்பவர் தாய்மொழியில் எழுதும் திறன் போன்ற முக்கிய திறன்களில் தேர்ச்சி பெற்ற பின்னரே பிள்ளைக ளுக்கு இரண்டாம் மொழி பற்றிக் கற்பிப்பது பற்றிச் சிந்திப்பதற்கு வழிவகுத்துள்ளார். அவருடைய சிந்தனையில் சகல வகையான கற்றலுக்கும் தேவையான உளப்பாங்குகள், உளச்சார்புகள், மற்றும் நடத்தைகளையும் பிள்ளைகளில் வளர்க்க உதவும் ஒரே மொழி தாய்மொழி ஆகும். தாய்மொழியானது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கு இடையிலும்

அவர்களுக்குள்ளும் இசைவாக்கத்தையும் நம்பிக் கையையும் உருவாக்கின்றது என்றும், பிள்ளைகள் தம்மைச் சுற்றியுள்ள உலகை ஆராய்வதற்கான சிறந்ததொரு சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது என்றும் மாணவர்களின் மனத்தடைகளை அகற்றி அவர்களுடைய கற்பனை வளத்தையும் படைப்பாற்றலையும் விருத்தி செய்கின்றது என்பது இவ் அறிஞர்களின் கருத்தாகும். பிள்ளை தனது மொழி, தனது கலாச்சாரம், தன்னைச் சூழவுள்ள உலகு என்பது பற்றிய தெளிவான விழிப்புணர்வைப் பெறுகின்றது என்ற அவரது கருத்து தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவத்தை மிகக் கூடிய அளவுக்கு வலியுறுத்துவதாகும் எனக் கொள்ளல் வேண்டும்.

கல்வி பற்றி இரண்டு வகையான நிலைப் பாடுகள் உள்ளன. முதலாவது நிலைப் பாட்டின்படி பிள்ளைகளுக்கு உள்ளார்ந்த பல ஆற்றல்கள் இருக்கின்றன. கல்வியானது அவ்வாற்றல்களைப் பயன் தருமுறையில் வெளிக்கொணர வேண்டும் என்பதாகும். இரண்டாவது நிலைப்பாட்டின்படி அறிவார்ந்த ஆசிரியர் அறிவும் ஆற்றலுமற்ற பிள்ளைகளிடம் தனது "அறிவை வைப்புச் செய்ததாகும்" இதனையே "Banking concept of Education" என் Paulo Freire என்ற இலத்திரன் அமெரிக்கக் கல்விச் சிந்தனையாளர் எடுத்துக் கூறினார். முதலாவது நிலைப்பாடானது இன்றைய கல்விச் சிந்தனையிலும் வரவேற்கப்படும் ஓர் அம்சமாகும். ஆனால் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்திப் பேசும் டென்மார்க் நாட்டுக் கல்வியாளரான கலாநிதி Tovskutnabb Kangas என்பவர் பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களுடன் தொடர்புள்ள முறையில் அவர்களுடைய அறிவையும் திறன்களையும் வளர்ப்பதை அந்நிய மொழிக் கல்வி தடுத்துவிடும் என்று கூறுகின்றார். அந்நிய மொழியில் அடிப்படையான எழுத்தறிவைப் பெற 12–14 ஆண்டுகள் வரை செல்லும். அத்தகைய எழுத்தறிவை 8–9 ஆண்டுகளில் பெற்றுவிட முடியும். சமூகத்திலும் தொழிற் சந்தையிலும் முழுமையாகப் பங்கு பெறத் தேவையான எழுத்தறிவை அந்நிய மொழியில் பெறுவதற்கு 16–17 ஆண்டுகளில் பெறமுடியும் இந்நிலையில் அந்நிய மொழியில் கல்வி பெற முற்பட்டால் பிள்ளைகளின் சொந்த வளங்களும், சமூகத்தின் வளங்களும் விரயமாக நேரிடும் என்ற கருத்தினையும் இந்த அறிஞர் முன்வைத்தார்.

நாடு மற்றும் தாய்மொழியை விடுத்து அந்நிய மொழியைப் பயிற்று மொழியாகப் பயன்படுத்து மிடத்துப் பாரதூரமான உளப்பாதிப்பு (Mental harm) ஏற்படுகிறது. இத்தகைய பாதிப்பானது அறிக்கை ரீதியாகவும் (Cognitive) கல்வி ரீதியாகவும், மொழியியல் ரீதியாகவும் மற்றும் உளவியல் ரீதியாகவும், இறுதியாகப் பிள்ளைகளின் எதிர்கால அரசியல் பங்கேற்பு என்பவற்றிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

ஆங்கில மொழிக் கல்வி பற்றி இந்திய ஆய்வாளர்கள் தெரிவிக்கும் புதிய கருத்தொன்று உண்டு. ஆங்கில மொழியில் கல்வி பெறுவோர் மற்றவர்களை விட சமூக, பொருளாதார ரீதியாகச் பல அனுகூலங்களை அனுபவிக்கின்றனர். ஆனால் அவர்களும் ஆங்கில மொழியில் பயில்வதால் ஒரு முக்கிய இழப்பையும் எதிர் நோக்குகின்றனர். கற்றலைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு அரைகுறையான வாழ்க்கையை வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். சகல பாடசாலைப் பாடங்க ளையும் அவர்கள் ஆங்கில மொழியில் கற்பதால் தமது பாடசாலை அறிவைத் தமது நாளாந்த வாழ்க்கை அனுபவத்துடன் தொடர்புப்படுத்திக் கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இன்றைய பாடசாலைப் பிள்ளைகள் ஓராண்டில் 90 சதவீதமான நேரத்தைப் பாடசாலைக்கு வெளியே உள்ள உலகில் ஆங்கிலம் பேசாத உலகில் கழிக்கின்றனர். இவ் வெளியுலகம் வேறொரு மொழியிலேயே கருத்தாக்கங்களைச் செய்கிறது. இதனால், பிள்ளைகள் எதிர்நோக்கும் பல நெருக்கடிகளைக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தாய் மொழிப் பற்றும் வழி வழி வந்த பண்பாடு பற்றிய பெருமிதத்தையும் கொண்ட மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள பல பெற்றோர்கள்

தமது மொழியையும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றனர். ஆனால் ஆங்கில மொழியில் பயிலும் பெரும்பாலான பிள்ளைகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பாடசாலை மொழிக்கும் சமூகம் பயன்படுத்தும் மொழிக்கும் இடையே ஒரு பாரிய இடைவெளி உண்டு என்பதை ஒரு பெருங் குறைபாடாகக் கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கல்வி ஆய்வாளர்களின் முடிவுகள்

1981ம் ஆண்டு ஜொன்சன் அன்ட் மொரோ (Jonson and Morrow) என்பவருடைய ஆய்வில் ஆங்கில மொழிக் கற்பித்தல் நோக்கம் ஆனது விரிந்த தவணை அடிப்படையில் விரிவான பாடவிதானக் கற்பித்தலைக் குறிப்பிடுவதாக இருத்தல் வேண்டும் என குறிப்பிடுகின்றார். மேலும் ஆங்கிலமொழிக் கற்பித்தல் முறை, பரப்பு எல்லை, கற்பித்தல் முறையில் வேறுபாடுகளின் அடிப்படையில் அதன் அபிவிருத்தி தங்கியுள்ளது. மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் மொழித்தேர்ச்சி பெற முயற்சிப்பதால் மாணவர்கள் பாடம் சார்பான திறமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். Cohen (1986) என்பவரின் ஆங்கில மொழியினை 2வது மொழியாகக் கற்பித்தலை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்ற ஆய்வை வெளிப்படுத்தினார். ஆங்கில மொழியில் பயிலும் மாணவர்கள் போதியளவு ஆங்கில அறிவு பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடின் அதனை அவர்கள் தவிர்க்க முயல்வர். ஆங்கில மொழி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் வகுப்பில் போதிய மொழிச் செயற்பாடுகளையும் அவர்களுக்குக் கற்பிக்கக் கூடிய சூழலை உருவாக்கி உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும். இவருடைய ஆய்வின்படி இம்மொழி பற்றிய அறிவைப் பெறுவதற்குச் சிறிது காலம் எடுக்கும் என்பது தெளிவாகக் கொள்ளப்ப டுகின்றது. Cummins என்பவருடைய கருத்துப்படி சமூகத் தேவைக்காகக் கற்றுக் கொள்வதற்கு 30 – 40 வருடங்கள் தேவைப்படும். மொழித் தேர்ச்சிக்காகக் குறைந்தது 7 – 8 வருடங்கள் கற்க வேண்டியிருந்தது. அத்துடன் பாடசாலையின் கல்வியின் போது சொந்த மொழித் தேர்ச்சிக்கு 3,4 வருடங்கள் போதுமானதாகையால் தாய்மொழி பேசுபவர்களுக்கு ஆங்கில மொழிக் கற்றலானது சவாலாக உள்ளது என கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இலங்கைப் பாடசாலைகளில் ஆங்கில மொழி

புதிய நூற்றாண்டின் மனிதனின் தேவைகளுக்கேற்ப ஆங்கில மொழி சர்வதேச ரீதியாக ஊடகமொழியாகவும், கணினி மொழியாகவும், கைத்தொழில், வர்த்தக துறைசார் மொழியாகவும், அறிவு சார்ந்த மொழி ஆகவும் உலகளாவிய ரீதியில் இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காலத்துக்கு காலம் மாறிவரும் நிலைமைகள், மனித தேவைகள் முக்கிய காரணங்களாக அமைகின்றன. உலக மயமாதலினால் சர்வதேச உறவுகள், கைத்தொழில், வர்த்தகம், தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு உலகளாவிய ரீதியில் பன்மடங்காகப் பெருகி வரும் அறிவுத் தொகுதி, ஆங்கிலத்தில் இருக்கின்ற நிலைமை போன்ற வலுவான காரணங்களினால் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவது அவசியமாகின்றது. இதன் காரணமாகவே எமது நாட்டில் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் பயிற்று மொழி என்ற அந்தஸ்தில் இருந்து நீக்கப்பட்ட ஆங்கில மொழி ஆனது, இன்று அதிகாரபூர்வமாக மீண்டும் பாடசாலைகளில் ஒரு பயிற்றுமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆங்கில மொழியானது பயிற்று மொழியாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமது குடியேற்ற ஆட்சிமுறையில் தேவைகளையும் நன்மைகளையும் கருத்தில் கொண்டே ஆங்கில மொழிக் கல்வியை அறிமுகம் செய்தனர். ஆட்சியாளருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஒரு பாலமாக ஆங்கில மொழி தெரிந்த ஒரு வகுப்பினரை உருவாக்க வேண்டும் என்பதே முக்கிய நோக்கமாக இருந்தது. இதற்காகப் பொதுமக்கள் அல்லாது நாட்டிலிருந்த செல்வந்தர்களான நிலவுடமையாளர்கள் மற்றும் உயர் குடியினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே ஆங்கிலக்

கல்வியை வழங்குவது உகந்தது என்பது ஆட்சியாளரின் கருத்தாக இருந்தது. இதனால் கல்வி அறிவானது வடிந்து செல்லும் என்ற கொள்கையில் நம்பிக்கையுடையவராக இருந்தனர். எனவே ''யாவருக்கும் சமகல்வி'' எனும் கொள்கை உருவாக இலங்கை மக்கள் 20ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை காத்திருக்க வேண்டி இருந்தது. ஆங்கில ஆட்சியாளர்கள் ஒரு சிலருக்கு உயர்ந்த ஆங்கிலக் கல்வி, சாதாரண மக்களுக்கு சுய மொழிகளில் ஆரம்ப கல்வி என்ற கொள்கையை தமது ஆட்சிக்காலம் முழுவதும் பின்பற்றினர்.

கோல்புறூக் குழுவினரின் (1831) கல்வி ஆலோசனைகளுக்கு அமைவாகக் கற்பித்தல் மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும் என்றும் சுயமொழி ஆரம்பப் பாடசாலைகளை மூடிவிட்டு அதற்குப் பதிலாக ஆரம்பம் தொடக்கம் ஆங்கிலம் கற்பிக்கும் பாடசாலைகள் நிறுவப்பட வேண்டும் என்றும் ஆங்கிலக் கல்வியின் முன்னேற்றத்திற்கு ஓர் ஆங்கிலக் கல்லூரி நிறுவப்பட வேண்டும் என்றும் ஆங்கிலம் படித்த இளைஞர்களை அரச மொழிகளில் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். என்றும் கூறப்பட்டது. இதற்கு அமைவாக சுதேசமொழிகளைப் புறக்கணித்து ஆங்கிலம் கற்பித்தல் மொழியாக உபயோகிக்கப்பட்டது. மேலும் 1836ல் ஆங்கிலம் கற்பிப்பதற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு நிறுவனமாகக் கொழும்பு அக்கடமி மாற்றப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும். தொடர்ந்து இவருடைய ஊக்கு விப்பால் ஆங்கில பாடசாலைகள் வளர்ச்சியடையத் தொடங்கின. சுயமொழிப் பாடசாலைகளும், ஆங்கிலப் பாடசாலைகளும் இக்காலத்தில் காணப்பட்டன. கிறீஸ்தவ மிசனறிகளால் உருவாக் கப்பட்ட பாடசாலைகள் மிகவும் சிறப்பாக இயங்கியதால் பலர் ஆங்கிலக் கல்வியைக் கற்பதில் நாட்டம் காட்டினர். 1901ம் ஆண்டில் பொன்னம்பலம் அருணாசலமுடைய குடிசன மதிப்பீட்டு அறிக்கையில் ஆங்கில மொழி முறையாகக் கற்பிக்கப்படாததின் விளைவாக அதனை 10 ஆண்டு காலமாகக் கற்றவர்கள் கூட இலக்கணப் பிழையின்றி எழுத பேச முடியாமல் இருந்தனர்.

1943ம் ஆண்டு கன்னங்கரா குழுவின் அறிக்கையில் இருவேறுபட்ட மொழிக் கொள்கை யின் குறைபாடுகள் எடுத்துக் கூறப்பட்டன. பறங்கியரைத் தவிர்ந்த ஏனையோருக்குத் தமது தாய்மொழி பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்றும் பரிந்துரைக்கப்பட்டது. இவ்வா றாகக் கன்னங்கரா காலம் தொடக்கம் படிப்படியாகப் பாடசாலைக் கல்வியிலும் பின்னர் பல்கலைக்கழகக் கல்வி நிலையிலும் ஏற்பட்ட பயிற்று மொழி மாற்றம் வெறுமனே ஒரு கல்விச் சீர்திருத்தமன்றி ஒரு சமுதாய சீர்திருத்தாமாகவும் விளங்கியது. 1950 ம் ஆண்டுகளில் பாடசாலை சென்ற 10 வீதமான மாணவர்கள் பாதிப்புக் குள்ளாகினர். 1946 ல் 365 ஆங்கில பாடசா லைகளில் 116,000 மாணவர்கள் கல்வி பயின்றனர். அதே வேளையில் 4,440 சுய மொழிப் பாடசா லைகளில் 750,000 மாணவர்கள் கல்வி பயின்றனர். படிப்படியாக உயர்தரக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி என்பனவும் இப் பயிற்று மொழி மாற்றத்தை உள்வாங்க வேண்டிய நிலை உருவாகியது.

உலகமயமாக்கத்தின் விளைவாகச் சர்வதேச உறவுகள், கைத்தொழில் வர்த்தகம், தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு உலகளாவிய ரீதியில் பன்மடங்காகப் பெருகிவரும் அறிவுத் தொகுதி அனைத்தும் ஆங்கிலத்திலிருக்கும் நிலைமை சர்வதேச தொழிற்சந்தையில் எமது இளைஞர்கள் பிறநாட்டு இளைஞர்களுடன். சமமாகப் போட்டியிடுவதற்கு ஆங்கில மொழித் தேர்ச்சியின் அவசியம் உணரப்பட்டது. உயர்கல்வி நிலையில் மருத்துவம் பொறியியல், முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் ஆங்கிலம் பயன்படுத்த ப்பட்டு மொழித் தேவை ஓரளவுக்குப் பூர்த்தி செய்யப்பட்டது. இது போன்று வலுவான காரணங்களால் (பல்தேசிய கம்பனிகளின் வருகை) இளைஞர்கள் மத்தியில் துரிதமாக ஆங்கில மொழித் தேர்ச்சியை ஏற்படுத்த ஆங்கில மொழிக் கல்வியை ஒரு கொள்கைத் தெரிவாக அரசு முன்வைத்தது. நாட்டின் வளர்ச்சி பெற்ற பாடசாலைகளில் ஆங்கிலம் சிறப்பாகக்

கற்பிக்கப்பட்டு வந்தது. கணிசமான இளைஞர்கள் ஆங்கில மொழி பேசும் நாடுகளில் கல்வி பயின்று வருகின்றனர். இந்த நிலையில் அரசாங்க பாடசாலைகளில் சுய மொழியில் கல்வி பயில்வோர் ஆங்கில மொழி வழியில் கல்வி பயின்ற மாணவர் களுடன் போட்டியிட முடியாத ஒரு பாதகமான நிலை உருவாகியிருந்ததை அரசாங்கம் உணர்ந்து கொண்டது. இதனால் வசதி மிக்கவர்களுக்குக் கிடைக்கும் ஆங்கிலக் கல்வி அரசாங்கப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படல் வேண்டும் என்ற நியாயத்தன்மையை வலுப்படுத்தினர்.

**ஆங்கில பாடத்தை**

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்பிக்கும் முயற்சிகளில் காட்டப்பட்ட அலட்சியமும் அக்கறையின்மையும் ஆங்கில மொழி கற்பித்தலில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியது. இப் பின்புலத்தில் ஒரு துரித நடவடிக்கையாகவே ஆங்கில மொழி வழிக்கல்வி ஒரு தெளிவாகப் பரிந்துரைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக் கொள்கையால் இன்று பின்தங்கிய கிராமப் புறங்களிலும் கூட சில பாடசாலைகள் ஆங்கில மொழி வழிக் கல்வியைப் பல இடையூறுகளுக்கு மத்தியிலும் அறிமுகம் செய்து வருகின்றன. இன்றைய நிலைமைகளில் ஆங்கிலத்தின் தேவை அதன் முக்கியத்துவம் என்பன பற்றி மாற்றுக் கருத்துக்குப் பொதுவாக இடமில்லை என்றே கூற வேண்டும். பூகோளக் கிராமம் என்ற கோட்பாட்டினால் பாரதூரமான இடர்களை எதிர் கொண்டுள்ள எமது சந்ததி யினரை அதிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்பிப்பது தேசியத் தேவையாக இருக்கின்றது. இலங்கையில் சகல குழந்தைகளும் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக்க எதிர்வரும் 10 ஆண்டுகளுள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. சுருங்கக் கூறின் இன்று ஆங்கில மொழித் தேர்ச்சியை எதிர்ப்போர் எவரும் இல்லை எனலாம்.

முதலில் இக்கொள்கை மாற்றத்தின் அடிப்படை நோக்கு பல்வேறு பாடசாலைப் பாடங்களை ஆங்கில மொழி வழியில் கற்பிப்பதால் மாணவர்கள் அம்மொழியில் உயர்ந்த தேர்ச்சிகளைப் பெற்று விடுவர் என்பதாகும். இக்கொள்கைக்கான அடிப்படையானதொரு எடுகோளாகவும் இதனைக் கொள்ள முடியும். இத்தகைய கொள்கை மாற்றம் 1997ல் அறிமுகம் செய்யப்பட்ட ஏனைய கல்விச் சீர்திருத்தங்கள் போன்றதன்று. கடந்தகாலக் கல்வி ஆணைக்குழுக்கள் போலன்றி 1991ல் நிறுவப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழு தனது பல்வேறு சீர்திருத்த ஆலோசனைகளைப் பல புதிய ஆய்வுகளின் அடிப்படையிலே செய்திருந்தது. 1999ம் ஆண்டு தொடக்கம் இவ் ஆணைக்குழு கல்வி வாய்ப்புக்கள், பாட ஏற்பாடு, ஆசிரியர் கல்வி, கல்வி முகாமைத்துவம் தொடர்பான ஏராள ஆய்வுகளைச் செய்தது. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலேயே அதன் முன்மொழிவுகளும் அமைந்தன. ஆனால் ஆங்கில மொழிவழிக் கல்வி பற்றிய புதிய கொள்கை எதுவித ஆய்வு அடிப்படை களைக் கொண்டதாக இருக்கவில்லை. பாடசாலை யில் ஆங்கில பாடம் பற்றிய சில ஆய்வுகள் ஆணைக்குழுவால் செய்யப்பட்ட போதிலும் பயிற்று மொழி பற்றிக் குறிப்பான ஆய்வுகள் செய்யப் பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 2000ம் ஆண்டில் கல்வியமைச்சின் அறிவுறுத்த ல்களுக்கு அமையச் சில பாடசாலைகளில் இப்பயிற்று மொழி மாற்றம் நிகழ்ந்ததே அன்றி இது ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு கொள்கை மாற்றம் அல்ல.

2003ம் ஆண்டின் ஆணைக்குழுவின் அறிக்கை இத்தகைய புதிய கொள்கை தவிர்க்க முடியாத வகையில் நகர்ப் புறங்களில் உள்ள பெரிய பாடசாலைகளுக்குச் சாதகமானது என்றும் எடுத்துக் காட்டியது. குடியேற்ற ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்று சலுகை பெற்ற வகுப்பினர் மேலும் வலுப் பெற நேரிடும் என்றும் நாட்டில் ஏற்கனவே காணப்படுகின்ற சமூக – பொருளாதார வேறுபடுத்தல்கள் மேலும் தீவிரமடைய நேரிடும்

என்றும் இக்கொள்கையை மாற்றும் போது ஆங்கில அறிவைப் பெற்றுக் கொள்வதில் நியாயத்தன்மை இருத்தல் வேண்டும் என்ற கருத்து அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. நாட்டின் சில பாடசாலைகளில் முதலாம் தரத்திலும் ஆங்கிலம் பயிற்றுமொழியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளதைக் கருத்திற் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழு, அரசாங்கப் பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி நிலையில் சிங்களம், தமிழ் பயிற்று மொழியாதல் வேண்டும். ஆங்கில மொழிக் கல்வி ஆரம்ப நிலையில் இடம்பெறல் வேண்டும், மூன்றாம் தரத்தில் இருந்து முறையாக ஆங்கிலம் கற்பிக்கப்படுதல் வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இடைநிலைக் கல்வி நிலையில் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பப் பாடம், கணினியறிவு, சமூக அறிவியல் போன்ற பாடங்களைக் கற்பிக்க ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டு இரு மொழிக் கல்வி (Bilingualism) மேம்படுத்தப்படலாம் என்ற ஒரு பரிந்துரையையும் தேசியக் கல்வி ஆணைக்குழு செய்துள்ளது. இப் பாடங்கள் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படலாம் என்பதையே தேசிய கல்வி ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. எவ்வாறாயினும் இடைநிலையில் பயிற்று மொழி பற்றிய திட்ட வட்டமான ஒரு பரிந்துரையைச் செய்யாது ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாக ஏற்கும் உளப்பாங்கை ஆணைக்குழுவின் மயக்கமான பரிந்துரைகளில் காணமுடியும். அதன் பரிந்துரையின்படி பாடசாலைகளில் மாணவர்கள் சில பாடங்களை ஆங்கில மொழியிலும் வேறு சில பாடங்களைச் சுயமொழியிலும் படிக்கும் நிலை ஏற்படும். அதாவது ஒரு மாணவன் ஒரே வேளையில் இரண்டு மொழிகளைப் பயிற்று மொழியாக மேற்கொள்ள வேண்டியேற்படும். பயிற்று மொழியாகக் கொள்ளப்பட வேண்டியது ஆங்கிலமா அல்லது தாய்மொழியா என்ற கேள்விக்கு நேரடியான பதிலைத் தர ஆணைக்குழுவால் முடியவில்லை என்பதோடு பயிற்று மொழி தொடர் பாக விவாதிக்கும் பல்வேறு தரப்பினரை திருப்திப்படுத்தும் முறையிலேயே ஆணைக் குழுவின் இறுதியான பரிந்துரை அமைந்துள்ளது.

இக்காலத்தில் ஆங்கிலம் வர்த்தக கைத் தொழில் துறையில் நிருவாக மொழியாகப் பயன்படத் தொடங்கியது. இராஜதந்திரத்துறை மற்றும் உலகளாவிய தொடர்புகளில் அம்மொழி விரிவாகப் பயன்படத் தொடங்கியது. கணினி, இணையம், மின்னஞ்சல் என்பன ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்தின. புதிய நூற்றாண்டு அறிவு மைய நூற்றாண்டு, தகவல் மைய நூற்றாண்டு என வர்ணிக்கப்பட்டு அறிவு வெள்ளம் பிரவாகம் எடுத்து ஓடுகின்ற ஒரு நூற்றாண்டாக மாற்றம் பெற்றது. ஐம்பது ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அறிவுத் தொகுதிக்குச் சமமான அறிவுத் தொகுதி ஐந்து ஆண்டுகளில் உருவாகும். இரு ஆண்டுகளுக்கும் ஒரு முறை அறிவுத் தொகுதி இரட்டிப்பாகும் நிலை உருவாகியுள்ளது. இத்தகைய மாற்றங்களில் ஆங்கில மொழி பிரதான இடத்தை வகிக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் ஆங்கிலம் பேசாத ஐரோப்பிய நாடுகளில் கூட ஆங்கில மொழியின் முக்கியத்துவம் வெகுவாக உணரப்பட்டுள்ளது.

இலங்கையில் வளர்ச்சி பெற்ற தனியார்துறை நிறுவனங்களும் பன்னாட்டு நிறுவனங்களும் வழங்கிய வேலைவாய்ப்புக்கள் அரசாங்கத் துறையில் காணப்பட்ட வேலை வாய்ப்புக்களை விட அதிகமானவையாகக் காணப்பட்டன. அரசாங்கத் துறை வேலை வாய்ப்புக்கள் 1994 தொடக்கம் 16.4 % எட்டின. 35% மான வேலை வாய்ப்புக்கள் தனியார் துறையிலையே இருப்பதாகவும் கண்டறியப்பட்டது. தனியார் துறையினரும் ஆங்கில மொழியறிவினை ஒரு முக்கிய நிபந்தனையாக எடுத்துக் கூறத் தொடங்கின வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமன்றி உலகமயமாக்கப் போக்குகளுடன் இலங்கை தன்னை இணைத்துக் கொள்வதற்கும் ஆங்கில மொழியறிவு ஒரு கட்டாய தேவையென உணரப்பட்டது.

இலங்கையில் சுயமொழிகள் பயிற்சி மொழி யாக அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் பாடசாலை நிலையில் ஆங்கிலம் ஒரு முக்கிய பாடமாகக்

கற்பிக்கப்பட்டு வந்தது. அரசாங்கப் பணியில் சேருவதற்கோ அல்லது பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதற்கோ ஆங்கில பாடத்தில் சித்தியெய்தி இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கவில்லை. பல்கலைக்கழகப் பட்டதாரிகள் அரசாங்கப் பணிகளை மட்டுமே நாடுவது என்பது வழமையாயிற்று. மறுபுறம் பாடசாலைகளில் ஆங்கில மொழியைத் திறம்படக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களினுடைய பற்றாக்குறை ஒரு முக்கிய கல்வித்துறைப் பிரச்சனையாக உருவாயிற்று. இந்நிலையில் மாணவர்களின் ஆங்கில தேர்ச்சி மட்டுமன்றி நாடளாவிய ரீதியில் ஆங்கிலத் தேர்ச்சி பெரிதும் பாதிப்புக்கு உள்ளாயிற்று. க. பொ. த. சாதாரணதர நிலையிலும் பின்னர் க. பொ. த உயர்நிலையிலும் மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் மிகக் குறைந்த சித்திகளையே பெற்றனர். ஆங்கில மொழியைப் பாடசாலையில் பல ஆண்டு காலம் கற்ற பின்னர் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 25 சதவீதமானவர்களே சித்திபெற முடிகிறது. அண்மைக் காலத்தில் க. பொ. த. உயர்தர வகுப்புக்களில் ஆங்கிலம் ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. க. பொ. த உயர்தர நிலைக்குரிய ஆங்கில பாடப் பரீட்சைக்கு அமர்ந்தவர்களில் 76 சதவீதமானவர்கள் அப்பாடத்தில் சித்திபெறத் தவறினர். (2002) இந்த விகிதாசாரம் அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழக அனுமதிக்கு ஆங்கில மொழிச் சித்தி கட்டாயம் இல்லை என்பதன் காரணமாகப் பல மாணவர்கள் இப் பரீட்சைக்கு அமர்வது இல்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. 13 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி இவ்வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களில் 33 சதவீதமானவர்கள் ஆங்கில மொழித் தேர்ச்சி அற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டது. இலங்கையில் ஆங்கில மொழிக்கல்வி உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் கூட நாட்டின் 10 சதவீதத்துக்கும் குறைந்தவர்களே ஆங்கில மொழித் தேர்ச்சியுடையவர்களாகக் காணப்பட்டனர். அக் காலத்தில் ஆங்கில மொழி யில் கற்றவர்கள் மத்தியிலும் ஆங்கிலத் தேர்ச்சி யைப் பொறுத்த வரையில் பல வேறுபாடுகளைக் காண முடிந்தது. என்பது ஆய்வாளர் கருத்து.

1990களின் இறுதியில் இவ்வாறான குறைந்த ஆங்கில மொழித் தேர்ச்சி பற்றி அரசாங்க மட்டத்தில் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டது. ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்பித்து அதன் ஊடாக ஆங்கில மொழித் தேர்ச்சியை ஏற்படுத்தும் கொள்கை தோல்வியடைந்ததாகக் கொள்கை வகுப்பாளர்கள் கண்டறிந்தனர். துரிதகதியில் ஆங்கில மொழித் தேர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தை அவர்கள் உணர்ந்தனர். இந்தியா போன்ற ஏனைய தென்னாசிய, தென் கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட ஆங்கிலத் தேர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையின் பின்தங்கிய நிலையும் உணரப்பட்டது. துரிதமாக வளர்ச்சி பெறத் தொடங்கிய தனியார் துறையினரும் பாடசாலை, பல்கலைக்கழக மாணவரின் ஆங்கில தேர்ச்சியை மேம்படுத்துமாறு கோரிக்கைகளை விடுக்கத் தொடங்கினர். இளைஞரின் வேலையின்மைப் பிரச்சனைக்கு ஒரு பிரதான காரணம் அவர்களு டைய ஆங்கிலமொழித் தேர்ச்சிக் குறைவு என்றும் எடுத்துக்காட்டப்பட்டது. மேலும் பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழக்க் கல்வி, என்பவற்றின் தராதரங்கள் பற்றிய ஆய்வுகள் ஆங்கில மொழித் தேர்ச்சிக்குறைவின் காரணமாக கல்வித் தராதரங்கள் வீழ்ச்சியுற்று இருப்பதாகவும் எடுத்துக் காட்டின.

ஆங்கில மொழியை அரசாங்கப் பாடசாலைகளிலும் பயிற்று மொழியாக்கும் ஒரு புதிய கொள்கை 2000 ஆம் ஆண்டில் வகுக்கப் பட்டது. 1997 ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளில் இக் கொள்கை எடுத்துக் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. இப்பரிந்துரைகளுக்கு அப்பால் 2000ம் ஆண்டில் பின்வரும் கொள்கை முன் மொழியப்பட்டது.

1). க. பொ. த உ/த வகுப்புக்களில் விஞ்ஞான பாடங்களைப் பயிலும் மாணவர்கள் ஆங்கில மொழியில் பயில்வதற்கான விருப்புத்தெரிவு வழங்கப்பட்டது.

2). ஆனால் 6ம் தரத்தில் இருந்து சில தெரிவு செய்யப்பட்ட பாடங்களை ஆங்கில மொழியில் கற்க அனுமதி வழங்கப்பட்டது. (கணிதம், விஞ்ஞானம், சுற்றாடல் கல்வி, சுகாதாரக் கல்வி, உடற்கல்வி)

3). 2003 மார்கழியில் தேசிய கல்வி ஆணைக் குழுவால் வெளியிடப்பட்ட மனித விருத்திக் கான கல்வி பற்றிய புதிய தொலைநோக்கு என்ற அறிக்கையின்படி அமைச்சரவையின் ஒப்புதலின்றி முதலாம் தரத்திலிருந்து ஆங்கில மொழியைப் போதனா மொழியாகக் கொள்ளலாம் என்றதொரு கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்ட கொள்கையொன்று முன்வைக்கப்பட்டது.

இத்தகைய கொள்கை பல குழப்பங்களுக்கு இடமளித்ததாகவும் நீண்டகாலக் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியைப் பொறுத்த வரையில் இது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டிய ஒரு விடயம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தேசிய ஆணைக்குழுவின் 2003 மார்கழி மாத அறிக்கையானது இலங்கையில் ஆங்கிலக்கல்வி பற்றிய சில பரிந்துரைகளைச் செய்துள்ளது.

1). ஆரம்பக் கல்வி நிலையில் 1–5 வரையுள்ள தரங்களில் வாய்மொழி ஆங்கில நிகழ்ச்சித் திட்டம் வலுப்படுத்தப்படல் வேண்டும் என்றும் இதனை நடைமுறைப்படுத்தச் சகல பாடசா லைகளிலும் ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படல் வேண்டும் என்றும் ஆங்கில மொழித் திறன்களை விருத்தி செய்வதற்குக் கட்புல செவிப்புல சாதனங்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது. ஆரம்ப நிலைக் கல்வியில் ஆங்கில மொழியை பயிற்று மொழியாக்குவது பற்றிய பரிந்துரைகள் எவற்றையும் செய்யவில்லை.

2). கனிஷ்ட இடைநிலைக் கல்வியைப் பொறுத்த வரையில் ஏற்கனவே ஆங்கில மொழிவழிக் கல்வி சில பாடங்களைப் பொறுத்த வரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பொழுது ஐந்தாண்டு காலப்பகுதியில் (2004–2005) இக்கொள்கை சகல பாடசாலைகளுக்கும் விரிவு செய்யப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. அதாவது தொழில் நுட்பம், சமூக விஞ்ஞான ங்கள், சுற்றாடல் ஆகிய பாடங்களைப் பாடசாலைகள் விரும்பினால் கனிஷ்ட இடைநிலையில் (தரங்கள் 6–9) மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் கற்பிக் கலாம். விரிவு செய்வதை ஆதரிக்கும் முறை யில் தனது பரிந்துரையைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

3). க. பொ. த. சாதாரணதர வகுப்புக்களைப் பொறுத்தவரையில் சில பாடங்களைச் சுய மொழியிலும் மேலே குறிப்பிட்ட பாடங்களை ஆங்கிலத்திலும் கற்பிக்கும் இரு மொழிக் கொள்கை தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படுதல் வேண்டும் என்பதும் ஒரு பரிந்துரையாகும்.

4). க. பொ. த உயர்தர வகுப்புகளில் விஞ்ஞான பாடங்களையும் கணிதத்தையும் ஆங்கில மொழிவழியில் கற்பிக்கும் கொள்கையை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தி வருகின்றது. பொதுப் பரீட்சையின் போது மாணவர் தெரிவு செய்யும் மொழியில் விடையளிக்க வாய்ப்புண்டு. ஆனால் நடைமுறையில் சில மாவட்டங்களில் எப் பாடசாலையும் விஞ்ஞான பாடங்களை ஆங்கில மொழியில் கற்பிக்க முன் வரவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையானது ஒவ் வொரு கோட்டத்திலும் ஒரு பாடசாலையி லாவது இத்தரங்களில் ஆங்கில மொழியில் விஞ்ஞான பாடங்களைக் கற்பிக்கும் ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். கல்வித்துறையின் நியாயத்தன்மையை நிலைநாட்ட இத்தகைய ஏற்பாடு அவசியம் என்று பரிந்துரை செய்தது.

யாழ் மாவட்டத்தில் 2002ம் ஆண்டு சென்பற்றிக்ஸ் கல்லூரியும், யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆகிய இரண்டும் முதன்முதலில் ஆங்கில மொழி மூலம் கல்வியைப் போதிப்பதற்காக செயற்றிட்டத்தை ஆரம்பித்துத் தற்போது 13 பாடசாலைகள் ஆங்கில மொழிமூலம் கல்வியைப் போதிக்கும் பாடசாலையாக யாழ் மாவட்டத்தில் யாழ் வலயத்தில் காணப்படுகின்றன. இதனை விட வலிகாம வலயத்தில் 8 பாடசாலைகளும், மானிப்பாயில் சர்வதேச ஆங்கில பாடசாலையும் இதனை விடத் தென்மராட்சி, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் ஒரு சில பாடசாலைகளிலும் ஆங்கில மொழி ஊடாகக் கற்பிக்கப்படுகின்றன.

மாணவர்கள் ஆங்கிலமொழி மூலம் கற்பித்தலை மேற்கொண்ட பொழுதிலும் க. பொ.த. சாதாரண தரப் பரீட்சை வரை மிகவும் துணிச்சலுடன் ஏறத்தாழ 50% மாணவர்கள் சிறப்புத் தரங்களைப் பெற்று வருகின்றனர். அரசாங்கத்தினால் நடாத்தப்படும் க. பொ. த இறுதிப் பரீட்சையிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். ஆனாலும் அவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலமொழி மூலம் கற்பதற்குச் சிறிதளவு தயக்கம் காட்டுகின்றனர். இதனால் உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மொழிக் கற்பித்தலில் பாரிய வீழ்ச்சி ஏற்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளிலும், வடமராட்சியில் சிறப்பாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையிலும் உயர்தர பரீட்சைக்கான ஆங்கில மொழிமூலக் கற்பித்தல் நடைபெற்று வருகின்றது. தனியார் கல்வி நிறுவனங்களிலும் விசேடமாகத் தரம்மிக்க ஆசிரியர்களினால் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் நடைபெறுகின்றது. வடமராட்சியில் பிரபல்யமான பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் ஆங்கில மொழிக் கற்பித்தல் இல்லாது இருப்பது பாடசாலைகளின் பெருமையினைச் சற்றுக் குறைவாக மதிப்பிடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆங்கிலத்தில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் இருந்தாலும் மாணவர்களுடைய உற்சாகமின்மையே மறைமுக காரணமாக அமைகின்றது. ஆங்கிலத்தில் கல்வி கற்பதில் பெண்பிள்ளைகளின் நாட்டம் அதிகரித்துக் காணப்படுவது வடமராட்சிப் பிரதேசத்தில் மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையில் 10 பிள்ளைகள் ஆங்கில மொழியில் கற்பதன் மூலம் உணரக் கூடியதாக இருக்கின்றது.


இன்று பல்கலைக்கழகத்தில் கலைத்துறை தவிர்ந்த ஏனைய பீடங்கள் யாவும் ஆங்கில மொழி மூலம் கற்கை நெறிகளை மேற்கொண்டு வருகின்றன. 1998ம் ஆண்டு முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் உருவாக்கப்பட்ட போது முதல் முறையாகச் சகல மாணவர்களுக்கும் ஆங்கில மொழி போதனா மொழியாகக் கொண்டுவரப்பட்டது. நான் பீடாதிபதியாக இருந்த பொழுது பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஆங்கில மொழியினைப் போதனா மொழியாக நடைமுறைப்படுத்தினேன். இதன் விளைவினை ஒரு சில வருடங்களில் மாணவர்களும் உணர்ந்து மிகவும் சிறப்பாக ஆங்கிலக் கல்வியின் சவால்களை எதிர்கொண்டனர். இதன் விளைவாக இன்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் தொழில் வாய்ப்பினையும் உயர்கல்வியினையும் மேற்கொண்டு வருகின்றனர். எமது பல்கலைக்கழகம் இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு ஆங்கில மொழிமூலக் கற்பித்தலுக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது என்பதையிட்டுப் பெருமைப் படுகின்றோம். கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனதும் ஆளுமையினதும் ஒரு மாற்றத்தை எம்மால் உணரக்கூடியதாக இருந்தது.

இரு மொழிக் கொள்கையை (Bilingual Method) நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாணவர்களுக்கு மொழி ரீதியான நம்பிக்கையை நாம் வலுப்படுத்த முடியும். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு கற்பித்தலில் இரு மொழி முறையை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டிருக்கின்றோம். ஆகையால் இன்றைய கால கட்டத்தில் இரு மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

# நான் படித்த வேலாயுதம் பள்ளிக்கூடம்: அரை நூற்றாண்டுக்கு முன்

- கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை

*முன்னாள் தமிழ்ப் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*



**நா**ன் மாணவனாக இருந்த காலத்தில் இந்த மகாவித்தியாலயம் வேலாயுதம் பள்ளிக்கூடம் என்றே பொதுவாக வழங்கப்பட்டது. இதன் பதிவுப்பெயர் புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை என்றிருந்தது. எனது பாடசாலைக் கல்வி பெரும்பாலும் இப்பாடசாலையிலேயே இடம்பெற்றது. புலோலி தெற்கிலுள்ள புற்றளைப் பாடசாலையில் என்னுடைய ஆரம்பக் கல்வி (1941 – 44) இடம்பெற்றது. அந்தக் காலத்தில் மிகப்பெரிய பாடசாலைகளாக விளங்கியவை கிறீஸ்தவ மிசனரிமாரினால் நடத்தப்பட்டவை. அவற்றுக்கு நிறைய வளங்கள் இருந்தன. சைவப் பாடசாலைகள் முதலிய பிறசமயப் பாடசாலைகள் சமயப் பற்றாளர்களின் ஆர்வமிகுதியால் ஆரம்பிக்கப்பட்டு முன்னிலை வகித்துவந்த மிசனரிப் பாடசாலைகளோடு போட்டியிட வேண்டிய நிலையிலிருந்தன. நான் மாணவனாக இருந்த காலத்திலே வேலாயுதம் பள்ளிக்கூடம் வளர்ச்சியடைய வேண்டிய நிலையிலிருந்தது. பல்கலைக்கழகப் புதுமுகத் தேர்வுக்கு வேண்டிய வகுப்புகள் இங்கு இருக்கவில்லை. அதனால் நான் இரண்டு ஆண்டுகள் (1953 – 54) ஹாட்லிக் கல்லூரிக்குப் போகவேண்டியிருந்தது. என்னுடைய பதினான்கு ஆண்டு பாடசாலைக் கல்வியில் எட்டாண்டுகள் இங்கேயே நிகழ்ந்தன. பிற்காலத்தில் என்னுடைய வாழ்வில் ஏற்பட்ட முன்னேற்றத்துக்கும் சிறப்புக்கும் என்னைத் தயார்ப்படுத்தியதில் வேலாயுதம் பள்ளிக்கூடத்தின் பங்கு அபாரமானது.

நான் வேலாயுதம் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது இது மாதாமாதம் பணம் கட்டிப் படிக்கும் இடமாகும். மாதாமாதம் இரண்டு ரூபாப் பணம் கட்டியது ஞாபகம். ஆனால் இலவசக் கல்வி வந்து கொண்டிருந்தது என்பது தெரிந்திருந்தது. புற்றளையில் வெவ்வேறு வகுப்புகளில் தமிழ் மொழி மூலம் கற்றவர்கள் இங்கே ஆங்கில மொழி மூலம் கற்பதற்காக வந்தார்கள். யாவரும் ஒரே வகுப்பில் முதலாம் வகுப்பில் அனுமதிக்கப்பட்டார்கள். அந்த ஆண்டு வகுப்புத் தொடங்கி இரண்டு மாதம் பிந்தியே நான் வந்து சேர்ந்தேன். அப்போது எனக்கு ஆங்கில அறிவு கொஞ்சமும் இருக்கவில்லை. வகுப்பிலிருந்த மாணவர்கள் பலர் பல்வேறு வழிகளில் ஓரளவு ஆங்கில அறிவு பெற்றவர்களாகக் காணப்பட்டனர் இவை யாவற்றையும் நான் இங்கே எடுத்துக்கூறக் காரணம் வேலாயுதம் பள்ளிக்கூட ஆங்கிலமொழி மூலக்கல்வி,தொடக்கத்தில் எனக்குச் சிரமமாகவே காணப்பட்டது.

தமிழ் இந்து மாணவர்கள் தங்களுக்கு ஏற்புடைய சூழலில் கல்விபயில வேண்டும் என்ற உயரிய நோக்கில் அமைக்கப்பட்ட பாடசாலைகளிலே எனக்குப் பன்னிரண்டு ஆண்டுகள் பயிலக் கிடைத்தது என்னுடைய பாக்கியம் என்றே கருதுகிறேன். என்னுடைய வீட்டிலும் ஊரிலும் பின்பற்றப்பட்ட சமய அனுட்டானங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் என் பாடசாலைகளில் எத்தகைய முரண்பாடுகளும் இருக்கவில்லை. தமிழ்ப்பற்றும் இந்துசமயப் பற்றும் உள்ளத்தில் ஊறி ஆர்வமாக வளர்ந்துவந்தன. வேலாயுதம் பாடசாலையில் இறுதி ஆண்டுகளில் என்னை ஊக்கப்படுத்தி முன்னேற்றியவர்களுள் ஒருவராகப்

பண்டிதர் கனகசபாபதி அவர்களை நினைவுகூருகிறேன். சிறுவயதிலிருந்து எனக்குப் புவியியல் துறையில் நல்ல விருப்பம் இருந்தது. உலகநாதபிள்ளை என்னுடைய ஆசிரியராக இருந்தார். 1949ஆம் ஆண்டு பாடசாலைப் பொன்விழாக் கொண்டாடியபோது இப்பாடத்துக்குப் பரிசு பெற்றது நினைவுவருகிறது. வேலாயுதம் பாடசாலையில் அந்தக் காலத்தில் அந்த ஒரு விழாவில் மட்டுமே மாணவர்களுக்குப் புலமைக்குப் பரிசு வழங்குதல் நிகழ்ந்தது. புவியியலைத் தொடர்ந்து படிப்பதற்கு ஆசிரியர் கிடைக்க வில்லை. வரலாறு எனக்கு விருப்பமான துறையானது. பொன்விழாவுக்குப் பின் பாடசாலை துரித வளர்ச்சி கண்டது. பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் புதிதாக இணைந்தனர். எட்டாவது ஆண்டுப் பரீட்சை வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்டது. அதன்பின்பு இரண்டாண்டு எஸ். எஸ். சி வகுப்பும் தொடங்கியது. இரண்டு பரீட்சைகளிலும் வரலாற்றில் அதியுயர் சித்தி பெற்றேன். பாடசாலை அதிபர் இராமநாதபிள்ளை வரலாற்றுத் துறையில் ஆர்வம் உண்டாக உதவியதை நினைவுகூருகிறேன்.

எட்டாண்டுகள் கற்கும் போது ஒவ் வோராண்டும் வெவ்வேறு பாடங்களை வெவ்வேறு ஆசிரியரிடம் கற்றிருக்கிறேன். என்னை ஊக்கப்படுத்தியவர்கள், என்னுடைய தன்னம்பிக் கையை வளர்த்தவர்கள், என்னுடைய உள்ளத்திலே செல்வாக்குச் செலுத்தியவர்கள் என்று நான் கருதும் சிலரின் பெயர்களை மட்டும் குறிப்பிடுகிறேன். இந்தியாவிலிருந்து வந்தவர் களான இராசகோபால் ஐயங்கார், இராமகிருஸ்ண பணிக்கர் என்ற இருவரும் முக்கியமானவர்கள். முன்னையவர் ஆங்கில மொழியில் எனக்குத் தன்னம்பிக்கையை ஏற்படுத்தினார். விஞ்ஞான ஆசிரியரான பின்னையவர் தந்த ஊக்கம் நான் கலைத்துறையை நாடிய பின்பும் உதவிவந்தது. ஆங்கில ஆசிரியர் சிவபாதம்,தமிழ் ஆசிரியர் நாராயணபிள்ளை, எண்கணித ஆசிரியர் ஆறுமுகம் முதலியோரையும் நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

பாடசாலைத் தாபகரின் மகன் அருணாசலம் முகாமையாளராக விளங்கிப் பாடசாலையின் ஒழுங்கமைதியிலும் வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயற்பட்டு வந்தார். இரசாயனவியல், தாவரவியல் என்னும் விஞ்ஞானப் பாடங்கள் கற்பிக்கப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். இரசாயன ஆய்வு கூடம் நிறுவப்பட்டது. வேலாயுதம் பாடசாலைப் படிப்போடு மாணவர்கள் சிலர் சில அரசாங்க உத்தியோகங்களுக்குப் போகவும் வேறு தொழில் களில் பிரகாசிக்கவும் வழி ஏற்பட்டது. உயர் கல்வியைத் தொடரவும் பல்கலைக்கழகம் செல்லவும் விரும்பிய மாணவர்களுக்கு என்னுடைய காலத்தில் வழி திறக்கவில்லை. இந்தியாவுக்குச் சென்று பட்டப்படிப்பைத் தொடருங்கள் என்பதே எங்களுக்குத் தரப்பட்ட அறிவுரை. சிலர் அவ்வாறு செய்தனர். வேறுசிலர் ஆரம்பம் முதலே வேறு கல்லூரிகளை நாடத்தொடங்கி விட்டனர். அவர்களில் பலர் ஹாட்லி கல்லூரியையே விரும்பிச் சென்று சேர்ந்தனர். நான் ஹாட்லிக்குப் போன ஆண்டுகூட என்னைவிட மேலும் மூன்று மாணவர்கள் அங்கே போனார்கள். பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்புச் சீராக இயங்காததால் வேலாயுதம் பாடசாலையின் சிறப்பும் வரலாறும் போதிய அளவு வெளிக்கொணரப்படாமல் மங்கிக் கிடக்கிறது. வெகுவிரைவில் அவை விளக்கமெய்தும் என்று எதிர்பார்க்கலாம். இந்த ஆண்டு மலர் விடிவெள்ளியாகப் பயன்படவேண்டும்.

பாடத்திட்டத்துக்கு வெளியான நடவடிக்கை கள் நான் படித்த காலத்திலேயே பாடசாலையிலே முக்கியத்துவம் பெறத்தொடங்கின. பாடசாலை யிலோ பாடசாலைக்கு அருகிலோ போதிய நிலவசதியின்மை பெருங்குறைபாடாக இருந்தது. பாடசாலை மாணவர்கள் தமிழக மூவேந்தர் நினைவாகச் சேர இல்லம், சோழ இல்லம், பாண்டிய இல்லம் என வகுக்கப்பட்டனர். குறுகிய பயிற்சிக்களரி விளையாட்டுகளான பாய்தல், குண்டெறிதல், ஈட்டியெறிதல் என்பனவே பாடசாலை முற்றத்திலே இடம்பெற்றன. ஓட்டப் போட்டிகள் யாவும் ஒருநாள் பிற்பகல் மட்டும் சிவன்கோவில் வீதியில் நடத்திமுடிக்கப்பட்டன. சில ஆண்டுகளுக்குள் ஓட்டப்பந்தயங்கள் ஒரு மைல் தூரத்திலுள்ள கும்பான்வெளிக்கு மாற்றப்பட்டன. இவற்றின் அடுத்த கட்ட வளர்ச்சியே விளையாட்டுப்

போட்டிகள் யாவற்றையும் கும்பான் வெளிக்கு மாற்றியமையாகும். தொடக்க ஆண்டுகளில் பாண்டிய இல்லமே முதல் இடத்தைப் பெற்றுவந்தது. என்னுடைய சோழ இல்லம் மூன்றாவது இடத்தைப் பெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறுவது எந்த இல்லம் என்பதைக் கூர்ந்து அவதானித்து வந்த நான் ஆர்வம் மிக்க பார்வையாளனாக மட்டுமே இருந்துள்ளேன்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கொஞ்சக் காலத்திற்கு முன்பே இந்துப் பண்பாடு ஒரு கற்கைநெறியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஹாட்லிக் கல்லூரிக்கு நான் போனபோது கலைப்பிரிவுக்கு வேண்டிய நான்கு பாடங்களுள் மூன்று, நான் முன்பே ஆர்வமாக இருந்த வரலாறோடும் தமிழோடும் தொடர்ச்சியானவை. பேராதனையில் இருந்த பல்கலைக்கழகத்தில் 1965இல் தமிழைச் சிறப்புப் பாடமாகவும் வரலாற்றைச் சிறப்புப் பாடமாகவும் கற்கத் தொடங்கினேன். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைக்கு அப்போது பேராசிரியராக இருந்தவர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை யாவர். அவர் வேலாயுதம் பாடசாலையினதும் ஹாட்லி கல்லூரியினதும் பழைய மாணவராவர். நீண்ட காலமாக வேலாயுதம் பாடசாலையில் உயர் வகுப்புகள் வசதியின்மையால் ஹாட்லி கல்லூரி முதலிய பிற கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுப்பி வந்திருக்கிறது போலத் தெரிகிறது. நுணுகி ஆராய்ந்தால் வேலாயுதம் பாடசாலையின் இத்தகைய பங்களிப்பு துலக்கமாகும். முதற்பிரிவில் சித்தியடைந்து பட்டதாரியானதும் 1959 ஆம் ஆண்டு தமிழ்த்துறையில் உதவி விரிவுரையாளராக நியமனம் பெற்றேன்.

ஐம்பது ஆண்டுகளாக 2009 ஆம் ஆண்டுவரையில் பல்கலைக்கழகங்களில் தமிழ் அல்லது சமயம் அல்லது அவையிரண்டும் கற்பித்து வந்துள்ளேன். எனக்கு முன்பு பிறநாடுகளில் தமிழ் ஆய்வுசெய்து கலாநிதிப்பட்டம் பெற்றவர்கள் சிலர் பல்கலைக்கழகத்தில் இருந்தனர். இலங்கையிலே கலாநிதி கணபதிப்பிள்ளை, கலாநிதி வித்தியானந்தன் முதலியோரின் ஆதரவோடு நான் தமிழ் ஆய்வு செய்து முதன்முதல் கலாநிதிப்பட்டம் பெறக்கூடியதாயிருந்தது. இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து இரண்டாவது கலாநிதிப் பட்டத்தையும் 1964 ஆம் ஆண்டிலேயே பெற்றுவிட்டேன். 1977 – 83 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராக விளங்கினேன். 1984 – 90 வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றினேன்.

1990 ஆம் ஆண்டு சுவீடன் உப்சாலாப் பல்கலைக்கழகத்தில் சமயவரலாற்றுத் துறையில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத்தில் காணப்படும் சமண பௌத்த மதக் கண்டனங்களை ஆராய்வதற்காகச் சென்றமை என்னுடைய தொழில்ரீதியில் ஒரு மாற்றம் ஏற்படக் காலாகியது. 1990 – 2000 வரை உப்சாலாவில் இந்துமதம் சமணம் பௌத்தம் முதலிய சமயங்களை முன்னிலைப்படுத்தி அவை சம்பந்தப்பட்ட தமிழ் இலக்கியங்களையும் சாசனங்களையும் ஆராய்ந்தும் கற்பித்தும் வந்தேன். 1996 ஆம் ஆண்டு உப்சாலா என்னுடைய பணிகளைப் பாராட்டி கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியது. 2000 – 09 வரை அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பணியாற்றக் கிடைத்தது. வேர்ஜினியாப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டுகள் தமிழ் விரிவுரையாளராக இருந்தேன். அப்போது இந்துமதமும் கற்பிக்கும் வாய்ப்புக் கிட்டியது. இறுதியாண்டுகளில் அரிசோனா மாநிலப் பல்கலைக்கழகத்தில் இந்துமதத்தைத் தனித்தும் சமணம் பௌத்தம் என்பவற்றோடு இணைத்தும் கற்பிக்கக் கூடியதாயிருந்தது. வேலாயுதம் பாடசாலை தந்த பலமான சைவத்தமிழ் அத்திவாரமே என்னை இயக்கி வந்திருக் கிறதென்று நான் நம்புகிறேன்.

இக்கட்டுரை வேலாயுதம் பாடசாலை என்னை ஆளாக்கியமையை எடுத்துகாட்டுமாற்றால் இப்பாடசாலையின் மாட்சி விளங்கித்தோன்ற உதவுமென்று கருதுகிறேன்.

# செ. கதிர்காமநாதனின் ‘வெறுஞ்சோற்றுக்கே வந்தது’ சில பார்வைகள்

- கலாநிதி செ. யோகராசா -
*(கிழக்குப் பல்கலைக்கழகம்)*

க. பொ. த உயர்தர வகுப்பில் தற்போது நடைமுறையிலுள்ள புதிய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறுகதைகளில் இதுவுமொன்று

‘வெறுஞ்சோற்றுக்கே வந்தது’ என்ற சிறுகதையின் ஆசிரியரான செ. கதிர்காமநாதன் (1942 – 1976) யாழ்ப்பாணத்திலுள்ள வடமராட்சிப் பிரிவு சார்ந்த கரணவாய் என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஈழத்தின் கவனத்திற்குரிய சிறுகதை எழுத்தாளரில் ஒருவரான இவரது சிறுகதைகள் ‘கொட்டும் பனி’ என்ற தொகுப்பாக (1968) நாவலுருப் பெற்றுள்ளது தவிர ‘மூவர் கதைகள்’, விண்ணும் மண்ணும், கலைப்பூங்கா முதலான தொகுப்புகளிலும் சில சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. 1959ல் சவலை என்ற முதற் சிறுகதையூடாக எழுத்துலகில் பிரவேசித்த இவர் நாவல் (கோடைநதி) மொழிப்பெயர்ப்பு நாவல் (உ+ம் கிருஸ்ண சந்தரின் நான் சாகமாட்டேன்) மொழிப் பெயர்ப்புச் சிறுகதைகள், விமர்சனக் கட்டுரைகள் சிலவற்றின் ஆசிரியர், வீரகேசரிப் பத்திரிகையில் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்து பின்னர் இலங்கை நிர்வாக சேவைத்துறை அதிகாரியாகப் பணிபுரிந்து இளம் வயதில் மரணத்தைத் தழுவிக் கொண்டவர்.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் நான்காவது காலகட்டமான அறுபதுகளிலே சிறுகதையுலகில் பிரவேசம் செய்தவர் செ. கதிர்காமநாதன். இக்காலப்பகுதி ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முக்கியமானதொரு காலப்பகுதியாகும். இக்காலத்தில் எழுத்துலகில் பிரவேசித்த எழுத்தாளர்களுள் ஒரு சாரார் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குப் பிரவேசித்துப் பட்டதாரி மாணவர்களாக வெளியேறி அதே வேளை அக்கல்விச் சூழலால் தமது எழுத்துக்களை வளம்படுத்திக் கொண்ட பெருமைக்குரியவர்கள் (உ+ம் : செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், மு. பொன்னம்பலம், அ.முத்துலிங்கம், பவானி ஆழ்வாப்பிள்ளை, துருவன், குறமகள், சிதம்பரப் பத்தினி) இவர்களுள் சிலர் (உ+ம் : செ. யோகநாதன்) முற்போக்கு எழுத்தாளராக முகிழ்த்தவர்கள். இத்தகையோர் வரிசையில் ஒருவரே செ. கதிர்காமநாதன்.

யாழ்ப்பாணக் கிராம வாழ்வின் அவலங்களையும் அற்ப சந்தோஷங்களையும் அபாரமாக வெளிப்படுத்தும் இவரது சிறுகதை களில் கணிசமானவை சுய அனுபவத்தின் வெளிப்பாடுகளாகவுள்ளன. கண்டு கேட்ட விடயங்களைக் கூடச் சொந்த அனுபவமாக வெளிக் கொணரும் உன்னத ஆற்றல் செ. கதிர்காம நாதனிடம் காணப்பட்டது. எனவேதான் கரணவாய்க் கிராமத்தில் தொடங்கிய அவரது கூரிய பார்வை வியட்னாம் கிராமம் வரை வியாபிக்க முடிந்தது. விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள் வேலைக்காரர்கள் முதலான ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரே அவரது கதாபாத்திரங்களாக உலாவினார்கள். குழந்தைகளை உயிருடன் நடமாடச் செய்வது அவருக்குக் கைவந்த கலையாகும்.

வெறும் சோற்றுக்கே வந்தது: வர்க்க வேறுபாட்டின் அடிப்படையிலே உருவாகின்ற சமூக ஏற்றத் தாழ்வுகளை வெளிப்படுத்துகின்ற சிறுகதைகளுள் முக்கியமானது. இவ்வாறான சிறுகதைகளுள் கணிசமானவை முதலாளி, தொழிலாளி ஆகியோர் சார்ந்ததாக அமைகின்றபோது இச்சிறுகதை வள்ளி என்ற ஏழை வேலைக்காரச் சிறுமியை முதன்மைப்படுத்தி ஏழை – பணக்காரர்களுக்கிடையிலான சமூக ஏற்றத் தாழ்வுகளை வெளிப்படுத்துவதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி, மேற்கூறிய நோக்கிலான சிறுகதைகளுள் பெரும்பாலானவை பிரச்சார வாடையுடனும் குறிப்பிட்ட வாய்ப்பாட்டு முறைமையினதும் செயற்கைப் பாங்குடனும் ஆசிரியரது குறுக்கீடுகளுடனும் எழுதப்படுகின்ற சூழலில் இச்சிறுகதை வாசகரது மனத்தைத் தொடுகின்ற விதத்திலும் கலையழகுடனும் எழுதப்பட்டிருப்பது கவனத்திற்குரியது. இச் சிறுகதையைப் பொறுத்தவரையில் அதன் எடுத்துரைப்பு முறையே அவற்றைச் சாத்திய மாக்கியுள்ளது எனலாம்.

கூர்ந்து நோக்கும் போது இச்சிறுகதையின் நகர்வு – எடுத்துரைப்பு முறை – வள்ளி என்ற பாத்திரத்தை முதன்மைப்படுத்தி அவளூடாகவே நடைபெறுகின்றது. வள்ளியின் பார்வை, அவளது கடந்தகால நினைவுகள் (பின்நோக்கு உத்தி) அவளது செயற்பாடுகள் ஊடாக அது நிறைவேறுகின்றது. (இதனால் மேற்கூறிய குறைபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாது போய்விடுகிறது)

வள்ளியின் பார்வையூடேதான் சிறுகதையின் ஆரம்பமே கதை நிகழ்களம்–விவரிக்கப்படுகின்றது.

“யன்னல்களைத் திறந்து விட்டால் வெளியே றோட்டுத் தெரிகிறது, நீண்ட அகலமான தார் ஊற்றப்பட்டு ஒப்புரவு செய்யப்பட்ட நேர்த்தியான றோட்டு அது. எந்த நேரமும் அந்த றோட்டுச் சுறுசுறுப்பாகக் காணப்படுகிறது. அடிக்கடி பஸ்களும் கார்களும் அங்குமிங்குமாக அலையெறிந்து கொண்டிருக்கும் மனித வெள்ளமுமாக அது நிரம்பி வழிந்து கொண்டி ருக்கிறது. ஒரு நாள் பூரா கண்ணாடி யன்னல்களைத் திறந்து வைத்துவிட்டு அவளது பார்வைக்கு எட்டக்கூடிய தூரத்திலேயுள்ள அந்த றோட்டிலே என்ன நடந்து கொண்டிருக்கிற தென்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது வள்ளிக்குப் பழக்கப்பட்டுவிட்டது”.

வள்ளியை முன்வைத்துத்தான் அவளது ஊர். குடும்பம் என்பன அறிமுகமாகின்றன. தொடர்ந்து வள்ளியினுடைய ஆசையின் கனவின் அபிலா ஷையின் முதல் அறிமுகம் இடம் பெறுகின்றது. கூடவே பழைய வாழ்க்கை பற்றியும் விவரிக்கப்படுகின்றது. அவளுக்கு அது எப்படி யான அதிஷ்டம் என்பது தெரியாது. தாயைக் கேட்டாள் அவளுக்கு மூன்று நேரமும் வேளா வேளைக்கு இறைச்சி, மீன், முட்டையோடு சாப்பாடு கிடைக்கப் போகிறதென்றும், விதம் விதமான சட்டைகளை அணியலாமென்றும், வசதியும் காற்றோட்டமும் நிறைந்த பெரியதொரு வீட்டிலே பொழுது கழியப்போகிறதென்றும், மகிழ்ச்சி நிரம்பிய முகத்தோடு தாய் கூறினாள். இறைச்சி, மீன், முட்டையென்றதும் வள்ளிக்குத் தலைகால் புரியவில்லை இத்தகைய சாப்பாடுகளை அவளது சொந்த வீட்டிலே எங்கே காணமுடிகிறது? சாம்பல், மொந்தன் வாழைக்காய்களை வெட்டி நறுக்கிப் பூசனிக் காய்களைப் பிளந்து துண்டுகளாக்கித் தினம் தினம் சமையல் நடக்கிறது சாப்பிட்டு நாவுக்கும் சலிப்புத் தட்டிவிட்டது. பூசனிக் காயையும் வாழைக்காயையும் கண்ட வள்ளிக்கும் ஒருவித வெறுப்பு வந்து விட்டது.

வள்ளியை முதன்மைப்படுத்திப் புதிய வாழ்க்கை பற்றி விவரிக்கின்ற போது பழைய வாழ்க்கை முறைப்

பற்றியும் ஒப்பிட்டுக் காட்டுவது சிறுகதைக்கான முடிவு நெருங்கும் வரை தொடர்கிறது. இதனூடாக வள்ளி என்ற பாத்திரத்தின் மனப்போராட்டமும் மன மாற்றமும் படிப்படியாக வளர்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்படுகிறது.

"சுவரின் ஒரு மூலையில் சாய்ந்து நின்ற வள்ளியின் குரல் திடீரெனத் தந்தையை நோக்கி எழுந்தது"

"ஏலாது! நான் வரப்போறன் இங்கே நிக்க மாட்டன்"

"ஏண்டி அங்கை வந்து வயிறு காய்ஞ்சு சாகப் போறியோ? தெய்வம் மாதிரி இந்த அம்மாவையும் ஐயாவையும் விட்டு விட்டு வாறனெண்டு சொல்ல உனக்கு என்ன பைத்தியமே?

முடியாது, நான் வரப்போறன்... காய்ஞ்சு செத்தாலும் சரி வருவேன்.

நில்லடி. என்னாகும் தெரியுமே?

நான் மாட்டன், வரத்தான் போறன்.

மகளை விலக்கி வெளியே செல்ல முற்பட்ட அவனை அவள் பின் தொடர்ந்தாள். ஐயாவும் அம்மாவும் செயலற்று நின்றனர். அவள் குரல் சீற்றமாக ஓங்கி ஒலித்தது.

"நான் மாட்டன், வரத்தான் போறன்"

மேற்கூறியவாறான எடுத்துரைப்பு முறையும் கதைப் பின்னல் பாங்கும் ஏழை – பணக்கார வர்க்க பேதங்களைத் திறம்பட வெளிப்படுத்த வாய்ப்பளிக்கின்றன!

இச் சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குண இயல்புகள் வர்க்க சுபாவத்திற்கேற்பவும் உளவியல் நோக்கிற்கு அமைவாகவும் யதார்த்தப் பாங்குடனும் வெளிப்படுகின்றன. முக்கிய பாத்திரங்களின் குணவியல்புகள் பின்வருமாறுள்ளன :

வள்ளியின் தாய் : குழந்தைகள் மீது பாசம் மிக்கவள், கணவனது கொடுமைக்குள்ளானாலும் கணவனை எதிர்க்க இயலாதவள், வறுமைக்கெதிராகப் போராடக் கூடியவள், அதிஷ்டத்தை நம்புபவள்.

வள்ளியின் தகப்பன்: குடும்பப் பொறுப்பை உணராதவன்; மனைவியைக் கொடுமைப்படுத்துபவன், எஜமானர்களைத் தெய்வமாக மதிப்பவன்; அப்பாவி, அதிஷ்டத்தை நம்புபவன்.

எஜமானி : சாதுர்யமாக வேலை வாங்கும் திறனுடையவள்; பேச்சாற்றல் கொண்டவள், அதிகாரம் செலுத்தும் ஆற்றலுடையவள்.

எஜமானன் : அதிகாரம் செலுத்தும் ஆற்றலுடையவர் ஆயினும், மனைவிக்கு அடங்கி நடப்பவர்.

வள்ளி : சிறுமிகளுக்குரிய கனவுகளும் ஆசைகளும் நிரம்பியவள். விளையாட்டுச் சுபாவமுடையவள், சுய சிந்தனையுடையவள். தன்மானம் மிக்கவள், அசாதாரண துணிவு கொண்டவள். பொதுவாகச் சிறுகதையைப் பொறுத்தவரையில் பாத்திரங்கள் வார்க்கப்படுவதில்லை, வளர்க்கப்படுகின்றன என்று கூறுவர். இத் தியாகப் பண்பு இச்சிறுகதையில் வரும் அனைத்துப் பாத்திரங்களுக்கும் பொருந்துகிறது. வள்ளியின் அப்பண்பு மிகச் சிறப்பாகத் துலங்குகிறது. இவ்விதத்தில் சிறுகதையின் முடிவாக முத்தாய்ப்பாக அமைந்துள்ளன வள்ளியின் கூற்று ஆழ்ந்த கவனிப்பிற்குரியது.

"நான் மாட்டன், வரத்தான் போறன்"

மேற்கூறிய வள்ளியின் முடிவை வள்ளியின் தந்தையினது மறுமொழியுடன் பொருத்திப் பார்க்கும் போதுதான் அதன் முக்கியத்துவம் நன்கு புலப்படும்.

"எனது தெய்வங்களே! இதெல்லாம் என்னத்துக்கு? மூன்று நேரம் சாப்பாடு குறையாமல் வள்ளியை உங்களது சொந்தப் பிள்ளை போலப் பாக்கிறியள். அதுக்கே நாங்கள்

சாகுமட்டும் ஊழியம் செய்ய வேண்டும். அவள் அதிர்ஷ்டம் செய்துதான் இங்கை வந்தவள். அவளை ஒருக்கா அவளது தாய் பார்க்க வேணும், கூட்டிக் கொண்டு வா எண்டு சொல்லி ஆசைப்பட்டவள்தான். ஆனா தாய்க்குத் தாயாய் என்ர அம்மா கவனிக்கைக்க, அவளை என்னத்துக்குக் கூட்டிக் கொண்டு போய்க் காட்ட வேணும்? அவளின் கை சம்பளத்தைத் தந்தால் போதும்... பிறகு ஆறுதலாக – தாய் பார்க்கட்டும்"

இவ்வாறு தந்தை கூறியதற்கு வள்ளி கூறிய முற்குறிப்பிட்ட பதிலானது தந்தை – மகள் தலைமுறை இடைவெளியைக் காட்டுகின்றது. எனவே தான் மூத்த தலைமுறை சார்ந்த தந்தையின் அடிபணிந்து போகும் நடத்தைக்கு மாறாக வள்ளியின் எதிர்ப்புக் குரல் புதிய தலைமுறையொன்றின் வரவிற்குக் கட்டியம் கூறுவது போன்று அமைகிறது!

எவ்வாறாயினும் பாத்திரங்களின் குண இயல்புகள் இவைதாம் என்று இனங்காண்பது மேற்கூறியவாறான உரையாடல்கள், நிகழ்வுகள் ஊடாகவும் சில இடங்களில் ஆசிரியர் கூற்று. பிற பாத்திரங்களின் கூற்றுக்களுக்கூடாகவும் சாத்தியமாகக் கூடியது என்பதனை இலக்கிய ஆர்வலர் கவனத்திற்கு சொல்வதவசியம்!.



**கல்லூரி மண்டபத் திறப்பு விழாவிற்கு அதிபர் திரு. வ. தம்பிப்பிள்ளை தலைமையில் ஆசிரியர்களும், மாணவர்களும் வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் அழைத்து வரப்படுதல்.**



**கல்லூரி புதிய மண்டபத்தில் அதிபர் திரு. வ. தம்பிப் பிள்ளையும் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்க வாசகர்.**

# ஈழத்தின் பழந்தமிழ் இலக்கியம் ஒன்று திருக்கரைசைப் புராணம்

**க.இரகுபரன்**
*மொழித்துறை,*
*தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.*

திருக்கரைசைப் புராணம் திருகோணமலை மாவட்டத்தில், கருங்குவேலி என்னும் இடத்தில், மாவலிகங்கைக் கரையில் அமைந்து அகத்தியஸ் தாபனம் என்னும் பெயர் பெற்ற தலத்தின்மேற் பாடப்பட்டது. புராண வகைகளுள் தலபுராணம் என்ற வகையுள் அட்ங்குவது.

ஈழத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தின் தாபி தத்தை அடுத்தே தொடர்ச்சியான நிலையில் தமிழிலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறு தோன்றியவற்றுட் சில, திருகோணமலைப் பிராந்தி யத்துக்கு உரித்தானவை என்பது உணரத்தக்கது. தட்சிணகைலாச புராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசல புராணம் என்பன அத்தகைய நூல்களுட் பிரதானமானவை. இவை மூன்றும் திருக்கோணேஸ்வரத்தை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றவை.

இவற்றுட் தட்சிணகைலாச புராணம் காலத்தால் முற்பட்டது ஏழு சருக்கங்களுள் அமைந்த அறுநூற்றி முப்பத்து நான்கு விருத்தப்பாக்களால் ஆனது அப்பாக்கள் யாவும் அந்தாதித் தொடையில் அமையப் பெற்றவை.

கோணேசர் கல்வெட்டு வரலாற்றம்சங்கள் நிரம்பப்பெற்ற ஒரு நூல். கோணேசர் கோயிலின் வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றையும் ஆலய வழமைகள் பற்றிய செய்திகளையும் உட்கொண்டது. அதற்குமப்பால் திருகோண மலைப் பிராந்தியத்தில் அக்காலத்தில் நிலைபெற்றிருந்த தமிழ்ச் சமுதாயத் தின் - இந்து சமுதாயத்தின் தன்மைகளையும் ஆட்சியதிகாரங்கள் பற்றிய விவரங்களையும் தருகின்றது. நூல் செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்துள்ளது. கோணேசர் கல்வெட்டின் விரிநூல் என்று கொள்ளத் தக்கது திரிகோணசல புராணம். இருபது படலங்களில் அமைந்த 1491 செய்யுள்களால் ஆனது கோணேசர் கோயிலோடு தம்பலகாமம் சிவன் கோவில் பற்றிய செய்திகளையும் தன்னகத்தே அடக்கியது.

திருகோணமலைப் பிராந்தியத்திலிருந்து தோன்றிய நூல்களுட் பிரதானமான மற்றொரு நூல் சித்திரவேலாயுதர் காதல். அது வெருகற் பதியிலமைந்த சித்திர வேலாயுதர் கோயில் பற்றியது. ஒரு காதல் நூலாக அமையப்பெற்ற போதிலும் வரலாற்றுக் குறிப்புக்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது. சித்திரவேலாயுதர் கோயில் பற்றி மட்டுமன்றி திருக்கோணேஸ்வரம் உள்ளிட்ட திருகோணமலை சார்ந்த வேறுசில கோயில்கள் பற்றியும் அது பேசுகின்றது.

இந்நிலையில், திருகோணமலை சார்ந்து எழுந்த சில நூல்கள் அழிந்தொழிந்து விட்டமை யையும் அறிய முடிகின்றது. அவ்வாறு அழிந்த வற்றுள் ஒன்று மச்சேந்தியம், மச்சகேசுர புராணம் என்றெல்லாம் சுட்டப்பெறும், சமஸ்கிருத மொழியில் அமைந்த புராணம். அதுவே, தமிழிலமைந்த முற்குறிப்பிட்ட தட்சிணகைலாச புராணத்துக்கு

மூலமாய் அமைந்தது. பெரிய வழமைப் பத்ததி, குளக்கோட்டன் கம்பசாத்திரம் என்னும் இருநூல்களும் அவ்வாறே அழிந்துபோன நூல்களாக அறியவருவன. அவை கோணேசர் கல்வெட்டுக்கு மூலங்களாக அமைந்தவையாம். அது போலவே திருக்கரைசைப் புராணம் என்னும் இந்நூலுக்கும் மூலநூலாக ஒரு சமஸ்கிருத நூல் இருந்ததென்றும் அதைத் தம் அறிவும் சேர்த்துத் தமிழிற் பாடியதாகவும் கூறுகிறார் நூலாசிரியர். சமஸ்கிருதத்திலமைந்த அம்மூல நூல் சூதமுனிவராற் பாடப்பட்டதாகவும் நூலாசிரியராற் குறிப்பிடப் படுகின்றது. சமஸ்கிருத புராணங்கள் யாவும் சூத முனிவராற் பாடப்பட்டதாகக் கூறப்படும் மரபுக் கமையவே அவ்வாறு கூறப்பட்டது என்று நாம் அமைதி காணலாம்.

திருகோணமலைப் பிராந்தியம் சார்ந்து பல தமிழ் நூல்கள் தோன்றியமை தொடர் பாகச் சிந்திக்கும் வேளையில், ஈழத்திற் கண்டெடுத்த தமிழ்க் கல்வெட்டுக்களுட் கணிசமான தொகையின திருகோணமலைப் பிராந்தியத்திலே கண்டெடுக்கப் பட்டன என்ற உண்மையையும் மனங்கொள்ளுதல் நன்று. தமிழ்ச் சமுதாயம் சார்ந்த, இந்துமதச் சார்பான பிற தொல்பொருட் சின்னங்களும் பெருந் தொகையிலே அப்பிராந்தியத்திற் காணக் கிடக்கின்றன. இவை யாவும் தமிழ்ச் சமுதாயமும் வைதிக சமயமும் ஒரு காலத்தில் திருகோண மலையிலே அரச ஆதரவுடன் சிறப்புற்று விளங்கி யமைக்கான தெளிவான சான்றுகளாக அமைவன. இத் திருக்கரைசைப் புராணமும் அத்தகையதே.

திருக்கரைசைப் புராணம் பாடப்பட்ட காலம் எது எனத் தெளிவாகத் தெரிய வில்லை. அதன் ஆசிரியர் யார் என்பதும் தெரியவில்லை. ஆனால் ஆசிரியர் தமது குரு பற்றிக் கூறுவனவற்றைக் கொண்டு அதன் காலத்தை ஓரளவு தீர்மானிக்கக் கூடியதாயுள்ளது எனலாம்.

தில்லைமணிமன்றை (சிதம்பரத்தை) விட்டு அகலாதவராய், என்றும் சைவசித்தாந்த மாகிய வேத முடிவை விளக்குபவராய், அடியேனுடைய சுற்றம் முழுவதையும் தொழும்பு கொண்டருளிய வராய், எண்ணத் தக்க சிறப்புக்கள் வாய்க்கப் பெற்றவராய் விளங்கும் ஈசான் சிவனாகிய குருவின் மலர் போன்ற பாதங்களை என் இதயம் ஒருபோதும் மறவாது'' என்று குருவணக்கம் செய்கிறார் ஆசிரியர்.

புராண வரலாறு கூறும் செய்யுளொன்றில் கொற்றங்குடிவாழும் பிரான் சரணத்து உறுதி கொண்டே இப்புராணத்தை உரைத்ததாகக் கூறுகிறார். இவற்றையெல்லாம் அவதானித்த சுன்னாகம் குமாரசாமிப் புலவர், நூலாசிரியர் தொடர்பாக முன்வைக்கும் ஊகம் இது:

''ஈசானச் சிவன் என்றது உமாபதி சிவாசாரி யாரைப் போலும், சங்கற்ப நிராகரணப் பாயிரத்திலே உமாபதி சிவாசாரியார் சிதம்பரத்திலே தேர்மண்டபத் திலிருந்து மாயாவாதி முதலிய சமயிகளை வாதஞ் செய்து வென்று வேதசிவாகமப் பொருளைத் தாபித்தார் எனப் பெறப்படுதற்கேற்ப இங்கே ''மன்றதனில் அகலாதென்றும் விண்டசிவ சித்தாந்த வேதாந்தப் பொருள் விளக்கும்
''விளக்கமாகி'' எனக் கூறுதலாலும் பின் புராண வரலாற்றிலே ''கொற்றங் குடிவாழும் பிரான் சரணத் துறுதி கொண்டே'' எனக் கூறுதலாலும் பெறப்படும். பெறவே இந்நூல் செய்தார் அவர் சீடர் என்பாருமுளர்.''

குமாரசாமிப் புலவரின் ஊகம் புறந் தள்ளக் கூடிய தொன்றன்று. நூலாசிரியர் தமது குருநாதரைப் பெயர்குறித்துச் சுட்டாமல் ''கொற்றங் குடிவாழும் பிரான் என்று ஊரோடு மாத்திரம் தொடர்புறுத்திச் சுட்டினார். அதுவே குரு யார் என்பதை உணர்த்தக் கூடிய திறம் உடையது என்ற காரணத்தாலேயே அவ்வாறு சுட்டினார் என்றே கொள்ள வேண்டும். அந்நிலையில் தமிழிலக்கிய வரலாற்றில் கொற்றவன் குடியோடு தொடர்புறுத்திப் பேசப்படுகின்றவராய் உமாபதிசிவாசாரியார் அன்றி பிரசித்தமான வேறொரு புலவரும் இல்லை என்ப தையும் உணர்தல் வேண்டும்.

சோழப்பேரரசின் நிலைகுலைவினை அடுத்த காலப்பகுதியில் வாழ்ந்தவர் உமாபதிசிவாசாரியார். சோழப் பேரரசு உச்சநிலையில் இருந்தபோது இலங்கையின் கணிசமான பகுதி சோழ சாம்ராச்சியத்தினுள் அடங்கிவிட்டது. அதாவது ஈழநாடு மும்முடிச் சோழமண்டலமாகிவிட்டது. இராஜேந்திர சோழன் தனது மகன் ஒருவனை ''சோழ இலங்கேஸ்வரன்'' என்ற விருதுப் பெயரோடு ஈழநாட்டு மன்னனாக முடிசூட்டினான். இலங்கையிலே சோழராட்சி 70 வருடங் களுக்கு மேல் நிலைபெற்றிருந்தது. அக்காலத்திலே திருகோணமலையின் பிரதான சிவாலயமான திருக்கோணேஸ்வரமும் ஏனைய பிராந்தியங்களிலமைந்த சிவாலயங்களும் உன்னத நிலையில் விளங்கின. ஆங்காங்கே பிரமதேயங்களும் நிறுவப்பட்டன. அப்படியான ஒரு காலப் பகுதியில் திருகோணமலையிலே பிரசித்தி பெற்று விளங்கிய திருக்கரைசைத் தலம்பற்றி ஈழ - தமிழக தொடர்புடைய ஒரு புலவர், உமாபதி சிவாசாரியாரின் சீடராய் விளங்கிய ஒரு புலவர் திருக்கரைசைப் புராணத்தைப் பாடினார்.

சோழப் பேரரசின் நிலைகுலைவினால் இத்தலம் சீர்குலைவுக்கு உள்ளான ஒரு நிலையில் இப்புராணம் பாடப்பட்டிருக்கலாம். ஒரு காலத்தில் இத்தலம் கவனிப்பாரற்றுக் காடுமண்டிக் கிடந்தது என்றும் வடதேசத்திலிருந்து வந்த ஒரு மன்னன் அதனைப் புனருத்தாரணம் செய்தான் என்றும் இப்புராணம் (பூசைச் சருக்கம்) கூறுகின்றது. வரலாற்று நிகழ்ச்சியொன்றினைப் பௌராணிகமயப்படுத்திக் கூறுவதாக அதனைக் கொள்ளலாம். அவ்வரலாற்று நிகழ்ச்சி சோழராட்சிக் காலத்திலோ அதன் பின்னரோ நிகழ்ந்ததாகலாம்.

திருக்கரைசைப் புராணம், முன்னே கடவுள் வாழ்த்து அமைய அதனையடுத்து இலங்கைச் சருக்கம், கங்கைச் சருக்கம், தாபனச் சருக்கம், பூசைச் சருக்கம் என்னும் நான்கு சருக்கங்களில் அமைந்த 170 பாடல்களில் அமைந்த சிறியதொரு புராணமாகும். கடவுள் வாழ்த்தில் விநாயகர், சிவன், உமாதேவி, தீர்த்தவிநாயகர், கந்தசுவாமி என்னும் கடவுளர்க்கும் சம்பந்தர், சுந்தரர், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் ஆகிய அடியார்களுக்குத் தனியாகவும் ஏனைய அடியார்களுக்குப் பொதுவாகவும் இறுதியில் நூலாசிரியரின் குருவுக்கும் வணக்கம் செலுத்தப்படுகின்றது. அப்பால் புராண வரலாறும் அவையடக்கமும் தெரிவிக்கப் படுகின்றன.

இலங்கைச் சருக்கத்தின் தொடக்கத்திலே புவனாதிகளின் உற்பத்தி தத்துவ ரீதியாகச் சொல்லப்படுகின்றது. பூமியிலுள்ள உயிர்கள் யாவும் தமது வினைப் பயன்களை அனுபவித்தற்காக தனு கரண புவன போகங்களைக் கொடுத்தருளிய பரம்பொருள், உகாந்த இருள் புலருங் காலத்திலே சிற்சத்தியைச் சிருட்டித்து அந்தச் சிற்சத்தியின் ஆயிரத்தொரு கூறிலே பராசக்தியைத் தோற்றுவித்து அதனுடைய அருளினாலே சுத்தமாயையிலிருந்து நாதம் முதலிய ஐந்தையும் தோற்றுவித்து அவற்றினின்றும் பல கலைகளையும், நான்கு வேதங்களையும் நான்கு வாக்குகளையும் சரியை முதலிய மூன்றையும் சாலோகம் முதலான மூன்றையும் சிருட்டித்து, அநந்தேசுவரருடைய அருளினாலே அதோ மாயையினின்றும் முப்பத்தொரு தத்துவங்களையும் சகலர்க் குரிய தனுகரண புவன போகங்களையும் தோற்றுவித்து சக்திசமேதராய் வீற்றிருப்பதாகச் சொல்லும் செய்யுள்கள் நூலாசிரியரின் தத்துவநாட்டத்தை நன்கு புலனாக்குவதோடு அவர் தத்துவாசிரியரான உமாபதி சிவாசாரியாரின் மாணவர் என்ற ஊகத்துக்கு வலுச்சேர்ப்பதாகவும் அமைகின்றன.

இலங்கை நாட்டையும் திருக்கரையின் தீர்த்தமான மாவலிகங்கையையும் நூலாசிரியர் உற்சாகத்தோடு வருணிக்கின்றார். அவ் வருணனைகள் அவரது கவித்துவத்தை மாத்திரமன்றி நாட்டுப் பற்றையும் உணர்த்துவன. ஆங்காங்கே ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் புலனாகின்றது. இலங்கை வீதிகளின் ஆரவாரத்தை வருணிக்கும்போது அங்கு இடம் பெறும் தமிழின் ஆரவாரத்தையும் தவறாது சுட்டுகிறார்.

*கொஞ்சிய கிள்ளை மென்சொற் கோதையர் சிலம்பின் ஆர்ப்பும்*
*வஞ்சியின் காஞ்சி ஆர்ப்பும் வாயறாத் தமிழின் ஆர்ப்பும்*
*விஞ்சிய மள்ளர் ஆர்ப்பும் விழாவெழு முழவின் ஆர்ப்பும்*
*அஞ்சிறை வண்டின் ஆர்ப்பும் அன்றி ஓர் ஆர்ப்பும் இன்றால்.*

இலங்கையிலே உள்ளவர்கள் தமது தமிழறிவினால் சங்கப்புலவர்களுக்கு நிகராவர் இசைத் திறனால் வித்தியாதரரை ஒப்பார்கள் இனிய சுவை பொருந்திய கவிதைகளைப் படைப்பதிலே அகஸ்தியரை ஒப்பார்கள் என்கிறார் ஆசிரியர்.

*இதத்த செந்தமிழ் அறிவினால் சங்கரை ஏய்ப்பார்*
*விதத்த யாழிசைப் பாடலால் விஞ்சையர் நிகர்வார்*
*குதித்த தேன்சுவைக் கவிதையால் குறுமுனி போல்வார்*
*மதித்த நீர்வளப் பண்ணைசூழ் அப்பதி மாக்கள்.*

ஆசிரியருக்கு கம்பன் கவிதைகளில் நல்ல ஈடுபாடு உண்டென்பதும் இவ்வருணனைப் பாடல்களிற் புலனாகின்றது. கம்பனது ஆற்று வருணனை போலவே இவரது ஆற்று வருணனையும் சிலேடைவகையில் அமைகின்றமையைக் கங்கைச் சருக்கம் 25 முதல் 31 வரையான இலக்கச் செய்யுள்களில் நன்கு அவதானிக்கலாம்.

இப்புராணம் திருக்கரைசைத் திருத்தலத்தின் தோற்றம் பற்றியும் அதன் தீர்த்த விசேடம் பற்றியுமே பெரிதும் பேசுகின்றது. சிவபிரானுடைய திருமணக் காட்சி காண உலகம் முழுவதும் கைலை நோக்கிச் செல்லவே, வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்ந்து பூமியின் சமநிலை கெட்டது. அந்நிலையில் பூமியைச் சமப்படுத்த வல்லவர் எனக் கண்டு தென்திசைக்கு அனுப்பப்பட்ட அகத்தியர் இலங்கையை வந்தடைந்த காலத்தில் தாபித்த தலமே இத்திருக் கரைசைத் தலம் என்பது இத்தலம் பற்றிய பொராணிகம். அதனாலேயே இத்தலத்துக்கு அகத்தியஸ்தாபனம் எனும் பெயரும் வழங்கப்பெற்றது.

திருக்கரைசைத் திருத்தலம் இன்று கிலமடைந்து காணப்படுகின்றது. ஆயினும் அத்திருத்தலம் பற்றிய இப்புராணம் மட்டும் இன்றுவரை உயிரோடு வாழ்கின்றது.

"ஆடி அமாவாசைத் தினத்தன்று கரைசைச் சிவன் தீர்த்தமாட அருகிலுள்ள மாவலி கங்கைக்கு எழுந்தருளுவார். கொட்டியாபுரப்பற்று மக்கள் எல்லோரும் அங்கே கூடுவர். கங்கைக் கரையிலே அமாவாசை இரவில் இப்புராணத்தைப் பாடிப் பயன் சொல்வது நெடுங்கால வழக்கமாகவே இருந்து வருகின்றது. கொட்டியாபுரப்பற்று முதியவர்கள் பலருக்கு இப்புராணம் மனப்பாடமாகவே தெரியும்."

என்கிறார் இப்புராணத்தை தெளிவுரை யோடு ஒரு தடவை (1975 இல்) பதிப்பித்த மூதூர் தந்த இலக்கியவாதி வ.அ. இராசரத்தினம் அவர்கள். அவர் காலத்திலே வாழ்ந்த முதியவர்கள் பலருக்கு இந்நூல் மனப்பாடமாக இருந்திருக்கலாம். இன்று அத்தகையவர்கள் இருப்பார்களா என்பது ஐயத்துக்குரியது.

தொன்மையான புராணமொன்றைப் பெற்றிருந்தும் அகஸ்தியத்தாபனம் இன்று கிலமடைந்து கிடக்கின்றமை இலங்கைத் தமிழ்ச் சமூகத்துக்குக் கௌரவமான தொன்றல்ல. புதிது புதிதாக எத்தனையோ ஆலயங்கள் எழுகின்றன. இப் புராதனத்தலம் பற்றிச் சிறிதேனும் சிந்தித்துச் செயற்படுவோமா?

# பணச்சலவை - ஒரு நோக்கு
# Money Laundering

**பேராசிரியர் வி. பி. சிவநாதன்**
*தலைவர், பொருளியல் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*

பணக் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் ஒருநாட்டின் சட்ட ஒழுங்கிற்குட்பட்ட வகையில் சுழற்சிக்குட்படும் பணம் சுத்தமான பணம் எனப் பொருளியலாளர்களினால் வரையறுக்கப்பட்டுள்ளது. சட்டத்திற்குட்படாத கொடுக்கல் வாங்கலுக்குட்படும் பணத்தை நிதிச் சட்ட ஒழுங்கிற்குள் கொண்டுவருவதற்காக எடுக்கும் நடவடிக்கைகளை அழுக்குப்பணத்தைச் சலவை செய்தல் அல்லது முறைகேடாகப் பயன்படுத்திய பணத்தை ஓர் ஒழுங்குமுறைக்குள் கொண்டு வருதல் என்பதாகும். அதை மொத்தப் பொருளாதார நோக்கில் அல்லது பருநிலைப் பொருளாதாரக் கொள்கையின் (Macro Economic Policy) அரசிறைக் கொள்கைக்கும் (Fiscal Policy) நாணய நடைமுறைக் கொள்கைக்கும் (Monitory Policy) அமைவான நிதிக் கைமாற்றுக்களில் ஏற்படும் ஒழுங்கீனங்களைச் சரிப்படுத்தல் என்பதே பணச் சுத்தப்படுத்தல் என்று பொருள்படும். சட்ட விரோதமாக உழைக்கப்பட்ட பணத்தைச் சட்ட ரீதியான பணமாக மாற்றம் செய்தல் என்றும் இச்செயற்பாட்டைக் குறிப்பிடுவர்.

வரிவிதிப்பிலிருந்து தப்புவதற்காக வரி செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக அல்லது வரிஅறவிடும் அரசை ஏமாற்றும் வகையில் சட்ட ரீதியற்ற முறையில் செயற்படும் பிரதான பாதாள பொருளாதாரங்களிலும் (Underground Economy) நிழற் பொருளாதாரங்களிலும் (Shadow Economy) கறுப்புச் சந்தைகளில் அல்லது கறுப்புப் பொருளாதாரங்களிலும் (Black Economy or Black Market) புழக்கத்தில் உள்ள வரி ஏய்ப்புக்கு உட்பட்டதுமான பணம் அழுக்குப் பணமாகக் கருதப்படும். பொருளாதார செயற்பாடுகளில் வகை சொல்லமுடியாத (Transparency and accuntability) பணமாக இருப்பதால் அழுக்குப் பணம் எனக் கருதப்படுகிறது. அவ் அழுக்குப் பணத்தை (Dirty Money) மதிப்பு வாய்ந்ததும், ஏற்றுக் கொள்ளக் கூடியதும் பயமின்றிப் பயன்படுத்தப்படக் கூடியதுமான நிதிச் சொத்துக்களாக மாற்றம் செய்யும் முறையே பணச்சலவை எனப்படும். குறிப்பாகச் சாதாரண பொருளாதாரம் ஒன்றில் சட்ட ரீதியாகக் குற்றவியல் நடவடிக்கை எனக் கருதப்பட்ட நடவடிக்கை ஒன்றிலிருந்து பெறப்பட்டது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும் வகையில் உள்ள பணத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதும் கைமாற்றம் செய்யக் கூடியதாகவும் அரச வரிவிதிப்பிற்கு உட்பட்ட வகையில் மாற்றுதல் என்பதை சுத்தப்படுத்தலாகக் கருதுவர்.

இன்று பணம் சலவை செய்யப்பட வேண்டிய தன் அவசியம் உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது. இப்பிரச்சினை எல்லா நாடுகளிலுமுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருப்பதற்குக் கணக்கிடப்படமுடியாத அளவு பணநிரம்பலை உருவாக்கக் கூடியதும் பணத்தின் திரவநிலை எக்காரணிகளால் உருவாக்கப்பட்டது. என்பதை அறியமுடியாத அளவுக்குக் கொடுக்கல் வாங்கல்கள் நடை பெறுவதும் அதனால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளும் வங்கித் தீர்வகப் பிரச்சனைகளுமே காரணமாகும். முக்கியமாக இதற்கு விஸ்வரூபம் எடுத்து வரும் உலக மயமாக்கல் நடவடிக்கைகள் அடிப்படைக் காரணமாகும். இதற்காக ஊக்குவிக்கப்படும் சர்வதேச நாடுகளுக்கிடையிலான கட்டில்லா

சந்தை, சுதந்திரமான விற்பனைப் போட்டி, சர்வதேச பொருளாதார ஒருங்கிணைப்பு, அதற்கான மூலதனப் பாய்ச்சல் மீதான கட்டுப்பாடு தளர்த்தப் பட்டமை, குறிப்பாக ஒரு நாட்டிலிருந்து மற்றுமொரு நாட்டுக்கான நிதியங்களின் பாய்ச்சலை ஊக்கு வித்த செலவாணிக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை, பொருளாதார அபிவிருத்திக்காகப் பன்னாட்டு நிதியங்களைத் தேவைப்படுத்திய காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற புதிய சுதந்திர நாடுகளின் தோற்றம், தனியார் மயமாக்கல் என்ற பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்திற்காக அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் பிழையான வழியில் பாரிய அளவில் விற்கப் பட்டமை, பங்குச் சந்தைகளின் விரிவாக்கம் சர்வதேச நிதிக் கொடுக்கல் வாங்கலை இலகுபடுத்திய தொழினுட்ப ரீதியான இலத்திரனியல் வர்த்தகம் இலத்திரனியல் வங்கிச்சேவைகள், போன்றவற்றில் இறுக்கமான கட்டுப்பாடுகள் இல்லாமல் போனமையும் உலகமயமாக்கப்பட்டதன் பின்னரான நாணயக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணிக்கப் போதுமான கட்டமைப்புக்கள் இல்லாமல் போனமையும் ஒரு நாடு தன்னளவில் இவற்றை யெல்லாம் மேற்பார்வை செய்யமுடியாமல் போனமை உலக நாணயக்கொடுக்கல் வாங்கல் களில் பெயர் குறிப்பிடப்படாத நிதி மாற்றல்களை ஊக்குவித்தது இதற்குப் புதிய தகவல் தொழில்நுட்பமுன்னேற்றம், புதிய நிதியியல் மாற்றற்கருவிகள் போன்றன இப்பிரச்சினையை விரிவடையச் செய்துள்ளன.

இப் பிரச்சினையின் பரிமாணத்தை நிர்ணயித்த காரணிகளில் இரண்டு முக்கியமானவை யாகக் கருதப்படுகின்றன.

முதலாவது உலகமயமாக்கம் பொருளா தாரத்தை விரிவாக்கும் என்ற நம்பிக்கையுடன் தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட அரசியல்வாதிகள், முயற்சியாளர்கள், உயர்வருமானம் பெறுவோர் போன்றோருக்கான பொழுதுபோக்கு, உல்லாச சல்லாபங்களுக்கான வாய்ப்புக்கள், போதைவஸ்து, விபச்சாரம், சூதாட்டம் ஆயுதக் கொள்வனவு போன்ற சட்டரீதியாகத் தடை செய்யப்பட்ட (சில நாடுகளில் சட்ட ரீதியான விபச்சாரத்திற்கு உரிமம் பெற்ற செயற்பாடு – தாய்லாந்து) செயற்பாடுகளில் பல மில்லியன் டொலர்கள் புழக்கத்திலுள்ளன. இவையே பாதாள பொருளாதார ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் இடங்களாக மாறி வருகின்றன. இச் செயற்பாடுகளில் அரச உளவு நிறுவனங்களும் இரகசியக் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொண்டு வருவதாக அரசியல் ரீதியாக நெருக்கடிக்குள்ளான நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றதில் இருந்து அறியக் கூடியதாக வுள்ளது. உதாரணம் : சட்ட ரீதியற்ற போதைப் பொருள் வியாபாரக் கைத்தொழிலின் 1997ம் ஆண்டிற்கான வருவாய் 4000 பில்லியன் அமெரிக்க டொலர் என வங்கி அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது அக்கால உலக வர்த்தகத்தில் 8 வீதமாக உள்ளது. வெளித்தெரிய வந்த தகவல்களின்படி மேற்குறிக்கப்பட்ட தொகையிருந்தபோதும் அதனளவு மிக அதிமா கவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து சட்டப்பணமாக மாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் பிராயத்தனம் எடுத்து வருகின்றது.

இரண்டாவதாக விரைவான வர்த்தக செயற்பாடுகளும், விரைவான கொடுக்கல் வாங்கல்களும் நடைமுறையிலுள்ள இக்காலத்தில் வங்கிகள் தீர்வக நடவடிக்கையை விரைவுபடுத்த வேண்டியதாக உள்ளது. அதில் ஏற்படும் காலதாமதமும் நடைமுறைப்படுத்த முடியாத தன்மையும், சட்ட ரீதியற்ற பணப்புழக்கத்திற்கு வழிவகுக்கும் என்பது அனுபவரீதியாக அறியப்பட்ட உண்மை. தற்போது பிற்போடப்பட்ட வியாபார முறை (Post Trading) முற்கொடுத்துத் தீர்த்தல் (Pre-Settlement) வைப்பு வெளிப்பாடு (Credit Exposures) போன்றவற்றில் கொடுத்துத் தீர்த்தல் (Settlement) என்பதில் உள்ள சந்தைச்சட்டங்கள் ஒழுங்குமுறைக்கு ஏற்ப செயற்படும் போது கால தாமதத்தினை ஏற்படுத் துகின்றது. இதனால் வர்த்தகர்கள் வங்கிப்

பழக்கத்தில் இருந்து விலகிச் சட்ட ரீதியற்ற பணக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். இவற்றை தவிர்ப்பதற்காக வங்கிகள் விரைவாகச் செயற்பட்டபோதும் தீர்வக நிலையிலுள்ள அறிக்கையிடலும் மேற்பார்வை செய்தலும் (Reporting / Monitoring) ஆபத்து வருவாய் (Risk Margining) வியாபாரத்தில் வலைப்பின்னல் அமைப்பை ஏற்படுத்தல் (Netting of Trades) என்பன இடம்பெறும்போது வரியிடல் தொடர்பான சிக்கல்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வர்த்தகர்கள் சட்ட ரீதியற்ற பணக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர்.

அபிவிருத்தியடைந்ததும் முதலாளித்துவத்தில் முதிர்ச்சியடைந்த நாடான (Advanced Capitalist Country) அமெரிக்கா போன்ற நாடுகளில் தன்னியக்க தீர்வக முறை காணப்படுகிறது;. (Automated Clearing Houses) இவையும் சட்ட ஒழுங்கு முறைக்குட்டபட்டதாக இருக்க வேண்டி யுள்ளதால் தேசிய தன்னியக்க தீர்வக அமைப்பு (National Automated Clearing House Association) இலத்திரனியல் கொடுப்பனவு என்ற செயற்பாட்டினூடாக (The Electronic Payment) விரைவாகச் செயற்பட ஆரம்பித்தது. இருந்த போதும் அமெரிக்கச் சட்டப்படி 10,000 டொலரை ஒருவர் வங்கியிலிட்டால் அது எவ்வாறு பெறப் பட்டது என்ற விபரம் கோரப்படுவதோடு இரகசிய புலனாய்வாளர்கள் அது பற்றிய விபரத்தினைப் பெற முனைகின்றனர். அமெரிக்கா சட்ட ரீதியற்ற பணம் கொடுக்கல் வாங்கலைப் தடுப்பதற்காகப் பல்வேறு முயற்சிகளை எடுத்த போதும் உலக அரசியல் மாற்றத்திற்காகச் சட்ட ரீதியற்ற பணத்தை வல்லரசு மாற்றத்திற்காகச் சட்ட ரீதியற்ற பணத்தை வல்லரசு நாடுகள் பயன்படுத்துவதாக அரசியல் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. 2001 செப்ரெம்பர் மாதம் 11ம் திகதி அதிர்ச்சித் தாக்குதலுக்குள்ளான அமெரிக்கா வின் குற்றச்சாட்டுகளில் முக்கியமானது சட்ட ரீதியற்ற பணக்கொடுக்கல் வாங்கல்களில் விரும்பத்தகாத ஓட்டைகள் இருந்தமையும் அதைப் பயங்கரவாத அமைப்புக்கள் பயன்படுத்தியதாக அமெரிக்கா குற்றம் சாட்டி வருகின்றது.

எனவே பொருளாதாரத்தில் மாத்திரமல்ல, மோபியா போன்ற போதைப்பொருள் கடத்தல் பாதாளப் பொருளாதாரத்தால் இன்றைய உலக நாடுகளுக்கிடையிலான அரசியல் நெருக்கடிகள் தீவிரமடைந்து வருகின்றன. எனவே சட்ட ரீதியற்ற பணக் கொடுக்கல் வாங்கல் இன்று எல்லா வழிகளிலும் உலகை அச்சுறுத்தி வருவதால் இதைக்கட்டுப்படுத்த சலவைப் பணமுறையை எல்லா நாடுகளும் கொண்டு வர வேண்டுமெனப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நாடுகளிற்குள்ளேயும் சர்வதேச நாடுகளிற் கிடையேயும் சட்ட ரீதியற்ற பணக் கொடுக்கல் வாங்கலைக் கட்டுக்குள் கொண்டு வரமுடியவில்லை யாயின் எதிர்கால உலகப் பொருளாதார நடைமுறைகளிலும் நாணயக் கொடுக்கல் வாங்கல்களிலும் வங்கிச் சேவையிலும் பல பிரச்சினைகள் உருவாகும். இதன் விளைவுக ளுக்குச் சாதாரண மக்களே இலக்காவார்கள். இதைப் பின்வருமாறு வரிசைப்படுத்திப் பார்க்கும் போது இது பொருளாதாரங்களில் எந்தளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறியமுடிகிறது.

- சந்தைப் பொறிமுறை உடையும், போட்டிச் சந்தை தோல்வியடையும்.

- உலக பொருளாதாரத்தில் வெவ்வேறு நாடுகளில் ஏற்படும் நிதிப்பிரச்சினை உற்பத்தித் துறைகளின் முதலீட்டின் வருவாய்களைக் கவனத்தில் எடுத்து நடைபெற முடியவில்லை. அவை கறுப்பு பணத்தைச் சட்டப்பணமாக மாற்றும் அவசரத்தில் இலாபமற்ற அல்லது பொருத்தமற்ற முதலீடாகவே மேற் கொள்கின்றன. இதனால் ஒரு நாட்டின் பருநிலைப் பொருளாதாரக் கொள்கை களுக்கான இலக்குகள் எட்டப்படாமல் போகின்றன. (MacrH EcHbHmil ҿHals) இது

சாதாரண காரணி ஒதுக்கலில் முறை கேடுகளையும் ஒழுங்கற்ற நிலைகளையும் தோற்றுவிக்கின்றது.

- பணத்திற்கான கேள்வி முறையாக இடம் பெறாமல் போவதினால் வட்டி வீத நிர்ணயம் போன்றவற்றில் குழப்பநிலை ஏற்படும். கறுப்புப் பணம் பணச்சந்தையில் வெளிப்படாமல் இருப்பது முக்கிய செயற்பாடாக இருப்பதால் நாணய நடைமுறைக் கொள்கைகள் வலு விழந்து போகும் அபாயம் உண்டு. இதனால் அந்த அந்த நாடுகளின் பணநிரம்பலைக் கட்டுப்படுத்தவோ அல்லது ஒழுங்கு படுத்தவோ முடிவதில்லை.

- அரசிற்குச் சேரவேண்டிய வரியைச் செலுத்தாது தப்புதவற்காக மேற் கொள் ளும் நடவடிக்கைகள் அதிகரித்துச் செல்வது உறுதியற்ற பொருளாதாரத்தைத் தோற்றுவிக்கும். வரி ஏய்ப்பு சட்ட ரீதியற்ற கொடுக்கல் வாங்கலின் அடித்தளமாக இருப்பதால் அரசாங்க வருவாய் பாதிக்கப்படும். வரவு செலவுத் திட்ட நடை முறைகள் பாதிப்புக்குள்ளாகும். பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பன எதிர்வு கூறமுடியாது போகும் நிலை ஏற்படும்.

- பொருளாதாரத்தில் சொத்தின் விலைகள் உண்மைப் பெறுமதியுடையனவாக இருக்க மாட்டாது. பங்குச் சந்தைகளும் பாதிக்கப் படும். பங்குச் சந்தைப் பொறிமுறை முறிவடைய இது வழி வகுக்கும். இதனால் வங்கிச் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்பிற் குள்ளாகும்.

- வங்கிச் சேவைக்கப்பாற்பட்ட முறையில் சட்ட ரீதியற்ற பணப்புழக்கமுள்ள நாடுகளில் அரசியல் பொருளாதார உறுதியின்மை காணப்படும்.

- இதனால் சட்ட ரீதியற்ற பணத்தை முதலிடுவ திலும் பார்க்க அதனைச் சட்ட ரீதியான பணமாக மாற்றுவதில் மக்களும் முயற்சியாளர் களும் இன்று கூடிய நாட்டமுள்ளவர்களாக உள்ளனர். இது முயற்சியாண்மையை நெருக்கடிக்குள்ளாக்கும்.

இவையெல்லாம் இருக்கும்போது எவ்வாறு பொருளாதாரம் அபிவிருத்தியடையும்? இன்று உலகமயமாக்கம் சர்வதேச வர்த்தகத்தை விரிவு படுத்தி நாடுகளை முன்னேற்றமடையச் செய்து எல்லா நாடுகளின் வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தச் சந்தர்ப்பமளிக்குமென எதிர் பார்க்கப்பட்ட போதும் சட்ட ரீதியற்ற பணக் கொடுக்கல் வாங்கல்கள் உலக மயமாக்கத் துடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை அறியும் போது உலகப் பொருளாதாரம் எத்திசை நோக்கிச் செல்லுகின்றது என்பது கேள்விக்குரியதே?...



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# Education, Community Service and Alumni Collaboration

**Arumugam Kandiah Ph.D**
Redmond, Washington, USA



Education is the greatest wealth that any person can possess in this world. Thirukural, the most widely esteemed Tamil Classic of all times says that "Learning is the true imperishable riches; all other things are not riches" (Kural- 400). Simply stated, education is the process of learning. It is a life-long activity, which begins at birth and continues until a person's last day on earth. Education is such a vital instrument in the development of an individual and the society that it is cherished and fostered in every age and culture.

In a broad sense, the purpose of education is to develop knowledge, skill, and character of students. However, the irony is that many people have no idea of what education truly is. Many assess the value of education in economic terms. They want to provide only such education as would enable the students to earn more, hardly giving any thought to the improvement of the character of the educated. Schools measure their success in terms of students qualifying to enter universities and securing high paying jobs. These are good objectives, but these alone should not be the objectives. Mahatma Gandhi said that "as long as the economic motive remains the sole purpose of education, there is no hope of our ever knowing the true value of education".

It is important that education should inculcate the spirit of serving the society. Education should unlock the wealth of sympathy, kindness and generosity hidden in the soul of a child. Our schools should implant deep in the minds of the students, the moral obligation and the sense of duty to help the poor and serve the society. Albert Einstein said, "The aim of education must be the training of independently acting and thinking individuals who, however, can see in the service to the community their highest life achievement".

## Help the Poor

No society is homogeneous. There are rich people and poor people. About 2.4 billion people or roughly 20% people in the world live in poverty and are classified as poor. There are poor people in rich countries as well. In the United States of America, about 12% of the population are said to be poor people. According to a study in 2002, 23% of Sri Lankan population was classified as poor. This study did not include the population of Northern and Eastern Provinces due to the war that prevailed during the study period. It is believed that the poverty in the Northern and Eastern Provinces, at the present time, is more than the national average value of 23%.

Many Tamil people in Sri Lanka have gone from poor to poorer and poorer to poorest due to the impact of the war.

The poor people cannot be dismissed as an un-important group of society that we are unfortunately stuck with. They are fellow human beings, real people, individuals, sometimes even our relations, for whom we have concern and responsibility. This is the first and basic reason why we should help the poor because they are fellow human beings, flesh and blood people like ourselves. We cannot turn a blind eye to them. Irrespective of economic and social status, we should realize that we are interdependent on one another.

It is incumbent on the teachers, past students and the senior citizens of our society to infuse the "help the poor" concept in the minds of the students. The teachers are best placed to play a lead role to reinforce the concept of "help the poor" by using every opportunity that arises during the class- room and out-of-class room environment. Many of the text books that are used in today's curriculum present numerous openings for teachers to emphasis this concept. Past students and senior citizens should be invited to the school and speak to the students on the concept of "helping the poor" and discuss real experiences and case studies illustrating the noble cause of helping poor people.

In summary, we, as individuals and as a society, have a moral obligation to help the poor. We cannot depend totally on the Government to solve the problem of poverty. Relatively "well-to- do" students should think of helping the relatively poor friends in their class and in their neighborhoods.

The best way to promote the concept of "helping the poor" in the minds of students is to incorporate community service in the curriculum and get the students involved in social projects aimed at serving poor communities and people.

## Community Service as part of the Curriculum?

What about introducing community service programmes in schools? Are they a wonderful opportunity or are they "unnecessary burden" for students? There are many positive aspects of introducing community service in schools, such as building character, teaching civic responsibility and creating opportunity to acquire new skills. Besides, school sponsored community projects can provide services for poor communities which they otherwise might not possess. Opponents of community service in school curriculum may argue that it interferes with learning the basic subjects and puts an unfair burden on students. International experience shows that community service in schools have positive impacts on children's performance and make them more responsible citizens.

If this idea is to be incorporated into our system of education, it needs many changes. First of all there should be a full understanding of this concept by our society. With society's support and its push, a "political will" to implement service-learning has to emerge. There should be national recognition to the service-learning concept and a national educational reform should be implemented for the purpose of incorporating service-learning as legitimate components of school curriculum and make it mandatory to students in the high school.

Sri Lanka has been successful at producing a population of literate individuals. However, literacy alone will not be sufficient. It will be

increasingly important, in the current context of social upheaval and ethnic conflict, for educated individuals to be compassionate and having a strong sense of serving the community and humanity at large. The Government is indeed planning to reform education and has its own agenda of reform. The Government has recently announced that the purpose of the proposed education reform is to transform the education system into one that will provide the technological skills, educational content, and methods to promote the development of inquiring and adaptable minds. The reform will be well served if it includes among others, the aspects of community service.

In the USA, service-learning is incorporated into students' school work in many high schools. Beginning in the 1970s, educators began paying more attention to this teaching option and the 1990s saw an array of initiatives to help promote the practice.

Service-learning encourages civic participation and volunteerism throughout the country by supporting programs that help more than one million students meet community needs while improving their academic skills and learning the habits of good citizenship. Students in service learning programs are graded on what they learn, as they would be in any class. At the same time, they are expected to carry out service projects of genuine benefit to the community. This is what we need right now in Sri Lanka, more than any time in our recent history.

## Learning from the American Experience

Service learning is a method of teaching, learning and reflecting that combines academic classroom curriculum with meaningful service, throughout the community. As a teaching methodology, it falls under the philosophy of experiential education. More specifically, it integrates meaningful community service with instruction and reflection to enrich the learning experience, teach civic responsibility, encourage lifelong civic engagement, and strengthen communities for the common good.

The National and Community Service Act of 1990, which authorized the Learn and Serve America program, defines service-learning as a method under which students or participants learn and develop through active participation in thoughtfully organized service that is conducted in and meets the needs of a community. It is coordinated with an elementary school, secondary school, or institution of higher education, and with the community. It fosters civic responsibility, enhances the academic curriculum of the students, and provides structured time for the students or participants to reflect on the service experience.

Service-learning combines experiential learning and community service opportunities. It can be characterized in the following ways:

*Curricular connections*- Integrating learning into a service project is key to successful service learning. Academic ties should be clear and built upon existing disciplinary skills.

*Student voice* - Beyond being actively engaged in the project itself, students have the opportunity to select, design, implement, and evaluate their service activity, encouraging relevancy and sustained interest. In community settings, this is alternatively called youth voice.

*Reflection* - Structured opportunities are created to think, talk, and write about the service experience. The balance of reflection and action allows a student to be constantly aware of the impact of their work.

*Community partnerships* - Partnerships with community agencies are used to identify genuine needs, provide mentorship, and contribute assets towards completing a project. In a successful partnership, both sides will give to and benefit from the project. In order for this partnership to be successful, clear guides must be implemented as to how often a student engages in service to a particular community agency.

*Authentic community needs* - Local community members or service recipients are involved in determining the significance and depth of the service activities involved.

*Assessment* - Well structured assessment instruments with constructive feedback through reflection provide valuable information regarding the positive 'reciprocal learning' and serving outcomes for sustainability and replication.

## Support from the Alumni

The ground situation in Sri Lanka poses immense challenges to the people in the North and East in general and to the Velautham Maha Vidyalayam community in particular for obvious reasons. Despite these challenges, it is heartening to learn that the school is committed to uphold its academic standard and serve the children of Point Pedro and its vicinity. On our part, the Alumni (the old pupils) are obliged to support the school both materially and morally. It is my hope that the school will receive both kinds of support in plenty.

First of all, I call upon the Alumni to provide appropriate support, if the Velautham Maha Vidyalayam wishes to experiment the Service Learning concept. I will be personally willing to provide technical support and some limited financial support to implement a simple community service project.

Apart from the proposed community service project, there are many other compelling reasons that necessitate Alumni support to Velautham Maha Vidyalayam.

Firstly, Government support to schools in the country in general and to those in the North and East in particular is grossly inadequate to deliver a high class primary and secondary education. A recent World Bank study cites a number of constraints. According to this study, there is shortage of key inputs, particularly teaching materials in subjects such as science, mathematics, environmental science and English. In addition the study cites institutional constraints such as: (a) restrictive legislation constraining private sector participation in education; (b) inadequate teacher deployment, especially in poor areas and to schools with predominantly poor children; (c) undue administrative delays, poor stakeholder involvement in decision making, and limited responsiveness to community needs; (d) acute shortages of quality inputs in classrooms; (e) inequitable distribution of educational resources between school and across regions; and (f) insufficient attention to the role of education in promoting social harmony in a multi-cultural society. The Velautham Maha Vidyalayam, like many other schools are

compelled to improvise within the financial resources provided to them and is doing to the best of their ability. Financial support from outside the Government, such as from the alumni, will enable the school to make appropriate adjustments in order to overcome some of the deficiencies cited above.

Secondly, the recent phenomenon of globalization and the accompanying changes that are sweeping across the globe compel the students to compete with previously unknown competitors in previously unknown fields of study. The new economic order requires new knowledge, skills and attitude from students. For example, it will be increasingly important to modernize facilities and equipment on IT facilities, science laboratories, libraries and sports. Alumni living in developed countries, such as in the United Kingdom the United States, Canada, Australia, etc. should come forward to help the Velautham Maha Vidyalayam to improve the teaching of IT and use of IT in school administration by providing technical assistance, equipment and cash contribution.

Thirdly, there is a tendency for the ethical standards of teaching community and student community to deteriorate under the currently prevailing political and economic situation. War impacts all elements of the society and its impact on school children and teachers can have far reaching consequences. We, as the alumni of this esteemed educational institution, should strive hard to restore ethical standards to the highest level. Hence, the alumni have to collaborate and communicate frequently with the school to share our concerns and experiences. We also need to provide guidance and feedback to one another in this endeavour.

The possibilities for collaboration between the alumni and the school are of many folds. It could be in the form of direct funding to school projects, sending materials to school, providing technical assistance to school projects, sharing of knowledge in the spheres of student and teacher development (capacity building) and sharing of experience in other relevant areas.

Members of Old Boys' Association (OBA) branches locally and abroad may either identify some projects and initiate collaboration or respond to requests initiated by the school. I encourage all members of OBA to initiate communication among themselves and between them and the school to identify suitable projects for collaboration.

## A Proud Old Boy

The Velautham Maha Vidyalayam has a rich and much cherished history of which we, the Alumni, can be proud of. The School was established 115 years ago by Mr. Vyramuthu Velauthampillai, a versatile scholar, philanthropist, educationist, a Hindu reformer and above all a great personality with a mind of noble thoughts. Mr. Velauthampillai started the school in 1895 single handedly to serve the children of the middle and lower class parents. The school has evolved over time into a High School and continued to teach generations of children for the past 115 years. Generations of students who have passed through its portals are spread all over the world, distinguishing them in whatever vocation they are engaged in. Wherever they are, it reflects the discipline, dedication and character that have been inculcated in them during their student days. I am truly proud of being an old boy of Velautham Maha Vidyalayam.

# வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம்

**கலாநிதி மா. கருணாநிதி**
*கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்*



இலங்கையில் யாழ்ப்பாணம் பல சிறப்புகளைக் கொண்டதொரு மாவட்டமாகும். பல உப பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இம்மாவட்டத்தில் வடமராட்சி நிலவளம், நீர்வளம் நிலப் பயன்பாடு, சமூக பொருளாதார மற்றும் கலாசாரக் காரணிகளால் தனித்துவம் மிக்கதொரு பிரதேசமாக விளங்குகின்றது. வரலாற்று ரீதியாகவும் யாழ்ப்பாணக் குடாநாடு தனித்துவம் மிக்கது என்கையில் அத்தனித்துவத்திற்கு வளம் சேர்ப்பதில் வடமராட்சிக்கும் முக்கிய பங்குண்டு. வடமராட்சியின் கிழக்குக் கரையோரங்களில் காணப்பட்ட பண்பாட்டுக் குடியிருப்புகள் தென்கிழக்காசியப் பண்பாட்டுச் சூழலைத் தழுவிய வகையில் வளர்ச்சிபெற்றுப் பரிணாமமடைந்து இன்றைய பண்பாட்டுச் சூழலைத் தோற்றுவித்த தெனப் பேராசிரியர் செ. கிருஸ்ணராஜா அவர்களும் வடமராட்சி தென்னிந்தியாவுடன் கொண்டிருந்த தொடர்புகளால் இப்பண்பாட்டுக் கோலங்கள் மேலும் வலுப்பெற்றனவெனப் பேராசிரியர் சி.பத்மநாதனும் குறிப்பிடுகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசமானது வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென்மேற்காக, வடமராட்சி கிழக்கு ஆகிய மூன்று செயலகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஆரம்ப காலந்தொட்டு விவசாயம், மீன்பிடி, சிறுவியாபாரம் மற்றும் குடிசைக் கைத் தொழில் போன்றவற்றாலும் பத்தொன்பதாம் நூற்றண்டிலிருந்து கல்வி வாய்ப்புகள் விரிவடையத் தொடங்கியமையால் அரசாங்க சேவையில் சேர்ந்து கொள்ளும் வாய்ப்புகள் விரிவடைந்த போது பொருளாதாரத்தில் உறுதித் தன்மை பேணப்பட்டுள்ளது.

வடமராட்சியில் நிலவிவந்த தமிழ்க் கல்வி மரபு தொடர்ந்து வந்த ஆட்சி மாற்றங்களினாலும் குறிப்பாகப் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சிபெற்ற கல்வி நிறுவனங்களின் செல்வாக்கினாலும் அதன் பாதிப்புகளால் விழிப்படைந்த தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களினாலும் மேலும் வளர்ச்சி கண்டது. சுதந்திரத்தின் பின்னர் தேசிய கல்விக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு பாடசாலைச் செயற்பாடுகளிலும் மாணவர் வினையாற்றலிலும் தனித் தன்மையை நிலைநாட்டிக் கொண்டிருந்தது, 1970கள் வரையில் நிலவிய இச்செல்நெறியில் தேசிய கல்விக் கொள்கைகளில் பல்வேறு மாற்ற ங்கள் ஏற்படத் தொடங்கியபோது விடுக்கப்பட்ட அறைகூவல்கள் வடமராட்சியின் கல்வியில் சில தளம்பல் நிலைகளைத் தோற்றுவித்தன. கடந்த முப்பது ஆண்டுகளாக நிலவிய அரசியல் மற்றும் போராட்டச் சூழலினால் கல்விச் செயற்பாடுகள் மேலும் பாதிக்கப்பட்ட தாயினும் மரபு வழியாக இடப்பட்ட உறுதி யான அடித்தளமும் வடமராட்சி மக்கள் மனவெழுச்சி ரீதியாகக் கல்வியில் காட்டிய உத்வேகமும் நீண்டகாலக் கல்விப் பாரம்பரியத்தைப் பேணுவதற்கு உந்து சக்தியாக இருக்கின்றமை மகிழ்ச்சி தருகின்ற விடயமாகும்.

### தமிழ்க் கல்விமரபு

தமிழ்மக்கள் கல்விக்கு என்றென்றும் உயர்மதிப்பு வழங்குபவர்கள். இவர்கள் வாழ்க்கை நீடித்த கல்வியை அறிவுக்காக மட்டுமன்றி மனித மேம்பாடு குறித்தும் வலியுறுத்தி வந்தவர்கள். தனியாள் மற்றும் சமூகம் சார்ந்த நோக்கிலும் கல்விசார்ந்த பார்வைகள் விரிவடைந்தன.

தமிழ்மக்களின் புராதனகல்வி முறைமையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதற்கு இலக்கியங்கள் சான்றாக இருக்கின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேலைத்தேயக் கல்வி முறையானது கல்வியின் உள்ளடக்கமாக எண், எழுத்து மற்றும் வாசிப்பு என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டிருந்த வேளையில் அதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே தமிழ்க் கல்வி மரபில் எண்ணும் எழுத்தும் இரு கண்களாக இடம்பெற்று விட்டன. எழுத்தும் வாசிப்பும் மொழியின் கீழும் எண் என்பது விஞ்ஞான அறிவைக் குறிக்கும் வகையில் தனிப்பிரிவாகவும் இனங்காணப்பட்டிருந்தன. சகல துறைகளிலும் ஏற்பட்டுவரும் அறிவுப் பிரவாகத்தினைத் தமிழ்க் கல்வியானது 2000 ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்துரைத்தமையால் ஒருவர் மேலும் மேலும் கற்கும்பொழுது அவர்கள் கற்கவேண்டிய விடயங்கள் பலவுள்ளன என்பதை உணர்த்தியிருந்தது. இதன் காரணமாகக் கற்கும் முறையில் பல வழிகளை அறிமுகம் செய்திருந்தது.

கல்வியின் இன்னொரு முக்கிய இயல்பாக ஒழுக்க விழுமியங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன. இவை தமிழரின் கல்விசார்ந்த இலட்சிய நோக்கினை விளக்கி நிற்கின்றன. பேராசை, கோபம், பொறாமை, சினம் போன்றவை தவிர்க்கப்பட்ட வகையில் மனிதனின் குண வியல்புகள் விருத்திசெய்யப்பட வேண்டும் என்பதுடன் கலாசாரம், நுண்கலை, இலக்கியநயம் பொருளாதாரம், பொழுதுபோக்கு முதலிய விடயங்களையும் தமிழர்கல்வி வலியுறுத்தி வந்தது. தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை, குறுந்தொகை, புறநானூறு, பரிபாடல் முதலிய நூல்கள் வாயிலாக மேற்கூறிய கருத்தமைவுகளை நாம் அறிகின்றோம். இத்தகைய இலக்கியங்களைத் துறைபோகக் கற்ற யாழ்ப்பாணத்து அறிஞர்கள் தம்மைத் தொடர்ந்துவந்த பரம்பரையினருக்கும் அவற்றைக் கற்பிப்பதில் ஆர்வங்காட்டினர். இவை அறிவுப் பாரம்பரியத்துக்கு அடித்தளமாகவும் அமைந்து கொண்டன.

வடமராட்சியின் எழுத்தறிவுப் பாரம்பரியம் யாழ்குடாநாட்டின் பாரம்பரியத்தை ஒத்தது எனப் பேராசிரியர் சிவலிங்கராசா தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி மரபில் மேலே எடுத்துக்காட்டிய இலட்சியங்கள் முதன்மை பெற்றதுடன் தந்தையிடமிருந்தும் குருசீட முறையிலும் கற்றல் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. இம்மரபு காலப் போக்கில் திண்ணைப் பள்ளிக்கூடங்களாகப் பரிணமித்தது. 20ஆம் நூற்றாண்டு வரையில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் செயற்பட்டு வந்துள்ளமைக்கான ஆதாரங்கள் உள்ளன வென ஆய்வுகள் கூறுகின்றன. திண்ணைப் பள்ளிக் கூடங்களில் இடம்பெற்றுவந்த ஆசிரியர் மாணவர் உறவு மாணவரின் ஆற்றலை அண்மிய முறையில் இருந்து அறிந்து கொள்வதற்கும் அதன் வழியே ஒழுக்க விழுமியங்களை மேம் படுத்தவும் உதவின.

திண்ணைப் பள்ளிக் கூடங்களில் இலக்கணம், இலக்கியம், புராண படனங்கள், சோதிடக்கலை கணிதம் என்பன போதிக்கப்பட்டன. உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், புலோலியூர் கந்த முருகேசனார், போன்றோர் தமது திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் பல இலக்கண இலக்கிய வித்தகர்களை உருவாக்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்துச் சமூக உறவுகளும் பொருளாதார வாய்ப்புகளும் சாதிமுறைமையும் கல்வி வாய்ப்புகளைத் தீர்மானித்தமையால் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் கல்வியில் சமவாய்ப்பினை வழங்கும் வகையில் ஒழுங்குசெய்யப்ப டவில்லை. அந்தக் காலத்து திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஒரு வகையிலே தமிழ் கற்ற உயர் குழாத்தினரைத் தோற்றுவித்தது எனலாம். திண்ணைப் பள்ளிக்கூட முறைமையில் சாதிமுறைமை கூடுதலான செல்வாக்குச் செலுத்தியதன் காரணமாக

ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி அபிவிருத்தியில் காலதாமதங்கள் உண்டாயின. ஒடுக்கப்பட்ட மக்களும் கல்விசார்ந்த பிரச்சினைகளை எதிர்கொண்ட வேளைகளில், தமக்கெனத் திண்ணைப் பள்ளிக்கூடத்தினை ஆரம்பித்துக் கல்வியை வழங்க முற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை உயர்மட்டத்தில் இலக்கண இலக்கியங்களைப் போதிக்காவிட்டாலும் எழுத்தறிவையேனும் புகட்டு வதில் முதல்நிலை வகித்தன.

கந்தமுருகேசனார் போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்கள் தமது பள்ளியிலே சாதிமுறைமையைக் கடந்து கல்வி வாய்ப்புகளை வழங்கிருந்தமை இறுக்கமான சமூக அமைப்புக்குள்ளும் ஓரளவுக்கேனும் கல்வி வாய்ப்புகள் திறந்துவிடப்பட்ட மையை எடுத்துக்காட்டுகின்றன. வடமராட்சியின் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் தமிழ்க் கல்விப்பாரம்பரியத்துக்கு உறுதியான ஓர் அடிப்படையாக இருந்தாலும் சமகல்வி வாய்ப்பினை அது கருத்தில் கொள்ளவில்லை ஆயினும் நாடளாவிய ரீதியில் செயலாற்றவல்ல பல புலமையாளர்களைத் தோற்றுவித்தமையில் வடமராட்சியின் திண்ணைப் பள்ளிக் கூடங்களுக்கும் பாரிய பங்குண்டு.

**பிரித்தானியர் காலத்தில் வடமராட்சியின் கல்வி**

இலங்கையில் போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சமயம் பரப்பும் நோக்கில் பாடசாலைகள் நிறுவப்பட்டனவாயினும் வடமராட்சியில் அவ்வாட்சியாளர்களின் செல்வாக்கு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்தமை போலக் காணப்படவில்லை. குறிப்பாக பிரித்தானிய ஆட்சிக் காலத்திலே இலங்கை யில் அமெரிக்க மிஷனரியின் சேவை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன். மட்டுப்படுத்தப்பட்டபொழுது வடமராட்சிப் பிரதேச மும் அதன் பயன்களை உயர்நிலையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் தோன்றின. இவற்றோடு உவெஸ்லியன் மிஷனரியின் பணிகளும் குறிப்பிடத்தக்க அளவில் அமைந்ததுடன் வடமராட்சியின் கல்விசார் தனித்துவத்திற்கு வழிகோலியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் கிறீத்தவ மிஷனரிகள் ஆரம்பித்த பாடசாலைகள் முறைப்படி கல்வியை வழங்குதற்கான பல சீர்திருத்தங்களுக்கு வழிகோலின. திண்ணைப் பள்ளிக்கூடங்களால் வழங்கப்பட்டு வந்த எண் மற்றும் எழுத்தறிவுடன் மட்டுமன்றி, பெண்களுக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்படாமை போன்ற குறைபாடுகளைக் களையும் நோக்கிலும் முன்னேற்ற கரமான கல்வி நிலையங்களாக அமைந்தன. ஆரம்பக் கல்வியை வழங்கும் நிறுவனங்களை மட்டுமன்றி முக்கியமான நகரப்பகுதிகளில் இடைநிலைப் பாடசாலைகளையும் அவர்கள் அமைத்துக் கொண்டனர். வட்டுக்கோட்டைச் செமினரி (1823) உடுவில் மகளிர் விடுதிப் பாடசாலை (1824) சுண்டிக்குளி செமினரி (1841 - இதுவே பிற்காலத்தில் சென்ஜோன்ஸ் கல்லூரி யாயிற்று ) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (1834) புனித பத்திரிசியார் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் திருக் குடும்ப கன்னியர் பாடசாலை (1835) முதலிய பாடசாலைகள் முக்கியமானவையாக அமைந்தன. வடமராட்சியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி (1834 உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி (1868) உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பெண்கள் கல்லூரி,(1868) பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை (1875) என்பன குறிப்பிடத்தக்க பாடசாலைகளாக அமைந்தன. இவற்றோடு கட்டைவேலி, அல்வாய், வதிரி, புலோலி போன்ற இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினர்.

ஆரம்பகாலங்களிலே சமூகத்தில் நிலவிய இறுக்கமான கட்டுப்பாடுகளால் அக்கல்லூரிகளில் பெண்கள் சேர்ந்து பயிலவில்லை. எனினும் கிறீத்தவ ஆங்கிலக் கல்லூரிகள் வழங்கிய கல்வியால் உண்டான நன்மைகளை அவதானித்த யாழ்ப்பாணச் சமூகம் சில நெகிழ்ச்சிப் போக்குகளைக் கடைப்பிடித்தமையால் காலப் போக்கில் அநேகமான பெண்களும் பாடசாலைகளில் சேர்ந்து கொண்டனர். இதன் காரணமாக

வடமராட்சியில் கல்விகற்கும் பெண்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

கிறீத்தவக் கல்வி நிறுவனங்களும் கல்வி வாய்ப்புகளைப் பரவலாக வழங்குவதற்கு அக்காலத்துச் சமூகச்சூழலில் நிலவிய இறுக்க மான கட்டுப்பாடுகள் இடமளிக்கவில்லை. மற்றும் அப்பாடசாலைகளின் கல்விச்சூழல் சைவமரபுக்குரிய சூழலுடன்கூடியதாக அமையவில்லை என்னும் குரல்கள் தமிழ்தேசியத்தைப் பின்பற்றியோரிட மிருந்து எழுந்தபோது, சைவமரபுக் கல்வி யிலாளரான ஆறுமுகநாவலரின் பணிகள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. ஆறுமுக நாவலர் வண்ணார்பண்ணையில் 1848இல் சைவச் சூழலில் கல்வியை வழங்குதலை நோக்கமாகக் கொண்டு முதன்முதலில் சைவப்பிரகாச வித்தியா சாலையை ஆரம்பித்தார். ஆயினும், சைவச் சூழலில் கல்வியை வழங்குதற்கான தேவைகள் எழுவதற்கு முன்னரே வல்வை குமாரசாமி முதலியார் (1792 – 1874) மற்றும் அவர் வாழ்ந்த காலத்தினரான உடுப்பிட்டி அருளம்பலமுதலியார் ஆகிய இருவரும் சமய நோக்கங்களைக் கருத்தில் கொள்ளாது பாடசாலைகளை வடமராட்சியிலே ஆரம்பித்தனர்.

புலோலியில் 1864இல் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார். ஆயினும் அந்தப் பாடசாலைக்கு அரசாங்கத்தின் நிதியுதவி போதியளவில் கிடைக் காத காரணத்தால் பாடசாலை தொடர்ந்தும் செயற்பட முடியாமல் இடையில் நிறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாவலரால் உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியம் மேலும் முனைப்புப்பெற்ற போது சமயத்துக்கும் மொழிக்கும் விசுவாசமாக இருந்த கல்வி கற்றவர்கள் வடமராட்சியிலும் சைவப் பாடசாலை களை நிறுவத் தொடங்கினர். பிரபல்யம்வாய்ந்த சைவப்பாடசாலைகள் பல இக்காலத்திலேயே தோற்றம்பெற்றன. இவ்வகையிலே வடமராட்சி இந்துப் பெண்கள் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி, தேவரை யாளி இந்துக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயம், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி போன்றவை குறிப்பிடத்தக்கவை. திரு. இராசரத்தினம் அவர்களைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்துமகாசபையும் சைவசமயச் சூழலில் பாடசாலைகளை உருவாக்க உதவின. வடமராட்சிப் பகுதியிலும் கிராமங்கள் தோறும் பாடசாலைகள் அமைக்கப்பட்டுச் சைவமும் தமிழும் வளர்க்கப்படுவதற்கு இந்து மகாசபையும் தூண்டுகோலாக அமைந்தது.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியால யத்துக்கான கால் கோளும் இக்காலப் பகுதியிலேயே இடப்பட்டது. சைவத்தமிழ்ப் பிள்ளைகள் வறுமை காரணமாகக் கல்வி வாய்ப்புகளை இழந்து வந்தமைகண்டு புலோலி யில் வாழ்ந்த கொடைவள்ளல் திரு வேலாயுதம் அவர்கள் 1895இல் தமது வீட்டிலேயே ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையை அமைத்துக் கொண்டார். புலோலியிலும் அயற் கிராமங்களிலும் வாழும் மக்கள் சைவசமய ஆங்கிலப் பாடசாலை யொன்று அவசிய மெனக் குரலெழுப்பிய வேளையில், இன்னுஞ் சிலர் கிறீத்தவர்களின் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களுக்குச்சென்று சமயம் மாறுவதைக் கண்ட வள்ளல் திரு.வேலா யுதம் அவர்கள் கீறீத்தவப் பாடசாலைகள் தமிழ் வளர்ச்சிக்குச் செய்த சேவைகளை அறிந் திருந்தும் தமிழ்மொழி, சைவசமயம் மற்றும் பண்பாடுகள் மாற்றமடையாமல் வளரவேண்டும் என்ற தீவிர ஆசையால் ஒரு சைவ ஆங்கில பாடசாலையை நிறுவ வேண்டும் என்னும் நோக்குடன் வேலாயுதம் சைவ ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். பின்னர் இப் பாடசாலை ஏனைய பாடசாலைகளுக்கு இணை யாகப் பல பெயர்பெற்ற அதிபர்களின்கீழ் பல்வேறு முன்னேற்றங்களுடன் கல்விச் சேவையாற்றி பல்வேறு பெயர்களைத் தாங்கித்

தற்பொழுது வேலாயுதம் மகாவித்தியாலயமாக மிளிர்கின்றது.

கிறீத்தவ பாடசாலைகளுக்கு இணையாக வளர்ச்சிபெற்ற இந்துத் தமிழ்ப் பாடசாலைகள் என்றவகையில் வேலாயுதம் மகாவித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி, வதிரி தேவைரையாளி இந்துக் கல்லூரி போன்றவை முக்கியமானவையாகச் செயலாற்றின. ஆங்கிலப் பாடசாலைகளில் கட்டணம் செலுத்திக் கல்வியைப் பெறமுடியாதவர்களும் சமயரீதியாக அனுமதி மறுக்கப்பட்ட பிள்ளைகளும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளின் தோற்றத்தி னால் நன்மையடைந்தனர்.

மேலே கூறப்பட்டுள்ள இந்துக் கல்லூரி களிலே வடமராட்சியில் இன்னொரு மரபினைத் தோற்றுவிப்பதில் தேவரையாளி இந்துக் கல்லூரிக்குத் தனியிடமுண்டு. உயர்சைவ வேளாளர்கள் ஆரம்ப காலங்களிலே உருவாக்கிய சைவத்தமிழ்ப் பாடசாலைகளில் வடமராட்சியில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட மக்கள் சேர்ந்து கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் திறந்து விடப் படவில்லை. கிறீத்தவ மிஷனரிகளும் இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட சமூகப் பிள்ளைகளை மதம்மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் கிறீத்தவப் பாடசாலைகளும் அக்காலச் சமூகக் கட்டுப்பாடுகளை மீறமுடியாதவர்களாக பல்வேறு அழுத்தங்களுக்கு உட்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்களிடையே இருந்த சமூக முன்னோடிகளும் சைவத்தமிழ்ச் சூழலை இறுகப் பிடித்தமையால் பல போராட்டங்களின் மத்தியில் தமக்கெனத் தனியாகப் பாடசாலைகளை உருவாக்கு வதில் வெற்றிகண்டனர். இதன் விளைவாக தேவரை யாளிச் சைவ வித்தியாசாலை தோற்றம்பெற்று இன்று தேவரையாளி இந்துக் கல்லூரியாக வடமராட்சியிலுள்ள ஏனைய மகா வித்தியாலயங் களுக்கு இணையாகச் செயற்பட்டுவருகின்றது. வடமராட்சியிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு இக்கல்லூரி இட்ட அடித்தளம் வரலாற்றுச் சாதனைக் குரியது.

வடமராட்சியின் கல்வி அபிவிருத்தி யிலே இன்னொரு மைல்கல்லாக அமைந் தது நெல்லியடியில் அமைந்துள்ள மத்திய மகாவித்தி யாலயமாகும். கலாநிதி C.W.W. கன்னங்கரா அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப் பட்ட விசேட கல்விக் குழுவின் விதந்துரையின் பேரில் 1930களின் பிற் பகுதியிலிருந்து இலங்கையில் அக்காலத்தில் இருந்த தேர்தல் தொகுதிகள் தோறும் மத்திய பாடசாலைகள் அமைக்கப்பட்டன. கல்வி கற்கும் ஆற்றலுள்ள அனைவரும் இன, மத, மொழி, சாதி, சமய மற்றும் பொருளாதார அந்தஸ்து வேறுபாடின்றி தரமான இடைநிலைக் கல்வியை பெறுவதற்கான உன்னதமான கல்வி நிலையங் களாக மத்திய மகாவித்தியாலயங்கள் விளங்க வேண்டும் என்பது கலாநிதி கன்னங்கராவின் இலட்சிய மாகும். இத்தகைய இலட்சியத்தோடு மாதிரிப் பாடசாலையாக நிறுவப்பட்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் வடமராட்சியின் கல்வி அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றியுள்ளது இப்பாடசாலை அன்றுபோலவே இன்றும் பங்களிப்புச் செய்து வருகிறது. ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஆற்றலுள்ள மாணவர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்றனர். விடுதியுடன் கூடிய இப்பாடசாலையில் ஆண் களும் பெண்களும் விடுதிகளில் இருந்து கற்கும் வாய்ப்பும் வழங்கப்பட்டது.

ஹாட்லிக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் வழங்கிய கல்வியின் தராதரம் உயர்வாக இருந்தமையால் இலங்கையின் பிறமாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் பலர் இப்பாடசாலைகளில் சேர்ந்து கொண்டனர்.

வடமராட்சிப் பகுதியில் நிலவிய நீண்ட கல்விப் பாரம்பரியமானது பல துறைசார்ந்த அறிஞர்களை உருவாக்கியுள்ளது. தமிழ் இலக்கண இலக்கிய வித்தகர்கள், பண்டிதர்கள், புலவர்கள், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், கணிதமேதைகள், சட்ட மேதைகள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலரை அதிகளவில் ஈந்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் இலங்கை யில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பெயர்பெற்றுள்ள இவர்களைத் தனித்தனியாக் கூறின் பெயர்ப்பட்டியல் மிகநீண்டு செல்லும் என்ற அச்சத்தினால் அதனை இங்கு தரவில்லை. வடமராட்சிக் கல்விப் பாரம்பரியத்தினை வளம்படு த்தியோர் பட்டியலொன்றை எஸ். சிவலிங்கராசா எழுதிய வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் என்னும் நூலிலும் வடமராட்சி தெற்கு-மேற்கு செயலகத்தினால் வெளியிடப்பட்ட "திருவுடையாள்" என்னும் நூலிலும் காணலாம். ஆயினும் இப்பட்டியல் முழுமையானதொன்றன்று. எதிர்கால சந்ததியினர் அறியும்பொருட்டு வடமராட்சியில் தோன்றிய பல்துறைசார்ந் தோரினதும் விபரங்களைக்கொண்ட திரட்டொன் றைத் தொகுத் தளித்தல் காலத்தின் தேவை யாகும்.

## பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள்

பெண்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் இல்லாமலிருந்த ஆரம்ப காலங்களிலே கிறீத்தவ மிஷனரிகள் குறிப்பாகப் புரட்டஸ்தாந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் யாழ்ப்பாணத்திலே பெண்களுக்கான பாடசாலைகளை ஆரம்பித்தனர். கிறீத்தவக் குடும்பச்சூழலை உருவாக்கும் நோக்கில் பெண்களின் சமய மாற்றம் அவசிய மெனக் கருதியமையால் பெண்களுக்கான பாடசாலைகளை நிறுவுவதில் மிஷனரிகள் அக்கறைகாட்டின. உடுவில் மகளிர் பாடசாலை (1824) வேம்படி மகளிர் பாடசாலை (1834) உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பெண்கள் பாடசாலை (1868) பருத்தித்துறை மகளிர் உயர்பாடசாலை (1875) போன்றவை இவ்வாறான பாடசாலைகளுள் முக்கிய மானவை. கிறீத்தவமிஷனரிகள் முன்னின்று நடத்திய பாடசாலைகள் யாழ்ப்பாணப் பண்பாட்டுப் பாரம்பரியங்களோடு இணை ந்து சென்றமையால் அந்தப் பாடசாலை களில் பெண்கள் சேர்ந்து படிக்கும் நிலைமை உருவானது. ஆங்கிலக் கல்வியின் மூலம் யாழ்ப்பாணச் சமூகத்திலுள்ள குடும்பங்கள் நவீன மயமாக்கப்படுவதற்குப் பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலைகள் பெரிதும் உதவின. சைவச்சூழலில் கல்வியை வழங்குதல் பற்றிய ஆழமான சிந்தனை களை முன்வைத்த ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் பெண்களின் கல்வி பற்றிப் பெரிதும் சிந்திக்க வில்லையென்ற குறைபாட்டினையும் ஆய்வாளர்கள் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடமராட்சிச் சமூகங்களில் பெண்கள் பாரம்பரியமாக அனுபவித்துவந்த வாழ்க்கை முறையில் பல சாதகமான நிலைமைகள் இவர்களுக்கான கல்வி வாய்ப்புகளைத் தொடங்கி வைப்பதற்கான தூண்டுதல்களை வழங்கின. வடமராட்சியில் உடுப்பிட்டி, பருத்தித்துறைப் பகுதிகளில் ஆரம்பிக்கப் பட்ட பெண்கள் பாடசாலைகள் ஏற்படுத்திய பாதிப்புகளால் அப்பாடசாலைகளுக்கு இணையான பல சைவப் பெண்கள் பாடசாலைகள் காலம் பிந்தியேனும் உருவாகின. வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி (1944) இதற்கோர் உதாரணமாகும். சைவச் சூழலில் வாழும் பெண் பிள்ளைகள் கிறீத்தவப் பாடசாலைகளில் சேர்ந்துகொள்வதைக் கட்டுப் படுத்தும் நோக்கில் இவ்வாறான பாடசாலைகள் தொடங்கப்பட்டன எனக்கூறுவதில் மிகையில்லை.

தொடக்க காலங்களில் உருவான சைவ ஆங்கிலப் படசாலைகளில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து கல்வி பயின்றனர். இன்று அவ்வாறான நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுப் பெண்களுக்கெனத் தனியான சைவப் பெண்கள் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சியில் தற்பொழுது செயற்பட்டு வரும் பெரிய பாடசாலைகளில் வட இந்து மகளிர் கல்லூரி, வடமராட்சி பெண்கள் மத்திய கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி என்பவை குறிப்பிடத் தக்கவை. தற்பொழுது உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பெண்கள் கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் உயர் பாடசாலை ஆகியவற்றில் ஏனைய சமயங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கும் கல்வி வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன.

நவீன கல்வி வாய்ப்புகளைப் பயன்படுத்து வதில் வடமராட்சியிலுள்ள பெண் பிள்ளைகள் கூடுதலாக அக்கறை கொண்டுள்ளமையால் அவர்களுடைய கல்விசார் அடைவுகளில் அண்மைக் காலங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு துறை களிலும் பெருந்தொகையான பட்டதாரிகள், பட்டமேற்படிப்புத் தகைமைபெற்றவர்கள் பலர் உருவாகியுள்ளனர். அரச மற்றும் தனியார் துறைகளில் முக்கியமான வகிபங்குகளையும் பெண்கள் ஏற்று வருகின்றனர்.

வடமராட்சியில் பொதுவாகக் கல்விக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவ மானது சமூக மாற்றத்துக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளது. இப்பிரதேசத்தில் காணப்படும் பௌதீகச் சூழலானது மரபுவழித் தொழில்களிலிருந்து பெரிதும் மாற்றங் களை ஏற்படுத்துவதற்குத் தடையாக விளங்கியது. ஆயினும் கல்வி வாய்ப்புகள் விரிவு பெற்ற வேளையில் அதனைப் பயன்படுத்துவதில் இப்பிரதேசத்து மக்கள் காட்டிய ஆர்வம் கல்வித் துறைசார்ந்த முன்னேற்றங்களைத் தந்துதவின. ஆரம்பத்தில் ஆங்கிலக் கல்வி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டவர்கள் மத்தியில் ஓர் உயர்குழாம் தோன்றியது. சுயமொழிக் கல்வியின் அறிமுகத்துடன் பரவலாக்கப்பட்ட வாய்ப்புகள் கற்றவர்கள் தொகையில் சடுதியான அதிகரிப் பினைத் தோற்றுவித் தமையால் அரசாங்கத் தொழில்துறைகளில் சேர்ந்துகொள்வதற்கான சந்தர்ப்பங்களும் விரிவடைந்தன. அரச தொழில் வாய்ப்புகள் வடமராட்சிச் சமூகத்தில் பல்வேறு விதத்தில் சமூகநகர்வுக்கு வழிகோலியது. சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களும் இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளத் தவற வில்லை.

ஆரம்பகாலக் கல்வித்தகைமைகள் இலங்கை யின் தொழில் அமைப்பில் உயர் தொழில்களைப் பெறக்கூடிய வாய்ப்புகளைக் குறிப்பிட்ட தொகையினருக்கு மட்டும் ஒரு வகையிலான அனுசரணையுடன் வழங்கியிருந்தமை காரணமாக அநேகமானோர் ஆசிரியர்களாகவும் எழுது வினைஞர்களாகவும் வரக்கூடிய வாய்ப்புகள் இருந்தன. இவர்களுடைய அடுத்த பரம்பரையினர் வெவ்வேறு துறைகளில் கல்விகற்று முன்னேறிய மையால் அவர்கள் மத்தியில் மேல் நோக்கிய சமூகநகர்வுகள் துரிதமாக இடம்பெற்று ள்ளன. 1960களின் பின்னர் ஆசிரியர்க ளுடைய பிள்ளைகள் பலர் பொறியியலாளர்களாகவும் மருத்துவர்களாகவும் சட்டத்தரணிகளாகவும் வந்துள்ள னர். இச்சமூகத்தில் இன்று எல்லோரும் அக்கறையுடன் செயற்படுவதால் கல்விசார்ந்த போட்டிச்சூழல் நிலவி வருவதும் அதன் விளைவுகள் கல்வியின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்து வதும் கவனத்திற்குரியன.

## வடமராட்சிக் கல்வியின் சமகாலநிலை

இன்று வடமராட்சியில் ஒரு கல்வி வலயமும் பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய மூன்று கல்விக் கோட்டங்களும் செயற் படுகின்றன. மொத்தமாக உள்ள 85 பாடசாலை களில் ஏறக்குறைய 65 பாடசாலைகள் மட்டும் இயங்குகின்றன. அவற்றுள் 10 1AB பாடசாலை களும் 08 1C வகைப் பாடசாலைகளும் 32 இரண்டாம் வகைப் பாடசாலைகளும் 31 மூன்றாம் வகைப் பாடசாலைகளும் உள்ளன. இப் பாடசாலைகளில் ஏறக்குறைய 20.000 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். தரமான கல்வியை வழங்குவதிலே 1AB பாடசாலைகள் முக்கிய பங்காற்றி வருகின்றன. இந்நோக்கில் பார்க்கும்

பொழுது வடமராட்சியில் 1AB பாடசாலைகளின் விகிதாசாரம் இன்னும் அதிகரிக்கப்படுதல் வேண்டும். மருதங்கேணிக் கோட்டத்தில் கடந்த காலங்களில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்னுஞ் சரிவர இயங்க முடியவில்லை. இன்றுள்ள கல்விப் பிரச்சினைகளில் முக்கியமாகப் பாடசாலை இடைவிலகல், இடம்பெயர்ந்து வந்துள்ள பிள்ளைகளுக்கான கல்வி, பௌதீக வளப்பற்றாக் குறை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வடமராட்சியில் அமைந்துள்ள பாடசாலை களின் பொதுப் பரீட்சைப் பெறு பேறுகள் எப்பொழுதும் உயர்மட்டத்தில் இருந்து வந்துள்ளன. ஐந்தாம்தரப் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சை முடிவுகள் இங்கு குறிப்பிடத்தக்கவை. பொதுவாக நாடளாவிய ரீதியில் க.பொ.த சாதாரணதரத்தில் சராசரியாக 48 சதவீதத்தினரும் க.பொ.த உயர்தரத்தில் 65 சதவீதத்தினரும் சித்தியடைந்து வருகின்றனர். வடமராட்சிப் பாடசாலைகளில் சராசரிப் பெறுபேறுகள் தேசிய சராசரியிலும் உயர்வாகவே உள்ளன. இத்தகைய பரீட்சைகளில் தேசியரீதியில் முதன்மையிடங் களைப் பெற்றுள்ள மாணவர்களும் இருந்துள்ளனர். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்க மிசன் ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலை மெதடிஸ்த பெண்கள் உயர்நிலைப் பாடசாலை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வேலாயுதம் மகாவித்தியாலயம், கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, வல்வை மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி மற்றும் வடமராட்சி பெண்கள் மத்திய கல்லூரி, வல்வை சிதம்பராக் கல்லூரி, முதலிய பாடசாலைகள் கணிசமான அளவில் மாணவர்களின் உயர் பெறுபேறுகளுக்கு உதவி வருகின்றன. தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் முதன்மையிடங் களைப் பெற்றுள்ளன. வருடந்தோறும் பலர் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று வருகின்றனர்.

கொழும்புப் பல்கலைக்கழகத் திலுள்ள தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டு நிலையம் இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் வினையாற்றல் பற்றி தேசிய மட்டத்திலான கணிப்பீடுகளை 2003ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 04, தரம் 08 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் மத்தியில் நடத்திவருகின்றன. இத்தேசிய அளவீட்டின் நோக்கம் குறிப்பிட்ட வகுப்புகளிலுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தினைக் கணிப்பிடுவதுடன் கல்வியில் நியாயத்தன்மை காணப்படுகிறதா எனக் காண்பது மாகும். இந்நிலையம் மேற்கொண்ட ஆய்வு முடிவுகளின்படி வடமராட்சிப் பாடசாலை களிலிருந்து தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையம் நடத்திய ஆய்வின் மாதிரியில் இடம்பெற்ற பாடசாலைகளில் அநேகமானவற்றின் தராதரம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் இல்லை. இம்முடிவுகள் வடமராட்சிப் பாடசாலைகள் மத்தியில் கல்வித் தராதரங்களில் வேறுபாடுகள் உள்ளன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக கிராம மட்டங்களில் இயங்கி வருகின்ற பாடசாலைகளுக்கும் நகரப் பாடசாலைக ளுக்கும் இடையில் கல்வித் தராதரங்களில் வேறுபாடுகள் உள்ளன.

பொதுவாக இலங்கையில் கல்வியை நியாயத் தன்மையுடன் கூடிய வகையில் வழங்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் நீண்ட காலமாக அடையப்படாத இலக்கா கவே இருந்துள்ளன. இவ்வாறான பிரதேசச் சமநிலை யின்மை நிலவும் சந்தர்ப்பத்தில் 1980களின் பிற்பகுதியிலிருந்து வடமராட்சியின் கல்விச் சூழல் வடபிரதேசத்தில் நிலவிய அமைதியற்ற சூழலினால் மேலும் பாதிக்கப்பட்டமையை எல்லோரும் அறிவோம். இப்பாடசாலைகள் போதிய பௌதீக மற்றும் மனித வளங்களின்றி நீண்டகாலமாகச் செயற்பட வேண்டிய சூழலுக்குத் தள்ளப்பட்டிருந்தன. திறம்படச் செயற்பட்டுவந்த பிரபல்யமிக்க வடமராட்சிப் பாடசாலைகள்கூட நாளாந்தக் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்ந்து

முன்னெடுத்துச் செல்வதில் பாரிய தடைகளை எதிர்நோக்கின. இக்காலப் பகுதியை வடமராட்சியின் கல்வி வளர்ச்சியில் ஓர் இருண்ட காலம் எனச் சொல்வதிலும் மிகையில்லை.

1960கள் மற்றும் 1970களிலே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல், மருத்துவம் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் வடமராட்சிப் பாடசாலைகளிலிருந்து சென்ற மாணவர்கள் அநேகர் இருந்தனர். 1970களிலிருந்து பல்கலைக்கழக அனுமதியில் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டப் பங்கீட்டுக் கொள்கையினால் பொதுவாக யாழ் மாவட்டத்திலிருந்தும் குறிப்பாக வடமராட்சிப் பாடசாலைகளிலிருந்தும் பல்கலைக்கழகங்களுக்குச் சென்ற மாணவர் தொகையில் பாரிய வீழ்ச்சிப் போக்குக் காணப்பட்டது. ஆயினும் இக்கால கட்டத்திலும் திறமையடிப்படையில் தெரிவானோர் தொகையில் இப் பிரதேச மாணவர்கள் கணிசமாக இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியிலே அண்மைக் காலத்தில் நிலவும் கல்விச் செயற்பாடுகள்பற்றிய விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகின்றது. இவற்றின் அடிப் படையில் வினைத்திறனுள்ள திட்டங்கள் கோட்ட மற்றும் வலய அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் கல்வியில் உன்னத மான பிரதேசமாக வடமராட்சி விளங்க, நம் முன்னோர்கள் உருவாக்கிய கல்விப் பாரம் பரியத்தின் தொடர்ச்சியைப் பேணிக் கல்வி நடவடிக்கைகளை விருத்திசெய்ய முற்படுதல் எல்லோரினதும் பொறுப்பாகும்.

## References

Subramanian, S.V and Mahadevan, V.R (1986) Heritage of the Tamils Education and Vocation. International Institute if Tamil Studies, Madras


Vithiananthan,S (Ed) (1980) Proceedings of the Fourth International Conference Seminar of Tamil Studies. International Association of Tamil Research Jaffna, Sri Lanka Vol: 2

கலாமணி,த நடராசா,கி (Ed) (2008) திருவுடையாள், பிரதேச மலர், பிரதேச செயலகம் வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி

வள்ளிநாயகி இராமலிங்கம் (2006) யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் பெண்கல்வி. குமரன் புத்தக இல்லம். கொழும்பு சென்னை.

சிவலிங்கராசா, எஸ் (1984) வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும். வடமராட்சிக் கோட்டம் பருத்தித்துறை.

மதிபாலசிங்கம், வே (2005) *கொடை கொடுக்கும் கையான். வேலாயுதம்* மகாவித்தியாலயம் நூற்றாண்டுவிழா மலர், புலோலி, பருத்தித் துறை



மகாத்மா காந்திஜீ

# Mr. M.A Thangarajah The Architect of Science Education at Velautham M.V.

**K. Ponnampalam.**
Past student & Ex-Teacher



Teaching is a noble profession and universally every teacher strives to one's best ability with great dedication to assist all the students in his/her charge to develop every student's full potentiality and help the student to become a worthy citizen. Yet there are some teachers bestowed with greater leadership qualities much above the norm of a teacher and such teachers play greater roles in developing the school and the quality of education imparted in their schools by providing better planning and leadership. Late Mr. Thangarajah is one of the latter kind of teachers who had contributed immensely in planning, providing and developing the science education at Velautham M.V., initially as the vice-principal and subsequently as the principal of the school. I am privileged to have been a student of him and later as a science teacher under him to witness his contributions towards developing science education at the school. He was responsible for planning, building and equipping the science laboratories recruiting suitable teachers to teach different science subjects, and maintaining high standards in the teaching of science subjects during his tenure at the school. Further he relentlessly worked hard to obtain permission from The ministry of Education to start G.C.E. (AL) commerce stream first and subsequently permission to start G.C.E. (AL) Science streams to enable the students to continue their education at the same school to seek admissions to the universities and other post secondary institutions.

I started my English medium education at Velautham M.V. (then known as Puloly Boys' English School), a government assisted school, in the year 1942 when there were classes up to Junior School Certificate (J.S.C) and students went to other schools for further education. There was very little science taught at the school. Botany was the only science subject taught at J.S.C. level. But some times due to lack of a qualified teacher even Botany was not taught. I appeared for the J.S.C. examination conducted by the Northern Province Teachers' Association (NPTA) in the year 1947 and after passing the examination I had the choice to go to another school for my Senior School Certificate (S.S.C) course and also to choose the course to follow without a proper foundation in science. Probably I might have chosen an arts course if I had gone to another school. Fortunately Mr. V. Arunachalam, the Founder's son and then manager of the school obtained permission to start the S.S.C. classes at Velautham M.V. and many parents of the students who qualified for admission to the S.S.C. class desired that their

children continue their studies at the school. Some students from other schools also joined the S.S.C class formed at the school in the year 1948. Golden Jubilee of the school was celebrated in 1946. I am one of the first batch of S.S.C students presented from the school for the S.S.C examination conducted by the Department of Education in the year 1949. As per departmental requirements a minimum of two science subjects had to be taught at S.S.C. level and so teaching of Botany and Chemistry was started at the S.S.C. level. The school management recruited Mr. M.A. Thangarajah as the vice-principal and was put in charge of organizing the science education at the school along with teaching of Mathematics and Chemistry. Mr. Panikkar, a teacher from India was appointed to teach Botany. Mr. V. Arunasalam , the manager of the school and Mr. T. Ramanathapillai the principal at the time entrusted the full responsibility of organizing and developing the Science education at the school to Mr. Thangarajah, one of the famous science and mathematics teachers at that time.

Mr. Thangarajah taught Mathematics and Chemistry for the first batch of science students at the S.S.C. preparatory level and the S.S.C. level. He well understood our level of attainment in these subjects and our background in these subjects and taught us in such a way that he created a lot of interest in these subjects among us and made us to attain very high standards in these subjects when we appeared for the public examination. The results of the first batch of students in science subjects was commendable and many of them chose science based carriers later in life. At the time we were in the S.S.C. preparatory class the science laboratories were being organized and as a result he took us to Vadamaradchy Hindu Ladies' College, a newly started school with laboratory facilities, in the evenings or on week-ends to perform chemistry experiments to create interest among us and also to enable the students to understand certain scientific concepts clearly. Anyway he worked hard and got the construction, furnishing and equipping of the laboratories completed within a short time of one year and we, the first batch of students and the following batches of students were able to pursue our science studies in our own school laboratories.

There was still an urgent need to introduce the teaching of Physics at the school as science education without Physics at S.S.C level is incomplete. Further Physics was an important subject for students joining University Entrance Classes (present GCE A/L) seeking admission to professional courses like Medicine and Engineering at the university and other Technical Courses. Understanding this need, Mr. Thangarajah while ordering for equipment for the Chemistry and Botany laboratories also ordered for Physics equipment from companies from England (science equipment were procured from companies from England using government grants and donations from well wishers) and without the knowledge of the school management had collected the necessary equipment for the teaching of physics. Then he requested the school management to apply for permission to introduce the teaching of Physics at the school. The management hesitated for the simple reason that a large sum of money would be required to equip the Physics laboratory. Mr. Thangarajah told to the surprise of the management that all the necessary equipment

for teaching of Physics were available. The management was happy and sought permission to teach Physics and without any difficulty obtained permission to teach Physics. The Science laboratory building was planned with foresight by Mr. Thangarajah, and he planned in such a way that a Chemistry laboratory with a store room and a Botany Laboratory could be accommodated along with two extra rooms which could be later converted to a Zoology Laboratory and a Physics laboratory. When Physics was introduced he converted one the rooms in the science block which accommodated two classrooms into the Physics laboratory and later when G.C.E. A/L classes were started the other room was converted into the Zoology laboratory. Later during his tenure as principal teaching of Applied Mathematics at G.C.E. *O/L* was also introduced. Thus Mr. Thangarajah played the leading role at Velautham M.V. in planning, developing and organizing and providing facilities for learning science and opportunities of choices of different science curricular choices for the students. I was a Science teacher, teaching Biology and Chemistry at Velautham M.V. for 14 years and I had the opportunities to avail the laboratory facilities at the school. In addition, I was a member of the annual school survey board taking stock of the equipment available in the different laboratories and I had a detailed knowledge of all the equipment available in the laboratories. Further as a Science Education Officer for about 12 years in the Jaffna district I had the opportunity to visit the Science laboratories in leading schools in the Jaffna District. Without hesitation I would say that equipment- wise the laboratories at Velautham M.V. are no second to the laboratories in other leading schools. This position is due mainly to Mr. Thangarajaha.

At this juncture I remember how he got a Fortin's Barometer for the school from the Departmental Science Store. After the take over of schools by the governments in December 1961, Science equipment were supplied by the Central Science Stores located in Colombo. Every year the principal had to make a requisition for chemicals and equipment to the Ministry of Education. With a view to starting G.C.E. A/L classes, as Fortin's Barometer was an important piece of equipment in the teaching of Physics, Mr. Thangarajah included it in the requisition list and every time the department refused to approve it as it was only supplied to G.C.E.A/L schools. Yet Mr. Thangarajah did not give up. He requested me to collect several G.C.E.O/L past papers in Physics and collect all past questions based on Fortin's Barometer and the years those questions appeared for the examinations. Frequently a question asking the students to describe how the Fortin's Barometer was constructed and how it was operated appeared in the past papers. Armed with this information he again made a requisition for the Barometer along with the information about the question on Fortin's Barometer and also posing the question " how can a student answer such a question without seeing this equipment and handling it?". Thus he succeeded in making the department finally to supply the Fortin's Barometer to Velautham M.V. even before G.C.E.A/L Science classes were approved. This exemplifies how he was determined and dedicated in uplifting the science education at the school. This is only one instance. There are several such instances

of his dedication to the school. He spent most of his time including the week-ends at the school attending to the needs of the school specially attending to the improvement of the infrastructures in the laboratories.

Many students after completing their G.C.E. O/L with exceptionally good results and qualified to pursue G.C.E. A/L courses had to seek admission for higher studies in schools far away from their homes. Only limited admissions were available in a nearby school with G.C.E.A/L classes. There was an urgent need for starting A/L classes in the school. There was a very good team of commerce teachers at the school and a large number of students qualified for pursuing Commerce course at G.C.E. A/L level and Mr. Thangarajah succeeded in obtaining permission from the Ministry of Education to start G.C.E. A/L classes at the school in 1963. He also applied for permission to start a Science stream at A/L. The ministry was refusing every time an application was made giving the excuse that those students qualifying from this school could be admitted at the neighbowring school, as maintaining a science stream at A/L in a school was expensive in providing necessary teachers and laboratory facilities. There was a strong Science teaching staff at the school headed by Mr. Thangarajah along with Messers P.Sabaratnam, V.Thambippilai, Roy. S. Kantharajah, S.Sivapathasunderam, M. Kumarasamy and me. We continued to produce good results at the G.C.E.O/L examinations and several of our students had to seek admissions to G.C.E.A/L in schools very far from their homes and had to undergo much hardship in travelling to these schools and also being away from their homes. Then in 1966, 31 students in the G.C.E O/L class doing science subjects qualified to follow A/L classes in the Science Stream. Mr. Thangarajah made use of this opportunity in his own way writing adequately worded letters with supporting facts and succeeded in starting the G.C.E. A/L Sc. classes at Velautham M.V in the year1967 and the first batch of A/L Science students appeared for the examination in 1968. He had already prepared the field by having the necessary Science teachers and adequately equipped laboratories for obtaining permission to start the A/L science stream.

Mr. Thangarajah looked after all the members of the staff well and provided the necessary facilities for effective teaching. He also played a vital role in developing the school library. When he was principal, he was used to allocate a large sum of money every year from the school fund for the improvement of the school library. He sent Mr. S.Ehambaranathan and me to Colombo every year to purchase library books from book stores in Colombo. He also requested me to follow the Library Science course conducted by the Ceylon Association of Librarians, and to organize the library on a modern footing, classifying the books and introducing the card system to locate books. Once the library was organized, the Asia Foundation Represent ative at the time who happened to visit the school as well as the library was much impressed and told the principal that our school was qualified to obtain gifts of books from their Foundation. Thereafter our teachers, whenever they went to Colombo visited the Foundation and selected books in different fields of knowledge and these books were gifted to our school. As a result the school library housed a large number of reference

books with a strong collection of Science books as well. Thus Mr. Thangarajah had helped in making available to teachers and students a rich collection of books on science subjects as well.

In conclusion I am proud to pay tribute to a great teacher who has helped to plan, develop, provide and execute the science education program very successfully at the school from the inception and paved the way for many of our past students to excel in the field of science as Scientists, Medical doctors. Engineers, Technologists, Science educators, Accountants, Administrators and Technicians.

We the past students, present students, parents and the members of the larger community the school serves are greatly indebted to Late Mr. M.A. Thangarajah who is undoubtedly the Architect of Science Education at Velautham M.V. for his contribution towards the development of the school in varied other ways like the development of the infrastructure in the school, in addition to his contribution towards science education. Mr. Thangarajah must be remembered by posterity. The honour we can bestow to his memory is to at least name the new science block built to replace the old science laboratories planned and built by him - **Thangarajah Block.**

*கற்பனையென்பது அற்புதமான சக்தி; அந்த் சக்தி மனிதனிடம் இல்லையென்றால் கலையென்ற ஒன்று வாழ்க்கையில் இடம் பெற்றிருக்க முடியாது.*

**- மாக்ஸிம் கார்க்கி**

---

*ஆண்மையளிப்பதே கல்வியின் இலட்சியமாய் இருக்கவேண்டும். எல்லாப் பயிற்சிகளின் நோக்கமும் அதுவே. மனிதனுடைய மனோ சக்தியைத் தன்வயப்படுத்தி, பயன்படத்தக்க துறையிற் செலுத்துவதே கல்வி எனப்படும்.*

**- சுவாமி விவேகானந்தர்**

---

*அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தல் என்பது. கல்வியின் அடிப்படையான இலட்சியமே மனத்தை ஒருமுகப்படுத்துவது தான். சாதாரண மனிதனிலிருந்து சகல சித்திகளையும் பெற்ற யோகிவரை, எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும்.*

**- சுவாமி விவேகானந்தர்**

---

*உயர்ந்த கல்விப் பாடப் புத்தகத்திற்காகக் காத்திருந்தால், "தழைக்குப் பின் நான் தோன்றுவேனென்று" மரம் காத்திருக்கும் "கரைக்குப் பின் நான் தோன்றுவேனென்று நதிகாத்திருக்கும்"*

**- தாகூர்**

# "தமிழ் எழுத்துக்கலையின் தோற்றமும் வளர்ச்சி வரலாறும்-ஒரு மொழியியலாய்வு நோக்கு"

**கலாநிதி. கனகசபாபதி-நாகேஸ்வரன் M.A,PhD**

*முன்னாள் தலைவர், மொழித்துறை, சமூகவிஞ்ஞானங்கள் மொழிகள் பீடம்,*

*சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா*

## 1.1 பண்டைத் தமிழ் எழுத்து முறைமை :



"பரதகண்டம்' என்றழைக்கப்படும் இந்தியத் தமிழ் நாட்டில் தமிழகத்தில் மிகப் பழைமையானது என்று கருதப்படும் எழுத்து 'தமிழ்' ஆகும். தமிழ் ஒரு செம்மொழி ஆகும். இதைப் 'பிராமி' எழுத்தென்றும் "தென்னிந்தியப் பிராமி" எழுத்து என்றும் இதுவரை ஆய்வாளர்கள் வழங்கி வந்துள்ளனர். நம் வசதி கருதி இவ்வெழுத்தைப் "பழந்தமிழ் எழுத்து" "பண்டைத் தமிழ் எழுத்து" என்று கூறுகின்றோம். இவ்வெழுத்து கி.மு. 3–2ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் வழங்கி வந்திருக்கிறது என்று அண்மைக்காலம் வரை கருதப்பட்டது. "தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூலாங்குறிச்சிக் கல் வெட்டால் தமிழ் எழுத்தின் பழமை மேலும் ஒரிரு நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே இருத்தல் வேண்டும் என்று ஊகிக்க முடிகின்றது" என்கிறார் புகழ்பெற்ற தொல்லெழுத்தியலாய்வாளர் கலாநிதி. நடனகாசிநாதன்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் கி.பி.270 என்று கருதப்படுகின்றது. சிலர் கி.பி.4–5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும் கூறுகின்றனர். எழுத்துக்கலையின் வளர்ச்சி வரலாற்றையறிவதற்குச் சாசனங்களும் கல்வெட்டுகளும் பெருந்துணை புரிந்துள்ளன. மொழி, இலக்கண அமைதி, பேச்சு வழக்கு, எழுத்துமுறைமையெனும் அடிப்படைகளிலே கல்வெட்டுக்களும், சாசனங்களும் வரலாற்று ரீதியான மாற்றங்களையும் வளர்ச்சியையும் எடுத்து விளக்கப் பெரிதும் உதவியுள்ளன.

சிறப்பாக அறச்சலூர்க் கல்வெட்டு, புகழியூர்க் கல்வெட்டு என்பன குறிப்பிடத்தக்கன. ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன், தமிழகத்தில் காணப்பெறும் பழந்தமிழ்க் கல்வெட்டுகளை இரண்டு வகையாகப் பாகுபடுத்துகிறார். முதல் வகையில் புள்ளியில்லா மெய்வடிவு மெய்யை மட்டும் குறிக்கும்; அகரம் ஏறிய மெய்யைக் குறிக்காது. 'அ'கரம் ஏறிய மெய்யைக் குறிக்க ஒரு கோடு இடப்பட்டது. இக்கோடு "ஆ"காரத்தைக் குறிக்கவும் இடப்பட்டிருக்கிறது. இரண்டாம் வகை எழுத்தில் புள்ளியில்லா மெய்எழுத்து 'அக'ரம் ஏறிய மெய்எழுத்தாகக் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இக் கல்வெட்டுக்களில் 'எ'கரம், 'ஏ'காரம் 'ஒ'கரம் 'ஓ'காரம் குறில் நெடில் பிரித்துக் காட்டுவதற்கு எவ்விதக் குறியும் இடப்படவில்லை என்றும், இக் கல்வெட்டுகளில் கூட்டெழுத்துக்களே காணப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார் ஐராவதம் மகாதேவன்.

டாக்டர் இரா. நாகசாமி இக்கல்வெட்டுக்களைப் பற்றி மேல்வருமாறு குறிப்பிடுவார்.

"புகழூர், அறச்சாலூர்க் கல்வெட்டுக்களில் மெய்யைக் குறிக்கப் புள்ளியிடப்பட்டிருக்கிறது என்றும், 'ஏ'கர 'ஒ'கரம் குறிக்கவும் புள்ளி

இருக்கிறது''என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இவர் குறிப்பிடும் கல்வெட்டுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும். இதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டிருப்பவைகளில் மெய்யைக் குறிக்கவும் புள்ளி காணப்படவில்லை.

அவைகளில் 'அ'கரம் ஏறிய உயிர் மெய்யைக் குறிக்கச் சில இடங்களில் மெய் எழுத்துக்குப் பக்கத்தில் ''அ''கரத்தைத் தனியாக எழுதிக் காட்டியிருக்கிறார்கள். சில இடங்களில் 'அ'கரம் 'ஆ'காரம் ஏறிய உயிரைக் குறிக்கக் கோடு இடப்பட்டிருந்தாலும் மிகப்பழைய முறையான மெய்யையும், உயிரையும் தனித்தனியாக எழுதிக்காட்டும் முறையையும் பயன் படுத்தியிருக்கிறார்கள். இம்முறை அக்கல் வெட்டுகளின் பழைமைத் தன்மையைக் காட்டா நிற்கும்.(காட்டும்) அத்தோடு இக்கல் வெட்டுக்களில் எதிலுமே கூட்டெழுத்துக்கள் காணப்பெறவில்லை என்பதும் இவ் வெழுத்துக்களின் மிகப் பழமைத் தன்மைக்கு மற்றொரு சான்றாகக் கருதலாம்.

அசோகனது கல்வெட்டுகளிலே நன்றாக வளர்ச்சியடைந்த ஒரு முறையான எழுத்தைக் காணலாம். அசோகனது கல்வெட்டுகளில் புள்ளியிடப்படவேண்டிய இடங்களில் புள்ளியிட்டே எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் உயிரெழுத்துக்கள் பத்து எழுதப்பட்டுள்ளன. 'ஐ'காரமும் 'ஔ'காரமும் காணப்படவில்லை. தொல்காப்பியத்தில் 'அ'கரமும், 'இ'கரமும், 'அ'கரமும், 'ய'கரமும் ஒற்றும் 'ஐ'காரமாகும். என்றும் 'அ'கர, 'உ'கர, 'ஔ'காரம் ஆகும் என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. அதன் படி பார்க்கையில் 'அ'கரத்தையும், 'இ'கரத்தையும், 'அ'கரத்தையும், 'ய'கர ஒற்றுமையும் தனித்தனியாக எழுதி அதை 'ஐ'காரம் எனக் கொண்டார்களென்றும் 'அ'கர, 'உ'கரத்தைத் தனித்தனியாக எழுதி 'ஔ'காரம் எனக் கருதினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தவகையில் பார்த்தாலும் தமிழகக் கல்வெட்டுகள் மிகவும் ஆரம்பகட்ட நிலையிலேயே இருந்திருக்கின்றன என்று கருத வேண்டியுள்ளது, இவ்வகையில் திரு. டி. என். சுப்பிரமணியம் கூறும் கருத்து மிகவும் பொருத்தமானதாகத் தெரிகிறது. தாம் தொகுத்து வெளியிட்ட South Indian Temple Inscriptions, Vol III, Part II (தென்னிந்திய கோயிற் சாசனங்கள், தொகுதி 3, பகுதி 2),

''பிராமி எழுத்தானது திராவிட மொழிகளுக்காகவே உருவாக்கப்பட்டது. என்றும் குறிப்பாக அவைகளுள் பழமையானதான தமிழுக்காக அது தோற்றுவிக்கப்பட்டது என்றும், பின்னாளில் பிராகிருத மொழி அதனைப் பயன்படுத்திக் கொண்டது என்றும், நாளடைவில் இந்தியா பூராவும் அதுவே பழக்கத்தில் நிலவியது'' என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மௌரியப் பேராசன் அசோகன் தமது கல்வெட்டுக்களைப் பிராகிருத மொழியிலும் பாளி மொழியிலும் எழுதிய போது இவ்வெழுத்தைப் பயன்படுத்தியிருக்கிறான். பின்னர் வந்த குப்தப் பேரரசர்களும் இவ் வெழுத்தையே உபயோகித் திருக்கின்றனர்.

### 1.2 பிராகிருதம் என்றால் என்ன?

''பிராகிருதம்' என்பது புராதன காலத்தில் இந்தியாவில் வழங்கிய மொழிகளில் ஒன்றாகும். அது வேதங்கள் பிரதிபலிக்கும் சமஸ்கிருத மொழியின் வழிவந்ததென்பது மொழி வரலாற்று அறிஞரின் கொள்கையாகும். ஆரியமல்லாத மொழிகள் பலவற்றைப் பேசியவர்களின் மத்தியிலே புராதனமான சமஸ்கிருதம் செல்வாக்குப் பெற்றதும் அது உருமாறிவிட்டது. வேற்று மொழிச் சொற்கள் பல அதிற் கலப்புற்றன. சொல்லமைதியிலும் உச்சரிப்பிலும் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. பிராகிருதம் இலகு படுத்தப்பட்ட பேச்சுவழக்கான மொழியாகும். திராவிட மொழிகளின் செல்வாக்கு அதிற் கணிசமான அளவில் ஏற்பட்டுள்ளது.

பிராகிருதமொழி வழக்கிலே பிராந்திய வேறுபாடுகள் காணப்பட்டன. காந்தாரி சௌரசேனி, மாகதி அர்த்தமாகதி, மஹாராஷ்ட்டிரி என்பன தனித்துவமான பிராகிருதங்களாகும். அசோகன் காலம் முதலாக கி.பி.4ஆம் நூற்றாண்டு வரை பிராகிருதம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படு த்தப்பட்டது. அரசர்கள் பிராகிருதத்தை ஆவணமொழியாகப் பயன்படுத்தினார்கள். திராவிட மொழிகள் வழங்கிய கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றிலும் ஈழத்திலும் பிராகிருதமே ஆவண மொழியாக வழங்கியது. மத்திய காலத்தில் உருவாகிய ஹிந்தி, பஞ்சாபி, குஜராத், மராட்டி, வங்காளி, காஷ்மீர், சிந்தி போன்ற இந்திய மொழிகள் பிராகிருதத்தை மூலமாகக் கொண்டவை. பிராகிருதச் செல்வாக்கினால் அங்கு வழங்கிய புராதன மொழிகள் பலவிடங்களில் வழக்கொழிந்து விட்டன. இலங்கையிலுள்ள ஆதி காலச் சாசனங்கள் பிராகிருத மொழியில் எழுதப் பட்டுள்ளன. பிராகிருதத்தின் மேலோங்கிய செல்வாக்கினால் அங்கு நிலவிய ஆதியான மொழிகள் தென்னிலங் கையில் அழிந்து விட்டன. இலங்கையில் வழங்கிய பிராகிருதம் மூலமாகவே சிங்கள மொழி உருவாகியது.

பிராகிருதம் இலக்கிய வடிவம் பெறுவதற்குச் சமண, பௌத்த சமயங்களே காரணமாயிருந்தன. இவர்களின் புராதனமான நூல்கள் பிராகிருத மொழியில் அமைந்தவை. திரிபீடகத்திலும், சமணரின் மறை நூல்களிலும் சமகாலப் பிராகிருத மொழியின் இயல்புகளைக் காணலாம். தக்கிணத்தில் ஆதிபத்தியம் பெற்றிருந்த சாதவாகனரும் அவர்களின் பின் வந்த மன்னர் குலத்தவரும் பிராகிருத மொழியைப் பயன்படுத்தினார்கள்.

தென்னாசியாவிற் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட 3500 வரையான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவற்றுட் கணிசமான அளவிலுள்ளவை இலங்கையிற் கிடைத்துள்ளன. கி. பி. 4ஆம் நூற்றாண்டளவிலே தொடர்பு மொழி என்ற வகையிற் பிராகிருதம் வழக்கொழிந்தது, சமஸ்கிருதம் அதன் இடத்தைப் பெற்றுவிட்டது. புலவர் பலர் பிராகிருத மொழியிலே எழுதிய தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. 'ஹால' என்பாரின் 'காதாசப்தசதீ' என்பது அத்தகைய பாடல்கள் பலவற்றின் தொகுப்பு நூல் ஆகும். அதில் அடங்கிய பாடல்கள் இனிய சந்தங்களிலமைந்தவை. சமஸ்கிருத மொழியிலுள்ள நாடகங்களிலே பிராகிருத மொழிப் பகுதிகள் உண்டு. பரத கண்டத்திற்கு வெளியே, இந்தியப் பண்பாடு பரவிய தேசங்களிற் பிராகிருதம் செல்வாக்குப் பெற்றிருந்தது. தென் கிழக்காசியாவில் கிடைத்துள்ள மிகப்புராதன சாசனங்கள் பிராகிருத மொழியில் அமைந்தவை. மத்திய ஆசியாவிலே 1892இல் கோட்டானிற் பிராகிருத மொழியில் எழுதிய 'தம்மபத' ஏட்டுக் சுவடிகள் கிடைத்துள்ளன. துருக்கிஸ்தானில் கரோஷ்டி லிபியில் எழுதிய பிராகிருத ஆவணங்கள் பல கிடைத்தமை கவனத்திற்குரியதாகும். (ஆதாரம் கலைக்களஞ்சியம் 2009), இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை. யூனி ஆட்ஸ் பிரைவேட் லிமிட், கொழும்பு, பக் 213–214.

### 1.3 பிராமி வரிவடிவங்களும், சாசனங்களும் ;

வரலாற்றாய்வாளர்களான பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா, பேராசிரியர் சி. க. சிற்றம்பலம், பேராசிரியர் பொ. இரகுபதி, பேராசிரியர் ப. புஷ்பரத்தினம், பேராசிரியர் செ. கிருஷ்ணராசா, கலிங்கு நடன, காசிநாதன், கலாநிதி எஸ். வி. சண்முகம், பேராசிரியர் வி. சிவசாமி போன்றோர் பிராமிச் சாசனங்கள் குறித்து விரிவாக எழுதியுள்ளனர். மொழியியல் நோக்கிலே பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, க. கைலாசபதி, அ. சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், சுசீந்திராசா, சுபதினி ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

'பிராமி' என்பது புராதன காலத்திலே பரத கண்டத்தில் வழங்கிய ஒரு வகையான எழுத்து முறை. ஏறக்குறைய கி. மு. 260 முதல் கி. பி. 350 வரை பிராமி எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டன.

மிகப்பழைய ஆவணங்கள் பிராமியில் எழுதப்பட்டுள்ளன. அசோகனுடைய சாசனங்கள் காலத்தால் முற்பட்டவை. அச்சாசனங்களிற் காணப்படும் எழுத்துக்கள் வளர்ச்சி பொருந்திய நிலையிற் காணப்படுகின்றன. அவை செம்மையாகவும், அழகான முறையிலும் வெட்டப்பட்டுள்ளன. பரத கண்டத்து எழுத்தியல் வரலாற்றிற் பிராமி வரிவடிவங்களுக்குச் சிறப்பிடமுண்டு. இந்திய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படும் எழுத்து முறைகள் எல்லாம் பிராமி வரிவடிவங்களை மூலமாகக் கொண்டவை. பிராமியிலிருந்து வளர்ச்சி பெற்றது. தேவநாகரம் என்னும் எழுத்தின் வகையாகும். அது குப்தப் பேரரசரின் காலத்திலே வழக்கில் வந்தது. தேவநாகரத்தின் மூலம் வங்காளி, ஹிந்தி, மகாராஷ்ட்ரி, குஜராத்தி முதலியன வடஇந்திய மொழிகள் எழுதப்படும் வரிவடிவங்கள் வளர்ச்சி பெற்றன. இந்தியாவில் ஏறக்குறைய 2000 பிராமிச் சாசனங்கள் கிடைத்துள்ளன. இலங்கையிலும் அதேயளவு கிடைத்துள்ளன.

இலங்கையின் பலபகுதிகளிலும் பௌத்த சமயம் பரவிய முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் தமிழ்மொழி பேசியவர்கள் வாழ்ந்தமைக்குப் பிராமிச் சாசனங்கள் ஆதாரமாகின்றன. அவற்றிலே தமிழ்ச் சொற்களும், பிற திராவிட மொழிச் சொற்களும் அடங்கியுள்ளன. தமிழ் மொழிக்குச் சிறப்பாகவுள்ள தமிழ்பிராமி எழுத்துக்கள் அவற்றிலே காணப்படுகின்றன. பிராகிருதச் சொற்கள் பல தமிழ் சொல்லமைதி களுக்கேற்ப விகாராமாகி வருகின்றன.

பிராமிச்சாசனங்களுட் தமிழ் பிராமிச் சாசனங்கள் பற்றியும் கவனித்தல் வேண்டும். தமிழ் பிராமியச் சாசனங்கள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி, பி. 4 ஆம் நூற்றாண்டு வரையான காலத்திற்குரியவை. தமிழிலேயே எழுதப்பட்டுள்ள மிகவும் புராதனமான ஆவணங்களாகும். தமிழ் மொழி வரலாறு, தமிழக வரலாறு, தமிழ் எழுத்தின் வரலாறு என்பன தொடர்பான மூலங்கள் என்ற வகையிலே தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

பிராமி, தமிழ் பிராமி, என்பவனவற்றிற்கு இடையிலான வேறுபாடு விளக்க வேண்டியதாகும். பிராகிருத மொழியில் இடம் பெறாத ஒலி வடிவங்கள் சில தமிழில் உண்டு. தமிழ் மொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட பிராமி வரிவடிவங்களே தமிழ்பிராமி எனப்படுவை. ஆதி காலத்து இந்திய மொழி வல்லுநர்கள் தமிழ்பிராமியின் சிறப்பியல்புகளை இனங்கண்டிருந்தனர். அதனைத் “தாமிழி’ என்றுந் ‘திராவிடி’ என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்பிராமி எழுத்துக்கள் சாசனங்களில் மட்டுமன்றி முத்திரைகளிலும் மோதிரங்களிலும் எழுதப்பட்டுள்ளன. பானைகளதும் வேறு மட்பாண்டங்களினதும் கழுத்துப் பகுதியில் எழுதப்பட்டுள்ளமை தமிழ்பிராமியின் சிறப்பம்சமாகும். அழகன் குளம், அரிக்கமேடு, கொடுமணல் முதலான இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் இத்தகைய எழுத்து பொறித்த கலவோடுகள் நூற்றுக்கணக்கிலே கிடைத்துள்ளன. உப அன், வேள் இசாம்பன், தித்தன், பேர் ஆவதன், கண்ணன், ஆதன், பதுமாற்கோதை, விசாகன் போன்ற பெயர்கள் அவற்றில் உள்ளன. தமிழ்ப் பிராமியில் எழுதிய கலவோடுகள் நூற்றுக் கணக்கில் ஈழத்திலே கிடைத்துள்ளமை குறிப்பிடற் குரியது. அநுராதபுரத்திலே மையப் பகுதியில் அகழ்வாராய்வுகள் நடைபெற்ற காலத்தில் நூற்றுக்கும் மேலான பிராமி எழுத்துக்கள் பொறித்த கலவோடுகள் கிடைத்தன. அவ்வகழ்வாய்வுகள் மூலம் பெறப்பட்ட எல்லாக் கலவோடுகளும் வெளியிடப்படின் பௌத்த சமயம் இலங்கையிலே அறிமுகமாகிய காலத்தில் அநுராத புரம் அடங்கிய வடபகுதிகளிற் கணிசமான தொகையினராகிய மக்கள் தமிழ் மொழி பேசினார்கள் என்ற கருத்து மேலும் உறுதியாகிவிடும்.

தமிழ் பிராமி வரிவடிவங்கள் வட்டெழுத்து முறையின் வளர்ச்சிக்கு மூலமாயிருந்தன. பல்லவர் காலத்திலே சமஸ்கிருத மொழியை எழுதுவதற்குத் தமிழகத்தில் உருவாக்கப்பட்ட கிரந்த எழுத்துக் களும் சோழப் பேரரசர் காலத்திலே தென் னிந்தியாவிலும், ஈழத்திலும் பரவி வழமையாகி விட்ட தமிழ் வரிவடிவங்களும் தமிழ் பிராமி எழுத்துக்களை மூலமாகக் கொண்டவை என்ற கருத்துகள் பெரிதும் மனங்கொளத்தக்கவை.

**1.4 அசோகனது பிராமிக் கல்வெட்டுகளில் மொழி :-**

கலாநிதி நடன காசிநாதன் இது குறித்து எழுதும் விவரணங்கள் வருமாறு:

"இ கரத்திலிருந்து 'ஈ'காரத்தையும் வேறுபடுத்திக் காட்ட மேலும் ஒரு புள்ளியைச் சேர்த்திருக்கின்றார்கள். இம்முறை தமிழ்நாட்டில் நெடிலிலிருந்து குறிலாக்கப் பயன்படுத்திய புள்ளியிடும் முறையை ஒட்டியதாகும். என்றும் ஆனால் அவர்கள் குறிலுக்குப் பதிலாக நெடிலுக்குப் புள்ளியிட்டிருக்கின்றனர் என்றும் அவர்கள் கூறுவது சிந்திக்கத் தக்கது.

மெய்யைப் புள்ளியிட்டுக் காட்டுவதும் 'எ'கர 'ஒ'கரத்துக்குப் புள்ளியிடுவதும் தொல்காப்பிய காலத்தில் நிகழ்ந் திருக்கிறது. அதே போன்று **அறச்சலூர் புகழூர்க் கல்வெட்டுகளின் காலமான கி. மு. 2 முதல் கி. பி. 2 ஆம் நூற்றாண்டிற்குள் உள்ள கால கட்டத்தைச் சார்ந்ததாகத்தான் தொல்காப்பியம் இருத்தல் வேண்டும். மெய்யைக் குறிக்கப் புள்ளியிடும் எழுத்துக்கள் வழங்கி வந்த காலம் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தியது. தொல் காப்பியத்தில் பல இடங்களில் 'என் மனார் புலவர் என்ப' என்ற சொற்கள் காணப்படுகின்றன. அவை தொல்காப்பியருக்கு முன்பிருந்த நிலைமையைக் குறிப்பதாகும்.**

தொல்காப்பியர் காலத்திலேயே பழைய சில எழுத்து மரபுகள் வழக்கொழிந்து விட்டன என்பது பெறப்படுகின்றது. நன்னூல் சூத்திரம் (98) 'தொல்லை வடிவான எல்லா எழுத்தும் என்று கூறுகின்றது. ஆகவே தொல்காப்பியம் நன்னூல் ஆகியவற்றின் காலங்களுக்கு முன்பதாகவே கருத்துக்கள் ஒரு நிலையான வடிவம் பெற்றிருந்தன என்பது புலப்படுகின்றது. அக்காலக் கட்டத்தில் தான் மாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும். ஆகவே அவை காலத்தினால் முந்தியவையாகின்றன. ஆதலால் தான் அவை கி. மு. 5–4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம். என்று கருத வேண்டியுள்ளது. மேலும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டிப்புரோவவில் கிடைத்துள்ள கல்வெட்டும் இதற்கு உறுதுணையாகின்றது. அக்கல்வெட்டிலும் மெய்யைக் குறிக்கப் புள்ளியில்லை. மேலும் 'அ'கரம் ஏறிய மெய்யைக் காட்டப் பக்கக்கோடு ஒன்று இட்டும் 'ஆ'காரம் ஏறிய மெய்யைக் குறிக்கப் பக்கக் கோட்டோடு கீழ் நோக்கிய கோடு ஒன்று இட்டும் எழுதியிருப்பது மனத்தில் கொள்ள வேண்டியதாகும். இம்முறை மாங்குளம் ஆகிய இடத்தில் காணப்படும் கல் வெட்டுக்களின் வளர்ச்சியைக் காண்பிப்பதாகக் கருதுதல் வேண்டும்".

தமிழகத்தில் பழந்தமிழ் எழுத்துப் பொறித்த கல்வெட்டுக்கள் மலைக் குகைகளில் மட்டு மல்லாமல் பானை ஓடுகள், காசுகள் ஆகியவற்றிலும் கிடைத்துள்ளன. அரிக்கமேடு, கொற்கை, உறையூர், காஞ்சிபுரம், கரூர், வல்லம்,

கொடுமணல் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் பானை ஓடுகளில் இவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. வட ஆர்க்காடு மாவட்டம் செங்கத்துக்கு அருகில் உள்ள ஆண்டிப்பட்டியில் கிடைத்த ஈயக்காசுகளில் இவ்வெழுத்துப் பொறிக்கப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் மக்களிடத்தில் இவ்வெழுத்துப் பெற்றிருந்த செல்வாக்கைப் புலப்படுத்துவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு மதத்தார் தான் இவ்வெழுத்தைப் பரப்பினர் என்ற கருத்தை உடைத்தெறிவதாக இதைக் கருதலாம். அனைத்து மக்களும் நன்கு அறிந்த ஒரு எழுத்தாக இது நிலவி வந்திருக் கிறது. அவ்வாறெனில் தொன்றுதொட்டே இது வழங்கி வந்திருத்தல் வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம் பானை ஓடுகளிலும் குறிப்பாக கறுப்பு, சிவப்புப் பானை ஓடுகளில் இவ்வெழுத்து எழுதிப் பெற்றிருப்பது இவ்வெழுத்துக்களின் பழமை கி. மு. 5–4ஆம் நூற்றாண்டு என்று கொள்வதற்கு மேலும் ஆதாரமாக அமைகிறது.

(தமிழ்மொழிக்காக ஏற்படுத்தப்பட்ட இவ் வெழுத்தைப் பின்னாளில் பிராகிருத மொழி பயன்படுத்திக் கொண்டது என்னும் கருத்துக்குச் சான்றாகச் சாதவாகனர்களின் இரு மொழிக் காசுகளைக் கூறலாம். அக்காசுகளில் ஒரு பக்கத்தில் தமிழ்மொழியிலும் மற்றொரு பக்கத்தில் பிராகிருத மொழியிலும் எந்த மன்னனால் அக்காசு வெளியிடப்பட்டது என்பது குறிக்கப் பெற்றிருக்கும். இரு மொழிகளிலுமுள்ள வாசகங்கள் பழந்தமிழ் எழுத்திலேயே எழுதப்பட்டுள்ளன. ஆகவே தமிழ் எழுத்தைப் பின்னாளில் தமிழும் பிராகிருதமும் இணைந்து பயன்படுத்தியது தெரிவாகிறது. அண்மையில் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் சாதவாகனர்களும் சாளுக்கியர்களும் வேளிர் வழி வந்தவர் என்று கூறியிருப்பது மேலும் சில ஊகங்களைக் கொள்வதற்குத் தூண்டு கோலாக அமைகிறது.

மொஹஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகம் முதற்காலத் திராவிடர் நாகரிகம் என்றும், அக்காலத்திய எழுத்துக்கள் முதற்காலத் திராவிட மொழியை எழுதுவதற்குப் பயன்பட்டிருக்கின்றன என்றும் ஐராவதம் மகாதேவன் போன்ற ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்தோடு அங்கு வேளிர்கள் வாழ்ந்து வந்தனர் என்று ஐ. மகாதேவன் கூறியுள்ளார். அந்நாகரிகம் அழிவுற்றதற்குக் கூறப்படும் காரணங்களில் இந்தோ ஆரியர் தாக்குதலையும் ஒரு காரணமாகக் கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் தாக்கியதால் வேளிர்கள் தெற்குத் திசைநோக்கி நகர்ந்திருக்கக் கூடும். அதன் காரணமாகத் தான் குஜராத் மாநிலத்திலுள்ள லோத்தலில் அவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்றும் அங்கும் அவர்கள் அம்மொழியையும் எழுத்தையும் பயன் படுத்தியிருக் கின்றார்கள் என்றும் நம்பலாம்.

வேளிர்கள் தென்திசை நோக்கிச் சென்றதைத் தான் அகத்தியர் தலைமையில் ஒரு குழு தமிழ் நாட்டுக்கு வந்ததாகத் கூறப்படும் கதை தெரிவிப்ப தாகவும் கருதலாம். அத்தோடு துவராபதியைத் தலைவராகக் கொண்ட கண்ணனின் வழிவந்த வேளிர் ஐம்பது தலைமுறைக்குப் பிறகு இருக்கு வேளிர் என்ற பெயரில் தமிழ்நாட்டில் இருந்திருப்பது வேளிர் கி. மு. 1000 அளவில் தென்திசை நோக்கி வர ஆரம்பித்து விட்டனர் என்பதைக் கூறுவதாக உள்ளது. அப்படி வந்தவர்கள் தாங்கள் அறிந்திருந்த எழுத்தையும் தென்திசைக்குக் கொண்டு வந்து மேலும் வளர்ச்சியைச் செய்திருக் கின்றனர். அதைத்தான் பாண்டிய(ன்) செல்லே டுகள் “அகத்தியனோடு தமிழாய்ந்து” என்று தெரிவிக்கின்றன என்று கருதலாம். அவ்வாறு ஆராய்ந்து வளப்படுத்திய எழுத்துக்கள் தாம் தமிழ்நாட்டுக் குகைகளிலும், பானை ஓடுகளிலும், காசுகளிலும் காணப்பெறும் எழுத்துக்கள். தமிழகத்தில் வளர்ச்சியடைந்த எழுத்தாக இருக்கின்ற காரணத்தால் தான் அண்மை நாடான இலங்கையில் இவ்வெழுத்தில் ஆயிரக்கணக்கான

கல்வெட்டுக்களைக் காணமுடிகிறது. மொஹஞ்ச தாரோ, ஹரப்பா எழுத்துகளை அறிந்திருந்த வேளிர்கள் தென்திசை நோக்கி வந்துவிட்டதாலும் மனப்பாடம் மூலமே பயின்று வந்த இந்தோ ஆரியர் மட்டுமே இந்தியாவின் வடபகுதியில் தங்கி விட்டதாலும் ஹராப்பா நாகரிகத்துக்கும் மௌரியர் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வடபகுதியில் எழுத்துவரை முடியாத ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. என்று ஊகிக்கலாம். பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்பட்ட இந்த எழுத்தை அசோகன் சில மாற்றங்கள் செய்து தம் காலத்தில் பயன்படுத்திப் பல கல்வெட்டுகளைப் பொறித்திருக் கின்றான் என்று கருதலாம். மேலும் மெகஸ்தனிஸ் சந்திரகுப்த மௌரியர் காலத்தில் எழுத்துக்களே வழங்கவில்லை என்று கூறியிருப்பதும் இக் கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைகிறது.

(தமிழகத்துத் தமிழ் எழுத்தின் பழமைக்கு மற்றொரு காரணத்தையும் கூறலாம். தமிழகத்து மலைக் குகைகளில் காணப்பெறும் கல்வெட்டுகள் அனைத்தும் (மாங்குளம், புகழூர்க் கல்வெட்டைத் தவிர) ஓரிரு வரிகளிலேயே காணப்படுகின்றன. அவைகளின் மொழிகூட நல்ல வளர்ச்சியடைந்த ஒன்றாகத் தெரியவில்லை. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண் டெனச் சங்க காலத்தைக் குறிப்பிடுகிறார்கள். சங்க காலத்து இலக்கியங்களில் ஒரு பண்பட்ட மொழி நடையை நாம் காணமுடிகிறது. ஆனால் மாங்குளம் போன்ற கல்வெட்டுகளில் பயிலப் பட்டுள்ள சொற் தொடர் வளர்ச்சியடைந்த ஒன்றாகத் தெரிவில்லை. தொடக்க கட்டத்தில் (Primitire Stage) உள்ளதாகவே தோன்றுகிறது. "கணிநந்தா சிரிய குவன் கே தம்மம்" (மாங்குளம்) போன்ற தொடர்களை உதாரணமாகக் காட்டலாம். பிறகு நன்றாக வளர்ச்சியடைந்த நிலையில் தான் கி. மு. 2ஆம் நூற்றாண்டளவில் இவ்வெழுத்தின் தன்மையை விளக்கி இலக்கணம் வகுக்கப்பட்டது. அதை விளக்குவதற்காகத் தான் தொல்காப்பியம் விளங்குகிறது. பிறகு அந்த எழுத்தில் தான் கடைச்சங்க கால இலக்கியங்கள் எழுதப் பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வெழுத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியில் இருவேறு வடிவான எழுத்துக்கள் உருவாகின்றன. ஒன்று நேர்கோடுகள் அப்படியே இருக்க படுக்கைக்கோடுகள் மட்டும் வளைந்து வளர்வது. இரண்டாவது நேர்க்கோடுகளும் படுக்கைக் கோடுகளும் வளைந்து வளர்வது. இவ்வளர்ச்சி கி. பி. 1–2ஆம் நூற்றாண்டில் ஆரம்பமாகின்றன. கி. பி. 3–4ஆம் நூற்றண்டளவில் ஒரு கட்டத்தை அடைகிறது. அப்பொழுது ஒரு வகை எழுத்துக்கு (வளைவு வளைவாக உள்ள எழுத்துக்கு) 'கண்ணெழுத்து' என்று பெயர் வழங்கியிரு க்கின்றது. இந்த வகை எழுத்தில் தான் சிலம்பு, மணிமேகலை போன்ற இலக்கியங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. இவ்வெழுத்து மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இதற்கு 'வட்டெழுத்து' என்று பெயர். சிலம்பும், மணிமேகலையும் மக்கள் காப்பியங்கள் என்றும் அவை முதலில் மக்கள் மத்தியில் நாட்டுப்புறப் பாடல்களாகவோ அல்லது நாடகங்களாகவோ வழக்கில் இருந்திருக்கின்றன என்ற கருத்திற் கேற்பவும் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த வட்டெழுத்தால் அவை எழுதப்பட் டிருக்க வேண்டும்.

ஆதலால் இளங்கோவடிகளும் அக் காலத்திய எழுத்தைத் "கண்ணெழுத்து" என்றும் அவ் வெழுத்தை எழுதுபவர்களைக் "கண்ணெ ழுத்தாளர்" என்றும் கூறிப் போந்தார். ஆனால் அதே நேரத்தில் மன்னர்கள் அரசவையில் முதல்வகை எழுத்துச் செல்வாக்குப் பெற்றிருந் திருக்கின்றது. கி. பி. 2–3ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு கி. பி. 6ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி செய்த அரசர்கள் என்று கருதப்படும் களப்பிரர் காலத்தில் அரசவையில் பயன்படுத்திய எழுத்தை நாம் பார்க்க இயலவில்லை. அந்தக் காலகட்டத்துச் செப்புப் பட்டயங்கள் அல்லது காசுகள் ஏதேனும் கிடைக்குமாயின் அதிலிருந்து நாம் தெரிந்து

கொள்ள வழி பிறக்கும். கி. பி. 6ஆம் நூற்றாண்டில் பல்லவ மன்னன் சிம்மவர்மனின் செப்பேட்டில் திடீரென ஓரளவு வளர்ச்சி பெற்ற முதல் வகை எழுத்தை நாம் காண முடிகிறது. இது எவ்வாறு இயலும்? அதற்கு முந்திய நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றிருந்தால் தானே இவ்வாறான எழுத்தை நாம் காணுதல் இயலும். ஆகவே அவ்வெழுத்துக்கள் உள்ள கல்வெட்டுகளையோ செப்பேடுகளையோ அல்லது காசுகளையோ நாம் கண்டுபிடித்தாதல் வேண்டும்.

இந்தக் காலகட்டத்தைச் சார்ந்த பல்லவர் செப்பேடுகளைக் காண்கிறோம். ஆனால் அவை ஆந்திரப் பகுதியிலிருந்து வெளியிடப்பட்டவையாதனால் அவை பிராகிருத மொழியிலும் வளர்ச்சியடைந்த பழந்தமிழ் எழுத்திலும் உள்ளன.

இதற்குக் காரணம் சாதவாகனர்கள் பழந்தமிழ் எழுத்தைப் பிராகிருதம், தமிழ் ஆகிய மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தியமை யேயாகும். அவர்கள் வழிவந்த பல்லவர்களும் பழந்தமிழ் எழுத்தையே பிராகிருத மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழ் மொழியில் செப்புப் பட்டயத்தை அரசவை எழுத்தான முதல் வகைத் தமிழ் எழுத்தில் எழுதியிருக்கிறார்கள். அந்தவகையில் தான் முதன்முதலில் பள்ளன் கோவில் செப்பேட்டில் முதல் வகைத் தமிழ் எழுத்தைக் காண முடிகிறது.

*பசித்த ஒருவனுக்கு இன்று நீ சோறுபோடலாம்; ஆனால் நாளைக்கும் அவனுக்குப் பசிக்கும் ஒரு தொழிலை அவனுக்கு நீ கற்றுக் கொடுத்தாலே, ஆயுள் உள்ள மட்டும் அவன் ஜீவனத்துக்குச் சம்பாதித்துக் கொள்வான்.*

**- இராமதீர்த்தர்**

---

*பொறுப்புணர்ச்சி உள்ளவர்களையும், கடமையை ஏற்கக் கூடியவர்களையும், சரி எது? பிழை எது? என்று கிரகித்து முடிவுக்கு வர ஆற்றல் உள்ளவர்களையும் உண்டாக்குவது கல்வியின் நோக்கங்களுள் ஒன்று.*

**- ப. சந்திரசேகரம்**

---

*இந்த உலகில் மிகவும் புரட்சிகரமானது என்னவென்றால் அதுதான் கல்வி; ஒரு எழுத்தைக் கற்றுத் தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். ஒரு பாமாலை கட்டுவது எதிரியைத் தாக்க ஒரு கட்டுக் கட்டப்படுகிறது என்று அர்த்தம்.*

**- இங்கர்சால்**

---

*கவிதைக் கலையில் ஓர் இன்பம் உண்டு, அதைக் கவிஞர் மாத்திரம் அறிவர்.*

**- வில்லியம் கூப்பர்**

---

*கவிதை என்பது கடல்மடை திறந்ததுபோல் கனவேகத்தில் குதித்து ஓடிவரும் உணர்ச்சிப் பெருக்கு.*

**- வேர்ட்ஸ் வேத்**

# அருள் திருமுருகனின் எழிலும், அவன் பெருமையும்

"கலாபூஷணம்" பருத்தியூர் பால வயிரவநாதன்



"ஓர் உருவம், ஓர் உருவம்
இல்லாதான் எங்கள் இறை"

**உ**லகில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும், ஜீவனற்ற ஜடங்களுக்கும் முதன்மைத் தலைவனான எமது ஈசனை நாம் பக்தி மிகுதியினால் பல் ஆயிரம் நாமங்களாலும், பல்வேறு தோற்றங்களாலும் உருவகித்து எங்கள் மேலான அன்பை வெளிப்படுத்துகின்றோம். இதனையே மணிவாசகப் பெருமான்,

"ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

ஒவ்வொருவரும் தத்தம் நிலைக்கேற்ப உருவமும், நாமகரணமும் சூட்டி மகிழ் வெய்துவது இயல்பேயாம்.

எங்கள் தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமான், இந்த உலகிற்கும், அண்டசராசரங்களுக்கும், முதல்வனாக இருக்கின்ற போதிலும் தமிழ்ப் பெருமக்கள், அவனைத் தமிழ்த் தெய்வமாகவே வழிபாடு செய்கின்றனர்.

பழந் தமிழ் மக்கள் தாங்கள் வாழ்ந்த மண்ணை அதன் இயல்புக்கேற்ப நான்கு வகையாகப் பிரித்துப் பெயரிட்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்கின்ற பெயர்களே இவையாகும்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென்று
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே

**- தொல்காப்பியம், அகத்திணை இயல் 5**

மேற்சொன்ன நான்கு நிலத்திற்கும், நான்கு கடவுளர்களைத் தலைவனாகக் கொண்டு வழிபாடு செய்தனர். முல்லை நிலத்திற்குக் காத்தல் கடவுளாம் திருமாலையும், குறிஞ்சி நிலத்திற்கு அழகன் முருகனையும், மருத நிலத்தின் தெய்வம் இந்திரன் என்றும், நெய்தல் நிலத்துத் தெய்வம் வருணன் என்றும் கொண்டாடி வணங்கினர்.

இங்கு மலையும், மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நிலத்துத் தலைவனாக, அழகேயுருவான முருகன் போற்றப்பட்டு வந்தான். அதன் வழி, வழியாகவே, இன்று தமிழ் கூறும் நல்லுலகு எங்கணும், தமிழர் தலைவனாக முருகனை நாம் வழிபாடு செய்துவருகின்றோம். "முருகு" என்றால் "அழகு" என்று பொருள்படும். மேலும் முருகனுக்கு வடமொழியில் ஆயிரம் திருநாமங்கள் கொண்ட திருமந்திரங்கள் மூலமும் உச்சாடனமும் செய்யப் படுகின்றன.

தமிழ் மொழியில் குமரன், ஆறுமுகன், கந்தன், கடம்பன், வடிவேலன், காந்தன், சரவணன் எனப் பலவாறான நாமகரணங்கள் முருகப்பெருமானுக்கு இருப்பதை நாம் அறிவோம்.

சரவணப் பொய்கையில் சிவனின் நெற்றிக் கண்ணினால் எழுந்த தீப்பிழம்பினால் சேர்க்கப் பட்டவன் ஆறுமுகநாதன் ஆவான்.

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் - பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னி ரெண்டும்
கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

எண்டரு கரமீராறும்
இலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பும் ஆர்க்குஞ்
சரணமுந் தெரியக் கண்டான்

**கந்தபுராணம் - 235**

மேலும், குறுந்தொகை, கடவுள் வாழ்த்துப் பாடலில் சேவற் கொடியோன் பற்றி பெருந் தேவனாரின் அழகிய, மனதைக் கௌவும் பாடலிது,

தாமரை புரையும் காமர்சேவடி,
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உருக்கைக் குன்றின்
நெஞ்சு பக வெறிந்த அஞ்சுடர் நெடுவேற்
சேவலன் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய் கின்றால் உலகே

சிவந்த நிறத்தையுடைய, செவ்வடிவினன் முருகப் பெருமானாவார். குன்றிமணியின் நிறத்தை யொத்த சிவந்த ஆடைகளை அணிபவன். கிரௌஞ்ச மலையைத் தன் ஞானவேலினால் பிளந்து, அஞ்ஞானம் எனும் அசுரனை அழித்தவன். இந்த அஞ்ஞானம் எனும் இருளை அகற்றியமையால், இவ்வுலக மக்கள் நிம்மதி மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர் என்பது இதன் பொருள். அடுத்து முருகனின் வடிவத்தைக் கண்ட சூரன் அப்போது கண்ட காட்சியின், சிறப்பினைப் பாருங்கள் எவ்வுயிரேயாயினும், அவர்க்குத் தன் இன் அருள் காட்டுபவன் கந்தக் கடவுள் அல்லவா!

கந்தபுராணக் காட்சி இது, கச்சியப்பர் முருகன் தந்த பேரருளாலே பாடினார். என்னே அழகு! இவன் எழிற் கோலம். இனிப் பாடலைப் பார்ப்போம்!

முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங் கண்ணும்
குண்டல நிரையுஞ் செம்பொன்
மவுலியுங் கோல மார்பும்

குமரேசன், கந்தன் தந்தைக்கு உபதேசம் செய்து "தகப்பன் சாமி" என்ற பெயரும் பெற்றவன்.

பிரம்மனிடம் பிரணவப் பொருளைக் கேட்ட பொழுது, அவன் உரியபடி சொல்லாது விழிக்கப், பிரமனையே சிறையில் அடைத்துப் படைப்புத் தொழிலைச் செய்தான். அப்போது குமரனின் வடிவைக் கந்த புராணம் இப்படிச் சொல்கிறது.

ஒரு கரந்தனில் கண்டிகை வடம் பரித்து ஒருதன்
கரதனில் குண்டிகை தரித்து இருகரங்கள்
வரதமொடு அபயந் தரப் பரம்பொருள் மகனோர்
திருமுகங் கொடு சதுர்முகன்போல் விதி செய்தான்

ஒரு முகமும் நான்கு கைகள் கொண்ட அத்திருவுருவில் ஒருகையில் அக்கமாலையும் (கண்டிகைவடம்) மற்றொரு கையில் கமண்டலமும் (குண்டிகை), ஏனைய இரண்டு கரங்களில் அபய, வரத முத்திரைகள் இருந்தன. இந்த வடிவம் பிரம்ம சாத்தா என அழைக்கப்படும்.

அருணகிரிநாதர், முருக பக்தர். அவரை, எம்பெருமான் முருகன், தன் திருக்கரத்தால் தாங்கி அவர் நாவினில் வேல் கொண்டு, ஓம் எனும் பிரணவத்தை எழுதியருளினார், என்பது நாமறிந்ததே. தம் உயிர் போக்க எண்ணியவரை, காத்து அருளிய அழகன், வேலனின் அழகை எங்ஙனம் வர்ணிப்பது என அருணகிரிநாதர் வியப்பதனைப் பின்வரும், திருப்புகழ் அமிழ்த மூடாகக் காணலாம்.

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெஞ்ஞான
தெய்வத்தை மேதினியிற்

சேயார் வயற்பொழிற் செங்கோடனைச்
சென்று கண்டு தொழ
நாலாயிரங் கண் படைத்திலனே
அந்த நான்முகனே!

இந்த நான்முகன், எனக்கு இரு கண்களைத் தானே தந்துள்ளான். இவன் அழகைப் பருக நாலாயிரம் கண்கள் படைக்கவில்லையே என அருணகிரியார் ஆதங்கப்படுகின்றார். ஆனால் கோடானுகோடி விழிகள் இருந்தாலும் குமரன் அழகினைக் கண்டு கொள்ள இவையெல்லாம் போதுமோ என்பதே உண்மையாகும். மேலும் கந்தன் அழகினைக் கந்தபுராணத்தில் இப்படிச் சொல்லப் படுகின்றது,

அண்ணலார் குமரன் மேனி அடி முதன் முடிவின்காறும்
எண்ணிலா ஊழிகாலம் எத்திறம் நோக்குகினும்
கண்ணில் அடங்காது உன்னிற் கருத்தினால் அடங்காது

கண்களால் மட்டும் கண்டு களிக்க முடியாதது மட்டுமோ? எமது கருத்தினாலும், அடங்கவொ ண்ணாப் பேரழகன் இவன் என்கின்றார் கச்சியப்பர்.

வள்ளியை மணம்புரியச் சென்ற, வேல் ஆயுதத்தைக் கொண்ட எம் வேந்தன் வள்ளியை மனம் கவர்ந்து, காதல் மணம்புரிந்து கொள்ள அவர்கள் இனத்தவர்கள் போலவே வேட்டுவ உருவோடு சென்ற அழகினைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் இவ்வாறு பாடுவார்.

காலிற் கட்டிய கழலன் கச்சினன்
மாலைத் தோளினள் வரிவில் வாளியன்
நீலக்குஞ்சியன் நெடியன் வேட்டுவக்
கோலத்தைக் கொடு குமரன் தோன்றினான்.

கையில் அம்பும், வில்லும் காலில் கழலும், கருநீல முடியுடனும், நெடியவனுமாய் குமரன் தோன்றினான்.

பக்தர்களைக் கவர, அவரவர் இயல்புக்கேற்பத் தன் உருவை மாற்றி அருள்புரிவான் வேலன் மேலும் வேண்டுவார்க்கு அருள்தரும் வள்ளல் முருகன் பக்தர்கள் அகத்தில் சூரியனை ஒப்ப இருப்பான் என்பதை சிதம்பர அடிகளார், தம் முருகன் பிள்ளைத் தமிழில் இவ்வாறு பாடுவார்.

மல இரவு விடிய மிகுதுறவுணர்வு நசையறுதல்
மலி குணக் குன்றின் முடிமேல்
மன்று ஞானக் கதிர் எழுந்து ஒளிபரப்ப மாறாது
தச நாதம் முழுதும்
அலகில் பவதுயில் அறக்கூவு சேவலன்

சூரியனுக்கும், சேவலுக்கும், தொடர்பு உளது. சூரியனைக் கண்டதுமே சேவல் காலை வேளையில் கூவும் இந்தச் சேவலைக் குமரன் தன் கொடியாகக் கொண்டவன் சூரியனின் வெம்மையான சக்தியை, விசுவகர்மன் படைக்கலமாக மாற்றினான். சக்தியாகிய வேல் என்கின்ற ஆயுதம் சிவ, சக்தி சொரூபமானது. இதனை அன்னை அப்பன் முருகனுக்கு வழங்கினான். மேலும் சூரியனில் ஏழு வர்ணங்கள் உண்டு. இந்த வர்ணங்களைக் கொண்ட மயிலினைத் தனது வாகனமாகக் கொண்டவன், ஆறுமுகநாதன். இதனையே நக்கீரர் தம் திருமுருகாற்றுப் படையில்,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி"

ஆதவனை முழு முதற்கடவுளாகக் கொண்ட சமயம் சௌரம் ஆகும். பக்தர்களின் மனதில் எழுகின்ற ஒளியைச் சூரியனுடன் ஒப்பிடப்படுகின்றது. சௌரபேய சுப்பிரமணிய வடிவம் ஆறுமுகனுக்கும், ஆதவனுக்கும் உள்ள தொடர்பினைக் காட்டி நிற்கும்.

முருகப் பெருமானின் வாகனம், மயில் என்பதனை நாம் அறிவோம். எனினும், கதிர்காமம், திருத்தணிகை, உத்திரமேரூர் ஆகிய திருத்தலங் களில், யானை ஊர்தியாகக் காணப்படுகின்றது. கதிர்காமத்தில், யானை மீது, வேலனின் மூல மந்திர ஏடு வைக்கப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்வதாகக் கூறப்படுகின்றது. மேலும் யானை

எமக்கு, விநாயகரை ஞாபகப்படுத்துகின்றது. தன் தம்பியாருக்காக, விநாயகர் யானை வடிவு எடுத்து, வள்ளி நாயகியை வேலனுக்கு மணம் புரிவித்தார் என்பது புராண வரலாறு ஆகும்.

நக்கீரர் திருமுருகாற்றுப் படையின், "திருச் சீரலைவாய்" எனும் பகுதியில் இவ்வாறு பாடுவார்.

"வைற்றுதி பொறாத வடுவாழ் வரிதுதல்
வாடா மாலை ஓடையொடு துயல் வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடு நடைக்
கூற்றத்தன்ன மாற்றரு மொய்ம் பின்
கால் கிளர்ந் தன்ன வேழ மேல் கொண்டு"

முருகப் பெருமான், யானை மீது வலம் வரும் காட்சியிது. மணிகள் இருபக்கமும் அசைய, நெற்றியில் பொன்னரிமாலை பட்டத்துடனும் யமனைப் போன்ற ஆற்றமிகு யானை மீது, பெருமான் வருகின்றான். என்னே அழகுமிகு நெஞ்சினில் தெம்பூட்டும் காட்சி இதுவன்றோ.

முருகப் பெருமானின் திரு உருவை, அவன் கம்பீரமான பொலிவை, செழுமையினை மேலான வரலாற்றினைப் பழப் பெரும் அருட் புலவர்களும் கச்சியப்பர், நக்கீரர், அருணகிரிநாதர் போன்றோர் பல்லாண்டுகளுக்கு முன்னர் முருகன் பெருமை களைப் பாடியருளினார்கள். பழைமைக்குப் பழைமையும், புதுமைக்குப் புதுமையும் சேர்ப்பவனான, கந்தக் கடவுளை எமது இன்றைய தலைமுறையினர்க்காகவும், பாரதியார், கவிமணி தேசிய விநாயகபிள்ளை, நாமக்கல் கவிஞர் திரு. வே. இராமலிங்கம், உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் போன்றோர் பாடியுள்ளனர்.

வேலன் பாட்டு என்ற பாடலில் பாரதி இப்படிப் பாடுகின்றார்.

வில்லினை யொத்த புருவம் வளைத்தனை
    வேலவா - அங்கோர்
வெற்பு நொறுங்கிப் பொடிப் பொடி
    யானது, வேலவா!
சொல்லினைத் தேனிற் குழைத்துரைப்பாள் சிறு
    வள்ளியைக் கண்டு
சொக்கி மரமென நின்றனை
    தென்மலைக்காட்டில்
கல்லினை யொத்த வலிய மனம்கொண்ட
    பாதகன் சிங்கள்
கண்ணிரண் டாயிரங் காக்கைக்
    கிரையிட்ட வேலவா!

என்னே! இலகு தமிழ் நடையிது! இன்னும் ஒரு பாடல், பாரதியினது,

**பல்லவி**

முருகா! - முருகா - முருகா!

**சரணங்கள்**

வருவாய் மயில் மீதினிலே
    வடிவேலுடனே வருவாய்
தருவாய் நலமும் தகவும் புகழும்
    தவமும் திறமும் தனமும் கனமும் - முருகா

அடியார் மலரிங் குளரே
    அவரை விடுவித்தருள்வாய்!
முடியா மறையின் முடிவே! அசுரர்
    முடிவே கருதும் வடிவே லவனே - (முருகா)

சுருதிப் பொருளே வருக
    துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப்படுவார்
    கவலைக் கடலை கடியும் வடிவேல் - முருகா

அறிவா கியகோயிலிலே
    அருளாகிய தாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய்! அடியார்
    புதுவாழ்வு றவே புவி மீதருள்வாய் - முருகா

நல்ல இசையுடன் மிக எளிதாக, மனதினைக் கவரும் வண்ணம் இப்பாடல்களைப் பாடினால், பக்தி உணர்வு தானாகவே பெருக்கெடுத் தோடுமன்றோ!

உளுந்தூர்ப் பேட்டை சண்முகத்தில், பல அரிய பாடல்களை சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் பாடினார். இவரது முருகன் பாடல்கள் மிக அற்புதமானது. சொற்சுத்தம், கம்பீரம் எல்லாமே கூடி வரும். எம்மைப் பக்தியுலகிற்கு இட்டுச் செல்லும்.

**''நீயல்லால் தெய்வம் இல்லை - எனது**
**நெஞ்சே நீ வாழும் எல்லை - முருகா''**

இந்தப் பாடலை எல்லோருமே கேட்டு இன்புற்று வருகின்றனர். மேலும் ஆதி தாளத்தில், கானடா பண்ணிலும் இவரது பாடலான,

**உள்ளமெனும் கோவிலிலே உறைகின்றாய் குமரா**
**வள்ளியம்மை கணவா வடிவேலா முருகா**
**(உள்ளமெனும்)**

**உடனெடுப்பு**
**தெள்ளமுதே தேனே தெவிட்டாத தீந்தமிழே**
**சொல்லற்கரிய இன்பச் சுவையே கனியே**
**(உள்ளமெனும்)**

மேற்கண்டவாறு பாடப்படும் இத்தகைய முருகன் பாடல்கள் எல்லாமே இருபதாம் நூற்றாண்டின், கவிஞர்களால் பாடப்பட்டன. தற்போதைய இளம் கவிஞர்களினாலே பாடப்பட்ட பல முருகன் பக்திப் பாடல்கள், நவீன இசைக் கருவிகளுடன் புதிய இசை வடிவங்களில், ஒலி நாடா, இறுவெட்டுக்களில் வெளிவந்து எங்களை மிகவும் பக்தியுணர்விற்குள் இட்டுச் செல்கின்றன.

இன்று இன்னலுற்று இருக்கும் எம் தமிழ் மக்களுக்கு ஆறுதல் தரும் ஒப்பற்ற தெய்வம் முருகன் ஈழத்திருநாட்டில், கதிர்காமம், தொண்டை மானாறு செல்வச் சந்நிதி, நல்லூர்க் கந்தசுவாமி கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், உகந்தை முருகன், பருத்தித்துறை புலோலி குருமணல் கந்தசுவாமி கோவில், கொழும்பு கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில் உட்பட பல கோவில்களிலும் குடிகொண்டு, எம்மை ஆட்கொள்ளும் கலியுக வரதன் திருக்குமரனை நம்பினோர் கெடுவதில்லை அவன் திவ்ய அழகும், அருள்வழங்கும் பெருமையும் சகல ஆன்மாக் களையும் அவர்பால் ஈர்த்துவருகின்றன. உள்ள மெல்லாம், அவன் உறைந்திருக்கும் போது, எம் பிறவிப் பிணி அனைத்தும் நீங்கும் என எம் மனத்தினுள், நீங்காத திடசிந்தனையினை வளர்த்துக் கொள்வோமாக!

இத்துடன் ''எழிலாக ஒளி வேலான்''எனும் தலைப்பில், எமது நாட்டின் புகழ்பூத்த கவிஞர் ''சொக்கன்'' அவர்களின் கவிதையினைச் சுவைத்து மகிழ்வோமாக!

**கங்கை யோடு பிறை சங்கை யாகமுடி**
**கவினுற வைத்த சிவன்**
**கால லோடுமடி மீதி வங்கியவன்**
**களிகொளச் செய்திடுவான்**
**துங் மார்பரையின் தங்க மான இடை**
**துள்ளி அமர்ந்திடுவான்**
**தூய இன்பமுற மேய வள்ளியிரு**
**தோள்கள் அணைத்திடுவான்**
**கங்கள நற்றமிழை எங்க ளுககருளிக்**
**சால்புறச் செய்திடுவான்**
**சந்த மார்கவிதை தந்த பேரினுக்குச்**
**சாயுக் சிய மருள்வான்**
**தெங்கு சோலையல தங்கும் நல்லைநகர்**
**திகழ்ந்திடும் ஒளிவேலான்**
**தெய்வமார் எழிலான் உய்வ மென்னிவலன்**
**திருவடி சூடுவமே**

**''ஓம் சரவணபவ ஓம்''**

**இக்கட்டுரைக்கான உசாத்துணை நூல்கள்**

**முருகன் காட்சி -**
**டாக்டர் சி. பாலசுப்பிரமணியம்**
**ஆறுமாமுகனின் அரிய திருவுருவங்கள் -**
**தி. இராசமாணிக்கம்.**

# செம்மொழி - தமிழ்மொழி - எம்மொழி

**கலாநிதி. த. முத்துக்குமாரசுவாமி**

*அதிபர் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு - 6.*



**மொ**ழி மனிதனுக்கு விழி போன்றது. மனித நாகரீகத்திற்கு வித்திட்டது மொழிதான். ஒவ்வொரு இனத்திற்கும் மொழி இன்றியமை யாதது. தமது எண்ணக் கருக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு மொழி ஊடகமாகின்றது.

ஆனால் மொழி என்பது வெறும் தொடர்பு கொள்ளல் ஊடகம் மாத்திரம் அன்று. அது

*இனத்தின் ஒரு அடையாளச் சின்னம்*
*பண்பாட்டின் கருவூலம்*
*அறிவின் களஞ்சியம்*
*வாழ்வின் விழி*
*சமூகத்தின் வழி*

மொழியின் வளர்ச்சியால் சிந்தனை வளர்ச்சியுறுகிறது. சிந்தனையின் வளர்ச்சியே சீரிய வாழ்க்கையாகும். பண்டைய மரபையும், பண்பாட்டையும் கடத்தும் கருவி மொழி. எனவே

*ஒரு சிறந்த மொழி துல்லியமாகத்*
*தொடர்பாடலை ஏற்படுத்தும் சாதனமாக*
*இலக்கிய சொல்வளங்களைக் கொண்டதாக*
*புதிய சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகத்*
திகழ்தல் அவசியம்.

அத்தகைய மொழியே வாழும் மொழியாக அமையும். எங்கள் தாய்மொழியான தமிழ் இச் சிறப்புக்களைக் கொண்டிருந்தது; கொண்டிருக் கிறது; கொண்டிருத்தல் வேண்டும்.

மொழி மனித இனத்தை இணைக்கும் கருவியாம். தமிழ் மொழி பல மத, இன, சாகிய மக்களையும் இணைக்கும் கருவியாக விளங்குகிறது. பண்டைக் காலம் தொட்டுப் பல வழிபாடுகளைச் செய்தவர்களும் பலமதங்களைப் பின்பற்றியவர்களும் தமிழ் மொழியை வளம் படுத்தியுள்ளனர். இந்துக்கள் விசேடமாகச் சைவர்கள், வைணவர்கள், இஸ்லாமியர்கள் சமணர்கள், கிறீஸ்தவர்கள், பௌத்தர்கள் போன்ற பல்வேறு மதத்தவரும் தமிழின் பெருமைக்குத் தம் பங்கைச் செலுத்தியுள்ளனர்.

*பல்லின மக்களும் தமிழில்*
*ஆய்வுகள் செய்தும்*
*இலக்கியங்கள்,*
*நூல்கள் படைத்தும்*
*தமது காணிக்கைகளை அளித்துள்ளனர்*

இவை எம்மொழித் தொடர்பாடலில் வரலாற்றின் முக்கிய அம்சமாகும்.
தமிழ் மொழி மிகவும்
*தொன்மையானது*
*வன்மையானது*
*முதன்மையானது*
*செழுமையானது*

என்றெல்லாம் கூறிக் கூறிப் பெருமைப்படலாம். தவறொன்றுமில்லை. ஆனால் " எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித் தலை முறைகள் பல கழித்தோம், குறைகளைந் தோரில்லை"

எனவே, தற்கால யுகத்திற் கேற்ப
*இயற்தமிழ்*
*இசைத்தமிழ்*
*நாடகத்தமிழாகிய*
மூன்றையும் நானிலம் எங்கும் தமிழோசை பரவும் வகை செய்தல்வேண்டும். தமிழ் மொழி நம் தாய்மொழி. தேமதுரத் தொன்மொழி. அம் மொழியை நாம் வருங்கால இளஞ் சந்ததியினர் எழுதவும், பேசவும், சிந்திக்கவும் வைக்க வேண்டியது நமது பாரிய கடமையாகும்.

நமது மாணவர்கள் இன்று தமிழ் மொழியில் காட்டும் கரிசனையின்மை விசனத்துக்குரியது. வெறும் பரீட்சை முடிவு மட்டும் கல்வியல்ல. மொழியில்

*ஆற்றல் உள்ளவர்களாக*
*சிந்திக்கும் திறன் உடையவர்களாக*
*உறுப்பமைய எழுதவும் வாசிக்கவும்*

அதனைப் புரிந்து கொண்டு வாழ்க்கை நடாத்துபவர்களாகவும், மாணவரை உருவாக்க வேண்டும். அதன் பயிற்சிக்களமாகப் பாடசாலைகள் விளங்க வேண்டும்.

பாடசாலை, சமூகத்திற்குக் கலங்கரை விளக்காக வேண்டும். தமிழ் மொழிக்கு அரசியல் உரிமை தரப்பட்டாலும் அதனை அமுலாக்க முன்வருவோர் சிலரே. இந்த நிலை மாறவேண்டும். உதட்டளவில் தமிழ் என்ற நிலை மாறி உள்ளத்து உணர்ச்சியெல்லாம் ''தமிழ்'' நிலை உருவாக வேண்டும்.

எல்லா மொழிகளையும் கற்பது நன்மை பயக்கும். ஆனால் நம் மொழி தமிழ். அது எம் தாய்மொழி. அம் மொழியில் ஆற்றலுள்ளவர்களாக நாம் மாற வேண்டும். அரச மொழிகளில் தமிழும் ஒன்றல்லவா கடமைகளை தமிழில் செய்ய உயர்மட்ட அரச அலுவலர் முன்வர வேண்டும்.

''மெல்லத் தமிழ் இனிச் சாகும்'' என்ற நிலைமாறி ''என்று மடியும் இந்த அடிமையின் மோகம்'' என்ற பாரதியின் கேள்விக்கு ''இன்றே'' என்னும் விடையாகச் செயற்படத் தமிழ் வளர்ச்சி காணும்.

தமிழ் மக்கள் தமிழ் மொழியில் பாண்டித்தியம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். பாடசாலைகளில் தமிழ் மொழி கற்கும் மாணவர்கள் நல்ல முறையில் தமிழைக் கற்க வேண்டும். வழிகாட்டிகளாக அதிபர், ஆசிரியர்கள், கல்வி அலுவலர் இருக்க வேண்டும்.

நம் மாணவரிடையே தமிழ் மொழியின் தரம் மெச்சும் விதத்தில் அமையவில்லை என்பது வேதனைக்குரியது. நாமெல்லோரும் ஒருங்கிணைந்து இந்த முயற்சியில் கவனம் செலுத்த வேண்டும். எந்தப் பாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்களானாலும் சரி; அந்தப் பாடத்தில் எழுத்துப் பிழைகளை நீக்கி மாணவரை எழுதத் தூண்டவேண்டும். வாசிக்கும் பழக்கத்தை மாணவரிடையே ஊக்குவிக்கவேண்டும். மாணவர்களை நம்மொழியில் ஆற்றல் உள்ளவர்களாக்க நாமெல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மாணவரது மொழித்திறனையும் கலை ஆர்வத்தையும் பண்பாட்டு விழுமியங்களையும் ஆளுமையையும் மொழியை அவர்கள் வளர்க்கும் நோக்கோடு பாடசாலைகளில் போட்டிகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கிப் பெருவிழாக்கள் எடுக்கப்படுகின்றன. இச் செயற்பாடுகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உந்து கோலாக அமைகின்றது.

# நிகழ்வுகள்



நீதிபதி மகேசனை அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன்
மாலை சூடி வரவேற்கிறார்.



பருத்தித்துறை நீதிபதி திரு. மகேசன் சொற்பொழிவாற்ற வந்தசமயம்
அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன் தலைமையுரை.

# நிகழ்வுகள்



நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாதத்தம்பிரான்
சரஸ்வதி பூசையிலன்று பக்க வாத்திய சகிதம் விரிவுரை செய்தல்



சீர்காழி எஸ். கோவிந்தராஜன் பாடசாலைக்கு வருகை
(22.06.1978)

# நிகழ்வுகள்



13.12.1978
இரண்டு மாடிக் கட்டிட
நாள் அத்திவாரம்
இடும் நிகழ்வு பழைய மாணவன்
பிரதம கல்வி அதிகாரி
திரு. சி. பொ. சிவபாதம்



நிறுவுனர் திரு. வை. வேலாயுதர்
படத்தை விஞ்ஞானக் கல்வி அதிகாரி
திரு. ச. பொன்னம்பலம்
திரைநீக்கம் செய்தல்



இளைப்பாறிய ஆசிரியர்
திரு. த. பத்மநாபன் மங்கள
விளக்கேற்றல்
(14.02.1981)

# நிகழ்வுகள்



பாராளுமன்ற உறுப்பினர்
திரு. க. துரைரத்தினத்துக்கு அதிபர்
திரு. சே. ஏகாம்பரநாதன் மாலை அணிதல்



பாடசாலை அதிபர்
திரு. சே. ஏகாம்பரநாதன்
தலைமையுரை
(14.02.1981)




கணக்காளர் இராஜ். சுப்பிரமணியத்திற்கு
ஆசிரியர் திரு. கோ. வித்தியாசாகரம்
மாலை அணிதல்

# நிகழ்வுகள்



பழைய மாணவன்
திரு. இராஜ் சுப்பிரமணியம்
உரையாற்றுகிறார்



இரண்டு மாடிக்கட்டிட விழாவில்
வட்டாரக் கல்வி அதிகாரி
திரு. நா. துரைச்சாமி உரையாற்றுகிறார்
(14.02.1981)



இளைப்பாறிய ஆசிரியர் திரு. த. பத்மநாபன் உரையாற்றுகிறார்
(14.02.1981)

# நிகழ்வுகள்



விஞ்ஞான வட்டாரக் கல்வி அதிகாரி
திரு. க. பொன்னம்பலம் உரையாற்றுகிறார்
(14.02.1981)



ஆசிரியர் திரு. கோ. வித்தியாசாகரம்
திரு. க. துரைரத்தினத்துக்கு
மாலை அணிகிறார்



முன்னாள் ஆசிரியரும் பருத்தித்துறை
பாராளுமன்ற உறுப்பினருமான
திரு. க. துரைரத்தினம் உரையாற்றுகிறார்

# பிரியாவிடை நிகழ்வுகள்



அதிபர் திரு. வ. தம்பிப்பிள்ளை



ஆசிரியர் ஆ. கார்த்திகேசு (இசைமணி)

# பிரியாவிடை நிகழ்வுகள்




ஆசிரியர் வெக்டர் பொ. வேலாயுதம்



கொத்தணி அதிபர் சே. ஏகாம்பரநாதன்

# பிரியாவிடை நிகழ்வுகள்



ஆசிரியர் திரு. க. பொன்னம்பலம்



பிரதி அதிபர் திரு. சி. தியாகராசா



ஆசிரியர் திரு. செ. சிவஞானசுந்தரம்

# பிரியாவிடை நிகழ்வுகள்



அதிபர் திரு. ஆ. ஜெகநாதன்



ஆசிரியர் திரு. க. ஆறுமுகம்



ஆசிரியர் வே. மதிபாலசிங்கம்

# பிரியாவிடை நிகழ்வுகள்



திரு. வ. தம்பிப்பிள்ளை பாராட்டு



ஆசிரியர் திரு. ப. க. ஆறுமுகம்



உப அதிபர் திரு. வே. கிருஷ்ணன்

# பிரியாவிடை நிகழ்வுகள்



ஆசிரியர் திரு. ச. சி. இராமசாமி



உப அதிபர் திரு. பொ. சபாரத்தினம்



உப அதிபர் திரு. ச. சிவஞானசுந்தரம்

# வேலாயுதம் மகா வித்தியாலயம் நிறுவுனர் தினம் - (30.08.2008)



தலைவர் சே. ஏகாம்பரநாதனின் தலைமை உரை



செல்வி திவ்யா சிவனேசனின்
நடன நிகழ்வு



கொழும்புப் பல்கலைக்கழகச் சட்ட பீடாதிபதி
திரு. நா. செல்வக்குமாரன் நிறுவுனர் தின உரை

# வேலாயுதம் மகா வித்தியாலயம் நிறுவுனர் தினம் - (25.07.2009)




நிறுவுனர் தினத்தில் பிரதம அதிதிகள்



கலாநிதி அ. சண்முகதாசா நிறுவுனர் தின உரை ஆற்றுகிறார்.

# ஏனைய நிகழ்வுகள்



யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
மாணவர்கள் கணினி
கற்கை நிலையத்தில்
25.05.2009




யா/வேலாயுதம்
மகா வித்தியாலயம்
பழைய மாணவர்சங்கக்
கொழும்புக் கிளைச்
செயற்குழு 2005



யா/வேலாயுதம்
மகா வித்தியாலயம்
பழைய மாணவர்சங்கக்
கொழும்புக் கிளை
செயற்குழு 2007

# ஏனைய நிகழ்வுகள்



இளைப்பாறிய அதிபர்
திரு. ஆ. ஜெகநாதனுக்குக்
கொழும்புப் பழைய மாணவர்
சங்கத் தலைவர்
திரு. சே. ஏகாம்பரநாதன்
மோதிரம் அணிந்து கௌரவித்தல்.



பழைய மாணவர்
சங்கம் கொழும்புக் கிளை
செயற்குழு 2009



பழைய மாணவர்
சங்கம் கொழும்புக் கிளை
செயற்குழு
2008

# என்னை வாழவைத்த வேலாயுதம் மகா வித்தியாலயம்

**பாலசுந்தரம் சிவாஜி**
B.A. Hons (Econ), M.A. (Econ), M.B.A (Finance), FMAAT, MCPM (SL)
*பிரதி ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்*



பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் தனது கல்விப் பணியில் 115ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் இப் பாடசாலையின் பழைய மாணவன் என்ற ரீதியில் மகிழ்ச்சியடைவதுடன் இந்த நினைவு மலருக்கு நான் மாணவனாக இருந்த காலத்தின் சில நீங்காத நினைவுகள், அனுபவங்கள் கல்விச் சமூகத்துடன் பகிர்ந்து கொள்வதை நோக்காகக் கொண்டு இச்சிறு ஆக்கத்தை சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நியர் ஆட்சியில் கிறிஸ்தவ மிசனறிமார்களின் ஆதிக்கத்தால் கிறிஸ்தவ பாடசாலைகள் வளர்ச்சி பெற்ற வேளையில் ஏனைய மதத்தவர்களின் மதச்சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்ததை சகலரும் அறிவர். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் கூட பல பாடசாலைகளில் இத்தகைய நிலை நீடித்திருந்தது. இத்தகையதொரு சூழலில் ஐந்தாம் வகுப்பு வரை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் கல்வி கற்ற பின்னர் ஹாட்லிக் கல்லூரிவீதியில் வசித்தும் அக்கல்லூரிக்கு ஆறாம் ஆண்டுக்கான அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் வேலாயுதம் மகாவித்தியாலயம் எம் போன்றவர்களுக்கு புகலிடம் கொடுத்தது.

சைவமும், தமிழும் சிறப்புற வேண்டும் என்ற நோக்குடன் திரு. வேலாயுதம் அவர்களால் வடமராட்சி மக்களுக்கு வழங்கப்பட்ட ஓர் மகத்தான கொடையே இன்று வேலாயுதம் மகா வித்தியாலயமாக கல்விச் செல்வத்தை வடமராட்சி மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றது. "கல்வி அழகே அழகு" என்னும் மேன்மையான வாசகத்தைத் தாங்கி பருத்தித்துறை நகர்ப் பகுதியில் கம்பீரமான தோற்றத்துடன் அமைந்துள்ள இப்பாடசாலையில் சேர்ந்த எமக்கு, எமது மொழி, மதம், கலாச்சாரச் சூழலில் கற்றல் நடவடிக்கைகளை ஓர் சுதந்திரமான சூழலில் மேற்கொள்ளக் கூடிய வகையில் அன்று இப்பாடசாலையில் காணக்கூடியதாக இருந்தமை பிரதான அம்சமாக இருந்தது.

## எமது காலத்தில் பாடசாலையை வளம் படுத்திய அதிபர்கள்

ஒரு பாடசாலையின் அபிவிருத்தியில் ஆணி வேராக விளங்குபவர் அப் பாடசாலையின் அதிபராவார். பாடசாலையை வழிநடத்தும் அதிபர்கள் சிறந்த கல்வி அறிவு, அனுபவம், நிர்வாகத்திறன் என்பவற்றின் மூலம் பாடசாலையை ஓர் உன்னதமான நிலைக்கு கொண்டு செல்பவர்களாக இருக்க வேண்டும். எமது காலப்பகுதியில் அதிபர்களாக விளங்கிய திரு. மு. ஆ. தங்கராசா, திரு. வ. தம்பிப்பிள்ளை, திரு. சே. ஏகாம்பரநாதன் ஆகியோரைப் பற்றி நினைவுகளையும், சம்பவங்களையும் முன் வைப்பதில் மிகப் பெருமைப் படுகின்றேன். வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இவர்களின் தன்னலமற்ற உழைப்பும், சேவையும் காரணமாக எமது பாடசாலையின் முன்னேற்றத்தில் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தார்கள் என்பதுடன்,

அக் காலப்பகுதி வேலாயுதம் மகாவித்தியால யத்தின் ஓர் பொற்காலம் என்றால் அது மிகை யாகாது.

### அதிபர் திரு. மு. ஆ. தங்கராசா

அதிபர் திரு. தங்கராசா அவர்களால் தண்டிக்கப்படாத மாணவர்களே அக்காலத்தில் இருக்க முடியாது என்றளவுக்கு கண்டிப்பு மிக்கவராக விளங்கினார் என்பதை அக்கால மாணவர்களும், வடமராட்சி வாழ் பொதுமக்களும் நன்கறிவர் ஆனால் அவரின் சிறந்த ஒழுங்கு முறைகள், கட்டுப்பாடுகள், நிர்வாகத்திறமை மூலமாக எமது பாடசாலையை ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றார். என்பதை ஒவ்வொரு ஆண்டினதும் க. பொ. த (சாதாரண) தரப் பரீட்சைப் பெறுபேறுகள் மூலம் நிரூபித்துக் காட்டினார். இப்பெறுபேறுகளின் அடிப்படையி லேயே எமது பாடசாலையில் க. பொ. த (உயர்தர) வகுப்பினை ஆரம்பிப்பதற்குரிய அனுமதியினையும் கல்வித் திணைக்களம் அவரின் காலத்தில் வழங்கியிருந்தது.

### அதிபர் வ. தம்பிப்பிள்ளை

திரு. மு. ஆ. தங்கராசா அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பிரதி அதிபராக பதவி வகித்த திரு. வ. தம்பிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் சிறந்த நிர்வாகி என்பதுடன் கணித ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையில் அவரின் சுவாரஸ்யமான கற்பித்தல் முறைகளை இன்றும் அக்கால நண்பர்கள் ஒன்று சேரும் போது நினைவு கூரப்படுவதுண்டு. கணித மேதைகளின் வரலாற்றை மிக சுவையாக அடிக்கடி கூறிக் கொள்வதுடன் மாணவர்களைக் கவரும் வகையில் மொழி நடையைக் கையாள்வார். ஒரு நாள் சக மாணவன் ஒருவன் பெருக்கல் விருத்திப் பகுதிக்கு செல்வோம் என்று கூறியபோது, சினை (காரணிப்படுத்தல்) காணலில் கணக்கொன்றை அவர் கொடுத்த வேளையில் எல்லோரும் தடுமாற "சினையில் சிக்கலுடன் பெருக்கல் விருத்திக்குப் போவதில் என்ன பெருமை காணப் போகின்றீர்கள்" என்று கூறியது இன்றும் நினைவில் உள்ளது. மடக்கையில் மாணவனுக்கு மயக்கம் என்றும், மடக்கை சமன்பாட்டில் மடக்கையை வெட்டுபவனுக்கு மட்டை அடி கொடுக்க வேண்டும் என்றும் கூறுவார். இதேபோன்று கேத்திர கணித நிறுவல்களில் "அறிந்ததில் இருந்து அறியாததற்குச் செல்ல வேண்டும்" என்ற தத்துவத்தையும் அடிக்கடி கூறிக் கொள்வார். இவ்வாறு தனது சுவாரஸ்யமான கற்பித்தல் முறையால் அனைத்து மாணவர்களையும் கவர்ந்திருந்த அதிபர். திரு. தம்பிப்பிள்ளை அவர்கள் கணித பாடபோதனை யில் ஓர் முடி சூடா மன்னனாக அக்காலத்தில் விளங்கியிருந்தார்.

### அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன்

திரு. வ. தம்பிப்பிள்ளை அதிபரைத் தொடர்ந்து பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்று அதிபராக எமது பாடசாலையில் கடமையாற்றினார். அதன் பின்னர் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவிஉயர்வு பெற்று ஓய்வு பெற்றார். அவர் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுடன் பாடசாலையில் பற்றுறுதி கொண்டு சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுத்த பெருமை இவருக் குண்டு. ஆசிரியராக தமிழ் மொழியை எமக்கு போதித்த வேளையில் கட்டுரை, செய்யுள், இலக்கணம், சுருக்கம் என்றவாறு தமிழ் மொழிப் பாடப்பரப்பைப் பிரித்து இவை ஒவ்வொரு பகுதிக்கும் வாரத்தில் ஒவ்வொரு நாட்களையும் ஒதுக்கீடு செய்த நவீன கற்பித்தல் முறைமை எல்லோரது வரவேற்பையும் பெற்றதாகும். திரு. ஏகாம்பரநாதன் அதிபர் அவர்களின் காலத்தி லேயே அதிக மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக் கதாகும். பாடசாலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் கூட இற்றைவரை பாடசாலைக்காகச் சேவையாற்றி வரும் இவரின் தன்னலமற்ற பணியை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. தலைநகர் கொழும்பில் பழைய மாணவர் கிளையை அமைத்தது தனது குடும்பச் சுமை மத்தியிலும் எல்லோரையும் ஒருங்கிணைத்துப் பாடசாலையின் அபிவிருத்திக் காக அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பாடசாலையின் உயர்வே தன் உயர்வாக இன்றுவரை உழைத்து வரும் திரு. சே. ஏகாம்பரநாதன்

அதிபர் அவர்களின் தன்னலமற்ற பணிக்கு ஈடே கிடையாது.

**பாடநெறித் தெரிவில் மாணவர் சுதந்திரமும் ஆசிரியர்களின் நவீனத்துவ வழிகாட்டலும்**

க. பொ. த உயர்தர கணிதப் பிரிவில் இணைந்த நாம் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளையில், சில மாணவர்களே ஆர்வத்துடன் கல்வி பயின்று வந்ததையும், ஏனையோர் கற்றல் நடவடிக்கைகளில் ஆர்வமின்றி திரிந்ததையும், எமது ஆங்கில அறிவை மேம்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஆசிரியர் திரு. T. N. பஞ்சாட்சரம் அவர்கள் அறிந்திருந்தார். திரு. பஞ்சாட்சரம் அவர்கள் பாடசாலைக்கு தேசிய உடையுடன் சால்வை அணிந்து கம்பீரமாக நடந்து வரும் அவரின் தோற்றத்தை ஆங்கிலம் கற்பிக்க வந்த ஓர் தமிழ் இலட்சிய ஆசிரியராகவே (Ideal Teacher) எல்லோர் மனதிலும் இடம்பிடித்திருந்தார் என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். நாம் அவரின் வகுப்பென்றால் மிக ஆவலுடன் காத்திருப்போம். காரணம் உலகப்பொது அறிவில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற அவர் ஆங்கிலம் கற்பித்தலுடன் பல பொது விடயங்களையும் கற்பித்து மாணவர் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்தார்.

வழமை போல் ஒரு நாள் ஆங்கிலப் பாட வேளையில் Luxury என்ற சொல் வசனமொன்றில் வந்த வேளையில் அதை விளக்கிவிட்டு Luxury (ஆடம்பரப்பொருள்) பற்றி பொருளியலில் ஒரு கோட்பாடு உண்டு என்பதுடன் மற்றுமொரு முக்கியமானதொரு விடயத்தையும் அப்போது தெரிவித்தார். அந்த ஒரு நிமிடம்தான் எமது வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்தது. கணித பாடங்களுடன், வர்த்தக பாடங்களையும் இணைத்துக் கொண்டால் இலகுவாகப் பல்கலைக்கழகம் செல்வதுடன் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்ற புது விடயத்தையே அப்போது திரு. பஞ்சாட்சரம் ஆசிரியர் அவர்கள் எமக்கு தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே பௌதிகவியல், இரசாயனவியல் பாடங்கள் மூலம் விரக்தியடைந்திருந்த எமக்கு இச் செய்தி ஒரு சக்கரைப் பொங்கலாகவே அமைந்திருந்தது. உடனடியாகவே வகுப்பிலுள்ள அரைவாசிப் பேருக்கு மேல் திரட்டிக் கொண்டு ஆசிரியர் ஓய்வறைக்குச் சென்று திரு. பஞ்சாட்சரம் ஆசிரியர் அவர்களைச் சந்தித்து இப் புதிய துறைக்கு எமது விருப்பத்தையும், ஆர்வத்தையும் தெரிவித்துக் கொண்டோம். அவர் அப்போது வேறு சில ஆசிரியர்களுக்கு இதைக் கூற இதற்கு எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கவில்லை. காரணம் இந்தப் பாடத்தொகுதிகளைக் கொண்ட சேர்க்கைகளை எந்தப் பிரிவுக்குள் சேர்ப்பது கணிதப்பிரிவா அல்லது வர்த்தகப் பிரிவா என்பதாகும். அப்போது ஆசிரியர் அவர்கள் அதை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பார்த்துக் கொள்ளட்டும் எனத் தெரிவித்து, எமது வேண்டுகோளின் பேரில் எம்மை அதிபர். ஏகாம்பரநாதன் அவர்களிடம் அழைத்துச் சென்று நிலமையை விளக்கினார். அப்போது அதிபர் அவர்கள் இந்தப் புதிய யோசனையை வரவேற்றதுடன், இதற்கு கல்வித் திணைக்களத் தின் அனுமதிக்கு எழுதுவதாகவும் அதுவரையில் ஏற்கனவே உள்ள பாடங்களையே கற்கும் படி எமக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

யாழ் மாவட்டத்தில் அக்காலப்பகுதியில் கணித, மற்றும் விஞ்ஞானத்துறைக்கு இருந்த மதிப்பு பொதுமக்கள் மத்தியில் கலை, வர்த்தகத் துறைக்கு இருக்கவில்லை. இதனால் ஆரம்பத்தில் ஆர்வம் காட்டிய சுமார் பதினைந்து மாணவர்கள் பெற்றோரின் வற்புறுத்தல் மூலம் இப்புதிய பாடநெறிக்கான ஆர்வம் குறைந்து சென்று கொண்டிருந்தது. ஆனால் எது நடந்தாலும் பரவாயில்லை கணித, வர்த்தக பாடங்களையே கற்பது என்றும் "முன்வைத்த காலை பின் வைப்பதில்லை" என்ற உறுதியான முடிவில் மூவர் மட்டும் எஞ்சியிருந்தோம். இதன்படி தூய, பிரயோக கணித பாடங்களுடன் கணக்கியல், பொருளியல் பாடங்களையும் கற்கத் தொடங்கிவிட்டோம்.

அப்போது உயர்தர பொதுப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தும் எமது பரீட்சையை அதிபரின் அனுமதியுடன் ஒரு

வருடத்தால் தள்ளிப் போட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வேளையில் கல்வித் திணைக்களத் திடமிருந்து இப்புதிய கற்கை நெறிக்கு உரிய அனுமதி கிடைத்த வேளையில் எமது பாடசாலையில் க. பொ. த உயர்தர வகுப்பில் வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதற்கும் வழி ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். புதிய நிலங்கள், அதிக விளைச்சலைக் கொடுக்கும் என்ற நியதிகளுக்கமைய பொருளியல், கணக்கியல் ஆகிய புதிய பாடங்களை மிகவும் ஆர்வமாகவும், திறமையாகவும் கற்ற வேளை அத்தூண்டுதலால் தூய, பிரயோக கணிதப் பாடங்களையும் ஆர்வ மாகக் கற்க உதவியதாலும் எமது கடின உழைப்பாலும் 1977 ஏப்ரல் மாத க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி, சித்தியடைந்ததன் மூலம் பல்கலைக் கழக அனுமதியும் கிடைக்கப் பெற்றமை எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

இந்த இடத்தில் எமது ஆசிரியர் காலம் சென்ற திரு. வெக்டர் வேலாயுதம் அவர்களைப் பற்றி சில வரிகள் தெரிவிக்க வேண்டும். அக்காலப் பகுதியில் யாழ் மாவட்டத்தில் இரட்டைக் கணிதத்தில் (Double Maths) முன்னணி ஆசிரியராக விளங்கிய திரு. வெக்டர் வேலாயுதம் அவர்களே எமது வகுப்பாசிரியராகவும், இரட்டைக் கணித (தூய, பிரயோக கணிதம்) ஆசிரியராகவும் விளங்கினார். இப் பாடங்களை எமக்கு சிறப்பாக போதித்து, பரீட்சைவரை பக்கத் துணையாக செயற்பட்டார்.

சில வருடங்களின் பின்னர் அவர் தனது வகுப்புகளில் "நான் பல பொறியியலாளர்களையும், பௌதிக விஞ்ஞானப்பட்டதாரிகளையும் மட்டும் உருவாக்கவில்லை, தற்போது பொருளியல் சிறப்புப் பட்டதாரியையும் உருவாக்கியுள்ளேன்". எனத் தெரிவித்தார். அவர்கள் கணித – வர்த்தகப் பாடங்களை இணைத்துக் கற்பதைப் பற்றிய முக்கியத்துவத்தையும் மாணவர்களுக்கு கூறி யதைக் கேள்வியுற்று நான் பெருமை அடை கின்றேன்.

ஓர் ஆசிரியனாக அரச சேவையில் இணைந்து, அதன் பின்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வரிமதிப்பாளராகவும், சிரேஷ்ட வரி மதிப்பாளராகவும், தற்போது பிரதி ஆணை யாளராகவும் பதவி உயர்வு பெற்று சமுதாயம் போற்றக் கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளேன் என்றால் அதற்கு அன்று அந்த ஒரு நிமிடத்தில் இப்புதிய கற்கைப் பாடங்களைக் கற்க வேண்டும் என்ற உடனடித் தீர்மானம், சாதகமான நேரம், அதற்குப் பக்க துணையாக இருந்த அதிபர் திரு. ஏகாம்பரநாதன், ஆசிரியர் திரு. பஞ்சாட்சரம் ஆகியோர் இறைவனால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளாகவே நான் இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.

பெற்றோர்கள் சில மாயைகளை நம்பி தமது பிள்ளைகள் மீது கல்வி தொடர்பில் தமது விருப்பத் தைத் திணிப்பது தவறானதாகும். ஒவ்வொரு மனிதனிடமும் ஏதோ ஒரு உள்ளார்ந்த திறமை இயற்கையாகவே இருக்கும். அதைத் தகுந்த முறையில் வெளிக்கொணருவதற்குக் கல்வித் திட்டம் சாதகமாக அமைய வேண்டும்.

க. பொ. த. உயர்தர பிரிவைப் பொறுத்த வரையில் ஒரு மாணவன் விரும்பிய கற்கை நெறியைத் தெரிவு செய்வதில் பெற்றோரோ அல்லது ஆசிரியரோ தலையிடுவதைத் தவிர்த்து ஆலோசனைகளை மட்டுமே வழங்கி உதவ வேண்டும். ஒரு மாணவனைப் பொறுத்தவரையில் "உனது வாழ்க்கை உனது கையில்" என்பதே பிரதானமான தத்துவமாகும். தனக்கேற்ற அல்லது தன்னால் சிறப்பாக செய்யக்கூடிய துறையை ஒரு மாணவன் தெரிவு செய்வானாயின், அது சிறந்த பெறு பேறுகளைக் கொடுத்து அந்த மாணவனின் வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்பது பலரது அனுபவங்கள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**"வாழ்க வேலாயுதம் மகாவித்தியாலயம்**
**வளர்க அதன் கல்விப்பணி"**

# பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் பணிகளும் வளர்ச்சியும்

**சி. த.மார்க்கண்டு B. A**

*இலங்கை நிர்வாக சேவை, இளைப்பாறிய வடகிழக்கு மாகாண விவசாய, காணி, நீர்ப்பாசன அமைச்சு செயலர், முன்னாள் அரசாங்க அதிபர் வவுனியா மாவட்டம்.*



அறிவு ஒருவருக்கு அணிகலனாகும். அறிவுடையோர் ஒழுக்கத்தில், ஒழுங்கில் சிறந்து வாழ்வர்; மக்கள் பால் மனித நேயம் கொண்டவராக வாழ்வர்; ஏழைப் பங்காளராகத் தொழிற்படுவர்; நீதி நெறிமுறை பிறழாது வாழ்வர்; தான தர்மம் செய்வர்; தன் உடல் பொருளை மனித சமூக முன்னேற்றத்துக்காகக் கொடுப்பர்.

அறிவு இன்பம் தரும். இது மட்டுமா? அது அழகும் தரும். அறிவு ஒருவனை நல்ல மனிதனாக்கும்; கடவுளை நோக்கி உயர்த்தும். கல்வி அறிவு விருத்தியடையும் அளவுக்கு ஒருவனின் ஆளுமை மேன்மையுறும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்வடைய, உயர, கீர்த்தியடைய அறிவே உயிர்நாடியாகும். எழுத்து, வாசிப்பு, பேச்சு, பாட்டுத் திறத்தினிலே ஒருவரின் ஆளுமை பெரிதும் தங்கியுள்ளது.

நல்ல பிள்ளைகளை நாடு நம்பியுள்ளது. உலகம் உய்ய அறிவுடைய நன்மக்களையே சமூகம் எதிர்பார்க்கின்றது. நற்பிரசைகளை உருவாக்குவதில் பெற்றோர்களுக்கு அடுத்த படியாக பள்ளிக்கூடக் குருவானவர்களான ஆசிரியப் பெருந்தகைகளே முக்கிய இடம் பெறுகின்றனர்.

புத்தகக் கல்வியை மாணவர்கள் முன்பு ஆசிரியர்களின் வீட்டுத் திண்ணைகளில் பெற்றனர். ஆனால் கால மாற்றங்களுடன் கல்வியைப் பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில் பெற வேண்டியதாயிற்று. பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்தமையும் பாடசாலை, கல்லூரிப் படிப்புகளுக்கான தேவைகளும் படிப்படியாக அதிகரித்தமையும் பிரதான காரணங்கள் எனலாம்.

கல்வி கற்கக் கல்விக்கூடங்கள் தேவை அதே நேரத்தில் எல்லோருக்கும் பொருளாதார வசதிகளும், சம வாய்ப்புக்களும் இருக்க வேண்டும். எதுவித தடையுமின்றிப் பள்ளிக் கூடங்களில் கற்கக் கூடிய சூழ்நிலையும் அவசியமானது.

புத்தகக் கல்வி ஒருவருக்கு அவர் வாழ வேண்டியதற்குத் தேவையான அடிப்படை அறிவைக் கொடுப்பதற்காகவே வேண்டப்படுகிறது. எழுத வாசிக்கவும், கொடுக்கல் வாங்கலுக்குரிய கணக்கறிவும் பெறுவதே பொதுவில் தேவைப் படுகிறது.

இதனையடுத்து தொழில் வாய்ப்புக்களுக்கான கனிஷ்ட, சிரேஷ்ட, உயர்தர சான்றிதழ் பெறும் கல்வியையே பெறவேண்டும். இதனைத் தொடர்ந்து வருவன பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளும், ஆராய்ச்சிப்படிப்புகளுமே.

நாவலர், விபுலானந்த அடிகளார், பொன். இராமநாதன் துரை அவர்களின் வழியிலே புலோலியூர் தந்த அருந்தவப் புதல்வர், சைவ சமயக்காப்பாளர், பரோபகாரி, செம்மனச் செல்வர், திரு. வைரமுத்து வேலாயுதம்பிள்ளை அவர்கள் சமயத்துக்கும் கல்விக்கும் துணிவுடன் பணியாற்ற முன் வந்தார்.

கலைமாணிப் பட்டம் பெற்றுவந்த பின்பு ஆசிரியரானார். இப் புனித தொழிலைக் கிறிஸ்தவ மெதடிஸ்த கல்லூரியான பிரபல்யமானதும் புகழடைந்ததுமாகிய ஹாட்லிக் கல்லூரியில் ஆரம்பித்தார். அங்குச் சேவை செய்த காலத்தில் சைவ ஏழைப்பிள்ளைகளைப் பற்றியும் கிறிஸ்தவ பாடசாலைகளில் கல்வி கற்பதற்கு இடம் கிடைக் காத பிள்ளைகளைப் பற்றியும் சிந்தித்துச் சிந்தித்து வேதனைப்பட்டார். இவர்கள் துயர் துடைக்க முன்வந்தார். துணிவுடன் முடிபு செய்தார். சைவப் பாரம்பரியச் சூழலிலே, சமூகத் தொண்டையும் கல்விப் பணியையும் முன்னெடுக்க முன்வந்தார். தான் செய்த ஆசிரியத் தொழிலை உதறித் தள்ளினார். தியாகியானார். தர்ம வள்ளலானார். தனது தனம், திரவியங்களை நம்பினார். ஊர் மக்களின், பெற்றோர்களின் சைவ அபிமானிகளின் ஒத்துழைப்பை உரமாகக் கொண் டார். தனது ஆற்றலையும் முயற்சியையும், கடவுளையும் பலமாகக் கொண்டார்.

1895ம் ஆண்டு தனது இல்லத்திலேயே பாடசாலையை ஆரம்பித்தார். அப்போது 14 மாணவர்களே சேர்ந்தனர். அது வேலாயுதம் பாடசாலை என நாமம் பெற்றது. இப்பாடசாலை சைவ ஆங்கிலப் பாடசாலையாக இருந்து வளரலாயிற்று ஆரம்பத்தில் 3ம் வகுப்பில் இருந்து 5ம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்பட்டன. திரு. வேலாயுதம் அவர்களே முகாமையாளராகக் கடமைபுரிந்தார். 1900ம் ஆண்டில் இப் பாடசாலைக்கு அரசாங்க அங்கீகாரம் கிடைத்தது. தாபகர் மறைவுடன் மகன் திரு. வே. அருணாசலம் முகாமையாளரானார். இவருடைய காலத்தில் பாடசாலை மேலும் வளர்ச்சியுற்று வரலாயிற்று. பின்னே வந்த அரசியல்கொள்கை மாற்றங்களால், கல்வி மந்திரி டாக்டர் பதியுதீன் முகமட் காலத்தில் இது 1961ம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டு அரசாங்கப் பாடசாலையாகியது. இதன் பெயரும் புலோலி வேலாயுதம் ஆண்கள் பாடசாலை என மாற்றம் அடைந்தது. மாறிமாறி வந்த அறிவும் ஆற்றலும் மிக்க அதிபர்களின் பெருமுயற்சியால் ஒளிவிட்டுப் பிரகாசம் அடைந்தது. எல்லா வகுப்புக்களும் படிப்படியாக நடத்தப்படலாயின. சிரேஷ்ட தராதரப் பத்திர, க. பொ. த (உயர்தரம்) கலை, வர்த்தகம், பின்பு உயர்தர விஞ்ஞான வகுப்புக்கள் நடாத்தப்பட்டுவரலாயின.

1976ல் பருத்தித்துறை புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இன்று 600 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்; 29 ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். பழைய மாணவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகி கல்லூரிக்குப் புகழ் சேர்த்துள்ளனர். டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நிர்வா கிகள், கல்வி நிர்வாகிகள், ஆசிரியர்கள் எனப் பல பல பதவிகளை அலங்கரித்து வருகிறார்கள். இதனாலே கல்லூரி வளர்ச்சி அடைகிறது. கல்லூரி சிறிது கீர்த்தி பெரியது. இக்கல்லூரியின் பரிணாம வளர்ச்சி வரலாற்றைக் கல்லூரி அறிக்கை களிலும் விழா மலர்களிலும் அறியலாம். பெருமை மிக்க புகழடைந்த இக் கல்லூரியின் வரலாற்று விபரங்களை ஆவணப்படுத்திப் பேணிவர வேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியம். இது காலத்தின் தேவையும் கூட.

தாபகர் வை. வேலாயுதம் பிள்ளை அவர்களின் தூய சிந்தனை, தூரநோக்கு, விசால மனம், உயர்ந்த உள்ளம், மன உறுதி, தியாக மனப்பான்மை, விசுவாசம், ஓர் உத்தமருக்கான பண்புகள், வற்றாத கொடை இருந்ததனாலன்றோ, கடந்த 115 ஆண்டுகளாகப் புலோலி சைவ மணத்துடன் கிராமப்புற ஏழைப்பிள்ளைகள் பல்லாயிரக் கணக் கில் கிறிஸ்தவமதத்துக்கு மாறாது கற்க இக் கல்லூரியை நிறுவிச் சென்றுள்ளார். அவரைப்

போற்றி, நன்றிக்கடனுடன் நினைவு கூர்வது சைவ சமூகத்தின் கடமையாகும். அவரின் ஆளுமையின் சின்னமாக இக்கல்லூரி திகழும். பெரியாருக்குக் காலத்தால் அழியாத முழு உருவச் சிலை அமைக்கப்பட்டு கண்ணாடியால் மூடிப் பேணப் படுவது நன்று என அபிப்பிராயப்படுகின்றேன்.

இக் கல்லூரியின் படிப்படியான வளர்ச்சியை யிட்டு நான் மகிழ்வுறுகிறேன். அவ்வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பங்களிப்புச் செய்த, செய்து வருகின்ற யாவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன். இதன் வளர்ச்சிக்கு என்றும் என் ஒத்துழைப்புண்டு.

இக்கல்லூரியானது முழு வளர்ச்சியடை யவில்லை. அபிவிருத்திக்கான பணிகள் இன்னும் இருக்கின்றன. தேவைப்படும் வளங்களைப் பெறவேண்டும்.

இக்கல்லூரி விஸ்தரிப்புக்கு காணிநிலம் போதியதாக இருக்கக் காணப்படவில்லை. ஆகவே இருக்கும் காணிகளை உச்சப் பயன்பாட்டை அடையும் படியாகத் திட்டம் தீட்டிக் கிரம முறையில் உபயோகிக்க வேண்டும். யான் வடமராட்சி வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசத்தின் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தராகவும் (D.R.O) தொடர்ந்து அதன் உதவி அரசாங்க அதிபராகவும் (A. G. A) 1975 – 1978 காலத்தில் பணிபுரிந்தேன். இக்காலத்தில் இக் கல்லூரியுடன் அதிக தொடர்புகள் வைக்கும் வாய்ப்புக்கள் இருந்தன. பணி மனைக்கு அண்மையில் இக்கல்லூரி அமைந்தது. இங்கே மகாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. இதனாலேயே அதிபர்களுடன் நெருக்கமான தொடர்புகள், உறவுகள் இருந்தன. கல்லூரியின் குறைகள் சிலவற்றை இனங் கண்டேன்; தேவைகளையும் கேட்டறிந்தேன். இங்கு வகுப்பறைகள் போதியதாக இருக்கவில்லை.

எங்கள் பணிமனையில் மாதாமாதம் நடை பெறும் பிரதேச பகுதி நாட் கூட்டங்களில் இவ்விடயம் கதைக்கப்பட்டது. மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டத்திலும் என்னால் எடுக்கப்பட்டது. கல்விப் பகுதி, பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. எல்லோ ருடைய முயற்சியாலே 12 அறைகளைக் கொண்ட மாடிக் கட்டடம் தென்புறத்தில் அமைந்தது. 1981ல் இன்னோர் மாடிக்கட்டடம் கிடைத்தது. திறப்பு விழாவில் கலந்து கொண்டேன். மேலும் இக்கல்லூரிக்கு கல்லூரியுடன் சேர்ந்து விளையா ட்டு மைதானம் இல்லாதிருந்ததும் ஒரு பெரிய குறையாக இருந்தது. இதனாலேயே மைதானம் அமைவதற்கான ஆலோசனையைச் சமர்ப்பித் தேன். அதன்படி பருத்தித்துறையில் உள்ள இ. போ. ச. "பஸ் டிப்போ" வை ஆனை விழுந்தான் பகுதிக்கு இடமாற்றி, அந்த நிலத்தைக் கல்லூரிக்கு வழங்கலாம் என்பதே என் சிபாரிசு. அதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை. சூழல் சம்பந்தப்பட்டவையே அவை. இந்த "டிப்போ" நிலம் ஒரு மைதானத்துக்கு போதிய தாக இல்லா விட்டாலும் மட்டுப்பட்ட உபயோகத்துக்கு ஏற்றது. இரண்டையும் ஒன்றுக்கொன்று கால அட்டவணை யில் பரிமாறிக் கொள்ளமுடியும். இது சாத்தியமா னதும் கூட. இ. போ.ச.வுக்கு அடிப்படைத் தேவைகளை மேற்கொள்ள நிதி உதவிகள் செய்யப்பட வேண்டி வந்தால் அரசாங்கம் அதனைச் செய்யலாம். அதற்குரியவர்களுடன் கதைத்து மேற் கொள்ளலாம் மேல் மட்டத் தீர்மான மே முக்கிய மானது.

இக் கல்லூரியின் நன்மைகருதித் தாபகரின் மகள் விசாலாட்சியும் மருமகன் தணிகாசலத்தின் மக்களாகிய திருவாளர்கள் பத்மநாதன், இராமச் சந்திரன் இருவரும் கல்லூரியின் பக்கத்தில் இருந்த காணியையும் அதனுள் இருந்த இல்லத்தையும் கல்லூரிக்கே கொடுப்பதற்கான உறுதிகள், உயில்களின்படி (Lastwill) உரிமைக்காரர்கள் இறைபதம் அடைந்த பின்பு அவர்களின் உறவின ரான பரம்சோதிமகன் சிவஞானசேகரம் பிள்ளை கொழும்பிலிருந்து வந்து முறைப்படி கையளித்தார். இதில் நானும் ஈடுபட்டிருந்தேன். திரு பரஞ்சோதி

தாபகரின் மருமகன் தணிகாசலத்தின் தம்பியார். எனவே வேலாயுதம்பிள்ளை அவர்களின் இறுதிச் சொத்தும் அவரின் கல்லூரிக்கே கிடைக்கச் செய்ததும் பசுபதீஸ்வரப் பெருமானின் திரு விளையாட்டுத் தானே. இந்நிகழ்வுக்கு கல்வி அதிகாரி திரு. ப. சச்சிதானந்தம் பிரதம அதிதி யாகப் பங்கேற்றுச் சிறப்பித்தார். எல்லாப் புகழும் இறைவனுக்கே திரு. வேலாயுதம் அவர்களைத் தன் கருவியாக்கினார்.

நான் இக் கல்லூரியின் அதிபரான திரு. சே. ஏகாம்பரநாதன், ஆசிரியர்களான திரு. ரிபூசியஸ், ஆங்கில ஆசிரியர்களான திரு. திருமதி. குலசிங்கம், திரு. பஞ்சாட்சரம் உப அதிபரான திரு. ஈசுரபாதம், பழைய மாணவரும் புகழ்பூத்த ஆசிரியரும் “அட்வகேற்” ருமான அமரர் இ. ருத்ராவுடன் நட்புடன் பழகினேன்; பழகுகின்றேன். இதனாலும் இக்கல்லூரியின் அபிவிருத்தியில் அக்கறை இருந்து வருகிறது. பருத்தித்துறைக் கல்விக் கோட்டம் கையளிக்கப்பட்ட இல்லத்தில் இயங்கக் கூடியதாக இருந்ததும் ஒரு பேறாகும்.

கல்லூரி ஆசிரியராகவும் அதிபராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் பணியாற்றி தமிழ் அபிமானியும் சைவ நன்மணியும் புராணபடன வித்தகருமான திரு. சே. ஏகாம்பரநாதன், பழைய மாணவரும் முன்னாள் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும் இளைப்பாறிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி உப அதிபருமான திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி இருவரும் கல்லூரியின் அபிவிருத்தியில் காட்டிவரும் கரிசனை என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

இக் கல்லூரி தனது 115 ஆவது தாபகர் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் இக் கல்லூரி எதிர்காலத்திலும் எல்லாவளங்களுடன் மேன்மையுற பர்வதவர்த்தினி அம்பாள் சமேதராக வீற்றிருந்து அருள்பாலிக்கும பசுபதீஸ்வரப் பெருமான் அதிபர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் வேண்டிய அறிவையும் ஆற்றல்களையும் சித்திகளையும் வெற்றியையும் கீர்த்தியையும் பெற்றுய்யக் கொடுத்திட வேண்டித் துதிக்கின்றேன்.



இராமகிருஷ்ண பரமகம்சர்

# பாடசாலை வளர்ச்சியில் அபிவிருத்திச் சங்கங்களினதும் பழைய மாணவர் சங்கங்களினதும் பங்கு

**இராஜ். சுப்பிரமணியம் FCMA FIM, DPFM**

*பிரதம பணிப்பாளர், இலங்கை முகாமைத்துவ அபிவிருத்தி நிலையம்*

எந்தவொரு சமூக அமைப்பிலும் பாடசாலை ஒரு முக்கிய அங்கமாக அமைகிறது. பாடசாலையின் வளர்ச்சியும், தளர்ச்சியும் சமூகத்தில் முறையே எழுச்சியையும் தாழ்வையும் ஏற்படுத்துகின்றன. அதேபோல் சமூகத்தில் ஏற்படுகின்ற முன்னேற்றம் அல்லது தாழ்வு பாடசாலையிலும் பிரதிபலிப்பதைக் காணக் கூடியதாக இருக்கும்.

### அச்சாணிகள்

பாடசாலைகள் தம் குறிக் கோள்களை, நோக்கங்களை செவ்வனே நிறைவேற்ற வேண்டுமாயின் அது சார்ந்த சமூகத்தின் ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றிருத்தல் அவசியம்.

இதற்கு அச்சாணியாக இருப்பவர்கள் பாடசாலையின் அதிபரும் ஆசிரியர்களுமாவர். அவ்வாறு அமையாவிடத்துப் பாடசாலையில் இருந்து சமூகம் பெறக் கூடிய நன்மைகளும் சமூகம் பாடசாலைக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் நிறைவாகக் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. பாடசாலையின் முன்னேற்றத்தில் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் சிரத்தையுடன் ஈடுபட்டு அதன் வளர்ச்சியில் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பழைய மாணவர்களும் ஒருங்கிணைந்து செயற்படுகின்ற பொழுது பாடசாலை நல்ல முன்னேற்றப் பாதையில் செல்வது மாத்திரமன்றிச் சமூகமும் நல்ல பெறுபேறுகளை அறுவடை செய்ய முடியும்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (முன்பு பெற்றோர் ஆசிரியர் சங்கம் என்ற பெயரிலும்) பழைய மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் பல ஆண்டுகளாகப் பாடசாலைகளில் இயங்கி வந்திருப்பினும் அண்மைக்காலத்திலேதான் அவைகளின் நன்மைகள் உணரப்பட்டுப் பாடசாலைகளில் அதிகளவில் செயற்பட்டு வருகின்றன.



### சிறிய பாடசாலைகளிலும்

பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெரிய முன்னணிக் கல்லூரிகளிலும் மகா வித்தியாலயங்களிலும் இவ் அமைப்புகள் இயங்கி வந்திருப்பினும் அண்மைக்காலமாக அவை சாதாரண, ஆரம்பப் பாடசாலைகளிலும் வேரூன்றிச் செயல்படுகின்றமையைக் காணக் கூடியதாக இருக்கிறது. சில பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் வெளிநாடுகளில் கூடப் பழைய மாணவர் சங்கங்கள் திறமையுடன் செயற்பட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

### அங்கீகாரம்

கல்வி அமைச்சினாலும் கல்விப் பகுதியினராலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கும் பழைய மாணவர் சங்கங்களுக்கும் வழங்கப்படுகின்ற அங்கீகாரமும் முதன்மையும் இவ்வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் பெயரளவிலேயே மாத்திரம் இயங்குகின்ற நிலைமை மாறிவிட்டது. அவ்

அமைப்புகளினது ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் ஆக்க பூர்வமான முயற்சிகளுக்குக் கல்விப் பகுதியினர் ஊக்குவிப்பதனால் இவ்வமைப்புகள் புத்துயிர் பெற்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் இவ்வமைப்புகளின் ஈடுபாடுகளும் செயற்பாடுகளும் குறைவாகத் தான் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் பெற்றோர்களையும் இணைத்துப் பாடசாலை நிர்வாகம் இச்சங்கங்களைச் செவ்வனே இயங்கச் செய்ய முடியும்.

## பாடசாலைகளின் பங்குதாரிகள்

பாடசாலைகளை வெறும் அரசாங்க நிறுவனங்கள் என்ற மனக்கோட்பாட்டோடு நோக்கிய பல பெற்றோர்களினதும் பழைய மாணவர்களினதும் சிந்தனைகள் இப்போது மாற்றமடைந்துள்ளன. பாடசாலைகளில் தாமும் ஒரு பங்கு தாரர்கள் என்ற உணர்வு மேலோங்கி வருகிறது. பாடசாலைகளாவன சமூகத்தினால் பேணப்பட வேண்டிய நிறுவனங்கள் என்ற வகையில் தமது பங்களிப்பை மனமுவந்து செய்யும் நிலைமை ஒரு நல்ல சகுனம் என்றே கொள்ள வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் வழங்கும் ஆலோசனைகளுக்குக் கல்விப் பகுதியினரும் முக்கியத்துவம் அளித்து வருகின்ற சூழலில் அவ்வமைப்புகள் பொறுப்புடன் செயலாற்ற வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றன. பல பாடசாலைகளில் இவ்வமைப்புகள் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டுப் புத்துயிரோடும் புத்துணர்வோடும் செயற்பட்டு வருகின்றன நிலைமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அதே வேளையில், இவ்வமைப்புகளின் செயற்பாடுகள் கிராமம்புற கனிஷ்ட பாடசாலைகளில் பல முன்னேற்றங்களை வேண்டி நிற்கின்றன.

பாடசாலை வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பங்கு பலவாறு அமையலாம். பல துறைகளிலும் பல வகைகளிலும் பல கோணங்களிலும் அவை தொண்டாற்றிச் சேவை செய்ய முடியும். பெற்றோர்களின் ஆர்வத்தை நல்ல முறையில் பயன்படுத்திப் பாடசாலையின் வளர்ச்சியில் அதனைத் திசை திருப்பி வெற்றி காண்பதில் பாடசாலை அதிபரின் பங்கு மிகவும் பிரதானமானது.

## முரண்களைத் தவிர்த்தல்

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் தமது கடமைகளைச் செய்ய முற்படுகின்ற போது தமது எல்லைக் கோட்டைக் கடந்து பாடசாலை உள்நிர்வாகத்தில் தலையிடாமல் இருப்பது மிகவும் விரும்பத்தக்கது. உள்நிர்வாகம் எங்கு தொடங்குகிறது எங்கு முடிகிறது என அடையாளம் கண்டுகொள்வது பாடசாலை அமைப்பிலே சில வேளைகளில் ஒரு சிரமமானகாரியமாகும். இருந்தபோதும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் தமது அமைப்புக்கு இடப்பட்ட வரம்பைமீறிச் செயற்பட ஆரம்பிக்கும் போது அதிபரின் ஆளுமைக்கும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புக்கும் விரும்பத்தகாத தாக்கத்தை ஏதோ ஒரு வகையில் ஏற்படுத்துகிறது. பாடசாலை நிர்வாகத்துடன் சுமுகமான உறவைப் பேணும் அதேவேளையில் பழைய மாணவர் அமைப்புகளும், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களும் தத்தமது செயற்பாடுகளின் போது தமக்கிடையே முரண்பாடுகள் எழாமல் சுமுகமாகவும், புரிந்துணர்வுடனும் செயற்படுவது அவசியம். பெயர், புகழ், விளம்பரம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது பாடசாலை அபிவிருத்திப் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்களை முதலில் அணுகித் தீர்ப்பது நல்லதாகும்.

## முக்கிய தேவைகளுக்கு முன்னுரிமை

இந்நாட்டின் கல்வி விருத்திக்காக அரசினால் செலவிடப்படும் பணத்தின் தொகை வருடாவருடம் அதிகரித்து வருகிறது. ஆனால் பாடசாலைகளின்

முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் அளவிற்கு எமது நாட்டின் நிதிவளம் நிறைவானதல்ல. இந்நிலையில் பாடசாலைகளின் தேவைகளை ஆராய்ந்து, குறைகளைத் தீர்ப்பதற்குப் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் முன்வரவேண்டும். அக் குறைகள் தீர்க்கப்படாவிடத்து அதனால் பாதிக்கப்படப் போவது தம் பிள்ளைகளே என்பதை மறந்து விடலாகாது.

## கல்விக்கு முன்னுரிமை

பாடசாலைகளுக்கு வகுப்பறைகள், விஞ்ஞான கூடங்கள், தொழிற்கூடங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றைச் சீரமைத்துக் கொடுப்பது மாத்திரம் இவ் அமைப்புகளின் கடமை அல்ல. பாடசாலைப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் இவ் அமைப்புகள் ஆர்வங் கொள்ள வேண்டும். இதற்காகப் பாடசாலை நிர்வாகத்துடன் நேரடித் தொடர்பு கொண்டு செயலாற்றுவது விரும்பத்தக்கது.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற சூழலை வீட்டில் ஏற்படுத்திக் கொடுப்பது முதற் படியாகும். பாடசாலைக் கொள்கைகளுக்கும், திட்டங்க ளுக்கும் அமைவாகத் தமது பிள்ளைகள் கரும மாற்றும் வகையில் ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

தங்கள் பிள்ளையோடு மட்டும் நின்றுவிடாது பெற்றோர்கள் பாடசாலையின் முழுமையான கல்வி வளர்ச்சியில் ஆர்வங்காட்ட வேண்டும். அதற்கேற்ப கூட்டு முயற்சிகளாக ஆற்றக்கூடிய பணிகளில் கவனத்தைச் செலுத்துவது நன்று. பிள்ளைகளின் பெறுபேறுகள், அவர்களின் முன்னேற்றங்கள் எவ்வாறு இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்த்து, அவர்களின் பொதுவான குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

பிள்ளைகளிடையே வெளியாகத் தெரியாதிருக்கும் திறமைகளையும், ஆற்றல்களையும், சாதுரியங்களையும் வெளிக்கொணர்வதற்குத் தேவையான பின்புல நடவடிக்கைகளை ஆரம்பித்தல் நன்று. இவை பற்றித் தனித்தும், கூட்டாகவும், அதிபர் ஆசிரியர்களின் அனுசரணையுடனும் சிந்தித்து, கலந்தாலோசித்துச் செயலாற்றுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

## மெல்லக் கற்போர்

கல்வியில் பின் தங்கியிருக்கும் மாணவர்களில் மேலதிக அக்கறை எடுப்பது அவசியம். மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் உகந்த ஆசிரியர்கள் ஊடாக மேலதிக வகுப்புகளைத் தனியாக நடாத்தி அவர்களையும் ஏனைய மாணவர்களுடன் கல்வி நீரோட்டத்தில் இணைக்க முயல வேண்டும். அவர்கள் திறமைச் சித்தி பெறாவிட்டாலும் கூட அடிப்படைக் கல்வியைப் பெற்றுப் பயனுள்ள பிரசைகளாக எதிர்காலத்தில் வாழ இத்தகைய வகுப்புகள் உதவும்.

தாம் கல்வியில் பின்தங்கியவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மைக்கும் மன உளைச்சலுக்கும் மெல்லக் கற்கும் மாணவர்கள் ஆளாகாத வண்ணம் அத்தகைய திட்டத்தை முன்னெடுப்பது மிக முக்கியமாகும்.

## பணம் மட்டும் உதவியும் பங்களிப்பும் ஆகாது

பெற்றோரிடமிருந்து பண உதவி தேவைப்படும் போது மாத்திரம் சங்கங்களைக் கூட்டாது பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஆகியவற்றை அடிக்கடி கூட்டிப் பாடசாலையின் நிறைகுறைகளைத் தெரிவித்து விவாதிக்க வேண்டும். அவர்களைப் பாடசாலையின் வளர்ச்சியில் ஈடுபடுத்த வேண்டும். ஆண்டுகொரு முறை பகட்டான பெரிய விழாக்களை மாத்திரம் எடுப்பதோடு நின்றுவிடாது தமது முயற்சிகளைப் பல துறைகளிலும் பலவகைகளிலும் பயன்படுத்த வேண்டும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பழைய மாணவர் சங்கங்கள் ஆகியவற்றினால்

தேர்தெடுக்கப்படும் நிர்வாகக்குழு தம்மிடம் சுமத்தப்பட்ட பொறுப்பைத் தட்டிக்கழியாது பெற்றோர்கள், பழைய மாணவர்கள் வைத்த விசுவாசம் வீண்போகாதவாறு பாடசாலையின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

**தனிப்பட்ட வேறுபாடுகளை முன்னிலைப் படுத்தக் கூடாது**

அதே வேளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திலும் பழைய மாணவர் அமைப்பிலும் உள்ள பெற்றோர்கள் பழைய மாணவர்கள் தம்மிடையே உள்ள வேறுபாடுகளை, மனக்குறைகளை அமைப்பு களின் செயற்பாடுகளிலே காண்பிக்காது திறந்த மனதுடன் பரந்த மனோபாவம் கொண்டவர்களா கத் தமது பங்களிப்பை வழங்க வேண்டும். எந்தவொரு செயற்பாடும் தனிப்பட்ட காரணங் களுக்காகச் சிதைந்து போகாது பொது நன்மையை இலக்காகக் கொள்ள வேண்டும்.

கல்விகற்கும் தமது பிள்ளைகளின் பெறு பேறுகளிலும் மற்றும் புறக்கிருத்திய வேலைகளிலும் பாடசாலை மட்டத்திலும் மாவட்ட தேசிய மட்டத்திலும் தமது பிள்ளைகள் பொதுவாக நல்ல தரத்தினை அடைந்துள்ளார்கள். என்ற நிலைமை பெற்றோர்களினதும் பழைய மாணவர்களினதும் மனதில் ஏற்படுகின்ற பொழுது அது ஒரு காந்த சக்தியாக ஏனைய பெற்றோர்களும் பழைய மாணவர்களும் தமது பங்களிப்பை மனமுவந்து கூடுதலாகச் செய்ய ஊக்குவிக்கும். இத்தகைய சிறந்த செயற்பாடுகளால் அதிபரினதும் ஆசிரியர் களினதும் பாரம் இலகுவாக்கப் படுகின்றது.

**நிதி நிர்வாகம் வெளிப்படையாக அமைய வேண்டும்**

பெற்றோர்கள், பழையமாணவர்கள் உவந்த ளிக்கும் நன்கொடைகள் யாவும் பாடசாலையின் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றன என்று, திருப்திப்படும் வகையில் பாடசாலை நிதி நிர்வாகம் அமையவேண்டும். பெற்றோர்களினாலும் பழைய மாணவர்களினாலும் மனமுவந்து அளிக்கப் படுகின்ற நன்கொடைகளுக்குப் பற்றுச் சீட்டுக்கள் உடனடியாக வழங்கப்பட்டு, உரிய முறையில் அவைகள் கணக்கு வைக்கப்படுவது அவசியமாகும்.

அவை பாடசாலையின் அத்தியாவசிய தேவை களுக்கே பயன்படுத்தல் வேண்டும். இன்றேல் தாம் கொடுக்கின்ற நிதி ஆடம்பரமான காரியங்க ளுக்காக விரயம் செய்யப்படுகின்றது. அன்றேல் மோசடி செய்யப்படுகின்றது என்ற சந்தேகம் அபிப்பிராயம் நன்கொடையாளர் மனதில் தோன் றுவது தவிர்க்க முடியாதது. அதனால் பெற்றோ ர்கள், பழைய மாணவர்கள் தொடர்ந்தும் ஆதரவு தருவதில் தயக்கம் காட்டுவார்கள். நிதி நிர்வாகம் செவ்வனே நடைபெறுகின்றது என்பது பற்றிக் கண்காணிக்கின்ற பொறுப்பு அதிபரைச் சார்ந்த தாகையால் இது விடயத்தில் பாடசாலை அதிபர்கள் விசேட கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

நிதி நிர்வாகம் சீராக இல்லாதவிடத்து பெற்றோர்களின் நம்பிக்கையைப் பாடசாலை இழக்கின்ற ஒரு பரிதாபநிலை ஏற்படுவதோடு பாட சாலை அமைப்புச் சீர்குலைந்து அதன் வளர்ச்சியும் அதன் பலனாகக் கிட்டும் சமூக முன்னேற்றமும் தடைப்படுகின்ற ஓர் இடர்ப்பாடான நிலையும் உரு வாகலாம். ஆகவே இவைகளையெல்லாம் கவனத் திற் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியனவற்றை நல்ல முறையில் வளர்த்து அதன் ஆக்க சக்திகளைப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் பயன் படுத்துவதிலேயே இவ்வமைப்புகளின் வெற்றி தங்கியுள்ளது.

# MY LINK WITH VELAUTHAM M. V

**C. Thevarajah** **B.Sc, 'P.G.D in Education,**
(Retired Principal)



**P**uloly Boys' English School, Point Pedro, later metamorphosed into Velautham Maha Vidyalayam to per petuate the honoured memory of its founder, a unique personality, the late **MR. VAIRA MUTHU VELAUTHAM,** an educationist, par excellence, an aristocrat of his time, a humanitarian, thirsting to serve the poor and the weak in society.

A graduate teacher by profession and following the foot - steps of some of his peers, he converted his mansion into an English School for the benefit of the poor children in and around Point Pedro. The poor children in the community mainly professing the Hindu faith experienced a lot of difficulties in seeking admission to christian denominational schools. To all such pupils, his school opened the gate-way to an English education. In most cases it was free. In that sense long before the father of free education, **DR. C.W.W. KANNANGARA** brought in free education island-wide, the late Mr.Velauthampillai was a pioneer in his community. Many to this day, pay homage to his memory. The genesis of this School needs to be remembered to recall its many problems in its path to attain its present growth to secondary status.

One must recall its trials and tribulations to appreciate its contribution to the community. It was to this school I was transferred as a Science Master to work in the A Level classes on the initiative of **MR. K. PONNAM PALAM,** Inspector of Science Education, Jaffna District, who was himself a distinguished old boy and old teacher of the school, now in retirement in Canada. To **MR. PONNAM PALAM,** I owe my gratitude which proved a sunny period in my career leading me to adorn the principal's chair of this Hindu School though, I am of christian faith.

When I joined the staff, I found myself in the galaxy of some teachers, each a distinct personality, with rare dedication. During my fifteen years of service in the school as Senior Science Master, Sectional Head, Deputy and finally as Head, it was my pride and privilege that I had the co-operation of all; something, many could not boast of. The corporate spirit, team work and zeal of all have been the contributing factors to the progress of the school.

At the time of my joining the school, the Head was **MR. S.EHAMPARA NATHAN,** one chosen by the erstwhile management of the school, a plus Personality, much recognized by the management and respected by all in the school community. He is indeed a rare-find of our times. Another teacher hand picked

by the management, a prize-catch, was **MR. K. PONNAMPALAM**, a master - teacher. Both **MR. EHAMPARA NATHAN** and **MR. PONNAMPALAM** were the sheet anchors on whom the management, depended on for everything. **That's another saga!**

**MR.EHAMPARANATHAN'S** zeal even after his retirement as Principal and later as Deputy Director of Education, continues to be involved in the school serving as the President of the Colombo Branch of the O.B.A of the school while **MR.PONNAMPALAM** is at the helm of affairs of the O.B.A in Canada. Both deserve our lasting gratitude!

As principal of the School, I had done my best and during my regime the school had done well in all the activities, thanks to the able assistance ofthe staff. **Certainly, one swallow cannot make summer!**

Before I became the Deputy, **MR.S.EHAMPARANATHAN** and **MR.V. KRISHNAN,** both talented, helped to administer the school as best as they could. During my Head-ship my deputy was **MR. S. THIAGARAJAH.** To me, I had the good-will and support of all. Everyone worked with singular devotion and dedication .. !

The religious character ofthe school needs special mention. **THE PILLAIYAR TEMPLE** within the premises is looked upon as the Guardian-Deity of the staff and students.

Space cannot permit me to express individually about all the members of the staff, past and present and those who have gone beyond. To be brief, I wish to say that each was a class in himself or herself and won the love and recognition of all in the school community.

However, my account would not be complete if! I do not offer my glowing praise to the following who have gone beyond.

**MR.P.VELAUTHAM** - known as vector, a -wizard of Mathematics, the pride of the school, a gentleman of much refinement, of Uduppiddy, who enjoyed a district-wise reputation.

**THE KULASINGHAMS,** Teachers of Queen's English, well known in Vadamarachchi, added lustre to the staff.

**MR. GEORGE ARUDPRAGA SAM,** another reputed teacher of English who fell a victim to aerial bombing while on duty, was a popular teacher and was much respected by his pupils.

**MR. S. T. I. BURTIUS,** a leading master of Physics, ever active in his many roles, was another outstanding member of the staff.

And finally, to two minor - employees of the school, **MR. A.THANGAVELU** of Thunnalai, a loyal servant of the erstwhile management; and to **MR.S.RASIAH** the lab attendant, both ever stood at our beck and call, are now no more.

**It is our wish and prayer that Velautham M. V. serves the community to further the dreams and aspirations of its founder and the community it serves.**

1st January 2010



# அமரர் சின்னையா தேவராசா

**திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி ஜே.பி**
*ஓய்வு பெற்ற உப அதிபர்*
*கொழும்பு, இந்துக் கல்லூரி.*

இந்து சமுத்திரத்தில் முத்தெனமிளிரும் இலங்கைத் தீவின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தின் தலையாக அமைந்துள்ள வடமராட்சி பருத்தித்துறை நகரில் 19ம் நூற்றாண்டிலேயே புகழ்பூத்த கல்லூரிகளான, 1838ம் ஆண்டு கலாநிதி பீற்றர் பேர்சிவேல் அவர்கள் ஆரம்பித்த ஹாட்லிக் கல்லூரியின் மாணவனாகவும், 1895ல் உயர் திரு. வைரமுத்து வேலாயுதம்பிள்ளை அவர்கள் ஆரம்பித்த வேலாயுதம் மகாவித்தி யாலயத்தின் அதிபராகவும் இருந்த பெருமகன் அமரர் சின்னையா தேவராசா அவர்கள் இன்று எம்முடன் இல்லை இறையடி கலந்து விட்டார். அவரின் பிரிவு எமக்கெல்லாம் பேரிழப்பாகும். கிறிஸ்துவிற்குத் தொண்டாற்றும் சிறந்த கிறிஸ்த வராக இருந்து கொண்டே மிக உன்னதமான இந்துக்களின் கல்லூரியான பருத்தித்துறை யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் சிறந்த அதிபராகச் சேவையாற்றி, பாடசாலைச் சமூகமும் சுற்றமும் போற்ற வாழ்ந்து வெற்றி கண்ட பெருந்தகை ஆவார். அவரின் கல்விச் சேவை மிக உயர்ந்த சேவையாகும்.

**செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச் செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை**

**-திருக்குறள்-**

நாம் பெறுதற்கரிய பிறவியாகிய மானிடப் பிறவியைப் பெற்று வாழ்ந்து வருகின்றோம். இத்தகைய உண்மையான வாழ்வை அனுபவித்து வரும் எமக்கு அவற்றை ஓர் உதாரணமாகக் காட்டி எம்மை நல்வழிப்படுத்தும் ஆசிரியனாகவும், அதிபராகவும் ஒரு பொக்கிஷமாக வாழ்ந்தவர் அமரர் சின்னையா தேவராசா. அவர் எப்பொழுதும் மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்ற மனித நேயம் உள்ளவர்.

**"அரம் போலும் கூர்மைய ரேனும் மரம் போல்வர்
மக்கள் பண்பு இல்லாதவர்"**

**-திருக்குறள்-**

மாணவச் செல்வங்களது அறிவைக்கட்டி எழுப்பும் கைங்கரியத்தில் தோள் கொடுத்து அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் பாடசாலையின் வளர்ச்சிக்காகச் செயற்படும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் என்றும் அறிவுடைய மக்கள்சமூகம் போற்றும்.

தமது அறிவையும் திறமைகளையும் மனப்பாங் குகளையும் மாணவர் மத்தியிலே விதைத்து நல்ல அறுவடையைத் தருபவன் எவனோ அவனே குரு ஆவான்.

"குரு பிரம்மா; குரு விஷ்ணு;
குரு தேவா; மகேஸ்வரா!

பருத்தித்துறை மலாயன் 'பெஞ்சனியர்' திரு சின்னையா, திருமதி இராசம்மா சின்னையா தம்பதிகளின் மகனாகத் தேவராசா 24. 06. 1934ல் பிறந்தார். இவருக்கு அன்பிற்குரிய தேவராணி, நல்லராணி ஆகிய இரு சகோதரிகள் இருக்கின் றார்கள். இவர் தனது ஆரம்பக் கல்வியை மலேசியாவிலும் இடைநிலைக் கல்வியைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சிறந்த கிறிஸ்தவ மாணவனாக – சமய ஒழுக்கங்களுடன்

கல்வி கற்றார். பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தின் தொண்டுகளிலும் இளவயதில் இருந்தே ஈடுபட்டார். அமரர். சி. தேவராசா ஹாட்லிக் கல்லூரி மாணவராக இருக்கும் பொழுது எல்லா ஆசிரியர்களின் அன்புக்குப் பாத்திரமாகவும் சகமாணவர்களுடன் மிகவும் சிறந்த நண்பனாகவும் விளங்கினார். இவர் தனது உயர்கல்வியை இந்தியாவில் மெட்றாஸ் பல்கலைக்கழகத்தில் கற்றார். இவர் தனது பல்கலைக்கழகப் பட்டத்தை உயிரியல் பீ. எஸ். சி பட்டமாகப் பெற்று இலங்கை வந்து ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டார்.

அமரர் சி. தேவராசா அவர்கள் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் சிலகாலம் கல்வி கற்பித்துப் பின்பு 01. 07. 1979 முதல் உதவி ஆசிரியராக, வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு வந்தார். அவர் உயர்தர வகுப்பில் சிறந்த 'தாவரவியல்' ஆசிரியராகச் சேவையாற்றினார். அமரர் சி. தேவராசா அவர்கள் இலங்கையில் புகழ்பூத்த அதிபர் K. P. பூரணம்பிள்ளையினால் வளர்க்கப்பட்ட மிகச் சிறந்த மாணவன் என்பதனைத் தனது கடமைகளின் செயற்பாட்டின் மூலம் நிரூபித்துள்ளார்.

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தின் உப அதிபராக 1988இல் இருந்து 07. 07. 1991 வரை கடமையாற்றி 1991ல் அதிபர் திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்கள் வடமராட்சிக் கல்விக் கோட்டத்திற்குக் கல்வி அதிகாரியாகச் சென்ற வேளையில் சி. தேவராசா அவர்கள் வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பதவி ஏற்றார். பொறுமையைத் தனது அணிகலனாக எப்பொழுதும் கொண்டு கல்வி நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் பெற்றோர்கள் அனைவரையும் தனது அன்புப்பிடிக்குள் வைத்துத் தனது நிர்வாகத்தைச் சிறப்பாகக் கொண்டு நடத்தியவர். கல்லூரியின் எல்லா மாணவர்களையும் தனது சொந்தப் பிள்ளைகள்போல் அரவணைத்து வளர்த்து மேம்படுத்தினார் என்றால் மிகையாகாது. பாடசாலை வளர்ச்சியில் அதிக அக்கறையுடையவராக 1994 இல் ஓய்வு பெறும் வரை செயற்பட்டார். எப்பொழுதும் மாணவர்களை மகிழ்விக்கக் கூடியவர். கல்லூரி விழாக்களில் பழைய இனிய பாடல்களை இனிய தனது "மவுத்ஓகன்' (Mouth Organ) மூலம் இசைத்து மகிழ்விப்பார்.

சி. தேவராசா அவர்கள் தனது வாழ்க்கைத் துணைவியாகத் திருமதி ஜெயபாக்கியம் தேவராசா அவர்களைப் பெற்றமையால் தனது சீரிய கடமைகளை ஆற்றக்கூடியதாக இருந்தது. திருமதி ஜெயபாக்கியம் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் சிறந்த ஆசிரியையாகவும், உப அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்றவர். இவரும் மிகச் சிறந்த விளையாட்டு வீராங்கனையாவார்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்"

அன்னாரின் மனைவி திருமதி ஜெயபாக்கியம் தேவராசா அவர்களிற்கும், அமரர் தேவராசாவின் சகோதரிகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மசாந்திக்கு இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களும் பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கம்

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் சார்பாக இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

# PULOLY VELAUTHAM M.V

**T.N. PUNJAKSHARAM,**
(Asst. Teacher from 1971-1982)
Neervely.

It is a very gratifying news that the Old Boys' Association in Colombo plans to bring out a souvenir to commemorate 115 years of splendid services of **Puloly Boys' English School, Point-Pedro** now known as VELAUTHAM MAHA VIDYALAYAM renamed to honour its founder, the LATE VAIRAMUTTU VELAUTHAM of much splendor, a philanthropist and an educationist. The school he founded in 1845 is today a collegiate institution after traversing through many trials and tribulations in its chequered history.

This institution came into being out of the singular munificence of its venerable founder who converted his mansion to fulfil the needs of the poor, unfortunate darlings of chill penury who were then denied the opportunity of an English education in the then denominational schools that catered to the affluent long before the introduction of free education in 1945, This school opened its gateway to the darlings of chill penury, some of whom later became leading lights in the community and prospered in life. That was a bold enterprise of the founder extolled by many to this very day!

He perhaps had the vision that he belonged to the whole community as long as he lived. He did whatever he could have done and thoroughly used him up before he entered Glory. He rejoiced in life for it own sake. To him, life was a brief candle but a splendid torch before he could hand it on to the future generation. Today we must offer our homage to him as well as to those who had succeeded him. They are a rare find of our times and occupy a distinct place in the history of the school! I am not competent to describe more of its proud past.

It was my good fortune to have served in this school for a decade during the tail end of my career witnessing many of its achievements and the labour of love of a TRINITY - teachers hand-picked by the erstwhile management, men of high character, culture and dedication, unsung heroes but esteemed highly by a grateful community. They were an inspiration to the staff and students. Teachers of my make-up, time-savers and time-servers were kept on our toes by their example. **They were indeed born teachers with a vision, mission and a mandate**.

There is a nice story that when a student facing an interview was asked **"Which is your School?"** his reply was, **"My teachers are my School"**, This is an instance of what makes a school - not its building or location! At Puloly Boys' there was **A TRINITY** that unceasingly laboured for the school.

One of the **"THE TRINITY"** I refer to was the Principal during my period in the

school who was chosen as Master of Mathematics, a Graduate with a diploma in Education, the Late **Mr.Vallipuram Thambipillai** who subsequently was the Deputy and then the Chief Steward right up to the time of his retirement, a father - figure, a talented teacher, stern and strict and kindly too. Unlike Principals of schools of today who do little or no teaching, he taught his subjects and adorned and Principal's chair.

At this time there was another Honours Graduate with his post graduate diploma **Mr.S.Ehamparanathan**, J.P., who spent his time and money too for the school; he was much valued by the management, a workaholic and a rounded personality. He was a sheet anchor to the management and the Principal's chief advisor on whom a lot of work depended. As teacher, Deputy, Bursar and Registrar and finally as Principal, he served the institution and lived up to the trust of the management and just before his retirement he was elevated by the department as the Deputy Director Education of Vadamarachi. His link with the school, his first love, still remains so close that he is now the President of the Colombo Branch of the O.B.A continuing to serve the school in its expansion.

The other great person of equal prominence of sterling worth is **Mr.K.Ponnampalam**, a brilliant Science Master of the School much sought after by others, who later became an Inspector of Science Education in the Jaffna District. Now in his blassed retirement in Canada and Head of the Canadian O.B.A, his interest in the welfare of the School in trying to find the financial resources is praiseworthy.

To those of us who have had worked with **Messers Ehamparanathan and Ponnampalam**, they continue to serve as the **twin towers** of the school doing their best. To both, I am proud to admit the School is deeply beholden. They are both splendid personalities and deserve the recognition of all. Their nexus with the Institution continues and they live up to the confidence reposed by the founder and his family even long after they have gone. It is a striking saga not relevant to our times when men will sweat for money only not for values.

**Velautham M.V** had also other teachers, each a subject - specialist, who added lustre to the School. They have their pupils to remember and revere them even many years after they are gone or now in retirement. An account of the School without mention of their good work will be incomplete! **I still remember the Diamond Jubilee of the school when the oldest old boys and teachers were honoured - all plus personalities!**

**May Velautham M.V** prosper and flourish with the labour of love and **Grace of Lord Ganapathy, the Deity in the School Temple**. May its teachers past and present and the more to come add to its creative cultural and educational activities Poet Robert Bridges hath sung:

***"I love all beauteous things***
***I seek and adore them***
***God hath no better praise***
***And man in his hasty days***
***Is honoured for them"***

# நெஞ்சத்தில் நிலைத்திருக்கும் நினைவலைகள்

**திரு. ஆ. ஜெகநாதன்**
*(ஓய்வு பெற்ற அதிபர்)*
*யா / பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்*

**ஆ**சிரியர் சேவையை மட்டக்களப்பில் ஆரம்பித்து ஆறு ஆண்டுகளின் பின் இடமாற்றம் பெற்றுவந்த யான் இருபத்தொரு ஆண்டுகள் யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி அங்கிருந்து இளைப்பாறுவேன் என்ற எண்ணம் சிறிதுமின்றிப் பாடசாலைக்குள் நுழைந்தேன். ஒரு பக்கத்தில் மூன்று மாடிக்கட்டிடமும் மறுபுறத்தில் இரு மாடிக்கட்டிடமும் இவற்றுக்கிடையே அமைந்த நுழைவாயில் என்னை வரவேற்பது போல் அமைந்திருந்தது. பாடசாலையில் ஆசிரியராகப் பணி புரிந்து பின்னர் பாராளுமன்ற உறுப்பினராக அங்கம் வகித்த துரைரத்தினம் அவர்கள் அளித்த வரப்பிரசாதம் தான் இந்த மாடிக்கட்டிடங்கள் என்பதை உள்ளுணர்ந்து உவகை கொண்டேன்.

அப்போது அதிபர் பதவியை அலங்கரித்துக் கொண்டிருந்தவர் சே. ஏகாம்பரநாதன் அவர்கள். நீண்டகாலமாக ஒரு வணிகப்பட்டதாரி ஆசிரியர் நிரந்தரமாக இல்லையே என்ற குறையை நீக்குவதாக உங்கள் வருகை அமைந்துவிட்டது என்ற அவரது வரவேற்புடன் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டு மாசி மாதம் யா/ வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் எனது சேவையை ஆரம்பித்தேன்.

12ஆம், 13ஆம் தரங்களில் கணக்கியல், வணிகக் கல்வி ஆகிய 2 பாடங்களையும் கற்பிக்கும் பொறுப்பு எனக்கு அளிக்கப்பட்டது. படிப்படியாகப் பாடசாலையின் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் என்னை இணைத்துச் செயற்பட்டேன். எனது பள்ளிப்பராயத்தில் சாரணனாகச் செயற்பட்ட அனுபவம் காரணமாக இப்பாடசாலையில் சாரணியத்தை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென அதிபர் விரும்பியபோது நானே முன்வந்து சாரணர் ஆசிரியராகப் பொறுப்பேற்றேன். பின்னர் படிப்படியாக உயர்ந்து பருத்தித்துறை மாவட்டச் சாரண ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றேன்.

திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றமையால் உப அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. தேவராஜா அவர்கள் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அக்காலத்தில் பாடசாலையில் இருந்த எழுதுவினைஞர் இடமாற்றம் பெற்றுச் செல்ல, அவரின் பொறுப்புகள் பல திரு. சி. தேவராஜா வினால் என்மீது சுமத்தப்பட்டது. நிர்வாக விடயங்கள், வரவு செலவுத் திட்டம், வசதிகள் சேவைக்கட்டணக் கணக்குகள், காலாண்டு அறிக்கைகள் போன்ற நிதிசார் நடவடிக்கைகளில் முழுமையாக செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வர்த்தக ஆசிரியர் என்ற ரீதியில் யானே கணக்குப் பதிவுகளையும் மேற்கொள்ள வேண்டிய கட்டாயச் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டேன். திரு. சி. தேவராஜா இளைப்பாறியதைத் தொடர்ந்து திரு. இ. ஞானசேகரம்பிள்ளை அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றார். அவருடைய பதவிக் காலத்தின் இறுதியில் யான் அவரால் உப அதிபராக்கப்பட்டுச் செயற்பட்டேன். அவர் தனது சொந்த விடயம் காரணமாகத் திடீரெனக் கொழும்பிற்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல நேர்ந்தது. எனவே அவர் என்னை அதிபர் பதவியை ஏற்குமாறு பணித்தார். அவருக்கு

அனுசரணையாக அமரர் திரு. செ. சிவஞானசுந்தரம் ஆசிரியர் அவர்களும் பாடசாலையின் பழைய மாணவர் தாய்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர் அமரர் திரு. க. சண்முகநாதன் அவர்களும் செயற்பட்டனர். திரு. இ. ஞானசேகரம்பிள்ளையின் வேண்டுகோளை அப்போதைய வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும் தற்போதைய யாழ் மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளரும் ஆகிய திரு. V. T. செல்வரட்னம் அவர்கள் ஏற்றுச் செயற்படுத்தியமை யால் யான் அதிபர் பதவியை ஏற்கவேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்கப் பட்டேன்.

யான் ஆசிரியராகப் பணிபுரிந்த காலங்களில் பல வர்த்தகப் பட்டதாரிகள் உருவாவதற்கும், கணக்காளர்கள் உருவாவதற்கும் சூழ்நிலை சாதகமாக அமைந்ததையிட்டு பெருமைய டைகின்றேன். மூன்று அதிபர்களது காலங்களிலும் ஆசிரியர் பணிக்கு மேலதிகமாக இந்து மன்றப் பொறுப்பு, ஒழுக்கப் பிரிவுப் பொறுப்பு, இல்ல ஆசிரியர் பொறுப்பு, உயர்தர மாணவர் மன்றப் பொறுப்பு, வணிகமன்றப் பொறுப்பு, ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் பொறுப்பு, சாரணிய ஆசிரியர் பொறுப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளர் பொறுப்பு போன்ற பல்வேறுபட்ட பொறுப்புகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்ட அனுபவம், யான் அதிபர் பதவியை வகிப்பதற்கு உறுதுணையாக அமைந்திருந்தன.

எனது அதிபர் பதவிக்காலத்தில் பல்வேறு கல்விச் சீர்திருத்தங்களும் மாற்றங்களும் ஏற்பட்டிருந்தன. பலகாலமாக நடைமுறையிலிருந்து வந்த வரவு செலவுத் திட்டக் கணக்குகளுக்கு மேலதிகமாகப் பல்வேறு புதிய விடயங்கள் கல்வி அமைச்சினால் அறிமுகம் செய்யப்பட்டுப் பல இலட்ச ரூபா நிதி ஒதுக்கீடுகளும் பாடசாலைக ளுக்கு வழங்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டன. தர உள்ளீடுகள் கணக்கு, ஆசிரியர், மாணவர்களு க்கான உயர்கல்விச் செயற்பாடுகள் போன்ற பல புதிய விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விசேடமாக பாடசாலைகளின் பௌதீக வள மேம்பாட்டிற்காகவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகவும் பெருமளவிலான நிதியை ஒதுக்கிச் செயற்பட்டனர். அந்த வகையில் எமது பாடசாலையும் பல நன்மைகளைப் பெற ஏதுவாகியது இவற்றுக்கு மேலதிகமாகப் பன்முகவரவு செலவுத்திட்டம் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களால் நிதி உதவிகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங் களினது உதவிகளும் வெளிநாட்டு நலன் விரும்பிகளது உதவிகளும், பருத்தித்துறைப் பொதுமக்கள் ஒன்றியத்தின் உதவிகளும் கிடைக்கப்பெற்றன. இவற்றோடு பாடசாலைச் சமூகத்தினரான பழைய மாணவர் தாய்ச் சங்க, கொழும்புக் கிளைச்சங்க உதவிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவிகள் போன்றனவும் பாடசாலை அபிவிருத்திக்கு அனுசரணையாக அமைந்திரு ந்தன. இவ்விடயங்களைக் கீழ்வருமாறு விபரிக் கலாம்.

01. ஒலி, ஒளி அறை அமைக்கப்பட்டு அதற்கான கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் கிடைக்கப் பெற்றன. (T.V., CD Player, O. H. P. Screen, Slide Projector, White Board)
02. கணினி அறை அமைக்கப்பட்டு 21 கணினிகள் கிடைக்கப் பெற்றன.
03. மாணவர்களுக்கான புதிய மலசல கூடத்தொகுதி அமைக்கப்பட்டது.
04. இந்து கலாச்சார அமைச்சினாலும் ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தினராலும் நூல் நிலையத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் இலவசமாகக் கிடைக்கப்பெற்றன.
05. கிறிஸ்தவ மாணவர்கள் வழிபாட்டுக்காகவும் கற்பித்தலுக்குமான புதிதாகத் தனி அறை ஒன்று புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.
06. வகுப்பறைகளாகவும் மண்டபமாகவும் பயன் படுத்தக்கூடிய வகையில் புதிய மண்டபம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டது.

07. நீர்த்தாங்கி ஒன்று கனடா வாழ் பருத்தித்துறைப் பொதுமக்கள் ஒன்றியத் தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது.
08. ஆசிரியர்களுக்கான கதிரைகள், மேசைகள் மாணவர்களுக்கான கதிரைகள், மேசைகள் கிடைத்தன.
09. சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிதி உதவிகள், கற்றல் உபகரணங்கள், காலணிகள், உயர் உணவுப் பொதிகள், அன்றாட பாவனைக்கான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.
10. பாடசாலைக்கு அருகில் பிரதான வீதியில் அமைந்துள்ள வீட்டின் ஒரு பகுதி அவுஸ்திரேலியா வாழ் வைத்திய கலாநிதி இரவீந்திரனால் பாடசாலைக்கென கைய ளிக்கப்பட்டது.
11. போட்டோப் பிரதி இயந்திரமும் கிடைக்கப் பெற்றது.
12. மாணவர் துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தும் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.
13. புதிய நூல் நிலையம், ஆய்வு கூடம் ஆகியவற்றை அமைப்பதற்கென மாடிக் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பாடசாலைக்கு இத்தகைய வளங்கள் கிடைக்கப் பெற்றமை பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாயிருந்த போதிலும் எனது அதிபர் பதவிக் காலத்தில் பல சவால்களை யான் எதிர் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நாட்டின் போர்ச் சூழலால் அதிகளவிற் பாதிப்புற்ற பாடசாலைகளுள் எமது பாடசாலையும் ஒன்று. கடற்கரையோர வாழ் பொதுமக்கள் பலரின் இடப்பெயர்வுகளும் பாடசாலையின் முன்புறம் அமைந்துள்ள பிரதான வீதியில் அடுத்தடுத்து ஏற்பட்ட பல்வேறு அனர்த்தங்களால் புதிதாகத் தரம் 6 க்கு அனுமதி பெறுவதற்கு வந்து சேரும் சிறு பிள்ளைகளைப் பெற்றோர் சேர்ப்பதற்குத் தயக்கம் காட்டியமையும் தரம் 10 க்கு அயற்பாடசாலையிலிருந்து வழமையாக வந்து அனுமதி பெறும் மாணவர்கள் பாடசாலை வருவதற்கு அஞ்சி வேறு பாடசாலைகளுக்குச் சென்றமையும் பாடசாலையின் மொத்த மாணவர் எண்ணிக்கையில் பாரிய ஒரு வீழ்ச்சியையேற்ப டுத்தியிருந்தது. வழமையான தரம் 6 இலும், தரம் 10 இலும் அனுமதி பெறும் மாணவர்களில் வீழ்ச்சி ஏற்பட்டது. அனுமதி பெறும் ஏனைய மாணவர்களும் எண்ணறிவு, எழுத்தறிவு அற்ற ஒரு நிலையில் காணப்பட்டமை மனவருத்தத்திற்குரிய ஒரு விடயமாகும். இத்தகைய மாணவர்களுக்கு விசேட மேலதிக வகுப்புகளை வைத்து அடைவு மட்டத்தைக் கூட்டுவதற்கு யுத்த சூழ்நிலையும் பாடசாலை அமைந்திருந்த சூழ் நிலையும் தனியார் கல்வி நிறுவனச் செயற்பாடுகளும் பெற்றோர் பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியதும் காரணங்களாகக் குறிப்பிடலாம். பாடசாலையின் வரலாற்றில் இக் காலத்தை ஒரு சோதனைக் காலம் என்றே குறிப்பிட வேண்டும்.

இருப்பினும் க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்தியடைந்து க. பொ. த. உயர்தர வகுப்பு களுக்குத் தகுதிபெற்று அனுமதி பெறும் மாணவர்களில் ஒவ்வொரு ஆண்டும் கணிசமான தொகையினர் சித்தியடைவதோடு ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பெறுபேறு பெற்றுப் பல்கலைக்கழகத்திற்குப் பலர் அனுமதி பெற்றுச் சென்றனர். பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் சொந்தமாக அருகாமையி லில்லாதிருந்த போதிலும் மாணவர் கள் வலய, மாவட்ட மட்டங்களில் தமது திறமையை வெளிப்படுத்தி மாகாண தேசிய மட்டங்களிற் பங்கு பற்றியமை பாடசாலைக்குப் பெருமையும் புகழும் சேர்க்கும் விடயங்களாக அமையப் பெற்றிருந்தன.

எனது பதவிக் காலத்தில் பாடசாலைப் பழைய மாணவர் சங்கக் கிளையொன்று கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டது. பாடசாலையில் கல்வி கற்று, ஆசிரியராகக் கற்பித்து அதிபராகப் பணியாற்றிப் பின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்று இளைப்பாறிய திரு. சே. ஏகாம்பரநாதன் அவர்கள் ஆயுட்காலத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுப் செயற்பட்டுவருகின்ற தன்மையும்

ஆர்வமும் அக்கறையும் உள்ள பலர் நிர்வாக உறுப்பினர்களாகவும் பொதுச் சபை உறுப்பினர்களாகவும் இருந்து செயற்பட்டு விழிப்புணர்வோடு பணியாற்றிவருவதும் பல்வேறு நன்மைகளைப் பாடசாலை பெறும் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தன. விசேடமாக விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்றவற்றை நடத்துவதற்கான நிதியில் அதிகளவு தொகையை வழங்கியும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மாணவர்களுக்குக் காலணிகளை வழங்கி உதவியும், மாணவர்களின் இலவச மதிய உணவிற்கு மேலதிகமாக மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வேண்டிய பணத்தை வழங்கியும், ஆங்கில ஆசிரியர் ஒருவரை நியமித்து மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்த உதவியும், புதிய நூல் நிலை ஆய்வு கூட மாடிக்கட்டிட நிர்மாணத்திற்குப் பழைய க்ட்டடங்களை இடித்தகற்றி இடத்தைச் சீர்படுத்து வதற்கான பெருமளவு நிதியை அளித்தும் உதவி புரிந்தனர். இவற்றோடு பாடசாலைப் பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினரும் நிதி உதவிகளை வழங்கி உடனிருந்து செயற்பட்டனர்.

இவை யாவும் பாடசாலைக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகிறேன். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் எவ்வித முரண்பாடுகளுமின்றி எனக்கு தோள் கொடுத்துதவியமை பாடசாலையின் ஆசிரிய குழாம், பெற்றோர், வடமராட்சிக் கல்வி வலயத்தினர் யாவரும் எனது கரத்தைப் பலப்படுத்திக் கைகொடுத்துதவியமை போன்ற விடயங்கள் யான் பாடசாலையின் நன்மதிப்பைப் பேண வழிசெய்தன என்றே கருதுகின்றேன்.

2009ம் ஆண்டு யான் இளைப்பாறியதைத் தொடர்ந்து புதிய அதிபராகத் திரு. ச. திரவியராசா அவர்கள் பாடசாலையின் பொறுப்பை ஏற்று நடாத்திவருகின்றார் தற்போது யுத்தமும் ஓய்ந்து மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப் பாடசாலையில் அனுமதி பெற்று மாணவர்கள் எண்ணிக்கை கூடியுள்ளது. ஆசிரியர் தொகையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வாழும் பாடசாலையின் பழைய மாணவர்கள் அங்கு கிளைகளை ஆரம்பித்துப் பாடசாலைக்கு உதவுவதில் முனைப்பு அடைந்துள்ளனர். இவை மூலம் நூறாண்டுகளுக்குமேல் வாழ்ந்த இப் பாடசாலை மீண்டெழுந்து இன்னும் பல நூறு ஆண்டுகள் நிமிர்ந்து நின்று சேவையாற்றும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

வேலாயுதம் ம. வி. இல் 21 ஆண்டுகள் பணிபுரிந்தமை எனது வாழ்நாள் நிகழ்வாக அமைந்ததோடு யானும் ஓர் பழைய மாணவர் என்ற ஓர் உணர்வே என் அடிமனத்தில் வேரூன்றியுள்ளது.

பாடசாலையில் எனது வாழ்க்கை என்றென்றும் என் நெஞ்சத்தில் நிலைகொண்ட நினைவுகளாக தடம்பதிந்து விட்டன.



அன்னை நிவேதிதா

# எனது வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் வேலாயுதம் மகாவித்தியாலயம்

**திரு. வேலுப்பிள்ளை ஈஸ்சுரபாதம்**

*முன்னாள் உப அதிபர்,*

*யா / வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை.*



மனித வாழ்வை மேம்படு த்தக் கடைப் பிடிக்கும் பெறுமதி மிக்க வாழ்க்கைப் பண்புகள் மனித விழுமியங்களாகும். எமது வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற நற்பண்புகளை எடுத்துக் கூறுவது மனித விழுமியங்கள் ஆகும். எனது வாழ்க்கையில் கல்விச் சேவையை ஆற்றும் வாய்ப்பினை எனக்கு அளித்த இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறி எனது வாழ்க்கையில் வேலாயுதம் மகாவித்தி யாலயத்தில் ஏற்பட்ட அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

ஒருவருடைய அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு செல்வம் இருக்குமென்றால் அது கல்விச் செல்வம் தான். நாம் கற்க வேண்டிய நூல்களை குற்றமின்றிக் கற்க வேண்டும்; அவ்வாறு கற்றபின் அக்கல்விக்கு ஏற்ப வாழ்ந்து வரவேண்டும் என்பதனையே எனது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றேன்.

> "கற்க கசடற கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்பது பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவர் வாக்காகும்.

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் எனது வாழ்வில் பல அழிக்க முடியாத பதிவுகளை ஏற்படுத்தியுள்ளது. நான் ஒரு மாணவனாக, ஆசிரியனாக, உப அதிபராக எனது இக் கல்லூரியில் இருந்துள்ளேன். எனது வாழ்க்கையில் வெற்றிகள் பெறுவதற்கும் தோல்விகளின் போது ஆறுதல் பெறுவதற்கும் எனது ஆசிரியர்களும் அதிபர்களும் பாடசாலையும் பெரிதும் உதவியுள்ளன.

நான் 22. 08. 1924ல் மலேசியா நாட்டில் நெக்கிரிசம் பிளாம்ட், சிரம்பன் / என்ற இடத்தில் பிறந்தேன். (Negrisem Bilam, Seremban, Malaysia) அங்கு ஐந்து வயது முதல் ஏழு வயது வரை எனது பாடசாலை முன்பள்ளியை (Post Primary) மலேசியாவில் கற்றேன். பெற்றோர் இலங்கை வந்ததினால் நானும் இலங்கை வந்து சேர்ந்தேன். எனது பிரயாணம் இரம்மியமாக இருந்தது. அது இன்றும் எனது மனத்தில் பசுமையாக உள்ளது. மலேசியாவிலிருந்து கொழும்புத்துறை முகத்துக்குச் கப்பல் மூலம் வந்தேன். அங்கிருந்து புகையிரதம் மூலம் கொடிகாமம் புகையிரத நிலையம் வந்தேன். கொடிகாமத்தில் இருந்து புலோலிமேற்கு ஆத்தியடிக்கு ஏ 40 (ஏ போட்டி) காரில் வந்தேன்.

எனது கல்வி ஆரம்பத்தில் தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் பாடசாலையிலும் அதைத் தொடர்ந்து வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் அன்றைய பெயர் (புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை) ஆண்டு (8) எட்டு வரை பயின்றேன்.

இக்காலத்தில் என்னுடன் கல்வி பயின்ற திரு. இ. உருத்திரா (பிற்காலத்தில் அட்வக்கேட் இ. உருத்திரா BSc அவர்கள்) பிரதானமானவர் ஆவர். அவரும் நானும் ஒரே நாளில் வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டோம்.

எங்களது ஆரம்ப வகுப்பு ஆசிரியராகவும் ஆங்கில ஆசானாகவும் விளங்கியவர். அக்காலப் பாடசாலையின் முகாமையாளரான வேலாயுத பிள்ளை அருணாசலம் அவர்கள் ஆவார். எனக்கு அவ் ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியரான திரு. ச. கணபதிப்பிள்ளை ஆத்தியடியைச் சேர்ந்தவர், புலோலியைச் சேர்ந்த திரு. எஸ். செல்லையா ஆசிரியர்; பண்டிதர் திரு. இ. கனகசபாபதி துன்னாலையைச் சேர்ந்த திரு. உலகநாதர் அவர்களும் கல்வி கற்பித்தனர். இவர்கள் எனக்கு கணிதம், ஆங்கிலம், தமிழ், பூமிசாஸ்திரம் ஆகிய பாடங்களைக் கற்பித்ததுடன், தமது அன்பையும் என்மீது செலுத்தினர்.

"தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" என்பதற்கு அமைய எமக்கு இந் நல்ல ஆசிரியர்கள் அமைந்ததினால் நாம் உயர்வடைய முடிந்தது. எங்கள் பாடசாலை முகாமையாளர் திரு. வே. அருணாசலம் அவர்கள் என்னுடன் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் இருந்தார். நானும் அவர்களது ஒரு குடும்ப நண்பனாகவும் பழகி வந்தேன்.

எனது கல்வியை ஆண்டு (9) ஒன்பதில் காட்லிக் கல்லூரியிலும், ஆண்டு (10) பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றேன். இங்கே "மற்றிக்குலேசன்" (Matriculation) பரீட்சையினை செய்தேன். நான் எனது இலண்டன் பல்கலைக் கழக பீ. ஏ (BA) பரீட்சையில் ஆங்கிலம், வரலாறு, அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை எடுத்து அப் பரீட்சையில் வெற்றி பெற்று ஆசிரியர் தொழிலில் இணைந்தேன். முதலில் கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியிலும் பின்பு அத்தியார் இந்துக் கல்லூரியிலும், நீர்வேலி இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகக் கடமை புரிந்து பின்பு 01.11.1955இல் நான் கல்வி கற்ற எனது பாடசாலையான வேலாயுதம் மகா வித்தியாலத்திற்கு ஆசிரியராகக் கடமை ஏற்றேன். இங்கு ஆங்கிலம், குடியியல், ஆகிய பாடங்களைப் புகட்டி மாணவர்களின் அன்பையும் பெற்றேன்.

**"ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக் கேட்ட தாய்"**

**-திருக்குறள்-**

நான் வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியனாக இருந்துடன் அங்கேயே உப அதிபராகவும் பதவியேற்றேன். நான் ஆசிரியராகச் சேர்ந்து 1984ல் ஓய்வு பெறும் வரை நல்ல ஆக்கமும், ஊக்கமும் தந்த அதிபர்களைச் சந்தித்தேன், அவர்களின் உதவியும் வழிகாட்டல்களும் எனக்குப் பெரிதும் உதவின. அவர்களில் திரு. த. இராமநாதபிள்ளை பீ. ஏ. (இலண்டன்) – பருத்தித் துறை தும்பளையைச் சேர்ந்தவர் அவர் எனது முதல் அதிபர். அவர் வரலாற்றிலும், தத்துவவியலிலும் மிகவும் ஆற்றல்மிக்கவர். அவரின் பாட அறிவும் எனக்கு உதவியது. அவர்கள் "உலக வரலாறு" என்ற மூன்று பாகங்களைக் கொண்ட மிகச் சிறந்த வரலாற்று நூல்களையும் எழுதினார்கள். இது எமது பாடசாலையின் புகழை நாடு அறிய வைத்ததும் இதனால் அறிஞர் C.N. அண்ணாத்துரை (பின்பு முதலமைச்சர் தமிழ் நாடு) அவர்களின் பாராட்டையும் பெற்றவர்.

திரு. இராமநாதபிள்ளை அவர்கள் ஓய்வு பெற திரு. எம். ஏ. தங்கராசா BSc அதிபராக வந்தார். அவர்கள் புலோலி மேற்குத் தம்பசிட்டியை சேர்ந்தவர். அவர்கள் பாடசாலைக்காக மிகவும் கடினமாக உழைத்த ஒரு அதிபர். அவர்கள் ஒரு தொழிலாளி போல் கௌரவம் பார்க்காமல் தொழிற்படுவார். ஒரு சிறிய திருத்தத்தையும் உடனுக்குடன் செய்து முடிப்பார். இவரது முயற்சியால் இரசாயன, உயிரியல் ஆய்வு கூடங்கள் உருவாக்கப்பட்டன. கல்லூரியில் இவரின்

முயற்சியால் ஓலைக் கூரைகள் எல்லாம் ஓட்டுக் கூரைகளாகின. இவர்கள் எனது மனைவி இறந்த வேளையில் சொந்தச் சகோதரர் போன்று முன்னின்று பல வழிகளிலும் உதவியவர். எனக்குத் திடீர் எனச் சிலாபம் பாடசாலைக்கு மாற்றம் கிடைத்த வேளையில் அதனைத் தனது உடன் நடவடிக்கையினால் இரத்துச் செய்வித்தவர். மாணவர் ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பானவர்.

**"இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல்"**

**-திருக்குறள்-**

"கல்லூரிகளில் அதிபர், ஆசிரியர்கள் ஒரே குடும்பமாக இயங்குவதன் மூலம் பாடசாலை சிறப்படையும்" என்பதனைத் திரு தங்கராசா அதிபர் மூலம் உணர்ந்தேன்.

நான் உப அதிபராக இருந்த காலத்தில் எனக்கு எனச் சில கடமைக் கூறுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பாடசாலை மேற்பார்வை; மாணவர்கள் முன்னேற்ற அறிக்கை ஒப்பமிடல்; ஆசிரியர்களின் பாடக்குறிப்புகள் ஒப்பமிடல்; பெற்றோரைச் சந்தித்தல்; பெற்றோர் கூட்டங்களைக் கூட்டுதல்; நிதி, நிர்வாகக் கடமைகளுக்கு உதவுதல் ஆகிய கடமைகளை நான் செய்து வந்தேன்.

எனது அதிபர்களில் இன்னொருவர் திரு. வல்லிபுரம் தம்பிப்பிள்ளை B.A இவர் துன்னாலையை சேர்ந்தவர். அவர்கள் கலைத்துறை விஞ்ஞானத் துறை ஆகிய இரண்டிலும் ஆற்றல் மிக்க ஆசிரியராகவும் அதிபராகவும் விளங்கினார். எனக்கு மிகுந்த விருப்பமான அதிபராக இருந்தார். என்னை அனுசரித்து அன்பு பாராட்டிய அதிபர் ஆவர்.

எனது சேவையின் இறுதிக் காலத்தில் எனது அதிபராக 1982ல் இருந்தவர் தென்புலோலியூர் திரு. சேனாதிராஜசேகரம் ஏகாம்பரநாதன் BA (Hons). எனது உறவினர். நல்ல பண்பாளர். பாடசாலையிலிருந்து பிரதிக் கல்விப்பணிப்பாளராய் பதிவு உயர்வு பெற்று வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகத்திற்குச் செல்லும் வரை மிகச் சிறந்த அதிபராக செயற்பட்டவர்.

திரு. ஏகாம்பரநாதன் காலத்தில் நான் சேவை ஆற்றி ஓய்வு பெற்றதை எனது பெருமையாகவும் பாக்கியமாகவும் கருதுகின்றேன்.

நான் 1984இல் ஓய்வு பெற்று இன்றுவரை சுகதேகியாக வாழ்ந்து கொண்டு இருப்பது இறைவனின் அருளும், எனது கல்லூரியான வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் ஆசியுமாகும் என்று நினைப்பதில் நான் மிகுந்த மகிழ்வடைகின்றேன். 22. 08. 1984ல் நான் எனது அறுபது வயதின் காரணமாக ஓய்வு பெற்ற போதிலும் இன்றும் எனது பாடசாலை நினைவுகள் பசுமையாக என்னைச் சுற்றிக் கொண்டே இருக்கின்றன.

---

*கவிதையை விடச் சமையல் செய்யத் தெரிவது, வாழ்க்கையில் மிகவும் இன்றியமையாதது.*

**- காண்டேகர்**

*கவிஞன் என்பவன் எல்லாக் காலத்தும் எல்லாருக்கும் உரிய கலங்கரை விளக்கம்.*

**- கார்லைல்**

*கலைஞன் இயற்கையைப் பெரிதும் விரும்புகிறான். அதனால் அவன் அதனின் அடிமையும் தலைவனுமாகிறான்.*

*- தாகூர்*

---

# 'வேலாயுதம் பாடசாலை'யிற் கற்ற மாணவனின் ஓரளவு மழுங்கிய நினைவுகள் (1948-1951)
# பிறப்பும் ஆரம்பக் கல்வியும்

- பழைய மாணவன் க. பாலசுப்பிரமணியம்
*1948-1951*

**1937** ஐப்பசிமாதம் இந்தப் பூமிக்கு வந்தேன். கரு ஊரில் இருந்து ஓடக்கரை ஊருக்குப் புலோலி வைத்தியசாலை ஊடாகப் பிரவேசித்தேன்.

1943இல் ஆறு வயது. அப்பொழுது முன்பள்ளி இல்லை. விநாயக முதலியார் வீதி, சித்தி விநாயகர் பாடசாலையில் ஆரம்பக் கல்வி. ஐந்தாம் வகுப்பு வரை. 'அரிவரி குரவரி ஆனந்தக் குரவரி' 'தையல் அம்மா ரீச்சர். 'சின்ன வட்டனுகள்' நாங்கள். இறக்குமதி செய்ததையும் பாவம் அள்ளி இருப்பா. வகுப்பு ஐந்துக்குள், பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் ஏரம்பமூர்த்தி, சிதம்பரப்பிள்ளை அவர்கள் கற்பித்தார்கள். இயற்கையிலேயே கறுத்தப் பொட்டு நெற்றியில் அமைந்தவர் ஒருவர் அதிபர். அப்பொழுது தலைமை உபாத்தியாயர்.

1947 உடன் சித்திவிநாயகர் கல்வி முற்றுப் பெற்றது.

### புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை

1948ல் இருந்து புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை. வகுப்பு ஆறு (1948), ஏழு 1949, 1950 (பெயில் பண்ணி இரண்டு வருடம்), எட்டு (J. S. C) 1951. மொத்தம் நான்கு வருடங்கள் வேலாயுதம் பாடசாலை. ஓரளவு 'இடைநிலைக் கல்வி' எனலாம். இறைசித்தம், ஏழாம் வகுப்பில் 'மொக்கனாக' இருந்திருக்கிறேன். இரண்டு வருடங்கள் ஏழாம் வகுப்பில் கடுங்காவல் தண்டனை. தவணைப் பரீட்சை ஒன்றில் 'திருநாவுக்கரசு'விடம் கேட்டுக் 'கொப்பி அடிக்க' முயற்சித்த ஞாபகம். 'நான்' யார்? என உணராது இறைவன் வழி நடத்திய பருவம்.

### சூழல்

1948, இரண்டாம் மகாயுத்தம் முடிந்து மூன்று வருடம். அப்பொழுது அது தெரிகிறது. புலோலிப் பாடசாலைக்குள் பிரவேசித்தபோது அந்த உணர்வே இல்லை. ஒரு சதத்துக்கு ஒரு சுருள் சருக்கரை வாங்கி, அலாக்காக விழுங்கிய ஞாபகம் உண்டு. ஊற்றுப் பேனா தெரியாது. சப்பாத்து அறியோம். வெறுங்காலோடு பாடசாலை போயிருப் போம். அரைக்காற் சட்டை அல்லது வேட்டி, ஷேட் அலங்கரித்திருக்கும்.

### பாடசாலை முகப்பு

ஐம்பத்தி எட்டு வருடங்களுக்கு முந்திய நான்கு வருட நினைவுகள். படியேறிப் பாடசாலைக்குள் நுழைவோம். 'ஐயப்ப சுவாமி' 18 படியில்லை. கொலஸ்ரலோல் இல்லை, மூச்சு வாங்கவில்லை, நீரிழிவு இல்லை, காலில் 'பாட்டா' செருப்பும் இல்லை. பாடசாலைக்குள் நுழைந்ததும், இடது பக்கம் அதிபர் காரியாலயம், நேரே வட்ட மேசை பெரியது. கைகள் நடுங்கியபடி, வேலாயுதம் அவர்கள் மகன் அருணாசலம் காட்சி தருவார். முன்பு அதிபரும் அவரே மனேச்சரும் அவரே. நாங்கள் எதிர் கொண்ட அதிபர் நடராசா அவர்கள். கூடவே தங்கராசா மாஸ்டர் இருப்பார். பார்ப்பார். சலம் முடுக்கும். சப்த நாடியும் ஒடுங்கும்.

வட்ட மேசைக்கு வலது புறம் தணிகாசலம் அவர்கள் வீட்டை நோக்கி இரண்டு வகுப்பறைகள். ஒன்று நேரே. மற்றது பருத்தித்துறை யாழ் வீதிப் பக்கம். அரைச்சுவர் மேலே சாக்கு வெள்ளைச் சுண்ணாம்பு அடித்து றோட்டை மறைக்கும். T. பத்மநாதன் அவர்கள் ஆங்கிலம் கற்பித்த வகுப்பு அது. 'Treasure Island' பாத்திரங்கள் கண்முன் வரும் Yo ho ho and a bottle of rum என்று சேர்ந்து கோரஸ் போடுவோம். அந்தக் காலம் 'rum' என்ன விளையாட்டு செய்யக்கூடிய, கப்பல்காரனின் சரக்கு என்று எங்களுக்குத் தெரியாது. Sir ன் பக்கெற்றுக்குள் இருந்து தங்கமூடியுடன் கூடிய Parker பேனா தலையைக் காட்டும்.

### மண்டபம்

வட்ட மேசையைத் தாண்டி, நேரே கிழக்கே போனால் நீண்ட மண்டபம். வலது புறம், எல்லாம் ஒலை வேய்ந்தது. நீலநிற ஸ்கிரீன்கள் கள்ளிப் பலகையில் நீல நிற மை அடித்து வகுப்புகளுக்கு இடையில் 'கிளித்தட்டு' மறிக்கும். மரண தண்டனை கொடுத்தவனுக்குக் கழுத்தில் கயிறு மாட்டிய மாதிரி, இரண்டு ஓரங்களிலும் கயிறு கட்டியிருக்கும். நீண்ட 'Hall' ஆக்கத் தேவை எழுந்தால், 'சுருக்கு இழுத்து' 'Screen'கள் எல்லாம் மண்டப வலது 'சைட்'டுக்கு போய்விடும்.

அகலமான நீண்ட Benches . அநேகமாக மூன்று, நான்கு இடங்களில் ஒட்டை விழுந்திருக்கும். அவற்றுக்குள் வெள்ளை நிற மைக்கூடுகள், நாங்கள் பேனை வைத்திருப்போம். அது 'கலர்' பண்ணிய சீவிய தடி. நுனியில் 'நிப்பு'. தொட்டு எழுதவேணும். எழுத்தாணியில் இருந்து சிறிது முன்னேற்றம். பேனையை மைக்கூட்டுக்குள் தொட்டு மை நன்றாக 'நிப்பில்' நிறைய வெளியே எடுத்து, மேல் இருந்து கீழாக ஓர் இழுவை இழுத்தால், முன் வாங்கினில் நேரே உள்ளவரின் 'சேட்'டில் சாய்வான ஒரு கோடு, கழுத்தில் இருந்து அரைக் காற்சட்டை வரை போகும்.

### அதிபரும் ஆசிரியர்களும்

நான்கு வருடங்களுக்குள்ளும் ஆசிரியர்கள் பலரின் முஷ்டிகள் தலையில் விளையாடி இருக்கின்றன அவற்றுள் அதிபர் இராமநாத பிள்ளை அவர்களின் 'வஜ்ஜிராயுதம்' 'ஒபிஸ்' திறப்பு, அது தலையை நோக்கி வரும் போது தலையைச் சாய்த்துத் தப்பிய ஞாபகங்கள் உண்டு கல்யாண மாப்பிள்ளை மாதிரிச் சால்வையை நேரே தொங்க விடாமல் 'பரமசிவன்' கழுத்தில் பாம்பு மாதிரி ஒரு 'றவுண்டு' சுற்றிவரவிட்டுத் தொங்க விட்டிருப்பார். அவருடைய பற்கள் மிதந்து இருக்கும். கருமவீரர் 'காமராஜர்' மாதிரித் தோற்றம். செயலிலும் அப்படித்தான். 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று மட்டும் சொல்லமாட்டார். அவரது 'உலக சரித்திரம்' பிரசித்தமானது. "அசோகன் நேமிச்சக்கரம் உருட்டினான்" என்ற வாக்கியம் பார்த்துக் கலிங்கத்துப் போருக்கு அஞ்சாத அசோகனே மருண்டு இருப்பான்.

### ஆசிரியர் பெருந்தகைகள்

ஆசிரியர்களாக அமைந்தவர்கள் யாவரும் எங்களுக்கு ஆண்டவன் தந்த வரப் பிரசாதங்கள். அர்ப்பணிப்பைத் தவிர வேறு ஒன்றும் அறியாத வர்கள். தியாகச் செம்மல்கள். ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள். எங்களுக்கு நல்ல உதாரண புருஷர்களாக விளங்கினார்கள். 'ஒரு மாணவனுக்கு மிகச் சிறந்த பாடப் புத்தகம் உபாத்தி யாயரே' என்று காந்திஜீ கூறியது உண்மைதான்.

## V. S. Master

சைவப்புலவர். சமயம் கற்பித்தவர். கி. வா ஜகந்நாதனை ஒத்து இருப்பார். சிவன் கோவில் வீதியால் அவர், விரிந்த குடையுடன் நடந்து வரவே, அந்த வீதி, தருமம், சாந்தம் நற்குணங்களால் நிறையும். அசல் 'மயிலாப்பூர்' பிராமணர் கொஞ்சம் வளைந்து தான் முதுகு இருக்கும். பத்மநாதன் Sir க்கு இவரைக் கண்டால் குலை நடுக்கம். அவ்வளவு பயபக்தி. V.S. மாஸ்ரருக்குக் கோபமே வராது.

**காசிநாதப்பிள்ளை**

அவர்கள் English Trained. உயரத்தில் சந்திரனைத் தொடுவார். போதாக் குறைக்கு, 'அங்கே தண்ணீர் இருக்கிறதா? என்று பார்ப்பவர் போலத் தலையை உயர்த்தியே வைத்திருப்பார். சிறிய நெற்றி, விக்டோரியா காலச் சிறிய வட்டக் கண்ணாடி, மூக்கின் மேல் குந்தி இருக்கும். வாயிலிருந்து மாணவர்கள் மேல் அன்பும், பரிவும் தான் ஒழுகும். நல்ல மனிதர்.
(கலிகைச் சந்தியில் இருந்து வருவார்)

**உலகநாதபிள்ளை Sir**

பூமிசாத்திரம் இவருக்குக் கைவந்த ஒரு பாடம் "வண்டி மாடு எட்டு வைச்சு முன்னே போகுதம்மா; வாழ்க்கைப்பட்ட Sir மனம் பின்னே போகுதம்மா" என்று பாடுவது Sir க்குப் பொருந்தாது பாடசாலைச் சிந்தனைகளோடு தான் வண்டியில் வந்து சேருவார். அறிவும், 'வண்டிக் கணக்கில்' கொண்டிருந்தார்.

**'கட்டை' அருணாசலம் Sir**

கண்முன் அகப்படுகிறார். புகழ் பெற்ற, பட்டயக் கணக்காளர் காலஞ்சென்ற சோமசுந்தரம் பிள்ளை, தியாகி, குழந்தை வைத்திய நிபுணர் சிவபாத சுந்தரம் அவர்களின் தகப்பனார்.

வகுப்பில் மேசைமுன் உள்ள கதிரையில் அமர்ந்தால் தலைமட்டும் தெரியும், கைகளில் நகங்கள் எல்லாம் நீண்டு 'புறாண்ட' 'ரெடியாக' இருக்கும். தலையில் நடுவில் 'சஹாரா' வெளி. ஓரங்களில் ஒரு புறத் தலைமயிர் மந்திகைப் பக்கம் பார்க்கும். இடது புறத் தலைமயிர் பருத்தித்துறைத் துறைமுகப் பக்கம் பார்க்கும். ஆனால் 'ஓமக்குச்சி' அல்லர். தேகம் பருத்தவர். கண்டிப்பு நிறைந்தவர். சரித்திரம் கற்பித்த ஞாபகம். 'ஒருவரின் உள்ள உயர்வு வெறும் வெளித்தோற்றத்தில் இல்லை' என்பதை உணர்த்தி நின்ற பெருமகன்.

**பண்டிதர் கனகசபாபதி**

அவர்கள் இலக்கண சூத்திரங்களில் முக்குளித்தவர். எல்லாம் தண்ணீர்பட்டபாடு அவருக்கு. 'எ யா முதலும்' என்று அவர் முழங்கினால், அச் சூத்திர மிகுதி 'ஆ ஓ ஈற்றும்' என்று எங்கள் வாய்கள் பிளக்கும். 'தல், அல், அம், ஐ' என்று அவர் தொடங்கினால். அச் சூத்திரம் முடிவதற்குள் எங்கள் வாய்க்குள் ஐந்து ஆறு இலையான்கள் உட்புகுந்து வெளிவரும். கரும் பலகையின் மேற்பகுதி சூத்திரம் எழுதப் போதாமல் குந்தி இருந்தும் எழுதுவார். வாயினில், பிறவி அம்சமாகச் சொண்டுகளுக்கு அண்மையில் சிவப்பாக இருக்கும். 'ஒறுவாய்ச் சொண்டர்' என்று பிள்ளைகள் வஞ்சனை இல்லாமல் கூறுவது உண்டு. தமிழில் நல்ல அத்திவாரமிட்ட இலக்கண வித்தகர் அவர்.

**நாராயணபிள்ளை Sir**

தமிழ் கற்பித்தவர். V.M றோட்டில் சின்னப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வாழ்ந்தவர், சால்வை, பிராமணரின் பூணூல் போலக் குறுக்காக வரும். 'பவுண் பல்லு' பளிச்சிடும். நல்ல அழகன். மாணவர்களை அவர்கள் செயற்பா டுகளில் நன்கு ஊக்குவிப்பார்.

**கணிதம், பௌதிகம் தங்கராசா Sir**

வகுப்புக்கு வந்து, சால்வையை உதறி, கதிரையில் அலாக்காக எறிந்தார் என்றால், '30, 35 பேர் உள்ள வகுப்பில், 25 பேர், பக்கத்து மகிழ மரத்தின் கீழ் 30 நிமிட தவம் மேற்கொள்ளப் போகிறார்கள். என்று அர்த்தம். பாடம் முடிவடையும் நேரமும், தற்செயலாக நாங்கள் சிலர் வகுப்புக்குள் இருந்தால், மகிழ மர நினைவோடேயே இருப்போம். சிறிய விஞ்ஞான பரிசோதனைகளையும் செய்து காட்டியவர். நீண்ட மண்டபத்தின் பின் இலந்தைக் காணி. அதற்கு இடப்பக்கம், கட்ட தொடங்கப்பட்ட கட்டிடம் ஒரு சிறிய அறையில் இந்தப் பரிசோதனை கள் (எங்களுக்குத்தான்) செய்து காட்டப்பட்டன. ஏதேதோ நிறங்கள் பரிசோதனைக் குழாயில் இருந்து வந்தன என்பது ஞாபகம். "வாணவேடிக்கை பாக்கிறியளோ; வாங்கோ அடுத்த வகுப்புக்கு" என்று சொன்னார் என்றால் செங்கண்மாரி வந்தவன் கண்கள் போல எங்கள் கண்கள் மிரண்டு, மஞ்சள் நிறம் அடிக்கும்.

'விளாசல்' அப்படி இருக்கும். அந்தக் காலத்துப் பெற்றோர்கள் எல்லாம் 'ஒன்ஸ்மோர்' தான் சொல்லுவினம்.

**இராம கிருஷ்ண பணிக்கர்**

என்ற 'மலையாளத்தவர்' எங்களுக்கு 'Botany' கற்பித்தவர். இப்பொழுது மலையாளத்தவர் பெயரைக் கேட்டாலே எங்களுக்கு ஏனோ நடுக்கம். இந்தப் 'பணிக்கர்' மனுஷன் நல்லவர். மலையாளத்தவர்கள் போலவே நல்ல அழகன். வகிடு இல்லாமல் தலையை வாரி இழுத்திருப்பார் 'வெள்ளை வெளேர்' என்று தேசிய உடை அணிவார். மதிய உணவு 'மெத்தைக் கடை'ச் சந்திக்கு அருகாமையில் இருந்த 'பீமவிலாஸ்' சைவ ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு ஒரு சிகரெட்டை வாயில் வைத்தார் என்றால், நடந்து வந்து 'வேலாயுதம் ஆண்கள் ஆங்கில பாடசாலை' வாசல் வர, அதன் கடைசித் தொங்கலில் நெருப்பு தொத்திக் கொண்டு இருக்கும். அந்தத் துண்டை அலாக்காக வாய்க்காலுக்குள் வீசிவிட்டு கம்பீரமாகப் பாடசாலைக்குள் நுழைவார். அருணாசலம் அவர்கள் கைகள் நடுங்கியபடி பார்க்க, இராமநாதபிள்ளை அவர்களின் கணிச மேற்பார்வையில் 'கறுத்தக் கொழும்பான்' மாம்பழத் துண்டுகள் ஒரு பாத்திரத்தில் அவருக்குப் பரிமாறப்படும். எங்கள் நாக்கில் ஜலம் ஊறும் "எங்கிருந்தோ வந்தான்" இங்கு இவனை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்' என்று எண்ணி மாம்பழம் கொடுத்து நன்கு கவனித்தார்கள் போலும். கைகளை இடுப்பில் வைத்தபடி கற்பிப்பார். "எடே பயலே" என்பார். 'வாழைப்பழம்' என்பதை சொல்லி 'ழ' கரங்களை அழகாக உச்சரித்துக் காட்டுவார். V. S மாஸ்டர் வீட்டில் வாழ அவர் கொடுத்து வைத்தவர்.

அமெரிக்க லொத்தரில் வாய்ப்புப் பெற்று, அமெரிக்காவில் குடியேறி இருப்பவர்.

**சிவபாதம் Sir**

வேலாயுதம் பாடசாலையிற் கற்பித்துப் பின் யாழ்ப்பாணக் கல்வி அதிகாரியாகப் பதவி உயர்ந்தவர். தும்பளை றோட்டில் வீடு. ஜெமினி கணேசன் தான். முகத்தில் பருக்கள் அதிகம். அவை அழகுக்கு அழகு சேர்த்தன. ராதா என்ற பெண்ணைக் காதலித்துத் தோல்வி கண்டவராம், ஆனால் தாடி இல்லை 'ராதா சமேதா கிருஷ்ணா' என்று மாதனை இராஜசேகரம் பாட, புன்சிரிப்புடன் அன்போடு பிரம்பால் இலேசாகத் தட்டியது ஞாபகம்.

ஆத்தியடியில் இருந்து வந்து இருவர் கற்பித்தனர். ஒருவர் **கணபதிப்பிள்ளை** மாஸ்ரர், காலஞ்சென்ற ஷண்முகநாதன் விதானையார் அவர்களின் தகப்பன். 'கன்னங் கரேல்' என்று இருப்பார். மீசை ஒன்று மெருகூட்டும். வெற்றிலை குதப்புவார். "Lipstick" பாவிக்காமலே உதடுகள் சிவந்து இருக்கும். அவருடைய 'கந்தன் Went through the kandayam with a கத்திப்பிடி in his hand to collect nongoos" மிகப் பிரசித்தம். நீண்ட காலம் 'வேலாயுதம்' ஆண்கள் ஆங்கில பாடசாலையிற் சேவையாற்றி ஓய்வு பெற்றவர். நடந்தே பாடசாலைக்கு வருவார்.

**ஆறுமுகம் Sir**

ஆத்தியடி; கணக்கு பாடம். நன்றாகச் சொல்லித் தருவார் குட்டுவிடத் தயங்கார். நன்றாக! ஏசுவார்.

முருகேசபிள்ளை அவர்கள் பயிற்றப்பட்ட தமிழாசிரியர். ஆனால் Art master ஆக மிளிர்ந்தவர். விநாயக முதலியார் தெருவில் வசித்தவர். பணக்காரருக்கு இருக்கும் கழுத்து மடி போல, இவருக்கும் இருந்தது. மெதுவாகத் தான் பேசுவார். மென்மையானவர்.

**சபாரத்தினம் Sir**

விஞ்ஞானப் பட்டதாரி. தேசிய உடையில் வருவார். சால்வை போட மாட்டார். விஞ்ஞானம் கற்பித்தவர். பெரிதும் சுத்தம் பார்ப்பார். ஆசிரியர் மேசையை அடிக்கடி ஊதித் தூசு நீக்குவார். உச்சி வகிடு எடுத்து அழகாகத் தலை சீவி இருப்பார்.

**விளையாட்டு மைதானம்**

எங்களுக்கு விளையாட்டு மைதானம் 'புலோலி பசுபதீஸ்வரர்' ஆலய அன்னை சிவகாம சுந்தரி பார்த்திருக்கும் வீதி. அவதான் Patron. றேஸ் ஓடிய ஞாபகம் உண்டு ஆனை விழுந்தான் சந்தியை நோக்கிய றோட்டில் கும்பான் வயலும் எங்கள் விளையாட்டு மைதானம்.

**சமகால மாணவர்கள்**

எங்களுடன் சமகாலம் படித்த பலர் இன்று இவ்வுலகில் இல்லை. நெஞ்சில் குடியிருக்கி றார்கள். வாழ்பவர்கள் நாம் 'இனி சாப்பிணங்களாக உயிரைப் பிடித்துக் கொண்டு திரிகிறோம். எல்லாரும் 'செவின்ரி' 'எயிட்டிய்ஸ்' தானே. கதிர்காமு தலையைக் கவிழ்ந்தபடி போகுது. 'கிளி' நடராசா பிறக்கிறாசியார் ஒழுங்கையில் காணப்படுகிறார்.

**ஆறுமுகம் Sir**

தள்ளாடிய படி மெதுவாக நடக்கிறார். அதே பழைய சாந்த முகந்தான். பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் பேரன் எங்களைக் கண்டு உணராதபடி திரிகிறார். கிட்டங்கிப் பொன்னம் பலத்தார் மகன் 'போண்டா' வைத்தி(லிங்கம்) சமகாலம் கற்றவர். எங்களுள் படிப்பில் விண்ணன் மாணிக்கவாசகர். பிறகு Telecom Chief Engineer ஆக உயர்ந்தவர். நடராசா பிரபல Accountant ஆக இருந்து ஓய்வு பெற்று, 'மில்' உள்ள பக்கம் எல்லாம் அரிசி அரைக்கத் திரிகிறார் 'வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்' என்பார்கள். இவர் எங்களுடன் படித்த காலத்திலேயே ஒரு காதில் சீவிய பென்சில் ஒன்றை 'ரெடியாக' வைத்திருப்பார். மற்றக் காதில் கோவில் பூ கொலு விற்றிருக்கும். 'Paul Brunton' உடைய நூல்கள் நிறைய வாசித்துச் 'சாமிப்' போக்கானவர். 'கடவுளே எண்டு' விநாசித்தம்பி (விநாயகம்) துரு துரு என்று இருக்கிறார். நான் 'சின்னப் பாலு. குறுந்தொகை, நெடுந்தொகை மாதிரி ஒப்பீட்டு ரீதியில் 'பெரிய' பாலு இன்று உயிருடன் இல்லை.

**தவணைப் பரீட்சைகளின் ஞாபகம்**

கோட்டு வாசல் கொண்டல் மரத்து ஆச்சி, பேச்சியாத்தை, வைரவப்பா ஆகிய தெய்வ உருபங்களைக் கருப்பூரம் கொழுத்திக் கும்பிட்டு விட்டுப் புறப்பட்ட ஞாபகம் உண்டு. பத்திரகாளி அம்மனின் மஞ்சள் வேப்பிலை றோட்டில் கிடக்கும். அவற்றில் ஒன்று இரண்டு 'ஷேட்' பொக்கெற்றில் இடம் பெறும்.

**அநுபவம்**

'வேலாயுதம் பாடசாலை' எங்களின் வசந்த காலம். அரும்பு, மலர், காய், கனி என்று கூறினால் வேலாயுதம் பாடசாலைக் கல்வி மலர் பூத்த காலம். கலைப்பட்டதாரி ஆன எங்களுக்கு ஆங்கிலம், சரித்திரம், தமிழ் ஆகியவற்றின் அடிப்படை அறிவை ஆழ வேர் ஊன்ற வைத்தது. எங்களுக்கு வெள்ளை உள்ளம். ஆசிரியர்களுக்குப் பொன் மனம். நாங்கள் வாழ்ந்தோம்.

என்றும் அக் கல்லூரித் தாய்க்கு நன்றிக் கடன் பட்டுள்ளோம். அஃது ஆழப் பதிந்த ஒன்றாகும். ஆயினும் பொருளாதார நிலை 'நந்தி' ஆக இருக்கிறது.



பேரறிஞர் அண்ணாத்துரை

# என் வாழ்வுடன் இணைந்த வேலாயுதம் மகா வித்தியாலயம்

**கே. பீ. ஆனந்த நடேசன்** *B.Com (Hon) AIB (SL)*
*Area Manager, Bank of Ceylon,*
*Jaffna District.*

"கல்வி அழகே அழகு" என்ற மகுட வாசகம் எனது சுவாசத்துடன் கலந்து 44 ஆண்டுகளாகி விட்டது. எனக்கு மட்டுமல்ல பல்லாயிரக் கணக்கான நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த மற்றும் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருந்த மாணவர்களுக்கும் கல்வியெனும் ஒளியினைக் காட்டி கலங்கரை விளக்காக வழிகாட்டிய பெருமை பெரியார் வேலாயுதம் பிள்ளை அவர்களால் புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை என ஆரம்பிக்கப்பட்டு தற்போது வேலாயுதம் மகா வித்தியாலயமாக மிளிர்கின்ற இந்தப் புகழ்பூத்த பாடசாலைக்கு உண்டு.

கிறிஸ்தவ மிஷனரிகளின் கல்வியறி வூட்டலூடான மதப்பரம்பல் நடவடிக்கைகளுக் கெதிராக சைவப் பாரம்பரியத்தினைப் பேணி அதனூடாக சமய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவது மட்டுமன்றி பணவசதியற்ற மாணவர்கட்குக் கைகொடுத்துத் தூக்கிவிடும் ஒரு நல்லெண்ணமாகவும் நாவலர் பெருமான் வழியினைப் பின்பற்றி 1895ல் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. எத்தனையோ புகழ்பூத்த ஆசிரியர்களை, மாணவர்களை, விஞ்ஞானிகளை, பொருளியலாளர்களை, பொறியியலாளர்களை, கல்விமான்களை உருவாக்கிய இப் பாடசாலை ஆரம்பித்து 115 வருடங்கள் கடந்து விட்டன என்பது நம்பமுடியா ஆச்சரியமாக மட்டுமல்ல பல மாணவர்களின் வளமான எதிர்காலத்தினை அமைத்துக் கொடுத்தமைக்கான மௌன சாட்சியாக, ஆசிவழங்கும் ஆலமரமாக விளங்குவது வேலாயுதம் மகா வித்தியாலயம். எமது வாழ்வில் பற்பல கட்டங்களிலும் நடைபெற்ற சம்பவங்களின் காலக் கண்ணாடியாக இப்பாடசாலை தனது இருப்பினைப் பதியவைத்துள்ளமையானது பெரியார் அமரர் வேலாயுதம் பிள்ளை அவர்களின் தீர்க்க தரிசனத்தின் நிதர்சனத்தினைச் சுட்டி நிற்கின்றது.

இப் பாடசாலையில் நான்பெற்ற அனுபவங்கள் என்னைப் புடம் போட்டு இந்த சமூகத்தில் ஒரு சிறந்த மதிப்பினைப் பெறுவதற்கு வழிகாட்டியாக இருந்தன வென்பது மிகையான வார்த்தையல்ல. எனது ஆரம்பக் கல்வியினை தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலையில் (அரிவரி முதல் ஐந்தாம் வகுப்புவரை) பெற்றுக் கொண்டேன். நான் ஐந்தாம் வகுப்பில் கல்வி கற்கும் போது அடுத்த வருடம் ஆறாம் வகுப்பிற்கு வேறு பெரிய பாடசாலைக்குப் போக வேண்டும் என வீட்டில் கூறினார்கள். எமக்கு அப்போது இரண்டு தெரிவுகள் தான் இருந்தன. ஆண்கள் என்றால் ஹாட்லிக் கல்லூரி அல்லது புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை, பெண்கள் என்றால் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அல்லது வடஇந்து மகளிர் கல்லூரி. எனவே எனக்கு இருந்த தெரிவு ஹாட்லிக் கல்லூரியா அல்லது புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையா என்பது எமக்கு அப்போது இந்த இரு பாடசாலைகளுக்கும் இடையில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளோ, வேறுபாடுகளோ அல்லது அந்தஸ்து வேறுபாடுகளைப் பற்றியோ எதுவுமே தெரியாது.

எமது குடும்பத்தைப் பொறுத்த வரை அப்போது எனது இரண்டு மூத்த சகோதரர்களும் புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் தான் கல்வி பயின்று வந்தனர். எனவே என்னையும் தந்தையார் 6 ம் வகுப்பு அனுமதித் தேர்விற்காக புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலைக்கு விண்ணப்பிக்குமாறு கூறினார். ஆனால் எனது பாடசாலை நண்பர்களில் பலர் இரண்டிற்கும் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களின் நோக்கம் ஹாட்லிக் கிடைக்காவிட்டால் புலோலி ஆண்கள் பாடசாலைக்கு வருவது சுலபம் என்பதாக இருந்திருக்க வேண்டும். இந்த விடயம் எனக்கு சில வருடங்களின் பின்னர்தான் அறியக் கூடியதாக இருந்தது. ஆனாலும் எனது தந்தையார் எங்களை புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் அனுமதிப்பதற்கு ஒரு விசேட காரணமும் இருந்தது பின்னால் தெரிய வந்தது.

வகுப்பு ஆறுமுதல் எனது மூத்த சகோதரன் ஹாட்லிக் கல்லூரியில் தான் கல்வி கற்று வந்தார். ஆனால் JSC வகுப்பில் அவர் பரீட்சைகளில் பெற்ற புள்ளிகள் போதாது எனக்கூறி அவரினை அவர் விரும்பிய விஞ்ஞானப் பிரிவுக்கு விட அப்போதைய அதிபர் அமரர் பூரணம் பிள்ளை அவர்கள் அனுமதிக்கவில்லை. ஆனால் எனது தமையனாரோ தான் கலைப் பிரிவிற்கு போக மாட்டேனென்றும் விஞ்ஞானம் படிக்கப் போவதாகவும் பிடிவாதமாக இருந்தார். இதனை எனது தந்தையார் அதிபர் பூரணம் பிள்ளையிடம் கேட்ட போது அவர் அதற்கு இணங்கவில்லை. இவ்வளவிற்கும் அதிபர் பூரணம் பிள்ளை அவர்கள் எனது தந்தையாரின் பள்ளித் தோழரும் பாலிய நண்பரும் ஆவார். இந்நிலையில் அதிபருடன் முரண்பட்ட எனது தந்தையார் எனது தமையனாரை அழைத்து வந்து புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் SSC Prep விஞ்ஞானப் பிரிவில் சேர்த்து அங்கு சிறப்பாக பயின்று வந்தார் (பின்னர் க.பொ.த உயர்தரம் பயின்று பேராதனை பல்கலைக்கழகம் சென்று பொறியியலாளர் ஆகி இப்போ கலாநிதிப் பட்டம் பெற்று பொறியியல் ஆலோசகராக லண்டனில் கடையாற்றுகின்றார்)

இந்தச் சம்பவத்தின் பின் எங்கள் எவரையும் ஹாட்லிக்குச் செல்ல எமது தந்தையார் அனுமதிக்கவில்லை.

குறித்த அனுமதிப் பரீட்சைக்கான நாளும் வந்தது எனது தந்தையார் தனது துவிச்சக்கர வண்டியில் பின் கரியரில் இருத்திப் பாடசாலைக்கு அழைத்து வந்தார். வாசலில் தற்போது இருப்பது போன்று 3 மாடிக்கட்டம் இருக்கவில்லை. ஒரு நீண்ட மண்டபத்தின் நடுவில் தெருவில் இருந்து பாலம் வாயில் வரை இருந்தது. மண்பட வாயிலின் இரு பக்கமும பலகைக் கிராதிகள் அடிக்கப்பட்டு Puloly Boys English School என அழகாக எழுதப்பட்டிருந்தது. மனதில் பயம் ஆனாலும் பெரிய தந்தையார் அனுமதி பரீட்சைக்கு என்னை நன்றாகத் தயார்ப்படுத்தி இருந்தமையால் பரீட்சையைப் பற்றிய பயம் இன்றி உள்ளே நுழைந்தேன். அருணாசலம் மண்டபத்தில் மாணவர்கள் பலர் வருகை தந்திருந்தனர். எனது பாடசாலை நண்பர்களும் வந்திருந்தனர்.

குறித்த நேரம் வந்ததும் எம்மை ஒரு வகுப்பறையில் கொண்டு சென்று இருத்தினார்கள். சிறிது நேரத்தில் வேட்டி நாஷனலுடன் ஒரு மடிப்புச் சால்வையுடன் மூக்குக்கண்ணாடி அணிந்தபடி ஒரு நெடிய மனிதர் வகுப்பறையில் நுழைந்தார். கண்ணில் இருந்த மூக்குக் கண்ணாடியூடாகத் தெரிந்த தீட்சண்யமான பார்வை எம்மைப் பயத்துடன் அவரை நோக்க வைத்தது. பின்னர் தான் அறிந்து கொண்டோம் இப் பாடசாலையின் புகழ்பூத்த அதிபர் திரு. M.A தங்கராஜாதான் அவர் என்பதை.

பரீட்சைக்கு ஏறக்குறைய 30 மாணவர்கள் கூடி இருந்தோம். மனதில் வரப்போகும் வினாத்தாளில் உள்ள கேள்விகளைப் பற்றிய சலனம். அந்த நெடிய மனிதர் எம்மிடையே உரையாற்ற ஆரம்பித்தார். எம்மை வரவேற்ற அவர் குறித்தளவு எண்ணிக்கையாக மாணவர்களே வந்திருப்பதால் அனுமதிப் பரீட்சையை இரத்துச் செய்வதாகவும் அனைவரும் பரீட்சையின்றியே தெரிவு

செய்யப்பட்டிருப்பதனால் அனைவரையும் குறித்த திகதியில் தேவையான ஆவணங்களுடன் பாடசாலையில் வந்து சேருமாறு தெரிவித்து அமைதியாக வீட்டுக்குச் செல்லுமாறு கூறினார். எமக்குப் பாடசாலையில் அனுமதி அன்றோ கிடைத்து விட்ட சந்தோஷம் ஆனால் எதிர்பார்த்தபடி அனுமதிப் பரீட்சை நடைபெற வில்லையே என்ற ஏமாற்றத்துடன் வீடு சென்றோம்.

ஆறாம் வகுப்பில் சேர்ந்து கொண்டோம். வீட்டிற்கு அண்மையில் என்பதால் கால் நடையாகவே பாடசாலைக்குப் போய் வருவோம். நல்ல ஆசிரியர்கள் அர்ப்பணிப்புமிக்க சேவை ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக கவனிக்கும் பாங்கு இவை அனைத்தும் எமக்குப் பாடசாலை வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. காலங்கள் ஓடின க. பொ. த சாதாரண வகுப்பிற்கு வந்ததும் சுமைகள் அதிகம் வந்தன. ஆனாலும் தம்பிப்பிள்ளை மாஸ்ரர், ஏகாம்பரநாதன் மாஸ்ரர், பொன்னம்பலம் மாஸ்ரர், பஞ்சாட்சரம் மாஸ்ரர், கணேசரட்ணம் மாஸ்ரர், குலசிங்கம் மாஸ்ரர், ராஜலிங்கம் மாஸ்ரர் போன்ற பல ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையினால் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகள் கிடைத்தன.

க. பொ. த சாதாரணப் பெறுபேற்றின் பின்னர் பலர் ஹாட்லிக்குப் போனார்கள். ஆனால் எமது பயணம் வேலாயுதம் மகா வித்தியாலயத் துடனேயே தொடர்ந்தது. இக் காலத்திலே நான் மாணவர் தலைவனாகத் தெரிவு செய்யப்பட்டேன். எமது உந்துதலினால் இந்து மாணவர் மன்றம் உருவாக்கப்பட்டு அதில் நான் தலைவராகவும் எனது நண்பன் அமரர் பஞ்சாட்சரலிங்கம் செயலாளராகவும் இருந்து பல நிகழ்வுகளை நடாத்தினோம். அப்போது தம்பிப்பிள்ளை மாஸ்ரர் அதிபராகவும் திரு. ஏகாம்பரநாதன் அவர்கள் உப அதிபராகவும் கடமையாற்றினார். இக் காலத்தில் கோபுர தீபம் என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பித்தோம். இதன் ஆசிரியராக நானும் உதவி ஆசிரியராக க. விக்னேஸ்வரனும் இருந்ததுடன் படங்களுக்கான ஓவியங்களை ந. ரவீந்திரதாஸ் மற்றும் ஜீவராஜா ஆகியோர் வரைந்து உதவினர். இக் காலத்தில் என்னுள் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்ச்சி எனது பாடசாலைக் கல்விக்கு சில இடர்களை ஏற்படுத்தியது. ஆனாலும் எனது கவியாற்றலுக்கும் கலை சம்பந்தமான தேடலுக்கும் இது பெரிதும் உதவியாக இருந்தது.

எனது கவிதைகளை நெறிப்படுத்த உதவிய அமரர் மதிபாலசிங்கம் ஆசிரியரையும் சங்கீத ஆசிரியர் அல்வையூர் கார்த்திகேசு ஆசிரியர் அவர்களையும் வாழ்நாளில் மறக்க முடியாது. அது போன்றே க. பொ. த உயர்தர இறுதி ஆண்டு விஜயதசமி தினத்தன்று எனது கதைவசனம் நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட "உனக்கா கவே வாழ்கிறேன்", "சங்கிலியன்" நாடகங்கள் அனைவரையும் கவர்ந்தது மட்டுமன்றி எம்மில் பலரது திறமைகளும் வெளிப்படும் களமாகவும் அமைந்தது. இதில் எமது சக மாணவர்கள் சிவசுப்பிரமணியம், குகன், வேலுப்பிள்ளை, அச்சகுமார், விஜயராசா, பஞ்சாட்சரலிங்கம், திரிபுவனராசா போன்ற பலர் பங்கு பற்றியிருந்தனர்.

வேலாயுதம் மகா வித்தியாலயம் என்ற பெரு விருட்சத்தின் நிழலில் வளம் பெற்றோம் என்று சொல்வதில் நாம் என்றுமே பெருமை யடைகின்றோம். எம் வாழ்வில் ஒளியூட்டிய இந்தக் கலங்கரை விளக்கு தொடர்ந்தும் எதிர்கால சந்ததிக்கு வழிகாட்ட வேண்டும்.

*மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்.*

# Rebuilding war torn areas – A Recollection

*(This write up illustrates the efforts of an old student who worked during the war time in the Vadamarachchi AGA Division to support the educational and economic development of the area. The writer wishes to remain anonymous.)*

School education is compulsory and free of all the children in Sri Lanka. Education is also a process, which will have to work in a participatory method between the children, parents and teachers. The case of Velautham Maha Vidyalayam is a unique example of how the team of committed teachers headed by our Principal, late "Sriman Thangarajah", a simple but fascinating leader, stood by his name "King of Gold".

In the late sixties and early seventies, I spent my time in Point Pedro, located in Vadamarachchi in the northern Sri Lanka. By fate or accident, I ended up in Point Pedro Velautham Maha Vidyalayam for my advanced level science stream education, although my home town was more than 300 kilometers, a village located in the Kalpitiya peninsula away from Point Pedro. Needless to say, the reason behind this was the teachers from the northern district who were taking care of the educational development of children in other parts of Sri Lanka, particularly the Tamil medium schools.

The growth of Velautham Maha Vidyalayam is also unique in the sense there were several schools in and around Point Pedro with better facilities, but with little facilities the school raised up to level comparable to other colleges in the area.

Many thanks go to my teachers who were guiding me to achieve my goals in my higher education, and the result was I became a professional in Civil Engineering. After serving in the Eastern Sugar Corporation in the irrigation section, my direction was again towards the North to contribute to the industrial development sector. In the late seventies as an Assistant Civil Engineer to Cey-Nor in Karainagar, I was able to contribute to the expansion process of Cey-Nor. It was also noteworthy that the cyclone that hit the east coast created an invaluable opportunity for my involvement in the east to assist the victims of the disaster area.

In 1981, as a Program Engineer / Consultant, the relief rehabilitation program was the major work in which I was involved in assisting the war affected population, particularly in the entire Vanni district. The migration of the IDPs from the south to the north in the new settlement areas, and generating opportunities for the children and

youth to receive education was one of the key issues handled by me in that era.

My work became more focused in the 1990's during the height of the conflict when a specific project was launched to rehabilitate the displaced population in Point Pedro. We contributed to the economic development, by establishing a rural Micro Finance Organization with the support of FORUT, a Scandinavian aid organization (the agency responsible for establishing Cey-Nor in Sri Lanka), where I took over the position of Program Director in 1986. The organization with the local population was able to establish the Vadamarachchi organization of Good Templar, which was operating from Nelliayadi as its headquarters. Converting 44 branches from Thondamanaru to Vettilaikerni (now reduced to 32 due to the access problems to some locations) the organization immensely contributed to development of fisheries in the North. Contributing to education with FORUT assistance we supported the running of several libraries (including Sathavathani Kathiravelpillai library in Puloly West) and preschools in the area. Despite the war our efforts in sustaining education from preschools to university education was noteworthy.

However, the plum of our efforts was the building of an institute to develop and support the external degree classes of the University of Jaffna. This project was developed with the assistance of an ex-staff of our Alma Mater, Mr. R. Chandrasegara Sharma, who was the king pin of this project. This degree granting school with the strong link with the Jaffna



**A MICR banking system to assit the fishermen of the area – Inparsitybranch**

University catered to the A/L students who had left out from the internal degree courses.

The tsunami came in December 2002 and created fuel to fire for those already affected with more miseries in their life. We were strong enough to support the families again to build houses and economy in the coastal village in Vadamarachchi. FORUT developed several institutions for education and vocational training in the north, amazingly sustaining their development and education effort withstanding the woes of the war.




**Promoting higher education through external degree classes.**

As for me, I simply tried my level best to see that the area where I had my secondary education received my whole hearted contribution to improve the social development process without interruption, despite the challenges faced, particularly risking my life in the past. So the results were hard earned and therefore you will lose the memory of the people you have there are evidence of strong continuity, despite the moving out of best brains of Vadamarachchi due to the impact of war. Generations may change. New one will come, but for you and me what we have done makes the rest of your life easy, because you have done something for the institution that helped you to shape your life and build yourselves. I thank God and the teachers and the institution that helped me raise together with the parents of Velautham Maha Vidyalayam, Point Pedro.

In conclusion, the schools are not only mere infrastructure facilities, but comprise teachers, (past/present) students who will be provided with services and guidance to become future leaders of communities, area, and the nation. The leaders may be occupying different levels, but one thing all of us have to remember is what have you done for your Alma Mater. My final request to all, of us is to ask the above question and to support the institution to grow more to achieve the best in the future for the children of Point Pedro and its vicinity.

ஒவ்வொருவனுடைய படைப்பும், சங்கீதம், இலக்கியம், சித்திரம், அன்றி எவையாயிருப்பினும் அவற்றில் அவன் நிழலைக் காணலாம். எவ்வளவுக்கெவ்வளவு அவன் தன்னை மறக்க முயன்றாலும், தன்னை அறியாமலே தன்னியல்புகள் தெளிவாகப் பிரதிபலித்தே தீரும்.

- **சாமுவேல் பட்லர்**

---

மனிதகுலம் செழிப்புடன் தழைத்து வளர்ச்சி அடையக் காதல் பெரிதும் உதவியாக இருக்கிறது. ஆனால், அதே காதல் சிலசமயங்களில் அழிவுக்கும் காரணமாகி விடுகிறது.

- **கல்கி கிருஷ்ணமூர்த்தி**

---

மரணம் தன் பயங்கரத்தைக் காதலிலிருந்துதான் பெறுகிறது. காதல் தன் மென்மையையும் கவர்ச்சியையும் மரணத்தின் இருளில் இருந்து தான் பெறுகிறது. கல்லறையின் கரையிலே பூக்கும் மலர்தான் காதல்.

- **இங்கர்சால்**

---

உலகத்தில் என்றும் அழியாத இரண்டு உண்மைகள் இருக்கின்றன. அவை காதலும், சாதலும். காதல் சாதலை வெல்வதனால்தான் ஓயாமல் தீயைக் கக்கும். இந்த உலகத்திலே, மனிதன் வாழ்ந்தும், போராடியும் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு முன்னேறுகின்றான்.

- **காண்டேகர்**

# நாடகப் படங்கள்





**நாடகக் காட்சி (1979)**

# நாடகப் படங்கள்



நாடகக் குழுவுடன் ஆசிரியர் திரு. அ சின்னத்துரை,
அதிபர் சே. ஏகாம்பரநாதன், இசை ஆசிரியர் திரு. ஆ.கார்த்திகேசு
1979



**நாடகக் குழு (1980)**

# REMINISCENCES OF MY SCHOOL DAYS AT THE VELAUTHAM MAHA VIDYALAYAM

**A. Maniccavasagar**



I was admitted to the Velautham Maha Vidyalayam (VMV) to the 5th Standard in January, 1947. At that time the school was known as Puloly Boys' English School. I continued to study in this school till December 1953 when I completed the SSC exam. At that time the school hours were from 9 A.M. to 12 Noon and after lunch break, from 1 P.M.to 4 P.M.

Even though Hartley College was preferred for secondary education in Point Pedro, my father got me admitted to VMV as it was very close to my home and it was possible for me to walk back home for lunch and get back to school in time for the afternoon session.

Having come from Tamil medium school where all the subjects were taught in the Tamil language, I found that following the lessons in English was rather difficult for me. All subjects other than Tamil Language, Tamil Literature, Religion (Hinduism) and Art (Drawing & Painting) were taught in the English language. Perhaps the founder's dream was to educate the boys from 'Puloly' to be fluent in the English language as it was necessary at that time to be very fluent in English in order to obtain good jobs in the Government service or in the private sector.

The school had a small Pillaiyar Temple inside the premises of the school and due to this, due emphasis was given to the teaching of Hinduism. Even though some Christian students were also studying in the school, only Hinduism was taught as a subject. The temple was well maintained by the Management with regular poojas conducted by a Hindu priest. Some students were keen to worship at the temple during daily pooja times, but during examination times, many students were seen praying at the temple to seek success at their exams. Once a year, a big pooja was conducted with all students, staff and the management contributing funds for the festival. Once the pooja was over, kovil prasatham was distributed to all students and staff members.

Many of the boys in my class were from poor families living in and around Point Pedro and they had to help their parents at home in their vocations. So they did not have any time to revise the lessons taught in English in the classroom, nor were they able to do their

home works before coming to school which resulted in these students getting punished in the classroom. At that time, corporal punishment was the most preferred penalty. The students got beaten in their hands or sometimes in other parts of their bodies as well by a long cane. Corporal punishment was permitted in those days and even the Principal did not interfere with these matters. Those boys who got severely punished for not attending to their homework used to tell me their plight and cry, but they did not like to complain about these heavy punishments to their parents as they were afraid that they might be sent out of the school. The sheer impunity with which very painful corporal punishments were meted out to school students in those periods left a very bitter memory in my mind.

Nevertheless, all the teachers at the school in my time were a very disciplined and dedicated lot. Probably they were hand-picked by the management at that time from personal knowledge and family background. Further, the teachers were not transferable, but taught at the school till their retirement and so a sense of dedication to the school was developed by them over time. The scenario of the school teachers giving private tuitions to their own class students after school hours was unheard of at that time!

Even though there were no proper library facilities in VMV at that time, each class was provided with sufficient English story books, generally known as 'Bright Story Readers' and these books were loaned to students in rotation to read at home and improve their English knowledge. Till I left the school, proper library facilities were not established at the school. As I moved to JSC class, more subjects were included in the curriculum. Biology, Civics, Hygiene & Physiology were added to geography, History. Tamil / English Language and Literature, and Hinduism.

A graduate teacher from Kerala, India, Mr.Pannikkar was appointed to teach Biology or Botany. He was indeed a very fine teacher and was loved by all the students. When I moved to the SSC preparatory class, Chemistry was also introduced. By that time laboratories were set up for doing practical work in Botany and Chemistry.

As English Language and Literature were becoming more important subjects at the SSC level, another well qualified Indian graduate teacher, Mr.Rajagopalan was also appointed by the management, He also had a Master's Degree in English and was one of the finest teachers of English I have seen. He was so good in his teaching of English that a lot of students started going to his home for private tuitions as well. Even students from Hartley College were going to his home for private tuition in English. In fact, VMV became famous because we had such a gifted and resourceful English teacher like Rajagopalan among our staff.

I was in the second batch of Chemistry students after the Chemistry lab was built and equipped. When I was in the SSC 1st year

class, Chemistry was one subject and Thangarajah Master was in charge of the Chemistry class. His approach to the teaching of Chemistry was simply excellent. Whenever any chemical reaction taught in the class could be demonstrated in the lab, he himself did the demonstration and this made most students to keenly follow their theory lessons as well. In fact Chemistry became my most loved subject ever since, thanks to Thangarajah Master.

It was very unfortunate that a lab for teaching Physics as a subject was not built and properly equipped at VMV during the time I studied there. Anyone going to the HSC class and wishing to follow the Physical Science stream in the University would have greatly benefited if they had followed Physics at the SSC level as well. In fact when I joined Hartley College for my HSC studies, all students in my class except me had studied Physics at their SSC level as well. I found this as a great handicap to follow the Physics classes at the HSC during the first year.

The biggest celebration at VMV during my period of study there was the Golden Jubilee Celebrations held in 1949. The school was fully refurbished for the great occasion. My recollection is that many dignitaries in the educational field from the province were invited to address the staff and students. Many classes at the school also presented various programs on this occasion and our class presented a play in English and a play in Tamil. Our class master at the time was Mr. Narayanapillai, a youthful and resourceful teacher. He worked on a suitable Tamil play for which he was responsible for the story, the dialogue and direction! There were female roles as well in the play and these were also played by our class boys. Narayanapillai Master took a lot of pains to practice the acting skills of the participants and finally at the Golden Jubilee celebration our play turned out to be a great success.

The Principal, Late Mr. Ramanathapillai, and many of the dignitaries made speeches in Tamil and English and it was a very great event for the school.

Physical training was also available to all students of the school. Regular drill rehearsals were carried out at the school quadrangle within the school in the mornings. Periodic inspections by the well known schools' physical training Instructor Mr. Chinnakone were held at our school. In addition, once a year or once every other year, mass drill displays were organized by Mr.Chinnakone and these were held at the Jaffna Esplanade with many other schools in the district participating in the spectacular event..

Sports activities were somewhat subdued due to the lack of a proper playground near our school. Nevertheless, annual sports activities were conducted within the school quadrangle. Events which were regularly conducted were high jump, long jump, hop-step and jump, and putt shot which do not need a big and extensive playground. All students were divided into 3 sports –Houses- viz Chera, Chola &

Pandiya. I was in the Chola House and we had become victorious once during my studies in VMV.

To circumvent the lack of a proper playground for conducting track and field events, I remember we were taken to the nearby Sivan Temple compound and all track events were conducted using the outer veethy of the Sivan temple! On two occasions, we were taken to a huge open land owned by the school Manager at a place known as Kumban, about 3 miles away from the school. Even though the ground was not hard and level, it was extensive enough to conduct all the track events.

I sincerely hope that the educational standards and discipline that prevailed during my time would be maintained even today at the VMV. This requires dedication and a team spirit among all the stakeholders- Govt educational authorities, the Principal and all staff members, students and their parents/guardians.

I wish VMV all the best in the years to come with whatever deficiencies identified being rectified early with the support of the Govt and other stakeholders.

*குழந்தைச் செல்வம் மட்டும் இல்லாவிட்டால் இந்த உலகில் இன்பம் என்ற சொல்லே தோன்றியிருக்கமாட்டாது.*

**- கோல்றிஜ்**

---

*உடைகள் கிழிந்து விட்டால் அதனை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் பெற்றோரின் கடுசொற்களால் உடைந்துபோன குழந்தையின் பிஞ்சு உள்ளத்தை மட்டும் யாராலும் மாற்ற முடியாது.*

**- லாங் பெல்லோ**

---

*குழந்தை வளர்ப்பு என்பது எளிதானதல்ல அது எதிர்கால உலகையே உருவாக்கும் புனிதமான பணி.*

**- ரூசோ**

---

*குழந்தைகள் தவறு செய்வது இயற்கை, குழந்தைகளை உருட்டி மிரட்டி திருத்த முயல்வதைவிட தவறுகளை செய்ய விட்டுவிட்டுப் பின்னர் அவற்றைச் சுட்டிக் காட்டித் திருத்த முயல்வதே அறிவுடைமையாகும்.*

**- ஏச். டபிள்யூ. பீச்சர்**

---

*நீ ஒரு முதியவனைக் காப்பாற்றினால் அவனால் உலகத்திற்கு ஒருவித பயனும் இல்லை. ஆனால் ஒரு குழந்தையைக் காப்பாற்றினாலோ இந் நாட்டின் எதிர்கால மன்னனையே காப்பாற்றிய பெருமை வந்து சேரும்.*

**- ஸ்மித்**

# இந்துப் பாரம்பரியத்தை வளர்த்த கல்விக் கலைக் கோயில்கள்

**சிவா. கிருஷ்ணமூர்த்தி**
*சமாதான நீதிபதி,*
*ஓய்வு பெற்ற உபஅதிபர் - இந்துக் கல்லூரி, கொழும்பு 4.*



இலங்கையில் வாழும் இந்துக்கள், மிகப் பழைய தமக்கென்ற கல்விப் பாரம்பரியத்தை உடைய வர்கள். "ஓர் இனத்தின் பண்பாட்டுச் செல்வத்தை அவ்வினத்தவர் அடையச் செய்வது கல்வியே". கல்வியின் செயல் ஒழுங்கு குடும்பத்திலிருந்து தொடங்கிக் குலமாய் விரிந்து இனமாகப் பரந்து சென்று இறுதியில் அந்நாட்டின் தேசியப் பிரிவுகளாய் வளர்ந்து செல்கிறது.

இந்து மதப் பாரம்பரியத்தின் பிறப்பிடம் இந்தியா ஆகும். ஆரியர், திராவிடர், மங்கோலியத் திராவிடர் முதலான பல இனங்களின் சேர்க்கையால் அது அமைந்துள்ளது. இந்தியாவின் வடக்கிலும், வட மேற்கிலும் இருந்து வந்த மனித இனம் இந்தியாவின் செழிப்பு வாய்ந்த நிலத்திலே தமது வாழ்க்கை முறைகளையும், சிந்தனைகளையும் ஆழமாய் பதித்து இந்து மதப் பாரம்பரியம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். வேத, உபநிடதங்கள் அன்றைய மக்களின் உயர்ந்த சிந்தனைகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. ஒத்திசைவும், ஓங்கிய நல்லின்பமும் மனித இனத்தில் நிலை பெற்றமையை உறுதியளிக்கும் சில நல்லியல்புகள் இந்துமதப் பாரம்பரியத்தினூடு கலந்திருக்கின்றன.

ஆசிரியர்க்கும், மாணவனுக்குமிடையே ஒத்திசைந்தெழுகின்ற அன்புப் பிணைப்பையும், அதற்கு அத்திவாரமாய் அமைந்திடும் குணசீலத்தையும், ஞானத்தையும் அடைதலாகிய கல்வியின் உயர்ந்த குறிக்கோளையும் உள்ளடக்கிக் கொண்டு விளங்கும் இந்துக் கல்விச் சிந்தனையை "கடோபநிடதத்தின் சாந்திப் பாடத்தில் உள்ள பின்வரும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**ஓம் "ஸஹ நாவவது" ஸஹ நௌ புனக்து**
**ஸஹ வீர்யம் பரவாவஹை**
**தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்திஷாவஹை**
**ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி;**

இது, ஓம் பிரமம் எம் இருவரையும் (ஆசிரியரையும், மாணவனையும்) பிரமம் எம்மிருவருக்கும் ஊட்டமளிப்பதாக! – காப்பதாக! நாமிருவரும் நற்சக்தியை (இக்கல்வியின் பயனாய்) எய்துவோமாக! நாமிருவரும் (கல்வியால்) அறிவொளி பெறுவோமாக! நாம் ஒருவரை ஒருவர் வெறுத்திடோமாக! ஓம் சாந்தி; சாந்தி; சாந்தி என்ற பொருளைக் கூறுகின்றது.

எமது மக்கள் கல்வி சம்பந்தமான வைபவங்களிலும் மற்றைய வைபவங்களிலும் விளக்கேற்றி தொடங்கும் முறைமை, ஆசிரியனாகிய தீபத்திலிருந்து மாணவராகிய பல

தீபங்கள் ஏற்றப்படுகின்றது என்ற உண்மையை விளக்கவே எழுந்த வழமை என்றும் கூறப்படுவதுண்டு.

இந்தியாவின் கல்வி வரலாற்றினைப் பின்வரும் ஐந்து காலப்பிரிவுகளாக வகுத்துக் கொண்டுள்ளனர்.

1. வேதகாலத்திலிருந்து புத்தசமயக் கல்வி தோன்றிய காலம் வரையுள்ள ஆரிய பிராமணக் கல்வி
2. புத்தமும், சமணமும் மேலோங்கிய காலத்தில் எழுந்த புத்த சமணக் கல்வி.
3. புத்த சமயம் இந்தியாவில் நலிவுற்ற காலத்தின் பின்னர் தொடங்கிய புதிய பிராமணக் கல்வி.
4. மத்திய கால அல்லது முஸ்லிம் காலக் கல்வி.
5. பிரித்தானியர் காலக் கல்வி

என ஐந்து காலப் பிரிவுகள் கூறப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று காலத்திலும் இருடிகுலங்களும், குருகுலங்களும், ஆச்சிரமங் களும், தபோவனங்களும் கல்விச்சாலைகளாக விளங்கின. பிராமணக் கல்வி முறையில் குருசீட பாரம்பரியம் வளர்ச்சியடைந்தது. இது உயர் சாதி அடிப்படைக் கல்வியாகச் சிறப்புப் பெற்றது. பௌத்தக் கல்வி முறையைப் போக்கி எல்லோரும் கல்வி பெற வாய்ப்பளித்தது. சமய குருமார்களின் கல்விப் பீடங்களான, நாலாந்தா, தக்சசீலம் முதலான பல்கலைக்கழகங்களாக வளர்ந்தன. இதே போன்று தென் இந்தியாவின் பெருங் கோயில்கள் கலைப்பீடங்களாக மாறி இந்துப் பாரம்பரியத்தைப் பேணி வளர்த்தன. ''தர்மம்'' பற்றிய கல்வி வலியுறுத்தப்பட்டு மாணவர்களுக்கு எனக் கடுமையான ஒழுக்க விதிகள் வகுக்கப்பட்டன. முகலாய சக்கரவர்த்தி அக்பர் கல்வித்துறையில் சக்தி வாய்ந்த ஒரு ''கல்விக் கொள்கையை'' அறிமுகம் செய்து இந்து முஸ்லீம் கல்விக்கு காப்பாளராக விளங்கினார். ஒரே கல்லூரியில், இந்து மாணவர்கள் வியாகர ணம், வேதாந்தம் என்பவற்றையும் முஸ்லீம் மாணவர் திருக்குர்ரானையும் கற்கும் சூழல் காணப்பட்டது.

இறவாப்புகழ் பெற்ற செந்தமிழ் புலவராகிய திருவள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் வாழ்ந்த தமிழர்களின் ஞானத்தை (அறிவு) தமது கருவுலமாகக் கொண்டு ''திருக்குறள்'' என்ற நூலைத் தொகுத்துள்ளார். இதில் நல்ல கல்விக்குறிக் கோள்கள் காணப்படுகின்றன.

> ''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழா அரெனின்''

இதில் இறைவனைத் தொழுதல் கல்வி என்ற சிறப்பும்

> ''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக''

என அறவிதிகளைக் கற்பது மாத்திரமன்றி, கற்ற நல்லறங்களைக் கடைப்பிடித்தல் முக்கியம் என்பதையும் வலியுறுத்துகின்றார். திருவள்ளுவ ரின் திருக்குறள் இந்துக் கல்வியின் முறைகளை யும், கருத்துக்களையும் கொண்டு ஓர் இலட்சிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு வேண்டிய அறிவுரைகளை உள்ளடக்கிருப்பதோடு யாவர்க்கும் முழுமையான மகிழ்ச்சியைத் தரவல்ல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது.

இந்து தர்ம ஒழுங்கின்படி நான்கு வகை ஆச்சிரமங்களாகிய ''பிரம்மச்சாரியம்'' ''கிருகஸ்தம்'' வானப்பிரஷ்தம் ''சந்திநியாஷம்'' ஆகிய கொள்கை, உபநிடத காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. இதில் பிரமச்சாரியம், மாணவப் பருவம் ஆகும். ஐந்து வயதில் மாணவன் தனது சமூக சமயச் சடங்குகளுடன் தனது கல்வியை ஆரம்பிக்கிறான். தனது ''உபநயனச் சடங்கு'' (பூணூல் அணிதல்)

முடிந்ததும், தனக்கு வேண்டிய குரு ஒருவரை அணுகித் தன்னை அவரின் மாணாக்கன் ஆக்கிக் கொள்கின்றான். அவன் பெரிய குடும்பமாகிய குருவின் இல்லத்தில் அவனும் ஓர் உறுப்பினனாய் மாறுகின்றான். அங்கு அவன் கடுமையான ஒழுக்கமுறை தன்னை முற்றாய் குருவின் சேவைக்கு ஒப்படைக்கின்றான். "உச்சவிருத்தி" எனப்டும் சடங்கு முறையின் போது தனது சமூக நிலையை மறந்து பிச்சை எடுத்தல் கட்டாயப்படுத்தப்படுகிறது. இது ஒரு மாணவனின் எளிமை மனப்பாங்கை உள்ளத்தில் பதிக்க உதவுகின்றது.

இலங்கையிலே தனிப்பட்ட இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியமொன்று 9ம்,10ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையின் வடபகுதியிலே பெருந் தொகையான மக்கள் வந்து குடியேறச் தொடங்கிய காலத்தில் தோன்றிய, இராஜேந்திர சோழன் இலங்கைக்கு படையெடுத்து வந்து பொலநறுவையைத் தலைநகராக்கிக் கொண்டு இலங்கையிலே தமிழ் அரசொன்றை நிலைநாட்டிய காலம் வரை வளர்ந்து உச்ச நிலையை அடைந்தது எனலாம். பின்பு நடந்த போராட்டங்களின் பயனாக பொலனறுவையில் மாத்திரமன்றி அனுராதபுரத்திலிருந்தும், தமிழர்களின் ஆதிக்கம் அகன்று யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் அரசு தோன்றியது. இதன் தலைநகரங்களாக விளங்கிய வல்லிபுரத்தில் அமைந்துள்ள சிங்கபுரமும், நல்லூரிலும் இந்து சமயச் செல்வாக்கு சிறப்புற்று விளங்கியிருந்தது என்பதற்குரிய ஆதாரங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் "வல்லிபு., பொற்சாசனமும்" ஒன்றாக அமைகின்றது.

போர்த்துக்கேயர் (1505 – 1658) ஆட்சி நிலவிய காலத்தில் இந்து சமயமும், இந்து சமயக் கல்வியும், அரசியல் ஆதரவற்ற நிலையை அடைந்தன. போர்த்துக்கேயர் தமது ஆதிக்கத்தை நிலை பெறச் செய்யும் நோக்குடன் தமது சமயத்தையும் மக்கள் மீது திணிக்க முற்பட்டனர். இந்த நோக்கத்துடன் இலங்கையின் கரையோரப் பகுதியிலிருந்த இந்துக் கோவில் அனைத்தையும் தரைமட்டமாக்கி ஆங்காங்கே கத்தோலிக்க தேவாலயங்களை அமைத்தனர். இதனால் இந்து ஆலயங்களை மையமாகக் கொண்ட இந்துக் கல்வி அமைப்பும் பெரிதும் பாதிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் அவர்கள் விதித்த சட்டங்கள் இந்து சமயத்தவரை துன்புறுத்துவன வாய் இருந்தன. இதனால் இந்து சமயமும், இந்து சமயக் கல்வி வளர்ச்சியும் இருள் சூழ்ந்த காலமாக இருந்தது. இவர்களது கல்வித் திட்டம் இவர்களின் சமயத்தைப் பரப்புவதற்குப் பயன்பட்டது. இதனை "யாழ்ப்பாண வைபவ மாலையில்" – இறைவரியை பெருக்குதலும், தனது சமயத்தை பரப்புதலுமே ஒல்லாந்த தேசத்தாரின் பிரதான கருத்தாய் இருந்தன. தமது ஆதிக்க வலுவினால் மற்றைய சமய வழிபாடுகளை எல்லாம் நிறுத்தி தமது சத்திய வேதத்தினை மாத்திரம் வளர்த்தனர்" என கூறுப்படுகின்றது. இந்த அழகிய தீவினை ஆக்கிரமித்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தரைப் போல் பிரித்தானியர் ஆட்சியில் (1796 – 1948) கல்விக் கொள்கையும் பூரண தாக்கத்தை இந்நாட்டில் ஏற்படுத்தியது. ஆங்கிலேயர் காலத்தில் இந்நாட்டின் வடபகுதியில் பூரண தாக்கம், அமெரிக்க மிஷனரிமாரினால் ஏற்படுத்தப்பட்டது.

"தேவாலய விசாரணைக் குழுவின்" விசாரணையின் போதும் "மத்திய பாடசாலை ஆணைக்குழுவினது" விசாரணையின் போதும் கல்வித் திட்டம் மிஷனரிமாரின் ஆதிக்கத்திலேயே பெரும்பாலும் தங்கி இருந்தது. இதனால் அக்காலத்தில் இந்துப் பாரம்பரியம் அரசாங்க கணிப்பைப் பெறவில்லை என்பதோடு இந்துப் பாடசாலைகள் விலக்கப்பட்டவையாவும் இருந்தன.

1833 இல் கோல்புறூக் ஆணைக்குழுவினர் அரசாங்க பரிபாலன முறையில் மாற்றத்தை சிபாரிசு செய்து; கீழ்மட்ட அரச பதவிகளை இலங்கை மக்களுக்கு வழங்க முன் வந்த போது இலங்கையர்களுக்கு ஆங்கில அறிவு அவசியமாயிற்று இவற்றைப் பெற மிஷனரிமார்களின் கல்விஸ்தாபனங்களை நாட வேண்டிய அவசியம் இலங்கையர்களுக்கு ஏற்பட்டது. அங்கு இவர்கள் மதமாற்றம் அடைய வேண்டி இருந்தது. மிஷனரிமாரினால் மதமாற்றம் செய்யப்பட்டவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் அரசாங்கத்தின் எல்லா உயர் பதவிகளையும் வகித்தமையால் இவர்கள் மிஷனரிமார்களுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கி வந்தனர். இவர்கள் இந்து சமய வளர்ச்சிக்கும் தடையாக இருந்தனர்.

இலங்கையில் இந்து, பௌத்த, இஸ்லாம் மதங்களைப் பாதுகாப்பதற்காக போராடும் கர்மவீரர்கள் பலர் தோன்றினர். பாணந்துறையிலே புகழ் பெற்ற மிக்கெட்டுவ குணாநந்த தேரரைப் போல வடக்கிலே தோன்றி இந்து மதத்தின் மாபெரும் சீர்திருத்தவாதியாகவும், இந்து சமயக் கல்வியினது தமிழ் உரைநடைப் பகுதியினதும் தந்தையாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆவார்.

தமிழறிஞராகவும் சிறந்த சைவராகவும் விளங்கிய இவர், வட பகுதியிலே மெதடிஸ்த மதத்தின் தலைவரான வண பிதா பேர்சிவல் அவர்களின் தமிழாசிரியராய்த் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். மெதடிஸ்த சூழலிற் பழகிய அவர் அவர்களின் போக்குகளையும், பயிற்சிகளையும் நன்கு அறிந்து தேறியவரானார். சமயக் கல்வியின் அவசியத்தையும், வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கு அதன் தேவையையும் பற்றி மிசனரிகள் கொண்டிருந்த முடிவிற்கு அவரும் உடன்பட்டார்; ஆயின் மக்களின் தேவைக்கும் மகிழ்ச்சிக்கும் நாட்டில் நிலவி வரும் அவர்களின் பாரம்பரிய சமயம் உதவ வேண்டுமேயன்றி; மேற்கு நாட்டுச் சமயமன்று என்பது அவரது கருத்தாயிருந்தமையால் மிசனரிமாரின் மதமாற்றப் போக்கினை அவர் உக்கிரமாகச் சாடினார். மேனாட்டு கல்விமுறை இந்து சமயப் பாரம்பரியத்திற்கு முற்றும் முரணாவதாதலின் அதனை எதிர்ப்பது அவர் வாழ்வின் இலட்சியமாயிற்று.

கீழைத்தேய நாட்டுக் கலைத்துறை வல்லுனரும் பிரித்தானிய சட்டவியலறிஞருமான சேர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் கூறும் கருத்து இங்கு நோக்கவேண்டியது. **“நான் ஓர் இந்துவல்லேன்; ஆயினும் எதிர்கால நிலை பற்றிய இந்து மதக் கோட்பாடானது எல்லையில்லாத் தண்டனைகளையே வலியுறுத்தும் பொல்லாத கிறிஸ்தவக் கருத்துக்களைக் காட்டிலும் பகுத்தறிவுக்கொத்ததும், பக்தி நிறைந்ததும் மக்களைப் பாவஞ் செய்யாது தடுக்க வல்லதுமாகுமென்று யான் கருதுகிறேன்”.**

இந்து மதம் காலப்போக்கில் வளர்ச்சி பெற்று இந்நாட்டு மக்களின் சூழலுக்குப் பொருந்தக்கூடிய தத்துவத்தைக் கொண்டதாய் விளங்குகிறது. இக்காரணத்தினாற்றான் போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், பிரித்தானியரும் அதனை அழிக்க மேற்கொண்ட பிரயத்தனங்கள் யாவும் தற்காலிகமான அரைகுறை வெற்றியையே தந்து, இந்து மதத்தை முற்றாக அழிக்க முடியாதொழிந்தன. நாவலர் வடக்கிலே இந்துமதப் பாடசாலைகள் அமைக்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். இந்து மாணவர்களுக்குப் பொருத்தமனான பல நூல்களையும் எழுதியதுடன், இந்து மதத்தின் சிறப்பனைத்தையும் வெளிப்படுத்தும் சொற்பொழிவுகளை மேற்கொண்டார்.

இந்த மத மாற்றத்திற்கு எதிராக நாவலர் கிளர்ந்தெழுந்தது சைவ மக்கள் மத்தியில் ஓர்

விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இவரினால் 1852ல் ஸ்தாபிக்கப்பட்ட வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை அக்காலத்தில் இந்துகளுக்கு மாதிரிப் பாடசாலையாக அமைந் தது. இவர் ஆங்கிலக் கல்வி கற்பதற்கு சைவச் சூழலில் பாடசாலைகளை அமைக்க வேண்டிய அவசியத்தை அக்காலப் பெரியாருக்கு உணர்த்து வதற்காக தாமே ஆங்கில மூலம் கல்வி கற்கும் ஒரு பாடசாலையையும் வண்ணார்பண்ணையில் நிறுவினார்.

நாவலர் ஆரம்பித்த ஆங்கிலப் பாடசாலை சில வருடங்களின் பின் மூடப்பட்டதாயினும் 1888ல் வண்ணார் பண்ணை சைவப் பெரியார்களினால் "சைவ சமய பரிபாலன சபை" உருவாக்கப்பட்டு அச் சபையினரின் முயற்சியால் 1890ல் அப்புக்காத்து C. நாகலிங்கம் அவர்களின் முயற்சியால் "இந்து உயர்தர பாடசாலை" நிறுவப்பட்டது. இதே போன்று யாழ்குடாநாட்டின் பல பகுதிகளிலும் தனி நபர்களின் முயற்சியினால் ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1876ல் கனகரத்தின முதலியாரினால் சுழிபுரத்திலும்; 1894ல் சுன்னாகம் கந்தரோடையில் கந்தையா வாத்தியாரினால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும்; அதே தினத்தில் அளவெட்டியில் அருணாசலம் என்னும் பெரியாரினால் "அருணோதயாக் கல்லூரி"யும்; வட்டுக்கோட்டையில் அம்பலவாண நாவலரினால் "வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி" யும்; 1896ல் சிதம்பரப்பிள்ளை அவர்களினால் வல்வெட்டித்துறையில் "சிதம்பரக் கல்லூரி"யும் 1910ல் பாவலர் துரையப்பாபிள்ளையினால் தெல்லிப்பளையில் "மஹஜனா கல்லூரி"யும் இதேபோல் 1895ல் பருத்தித்துறையில் வையிரமுத்து வேலாயுதம்பிள்ளை என்னும் பெரியாரினால் "புலோலி ஆண்கள் ஆங்கிலப் பாடசாலை"யும் பின்பு வேலாயுதம் மகா வித்தியாலயம் எனவும். இதேபோல் பிரதான ஊர்கள் தோறும் இந்து ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சைவப் பெரியார்கள் அங்கம் வகித்த வித்தியா விருத்திச் சங்கம் கிட்டத்தட்ட 182 பாடசாலைகளை அரசு பொறுப்பேற்கும் பொழுது கையளிக்கக் கூடியதாக இருந்தனர்.

இதன் முயற்சிகளுக்கு வழி வகுத்தவர்களுள், சேர் பொன் இராமநாதன், சேர் வைத்திலிங்கம் துரைசாமி, இந்து போட் இராஜரட்ணம் போன்றோர் முக்கிய பங்கு ஆற்றினர். இதே போன்ற கிழக்கு மாகாணத்திலும் இராமகிருஷ்ண மடத்தினர் பெருமளவு கல்விச் சேவையினைச் செய்துள்ளார்கள். அவர்கள் பல பாடசாலைகளை ஆரம்பித்து இந்து சமயத்தையும் தமிழையும் வளர்த்தனர். இம் முயற்சிக்கு விபுலானந்த அடிகளார் முக்கிய காரணமாக இருந்தார்கள். இவர்களை விட பண்டிதர் பூபாலபிள்ளை, புலவர்மணி பெரியதம்பிபிள்ளை, முதலியார் கா.வ மார்க்கண்டனார், பேராசிரியர் ப. சந்திரசேகரன் ஆகியோர் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிக ளிலும் இந்து சமயக் கல்வி நிலையங்கள் அமைவதற்குக் காரணமாக இருந்தனர். இவர்கள் முயற்சியினால் திருகோணமலை இந்துக் கல்லூரியும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியால யமும், முதலியார் கா. வ. மார்க்கண்டன் நிறுவிய பாடசாலைகளில் காரைதீவு, மண்டூர், ஆரப்பற்றை, ஆனைப்பந்தி பாடசாலைகள் அடங்கும்.

கொழும்பிலே இந்து சமயச் சூழலில் மாணவர்களுக்குக் கல்வி புகட்டக் கொழும்பு விவேகானந்த சபையினர் 1926ம் ஆண்டு விவேகானந்த வித்தியாலயத்தை வட கொழும்பிலும், 1930ம் ஆண்டு சைவமங்கையர் கழகம், சைவ மகளிர் வித்தியாலயத்தை வெள்ளவத்தையிலும் 1951ம் ஆண்டு கொழும்பு இந்து வித்தியா அபிவிருத்திச் சங்கத்தினர் நீதியரசர் திரு. சி. நாகலிங்கம், சேர். கந்தையா வைத்தியநாதன், மூதவை உறுப்பினர் பெரிய சுந்தரம், திரு. எஸ். மகாதேவா போன்றோரின் முயற்சியினால் பிள்ளையார் பாடசாலை எனவும்

பின்பு இந்துக் கல்லூரி கொழும்பு என்றும் இந்துப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

1960 ஆம் ஆண்டு உதவிபெறும் பாடசாலை களை அரசு பெறுப்பேற்கும் பொழுது, இந்து மக்கள் தங்கள் சமயச் சூழலில் கல்வி கற்று இந்துப் பண்பாட்டைப் பேணக்கூடிய வகையில் இந்துப் பாடசாலைகளை அமைத்துச் சேவை செய்த பெரியோர்களையும், சமய ஸ்தானங்க ளையும் இந்து மக்கள் என்றும் நன்றி மறவாதர்களாக நினைவு கூர்தல் வேண்டும்.

"என் அருமைச் சகோதரர்களே! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள் தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒருசில வரிகளை இங்கு, உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்"

**எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்**
**இறுதியில் கடலிலே சென்று**
**சங்கமாம் பான்மையினைப் போன்று லகோர்**
**பின் பற்றும் தன்மை யாலே**
**துங்குமிகு நெறிபலவாய் நேராயும்**
**வளைவாயும் தோன்றினாலும்**
**அங்கு அவை தம் எம்பெருமு! ஈற்றில் உனை**
**அடைகின்ற ஆறெயன்றோ!**

(உலக சமய மகாநாடு சிகாகோ – சுவாமி விவேகானந்தர்)

## ஆதாரத்துணை நூல்கள்


1. "Education in Ancient and Medieval India" - Bulletin of the Ramakrishna Mission - 1967
2. "Vedic Religion and Philosopy" - Ramakrishna Mission Madras - 1950
3. "Indian Educational Vision" - Swami Rangananatha - 1966
4. திருக்குறள் – திருவள்ளுவர் (பரிமேலழகர் உரை) பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு – 1967
5. "இலங்கையிற் கல்வி" – நூற்றாண்டு விழா – 1969
6. "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்"–வீ. முத்துக்குமார சுவாமி
7. "ஆறுமுக நாவலர் சரித்திரம்" – தி. கைலாச பிள்ளை
8. "யாழ்ப்பாண வைபவமாலை" முதலியார் சீ. ராச நாயகம்
9. இலங்கையின் சைவக் கல்வி வளர்ச்சி வ. ஆறுமுகம்
10. இந்து சாசனம் – க. அருமைநாயகத்தின் கட்டுரை
11. இந்துக் கல்லூரி கொழும்பு – 40வது ஆண்டு நிறைவு மலர் 1991.


*பரந்த புகழ், செல்வம், மேன்மையான சொல், நின்ற நிலையினின் றும் வழுவாத ஆண்மை, கல்வியறிவு ஈகைத்தன்மை ஆகிய ஆறு குணங்களும் நற்குடியிற் பிறந்து நல்லொழுக்கத்தில் ஒழுகுவோரது இலக்கணம்.*

**- கணி மேதையர்**

---

*குடியரசு உலகில் மிகச்சிறந்த அரசு. அதற்கு மேலான மனிதத்தன்மை மிகவும் வேண்டப்படுவது; இவை ஒருங்கு பொருந்திய நல்லாட்சி உலகில் எங்கணும் இல்லை.*

**- ஹேர் பேட் ஸ்பென்சர்**

---

*மனிதனின் வாழ்க்கையை அவனது மனச்சாட்சி நிர்ணயிப்பதில்லை. ஆனால் சமூக வாழ்க்கைதான் அவனது மனச்சாட்சியை நிர்ணயிக்கின்றது.*

**- மார்க்ஸ்**

# வேலாயுதம் மகா வித்தியாலயம்

**திருமதி. சி. நளினி சாந்தி**
*முன்னாள் ஆசிரியை.*

1. செய் கருமம் சித்திக்கும் விநாயகர் அடிபணிந்து
சின்னச் சின்ன நினைவுகளைச் சிந்தைதனில் உறங்கியதை
சீர் திகழ் விகிர்தி நல்லாண்டினில் விழா எடுக்கும்
புகழ் பூத்த வேலாயுதம் மகா வித்தியாலயம் ஓங்கி வளரவே

2. கனிந்தளிப்பேன் ஊர் மகிழ் கல்விக் கூடம்
கல்வியில் உயர்ந்து கண்ணியம் மிக்க
ஒழுக்கம் பண்பு உயர் குண நலன் நிறை
விழுப்பம் மிக்குயர் வாலிபர்களாக

3. பிறந்த ஊர்ப் பெருமை சேர்த்திடத் தம்மை வளர்த்து
உயர்ந்து நிற்கும் உத்தமர்களாக வாழ்வில் ஓங்கிட
பொங்கிடும் பூரிப்புடன் விரும்பி வழங்கும்
சிறுகவிதைத் தொகுப்பை ஏற்றிடுவீர் மகிழ்ந்து.

4. பேராதரவாய் மாணவர் தம் குறும்பை அடக்கி
பெருவாழ்வும் பேறும் கொடுத்துதவும் ஆசான்களே
வாராத எனையும் எண்ணி சொற் சித்திரம் வடிக்க
வழிகாட்டிய நினது புகழ் ஒழியாது ஓங்கட்டும்

5. எழுத்து எண் முதலாம் பல பாடங்களை விருப்புடன் புகட்டி
எண்ணரிய சேவை நல்கி வானளவு புகழ் பரப்பி
புன்முறுவல் பூத்தலர்ந்த மலர் மணம் வீசக் கல்வியை
பல காலும் எட்டுத் திக்கும் மகிழ நாட்டிடுவீர்.

6. முத்தெனப் பெற்று சொத்தாக எண்ணும் குழந்தைகளை
உத்தமராக்க அனுப்பும் பெற்றோர் தம் கருத்தறிந்து
புத்தினை வளர்த்து பார் புகழ வாழவைக்கும்
நல்லாசிரியர்களே நலமுடன் வாழ்க நீடுழி

7. களிப்பு ஆனந்தம் இன்பம் என்பன தவிர வேறொன்றும்
தம்மைத் தொடராமல் மனவுறுதியுடன் கல்விக்
கரசி சரஸ்வதி தாள் பணிந்து மங்கல வாழ்வு
மலர நாளும் வழிபடுவேன் என் நினைவுள்ளவரை

8. எம் இன மக்கள் செல்லுமிடமெல்லாம் புகழ் பரப்பி
நிலைக்கும் இடமெல்லாம் நெஞ்சினை அள்ளும்
பண்பு குலவிடும் வண்ணம் எண்ணங்களைத் தூண்டி
சிந்தனைதனை வளர்த்து விட வாணியவள் துணையிருப்பாள

9. தேனினும் இனிக்கும் நல்ல ஒப்பில்லா மக்காள்
உங்கள் பெருமை உரைத்திடல் எளிதோ என்னால்
அண்ணாந்து வானை நோக்கும் கட்டிடம் போல
கல்வி அழகும் சிறந்தோங்க வாழ்ந்திடுவீர் நலனே.

10. பாங்குற வீற்றிருக்கும் அதிபரின் சித்திரக்கோலம்
தன்னின் சிறப்பினை என்ன சொல்வேன் அத்தனை
ஆசான்கள் குணமறிந்து மொத்தமாய் வழிகாட்டி
உன்னத நிலை படைக்க திருவருளை வேண்டுவேனே.

11. ஆவியில் கலந்தே நிற்கும் எண்ண அலைகளை
ஆவல் கொண்டே அடிக்கடி நினைப்பேன்யானே
பாவி சொல்லில் வடித்தெழுதா சோகக்கதையெல்லாம்
உள்ளத்தில் புதைத்து வைத்து வாழ்வோமே நலமுடன்.

12. நெல்லுக்கு நீர் இறைத்தல் போல ஒளிமயமாய்
வெல்லும் திறம் படைத்த பல கலைகளையும்
நேர்மையோடு கற்றுக் கொடுத்து மாணவர்க்கோர்
கரை காட்டிடுவீர் தரணி வாழ் சான்றோரே.

# ஓர் பழைய மாணவனின் மனக் குறிப்பேட்டிலிருந்து...

**சண் - பழைய மாணவன்**

சுறுசுறுப்பு மிக்க நகரத்தில் பரபரப்பான வாழ்க்கைச் சூழலில், ஓய்வாக இருந்து எழுதுவது என்பது சிறிது கடினம்தான். அதிலும் மனதின் எங்கோ ஒரு மூலையில் உறைந்துபோய் இருக்கும் பழைய நினைவுகளைத் தட்டி எழும்பி, அதற்கு எழுத்து வடிவம் கொடுப்பது என்பது மிகமிகக் கடினம். இருந்தாலும் முயற்சி செய்ய எண்ணினேன்.

முன்னோக்கி விரைந்து கொண்டிருக்கும் காலச் சக்கரத்தைப் பின்னோக்கி எவ்வளவு நகர்த்த வேண்டும் என எண்ணினேன். குறைந்தது 30 ஆண்டுகள். மலைப்பாக இருக்கிறது.

அப்போது வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்தவர் (யாரென்று பின்னால் சொல்கிறேன்) நான் அந்தப் பாடசாலையில் சேர்ந்து கற்கவேண்டும் என விரும்பினார். எனது ஆரம்பப் பாடசாலை நண்பர்களைப் பிரிய வேண்டும் என்பதைத் தவிர எனக்கு வேறெந்தத் தயக்கமும் இருக்கவில்லை. பாடசாலையின் ஆசிரியர்கள் பலரை முன்பே தெரிந்திருந்தது. ஆரம்ப காலத்தில் அதிபரே என்னைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்றார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் எவ்வளவு செல்வாக்குப் பாடசாலையில் இருந்திருக்கும் என்று.

இந்த பாடசாலையில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஏனெனில் இங்கு கல்வி கற்பிப்பது என்பது சவால் மிக்கது என்றே சொல்ல வேண்டும். இங்கு பயில வரும் மாணவர்கள் பலதரப்பட்ட குடும்பச் சூழலில் இருந்து வருவதால், அவர்களின் எண்ணங்கள், நோக்கங்கள் வெவ்வேறாக இருக்கும். எனவே அவர்களை ஒரு வழிப்படுத்திக் கற்பிப்பது அவ்வளவு இலகுவானதல்ல. மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், பண்புகளையும், வாழ்க்கை நெறிகளையும் கூடக் கற்பிக்க வேண்டியிருக்கும். பொதுவாக மாணவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளே ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். ஆனால் இம்மகிழ்ச்சி இப்பாடசாலை ஆசிரியர்களுக்குக் கிடைப்பது என்பது குறைவு என்றே சொல்லவேண்டும். அதாவது இவ் வாசிரியர்கள் தாங்கள் விதைக்கும் பயிர்களின் அறுவடையைக் காண நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். இங்கு பயிலும் மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றியடைந்து, பண்பட்டவர்களாக வாழ்வதைப் பார்க்கும் போதுதான் இவ்வாசிரியர் களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். இம் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்பும் தம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் தனித்துவமானவை என்றே சொல்லலாம்.

இப்பாடசாலை ஆசிரியர்களின் வாழ்க்கையே மாணவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. ஆசிரியர்களுக்குள் போட்டி இருக்கவில்லை; பெருமை இருக்கவில்லை. அவர்களுக்குள் இருந்த நட்பு, ஒற்றுமை வேறெங்கும் பார்க்க முடியாத ஒன்று. ஒரு குடும்பம் போல் வாழ்ந்து குடும்பம் என்பதன் அர்த்தத்தை உணர்த்தியவர்கள். பாடசாலை நேரம் முடிந்தபின் அதிபர், ஆசிரியர்கள் ஒன்றாகக் கூடி இருந்து மனம் விட்டு அளவளாவுவதே அவர்கள் அப்படி ஒற்றுமையாக இருந்ததற்குக் காரணமாக இருக்கலாம் என

இப்போது உணருகிறேன். வாழ்க்கையில் புரிந்துணர்வோடு இருப்பதற்கும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் சுதந்திரமான மனம் திறந்த கருத்துப் பரிமாற்றம் மிக முக்கிமானவை என்பது என் கருத்து.

அடுத்து எனது ஆசிரியர்கள் சிலரைப் பற்றி சில சிறு குறிப்புக்கள். இதில் சிலர் நீண்டகாலம் தொடர்ந்து கற்பித்தவர்கள்.

பாரதியார் என்று சொன்னதும் எம் நினைவுக்கு வருவன அவரின் கவிதை வரிகள். அதன் பின் அவரின் தோற்றம்; அவர் எடுப்பான தோற்றத்துடன், மிடுக்கான நடையுடன், நேர்த்தியான ஆடையுடன் காட்சி அளிப்பார் என்று கேள்விப்பட்டிருப்போம். பாரதியார் இப்படித்தான் இருந்திருப்பாரோ என்று எண்ண வைத்த ஓர் ஆசிரியரின் தோற்றம், உடை, நடை என்பன இருந்தன. என்ன தலையில் ஒரு முண்டாசும், முகத்தில் மீசையும் இல்லாததுதான் குறை. என்றும் தமிழ்ப் பண்பாட்டு உடையில் தோன்றும் அவர், கற்பிப்பதோ ஆங்கிலம். எல்லோரும் யாரென்று ஊகித்திருப்பீர்கள். ஆம், அவர்தான் திரு. த. ந. பஞ்சாட்சரம் அவர்கள். அவருக்கு ஆங்கிலத்தில் உள்ள அறிவும் புலமையும் எல்லோரும் அறிந்ததே. அவர் எனக்கு ஆங்கிலம் மட்டுமல்ல சைவசமய பாடமும் கற்பித்திருந்தார். சைவசமய பாடத்தையும் சுவையான தெளிவான விளக்கங்களுடன் மிக அழகாகக் கற்பித்தார். ஆறுமுகநாவலர் விரதத்திற்குக் கொடுத்த வரைவிலக்கணத்தைக் கற்பிக்கும் போது அவர் கொடுத்த விளக்கங்கள் இன்றும் என் நினைவில் இருக்கின்றன.

எனவே விரதம் இருப்பின் நெறிப்படி இருக்கவேண்டும் என எண்ணினேன் அப்படி இருக்கமுடியாமல் இருப்பதால் இன்று வரை விரதம் இருப்பதில்லை. அந்த நினைவுகளுடன் அவரின் அன்பும் பாசமான நட்பும் அக்கறையும் இன்றும் எம்மில் இருப்பது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

நீண்ட காலம் எனக்குக் கற்பித்த இன்னொரு ஆசிரியர் திரு. ப. க. ஆறுமுகம் அவர்கள். அவர்தான் எனது தமிழாசிரியர். அழகான தமிழில் பொறுமையுடன் அவர் கற்பித்த தமிழ் இலகுவாக மாணவர்களைச் சென்றடைந்தது. கம்பஇராமாயணம் அவர் கற்பித்த விதம் அப்படியே மனதில் பதிந்தது. கட்டுரைப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கு ஊக்கம் கொடுத்தது மட்டுமல்லாது அதற்கு என்னைத் தயார்படுத்துவதற்கு அவர் எடுத்த சிரமங்கள் என்னால் மறக்க முடியாது. எனது திருமணத்தின் போது தொலைபேசியூடாக என்னை அழைத்து வாழ்த்தியதை ஆசிமழை என்று கூறலாம். எப்படியெல்லாம் வாழ்த்த முடியுமோ அப்படியெல்லாம் வாழ்த்தினார். இன்றும் அடிக்கடி என்னைப் பற்றி எனது தந்தையிடம் கேட்பதால் அவரின் மனதில் இடம்பிடித்த ஓர் மாணவனாக இருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

எனக்கு விஞ்ஞானம் கற்பித்த ஆசிரியரைப் பற்றிச் சில வரிகள்; புன்னகை இழையோடிய முகம், மற்றவர் நோகா இனிமையான பேச்சு, வஞ்சகமில்லா மனம் போன்ற அரிய பல இயல்புகளால் எல்லோர் இதயத்திலும் இடம்பெற்ற இனிய ஆசிரியர் திரு. தேவராஜா அவர்கள். என்றும் அவர் கோபப்பட்டதைப் பார்த்ததில்லை. அவர் ஓய்வாக இருந்ததும் பார்த்ததில்லை. சலிப்பில்லாமல் மற்றவர்களுக்கு உதவும் இயல்பு; மற்றவர் செய்த சிறு உதவியைக் கூட என்றும் மறக்காது நன்றியுடன் நினைவு கூரும் அவரின் மனம்; இவையெல்லாம் நாம் அவரிடம் கற்க வேண்டியது. எனது திருமணத்திற்குச் சிரமம் பாராது ஊரிலிருந்து கொழும்பு வரை வந்து வாழ்த்தி சென்றார். தானிருக்கும் சூழலைக் கலகலப்பாக வைத்திருந்த அந்தத் தன்னலமில்லாத மனிதர் இன்று எம்முடன் இல்லை என்பதும் எனது இந்த எழுத்தை வாசிக்க மாட்டார் என்பதை எண்ணவும் கவலையாக இருக்கிறது.

அடுத்து எனது க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்பித்த சில ஆசிரியர்களை நன்றியுடன் நினைத்து அவர்களைப் பற்றி சில வரிகள். அவர்களில் இருவர்

மிக முக்கியமானவர்கள். ஒருவர் திரு. சி. தியாகராஜா அவர்கள்; மற்றவர் திரு. மா. இராஜஸ்காந்தன் அவர்கள். எப்போதும் சிரித்த முகத்துடன் கவலையில்லா மனிதனாக உற்சாகமாக இருக்கும் திரு. தியாகராஜா அவர்கள் பாடங்களைக் கற்பிக்கும் போது அவை தினசரி வாழ்க்கையில் எப்படிப் பயன்படும் என்பதையும் கற்பிப்பதில் வல்லவர். இயற்கையாகக் காணப்பட்ட இவரின் தொழில்நுட்ப அறிவும் ஆர்வமும் இவர் பாடம் நடத்தும்போது அறியக்கூடியதாக இருந்தது. மிகவும் சுறுசுறுப்பான ஆசிரியர்களில் இவரும் ஒருவர்.

அடுத்து க. பொ. த. உயர்தர பரீட்சையைச் சிறப்பாகச் செய்வதற்கு ஊக்கம் கொடுத்து அதில் வெற்றியும் பெறவைத்த திரு. இராஜஸ்காந்தன் அவர்கள். மாணவர்கள் பரீட்சையில் நன்றாகச் செய்யவேண்டும் என்பதற்காகச் சிரமம் எடுத்துக் கற்பிப்பார். தனித் தனியாக ஒவ்வொரு மாணவனையும் கவனம் எடுத்துக் கற்பிப்பார். சில காலங்களின் பின், இவரின் சேவை எமது பாடசாலைக்குக் கிடைக்கவில்லை என்பதை அறிந்த போது சிறிது வருத்தமாக இருந்தது.

எமது பாடசாலையின் முக்கியமான ஆசிரியர்களில் ஒருவர் திரு. மு. குமாரசாமி அவர்கள். அவரின் சுறுசுறுப்பும் வேகமும் அவரின் பேச்சிலேயே புரியும். இயலாத வேலையை எடுத்தாலும் அதனைச் செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர். தன்னம்பிக்கை மிக்கவர். அவரின் அகத்தின் அழகு அவரின் சிரிப்பில் தெரியும்.

தூய கணிதம், பிரயோக கணிதம் ஆரம்பத்தில் கற்பித்த திரு. பொ. வேலாயுதம் ஆசிரியர் (Vector) இன்று எம்முடன் இல்லாவிட்டாலும், பாடசாலைக்குப் பெருமை சேர்த்தவர்.

இப்பாடசாலைக்காக சிரமம் பாராது பாடுபட்டவர்களில் திரு. திருமதி. குலசிங்கம் முக்கியமானவர்கள். திரு. குலசிங்கம் ஆசிரியர் பார்ப்பதற்குக் கண்டிப்பானவர் போல் தோன்றினாலும், அன்பானவர். நகைச்சுவை ததும்பக் கதைப்பதில் வல்லவர். திரு. வே. ஈசுரபாதம் ஆசிரியர் அவர்கள் பொறுமை மிக்கவர். இளகிய மனம் கொண்டவர். திரு. இராஜேந்திரம் அவர்களைப் பற்றி சொல்வதானால் அன்றுமுதல் இன்றுவரை திரைப்பட நட்சத்திரம் போல் இருக்கிறார். உடற் பயிற்சி எவ்வளவு அவசியம் என்பதை அவரைப் பார்த்தால் புரியும்.

என்னை நாடக மேடையில் ஏற்றிய எமது இசை ஆசிரியர் திரு. ஆ. கார்த்திகேசு அவர்களைப் பற்றிக் குறிப்பிடவேண்டும். சீர்காழி கோவிந்த ராஜனுடன் இசை பயின்றவர் எமது பாடசாலையில் கற்பித்தார் என்பது எமக்குப் பெருமையே. தன் நண்பனான சீர்காழி கோவிந்தராஜனை எமது பாடசாலைக்கு அழைத்து வந்து அவரைப் பார்க்க எமக்கு ஓர் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்தார். எனக்கே இசை கற்பிக்க முயற்சித்தார் என்று எண்ணும் போது அவரின் பொறுமையின் உச்சம் புரிகிறது.

எந்தப் பாடசாலையிலும் கற்பிக்காத வானொலித் தொழில்நுட்பத்தை எமது பாடசாலையில் ஓர் பாடமாகக் கற்பித்த திரு. நா. வைத்தியானந்தன் ஆசிரியரை மறக்கமுடியாது.

அன்பாகவும் அக்கறையாகவும் கணிதம் கற்பித்த திரு. சி. தங்கவேல் ஆசிரியர், விஞ்ஞானம் கற்பித்த திரு. எஸ். பீ. நாகநாதன்; பௌதிகவியல் கற்பித்த திரு. சி. வர்ணகுலசிங்கம்; சிலகாலம் இரசாயனம் கற்பித்த திரு. ஜீ. கேதீஸ்வரநாதன் (தற்போது வைத்தியர்) மறக்க முடியாத ஆசிரியர்கள்.

ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டு அதிபரை விட்டுவிட முடியாதல்லவா? ஏனெனில் பாடசாலையைத் தலைமை ஏற்று நடத்திச் சென்ற பெருமைக்குரியவர் அல்லவா! மாணவர்கள் முதலில் ஒழுக்கத்தைக் கற்க வேண்டும் என்று முனைப்போடு செயற்பட்டவர். அதனால் அதில் கண்டிப்பாகவும் இருந்தார். பாடசாலை ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கத் தவறியவர்கள்

தண்டனைக்கும் உள்ளானார்கள். இதனால் மாணவர்களுக்கு இவரிடம் பயம் இருந்தது. தங்கள் மேல் கொண்ட அக்கறையே அவரின் கண்டிப்பிற்குக் காரணம் எனப் பின்னரே அவர்கள் உணர்ந்ததால், இன்று அவர்கள் அவருடன் நட்புடன் இருக்கிறார்கள். இப்பாடசாலையில் பணியாற்ற ஆரம்பித்தது முதல் இன்றுவரை பாடசாலைக்காகப் பாடுபடுகின்றவர்களில் முக்கிய மானவர். அவர் வாழ்க்கையில் இப்பாடசாலை ஓர் அங்கமாகிவிட்டது. எனலாம். பழைய மாணவர் களை ஒன்று சேர்த்து, பழைய மாணவர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என அயராது உழைக்கின்றார். அதில் வெற்றியும் கண்டிருக் கின்றார். கனடாவில் வசிக்கும் திரு. பொன்னம்பலம் ஆசிரியரைத் தொடர்பு கொண்டு அங்கு ஓர் அமைப்பை ஏற்படுத்த விரும்பினார். திரு. பொன்னம்பலம் ஆசிரியரின் கடின உழைப்பும், விடாமுயற்சியும் அங்கு ஓர் சிறந்த பழைய மாணவர் அமைப்பை நிறுவ உதவியது.

அதன் பின் அவுஸ்திரேலியாவில் அவரது ஒரே உடன் பிறந்த சகோதரர் கடுமையாகச் சுகவீன முற்றிருந்தபோது, அவரைச் சென்று பார்க்க அந்நாடு இவருக்கு அனுமதி கொடுத்தது. இவர் அங்கு சென்ற சில நாட்களில் அவரின் சகோதரர் காலமாகிவிட்டார். இந்த சூழ்நிலையிலும் கூட அவர் பாடசாலையை மறக்கவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாது என எண்ணி, அங்குள்ள பழைய மாணவர்களைத் தொடர்பு கொள்ள முயற்சித்தார். அவரது முயற்சி கைகூட, அங்கும் ஓர் அமைப்பு உருவானது. இவருக்கு மட்டும் எல்லா நாடுகளுக்கும் சென்றுவர வசதியும் அனுமதியும் கிடைத்திருந்தால் திரை கடலோடித் திரவியம் தேடியிருப்பார் தன் குடும்பத்திற்கு அல்ல இப்பாடசாலைக்காக. இப்பாடசாலை இவரது இன்னொரு குடும்பம் என்று சொல்லலாம்.

அதிபரைப் பற்றி அதிகம் எழுதுகிறேன் என்று நீங்கள் எண்ணலாம். உண்மைதான், அவரைப் பற்றி அதிகம் தெரிந்ததால் எழுதினேன். அந்த அதிபர் யாரென்று சொல்லாமலே எல்லோருக்கும் புரிந்திருக்கும். அவர்தான் திரு. சே. ஏகாம்பர நாதன்.

நான் அங்கு படித்தபோது சேவையாற்றிய மற்றவர்களில் சிலர்; சிரித்த முகத்துடன் நெற்றியில் திருநீறு, சந்தனத்துடன் என்றும் காணப்பட்ட தங்கவேல் அண்ணா, ஆய்வு கூடத்தில் பணியாற்றிய இராசையா அண்ணா, இரவு நேரத்தில் பாடசாலையில் பாதுகாப்பு பணியில் இருந்தவர்கள் என எல்லோரையும் நினைவுக்குக் கொண்டு வந்தேன்.

அங்கு என்னுடன் படித்தவர்கள் சிலரைத் தவிர, மற்றவர்கள் எங்கு, எப்படி இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. மனோகரன், வசீகரன், புவனேந்திரராஜா எம் மண்ணிலும், தர்மகுலசிங்கம் கனடாவிலும், விவேகானந்தன் இலண்டனிலும் இருக்கிறார்கள். ஆரம்பப் பாடசாலையிலிருந்தே நட்புடன் உள்ள மதிவாணன், மணிவண்ணன் சகோதரர்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கி றார்கள். இவர்களுடன் கூடப் படிக்காவிட்டாலும் நீண்ட காலம் நண்பர்கள் எனலாம்.

எமது பாடசாலைக்காகக் கனடாவில் உள்ள பழைய மாணவர்களால் உருவாக்கப்படும் இணையத்தளம் மூலம் மேலும் பல மாணவர்களை ஒன்றிணைக்க முடியும் என நம்புகிறேன். இதன்மூலம் பல விட்டுப்போன தொடர்புகள் எமக்கு கிடைக்கலாம்.

இயன்ற மட்டும் பழைய நினைவுகளை மீட்க முயற்சி செய்திருக்கிறேன். குறுகிய நேரத்தில் பல ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று திரும்பியதால் பலரைச் சந்திக்காமல் விட்டிருக்கலாம். அதனால் அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு இதனை நிறைவு செய்கிறேன்.

# விளையாட்டு நிகழ்வுகள்



விளையாட்டுப் போட்டியில்
ஆரம்ப நிகழ்வு
இல்லத்தலைவர்கள்
ஒலிம்பிக் தீபம் கொண்டு வருதல்



விளையாட்டுப் போட்டிப் பரிசு
வழங்கும் வைபவம்
திருமதி தியாகராசா
2008



விளையாட்டுப் போட்டி
பரிசு வழங்கும் வைபவம்
திரு. திரவியராசா அதிபர்
உரையாற்றுதல்

# விளையாட்டு நிகழ்வுகள்



மாகாண மட்டக் கபடிப் போட்டியில்
இரண்டாம் இடம் பெற்ற குழு

# விளையாட்டு நிகழ்வுகள்



மெய்வன்மைப் போட்டியில் அதிபர் சே. ஏகாம்பரநாதன்
பாடசாலைக் கொடி ஏற்றுகிறார்



அதிபர் சே. ஏகாம்பரநாதனின் உரை

# விளையாட்டு நிகழ்வுகள்



பிரதம அதிதி திரு. K. S. வேல் முருகு
உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் உரையாற்றுகிறார்.



யாழ் செயலக உள் நாட்டு வியாபார உதவி ஆணையாளர்
பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மெய்வன்மைப் போட்டியில்
உப அதிபர் வே. ஈசுரபாதம் நன்றியுரை

# விளையாட்டு நிகழ்வுகள்



திருமதி. K. S. வேல் முருகு மாணவனுக்குப்
பரிசில் வழங்குகிறார்




மெய்வன்மைப் போட்டியில் அதிபர் சே. ஏகாம்பரநாதன் உரை

# விளையாட்டு நிகழ்வுகள்



மெய்வன்மைப் போட்டியில் திருமதி யோகநாதன் பரிசில் வழங்குதல்



இல்ல விளையாட்டுப் போட்டி
பிரதம அதிதி Dr. S. யோகநாதன் உபஅதிபர் வே. ஈசுரபாதம் நன்றி உரை

# கற்பித்தல் - கற்றல் வேண்டும்

## ஒரு மீள் பார்வை

**தேவராஜன் மோசிகீரன்** B.Sc (Eng) MSc (Geotech)

**க**ல்விச் சிந்தனைகள் தமிழில் நிறையவே உண்டு. கல்வியின் இன்றியமையாத் தன்மையை அதிவீரராம பாண்டியன் அருளிய வெற்றி வேற்கை சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**

அக்காலத்தில் அறநெறி சார்ந்த வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தது கல்வி.

கால நீரோட்டத்தில், குறிப்பாக மேற்கத்திய குடியேற்ற ஆட்சியின் கீழ் கற்பித்தலும் கற்றலும் அதிகாரம் செலுத்திய நாட்டின், பொருளாதார உறிஞ்சலுக்கான, நிர்வாகத் தேவைக்கான சிக்கனம் கருதிய உள்ளூர் ஆளணியை உருவாக்கு வதனை அடிப்படியாகக் கொண்டு அமைந்தது. இலங்கையை எடுத்துக் கொண்டால் பிரித்தானிய ஆட்சிக்காலத்தைப் பார்க்கலாம்.

பிரித்தானியரைக் கொண்டு நிர்வாகம் செய்வதால் பெருந்தொகைப் பணம் நிர்வாகச் செலவாகிப் போனதால், சிக்கனப்படுத்தக் குறைந்த சம்பளத்திற்கு உள்ளூரவர்களைச் சேவைக்குச் சேர்த்தார்கள். அதற்கு அவர்களுக் குத் தேவைப்பட்டது ஆங்கில மொழி அறிவும், கணித மொழி அறிவும் மட்டுமே. அதற்கு மேல் கல்வி தேவைப்படவில்லை. அதனால், முதல் இலங்கைப் பட்டதாரிகள் இந்தியாவின் கொல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேர்ந்தவர்கள் தான். அப்போது இந்தியத் தலைநகராகக் கொல்கத்தா இருந்தால் முதல் பல்கலைக்கழகம் அங்கு அமைக்கப்பட்டது. அதனால் ஆங்கில அறிவிலும் உயர்கல்வியிலும் கொல்கத்தா மேம்பட்டு இருந்தது.

இலங்கையில் நிலைமை மாறிப் பல்கலைக்கழக கல்லூரி அமைக்கப்பட்டது. உயர் கல்வியின் தோற்றுவாயாக இது அமைந்தது. சட்டம், மருத்து வம், பொறியியல் துறைகள் முதன்மை இடத்தைப் பிடித்தன. திறமையான மாணவர் களுக்கு வடிகாலாக அமைந்தது.

உலகம் இன்று வெகு தூரம் முன்னேறி விட்டது. துறைகள் பல்கிப் பெருகி உயர்கல்வியின் கன தேவைகள் பரந்து உயர்கல்வியின் தளத்தை விரிந்து செல்ல வைத்துள்ளன.

தொழில் வளர்ச்சி, அதனுடன் இணைந்து வளர்ந்து தேவைப்படுத்திய தொழில்நுட்பவியல். அதேபோல் மருத்துவம், பொறியில், கட்டடவியல், சட்டவியல், கணக்கியல், சமூகவியல், மானுடவியல் முதலான துறைகள் விரிவுபடுத்திய தளங்கள் தேவைப்படுத்திய ஆளணிகள், கற்பித்தல், கற்றல் ஆகிய துறைகள் இரண்டையும் மீள் பார்வை செய்ய வேண்டிய தேவையை வலியுறுத்துகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் பாரம்பரியமாகத் தமிழ் சமூகத்தில் நிலவும் கற்பித்தல் முறையை நாம் ஒரு கணம் திரும்பிப் பார்க்க வேண்டும். சாதாரண ஒரு ஆசிரியர், கெட்டிக்கார மாணவர்கள்என்று சிலரைத் தட்டிக் கொடுப்பதும், படிப்பு ஏறாத மாணவர்கள் என்று வேறு பலரை மட்டம் தட்டியும் வருவது நமது ஆசிரியர் மரபு.

இது முற்றிலும் தவறானது. ஆசிரியர்களின் இந்தப் போக்கு, கல்வி வளர்ச்சியை, பரம்பலை மட்டுப்படுத்தும். இக்கால உடற் கூற்று ஆய்வுகளில்

மனித மூளை வளர்ச்சி அடையாத நிலையில் பிறந்த பிள்ளைகளைத் தவிர ஏனையவர்கள் கற்க முடியாதவர்கள் அல்லர் என்று கண்டறியப் பட்டுள்ளது. மூளை குறைவளர்ச்சிப் பிள்ளை களுக்கும் கல்வி முறைகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.

மரபணு ஆய்வுகளின்போது இன்னொரு உண்மை கண்டறியப்பட்டுள்ளது. குறித்த ஒரு மரபணு மிகுதியாக உள்ளவர்கள் கவின் கலைக ளில் சிறந்து விளங்குவது உறுதி செய்யப்பட் டுள்ளது. ஆக, ஒவ்வொரு பிள்ளையின் போக்கும் நோக்கும் வேறுபடும். இதனோடு இன்னொரு உண்மையைப் புறம் தள்ளிவிட முடியாது. குழந்தைப் பருவத்தில், பதின்ம வயதில் ஒவ்வொருவரும் சுற்றுச் சூழலில் இருப்பவர்களின் நடத்தையால், வாழ்வின் நிகழ்வுகளால் ஏதோ ஒரு வகை உளவியல் பாதிப்புக்கு இலக்காவது தவிர்க்க முடியாது. பாதிப்பு நன்மையாகவும் அமையலாம், தீமையாகவும் அமையலாம். தீமையான உளவியல் பாதிப்புக்குள்ளான பிள்ளை படிப்பதில் இடர் கொள்ள நேரலாம். அப்படி பாதிப்புக்குள்ளான பிள்ளை கற்க முடியாத பிள்ளை அல்ல. அந்தப் பிள்ளையை அரவணைத்து உண்மைப் பின்னணியை உணர்ந்து அதிலிருந்து பிள்ளையை விடுவித்துக் கற்க வைப்பது ஆசிரியர் கடமை.

மேலும் ஒவ்வொரு பிள்ளையின் உள்ளார்ந்த ஆற்றலை உய்த்தறிந்து அந்த வழியில் மேம்படத் தக்க கல்விப் பயிற்சிக்கு வழிவகுப்பதும் ஆசிரியர் பொறுப்பு. ஒவ்வாத பாடநெறிக்குள் பிள்ளையைப் புகுத்தித் திண்டாட வைப்பது தவறு மட்டுமல்ல, மன்னிக்க முடியாத குற்றம். காரணம் அந்தப் பிள்ளையின் வாழ்வு பாழடிக்கப்படுகிறது.

என் பிள்ளை மருத்துவராக வர வேண்டும். பொறியியலாளராக வர வேண்டும் என்று நினைத் துத் தம் பிள்ளைகளின் வாழ்வை இருளாக்கிய பெற்றோர்களும் நிறைய உண்டு. ஒரு பிள்ளை ஒரு பாடத்தில் சற்றுப் பின்தங்கிக் காண்பித்தால், அந்தப் பிள்ளையை வகுப்புப் பாடம் எடுக்க வைக்க வேண்டும். ஆசிரியர் துணை நின்று சரி செய்து உற்சாகப்படுத்தவேண்டும். பிள்ளைக்குத் தன்னம் பிக்கை பிறக்கும். பின்பு தானாகவே முன்னேறத் தொடங்கும்.

இன்று பரந்து விரிந்த கற்கை நெறிகள் பல. இவற்றை மேலை நாடுகளில், வளர்ச்சியுற்ற நாடுகளில் புதுவிதமாகக் கற்பிக்கின்றார்கள். குறித்த பாடத்தின் அந்தப் பிரிவுக்கான விளக்கம் தந்து மேலும் அறிந்து கொள்ளக் கணினி மூலம் இணையத் தளங்களிலும், நூலகத்திலும் தரவுகளைத் தேடி மாணவர்களையே விரிவாக எழுத வைக்கின்றார்கள். நம் நாடுபோல் ஆசிரியர் குறிப்புக்கள் சொல்லி அதை எழுதி மனப்பாடம் செய்து எழுதும் தவறான முறையால் மாணவர் கல்வி வெறுமை ஆகின்றது. மாணவர்களே தரவுகளைச் சேகரித்து எழுதும் போது அவர் மனதில் அவை நிலை கொள்கின்றன. ஆக மாணவர்களை மையப்படுத்திய இந்த வழியில் அமைந்த கற்கை இடம் பெற்றால் தனி ஆசிரியர் உதவி முறை (ரியூசன்) முற்றுப் புள்ளி பெற்றுவிடும். பதிலாகப் புத்தூக்க வகுப்புகள் மூலம் (Refresher Classes) பிள்ளைகள் ஐயங்களில் தெளிவு பெறலாம். கூடவே பயிலறிவும் (Practical) தரப்படுகிறது. இந்த முறையில் பயின்று தேறும் பட்டதாரிகள் (Graduates) அல்லது பட்டயதாரிகள் (Diploma Holders) தன் துறையில் குறைந்தது 60% பட்டறிவு பெற்று நிறைவான தகைமை பெற்றுத் தன்னம்பிக்கையுடன் திகழ்கிறார்கள். நம் நாட்டுக்கல்வி புத்தகப் பூச்சிகளையே உருவாக்கியது. இது மாற்றப்பட வேண்டும் இதைத்தான் வள்ளுவர்–

**"கற்கக் கசடற கற்பவை....."**

என்று அறிவுறுத்தினார். கல்வியில் தரமுயர்ந்து உலக அரங்கில் ஈடுகொடுக்க எமது நாட்டுக் கல்வி முறை மாற்றப்பட்டே ஆக வேண்டும்.

மேலை நாடுகளில், வளர்ந்த நாடுகளில் ஒருவர் 21–22 வயதில் அடிப்படைப் பட்டதாரியாகி, 25–26 க்குள் முதுமாணிப்பட்டம் பெற்று, 30 வயதாகும் போது கலாநிதி/முனைவர் பட்டம் பெற்று 35 வயதாகும் போது துறைசார் நிபுணத்துவம் பெற்றவராக மாறுகிறார், நமது நாட்டில் இந்நிலை எப்போது?

# எனது பாடசாலை, எனது வாழ்க்கை, எனது நினைவுகள்

**இ. மதிவாணன்**

*கணக்காளர், சிட்னி, அவுஸ்திரேலியா*



**வா**ழ்க்கை என்பது ஒரு பயணம், சிலருக்கு அது நீண்டதாகவும் சிலருக்கு மிகவும் சிறிய தாகவும் அமைவதுண்டு. இந்த வாழ்க்கைப் பயணம் மேடு, பள்ளங்களுக் கூடாகச் செல்வது எல்லோருக்கும் பொதுவான ஒன்றாகும். எமது வாழ்க்கைப் பயணத்தில் பாடசாலைப்பருவம் என்பது இனிமையானது. சவால் நிறைந்தது. அத்துடன் இது எமது எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமாக அமைகிறது.

நாம் எமது வாழ்க்கையில் பலருக்குக் கடமைப்பட்டுள்ளோம். தாய், தந்தை, ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோர் இங்கு முதன்மை யானவர்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எனது ஆசிரியர்களை நினைவு கூர்ந்து நன்றி தெரிவிக்க விழைகிறேன்.

நான் எனது முதல் நாள் அனுபவத்தினை நினைத்துப் பார்க்கிறேன். வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நான் 1976 ஆம் ஆண்டு இணைந்தேன். அப்பொழுது அது புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை என அழைக்கப் பட்டது. நான் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரையும் படித்தேன். எனது முதல் நாள் அனுபவம் பயமும் ஆர்வமும் கலந்ததாக இருந்தது. திரு. வ. தம்பிப்பிள்ளை அப்பொழுது அதிபராக இருந்தார். நானும் பெரும்பாலான மாணவர்களைப் போன்று ஹாட்லிக் கல்லூரி நுழைவுப் பரீட்சை எழுதித் தோல்வி அடைந்தேன். எனது நண்பர்கள் ஹாட்லிக் கல்லூரியில் படிக்கும் பொழுது நான் வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் படிக்கிறேன் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்தேன். அப்பொழுது அது எனக்குப் பெரிய கவலையாக இருந்தது.

எனது அப்பா இராமச்சந்திரன் வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவன் என்பது அப்பொழுது எனக்குத் தெரியாது. இதனைத் தொடர்ந்து வரும் இரத்த பந்தம் என்றும் கூறலாம். என்னைத் தொடர்ந்து எனது தம்பி மணிவண்ணனும், அடுத்த ஆண்டு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நுழைந்தார். அவரும் ஹாட்லிக் கல்லூரி நுழைவுப் பரீட்சையில் தோல்வி அடைந்தே வேலாயுதம் மகா வித்தியாலயத்தை நாடினார். அவர் இப்பாடசாலையிலிருந்தே பொறியியல் பீடத்துக்கு அனுமதி பெற்றார்.

வேலாயுதம் மகா வித்தியாலய ஆசிரியர்கள் மிகவும் அன்பானவர்கள், கடமை உணர்வும் மாணவர்க்குக் கற்பிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உள்ளவர்கள். இதனை நான் குறுகிய காலத்தில் உணர்ந்து கொண்டேன். கடமை உணர்வு கொண்ட ஆசிரியர்களின் ஊக்கமும் உழைப்பும் என்னில் பெரிய மாற்றத்தினை ஏற்படுத்தின. நான் படிப்பில் ஓரளவு ஊக்கமும் காட்டினேன். வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நுழைந்தமை ஒரு சரியான முடிவு என அப்பொழுது உணர்ந்தேன்.

என் உள்ளத்தில் நிலைத்திருக்கும் சில ஆசிரியர்களைக் குறிப்பிடவேண்டியுள்ளது. ஆறுமுகம் ஆசிரியர் வெண்மையான வேட்டியும்,

வெள்ளைச் சட்டையும் அணிவது வழக்கம், அவர் தமிழும் சமயமும் திறமையாகக் கற்பித்தார். விநாயகம்பிள்ளை ஆசிரியர் கணிதம் நன்கு படிப்பித்தார். அவரை நாம் கதை சொல்லுமாறு அடிக்கடி வற்புறுத்துவோம். அவரும் சில நேரங்களில் கதை சொல்வதுண்டு. மதிபால சிங்கம் ஆசிரியர் அற்புதமாகச் சமூகக் கல்வி கற்பித்தார். இவர் தான் எனக்கு அரசியலிலும், வரலாற்றிலும் ஆர்வம் ஏற்படுத்தியவர். தியாகராசா ஆசிரியர் பௌதிகவியல் படிப்பித்தார். நாங்கள் உயர்தர வகுப்பில் கற்கும் பொழுது வெளி வகுப்புகளுக்குச் செல்வதால் பாடசாலையில் இவர் கற்பிக்கும் போது ஆர்வம் காட்டுவது இல்லை. ஆனாலும் தியாக ராசா ஆசிரியர் நேரம் தவறாது வந்து தமது கடமையைத் அற்புதமாகச் செய்வார்.

நான் சாதாரண பரீட்சையில் சித்தி அடைந் ததும் எனது அப்பா ஹாட்லிக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற முயன்றார். அதனை நான் ஏற்கவில்லை. இங்கே கற்க முடிவு செய்தேன்.

நாங்கள் கற்ற காலத்தில் இரண்டு கொட்டில் வகுப்புகள் இருந்தன. பின்னர் அவை உடைக்கப்பட்டு மாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டது. அதே போன்று முகப்புக் கட்டிடமும் உடைக்கப்பட்டு இரண்டு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது.

பாடசாலையில் நடைபெறும் சரஸ்வதி பூசை நிகழ்ச்சிகள் மிகவும் பசுமையானவை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறும் காலைப் பிரார்த்தனையும் அதன் பின்பு தொடரும் அதிபர் உரையும் மறக்க முடியாதவை.

1982 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதினேன். பல்கலைக்கழக அனுமதி கிடைக்க வில்லை திரும்பவும் உயர்தரப் பரீட்சை எழுத வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டேன். 1983 ஆம் ஆண்டு இலங்கை வாழ்தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு கறுப்பு ஆண்டு. இனப்படுகொலை காரணமாக நான் படிப்பை நிறுத்திக் கொண்டேன். எனது பாடசாலை வாழ்க்கையும் முடிவுக்கு வந்தது. 1983 இலிருந்து 1989 வரையும் எனது வாழ்க்கை பல பாதைகளிலும் அலைந்து திரிந்தது.

இந்தச் சந்தர்பத்தில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது. திரு. ஏகாம்பரம் அதிபர் அவர்கள் எனது தந்தையை நன்கு அறிந்தவர். அவர் ஒரு நாள் எனது தந்தையிடம் தம்மை வந்து பார்க்குமாறு எனக்குச் சொல்லும்படி வேண்டினார். அவரை அவரது வீட்டில் சென்று சந்தித்தேன். அவர் எனக்குச் சில அறிவுரைகளைக் கூறினார். 'கெடுகுடி சொல்கேளாது' – எனக்கு எதுவும் காதில் ஏறவில்லை, அவர் சொன்னதை ஒரு காதால் கேட்டு மறு காதால் வெளியில் விட்டேன்.

1989 ஆம் ஆண்டு காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலையில் தொழில் கிடைத்தது. 1990 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பித்தது. சீமெந்துத் தொழிற்சாலை மூடப்பட்டது. நான் கொழும்புக்குச் சென்று இலண்டன் கணக்காளர் பரீட்சை எழுதினேன். அதன் பின்னர் சிலகாலம் கொழும் பில் மகாராஜா நிறுவனத்தில் பணி புரிந்தேன். பின்னர் சிங்கப்பூரில் தொழில் கிடைத்தது. இப்போது அவுஸ்திரேலியாவில் கணக்காளராக இருக்கிறேன்.

இறுதியாக அவுஸ்திரேலியாவில் செயற்படு கின்ற பழைய மாணவர் சங்கத்தினைப் பற்றி எழுதி நிறைவு செய்கின்றேன். திரு. ஏகாம்பரம் அதிபர் 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியா வந்த பொழுது வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தினை ஸ்தாபித்தார். பலரது முயற்சிகளால் இது செயற்பட்டுக் கொண்டிருக் கிறது. எமது பாடசாலைக்கு வேண்டிய உதவிக ளைப் புரிவதே எமது நோக்கம் ஆனால் எமது சங்கம் குழந்தைப் பருவத்திலேயே இன்னும் உள்ளது. சில ஆண்டுகளில் இது பெரிதாக வளர்ந்து பாடசா லைத் தேவைகளை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

வேலாயுதம் மகா வித்தியாலயம் மேலும் பல நூறு வருடங்களைக் கடந்து நிலைபெற்று நிற்க வாழ்த்தி நிறைவு செய்கின்றேன்.

# யாழ்/ வேலாயுதம் மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்க-கொழும்புக்கிளை ஆண்டுப் பொதுக் கூட்டத்தில், அவுஸ்திரேலியா-வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. நவரட்ணராசா ஜெயச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரை.



**இ**ங்கு வருகை தந்திருக்கும் வேலாயுதம் மகா வித்தியாலய முன்னை நாள் அதிபர் திரு. ஏகாம் பரம் அவர்களுக்கும், ஏனைய வேலாயுதம் மகா வித்தி யாலய முன்னை நாள் அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர்கள், மற்றும் ஏனையோருக்கும் எனது முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் பொறியியலாளராவதற்கு முக்கிய காரணமாயிருந்த மறைந்த எனது தாயாரின் அந்தியேட்டிக் கடமைகளைப் புரிவதற்காக இலங்கைக்கு வந்திருக்கின்ற இவ்வேளையில் உங்கள் அனைவரையும் சந்திப்பதற்கும், உங்கள் முன் பேசுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்தித் தந்த ஏகாம்பரம் Master அவர்களுக்கும் கொழும்புப் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழுவினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கள் அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்க நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட முன் சற்று எனது பாடசாலை வாழ்க்கையையும் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். பாடசாலை வாழ்க்கை என்பது நிச்சயமாக எல்லோர் வாழ்விலும் ஒரு வசந்த காலமாக அமையும் என்ற கூற்றில் துளியளவு சந்தேகமும் எனக்கு இல்லை.

**6ம்** தரத்திலிருந்து உயர்தரம் வரை எனது பாடசாலை வாழ்க்கை வேலாயுதம் மகா வித்தியா லயத்தோடு பின்னிப் பிணைந்தது.

எனது பாடசாலை வாழ்க்கையின் ஆரம்ப கட்டங்களில் படிப்பை விட விளையாட்டிலேயே அதிக அக்கறை காட்டினேன். இதன் விளைவாக மெய்வல்லுனர் போட்டிகளில் அதீத ஆர்வத்தோடு பல தடவை பங்கேற்று ஒவ்வொரு தடவையும் சான்றிதழ்களையும், சில தடவைகள் கேடயங்களையும் வென்றிருக்கின்றேன். இதன் காரணமாக நான் பெருமையாகக் கருதும் Athletic Captain பதவியும், சோழ இல்ல Captain பதவியும் எனக்கு கிடைத்தன. அது மட்டுமல்லாமல் சாரணர் இயக்கத்திலும் நான் இருந்ததையிட்டுப் பெருமை யடைகின்றேன்.

மாணவர் பராயத்தைப் பற்றி யோசிக்கும் போது பலருக்கும் உடனேயே ஞாபகத்திற்கு வருவது அவர்களது குறும்புகளும் சேஷ்டைகளும் தான். இதற்கு நானும் விதிவிலக்கல்ல. பாடசாலை நேரத்தில் எங்கள் பாடசாலைக்கு அயலிலுள்ள விளாங்காய்களை கல்லால் எறிந்து பொறுக்கி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது "................." Master இடம் பிடிபட்டுத் தண்டனை அனுபவித்தது சுவையான சுகமான அனுபவங்கள். உங்களில் சிலரும் இந்த விதமான பாதைகளைக் கடந்து வந்திருப்பீர்கள் என்றே நம்புகிறேன். காலம் கடந்து எனது சிந்தனை படிப்பை எட்டிப் பார்த்த போது நான் 10ஆம் வகுப்பை எட்டியிருந்தேன். அதன் பிறகான காலங்களை நான் அதிகளவில் படிப்பில் செலவிட்டு இப்பொழுது இந்த நிலையில் உங்கள் முன் நிற்கிறேன்.

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பிரிவில் தோற்றி அகில இலங்கை ரீதியில் முதல் 10 இடங்களுக்குள்

தேர்ச்சியடைந்தேன். என் திறமைச் சித்திக்குக் கிடைத்த மகாப்பொல புலமைப் பரிசில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என் கல்வியைத் தொடரப் பெரும் உறுதுணையாக அமைந்ததையிட்டு இன்றும் நான் பெருமையடைகின்றேன்.

பல்கலைக் கழகத்தில் எனது முதல் பட்டப் படிப்பை மேற்கொண்டு சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று உயர்ப்படிப்பை மேற்கொள்ள Imperial College, University of London க்கு சென்றேன். தற்போது Australia இல் State Water இல் Project Manager ஆகத் தொழில் புரிகின்றேன்.

எந்தவொரு கட்டிடமும் உறுதியாக இருக்க வேண்டுமெனில் அதன் அத்திவாரம் உறுதியாக இருக்க வேண்டும். இத்துடன் எனது பாடசாலை வாழ்க்கையைப் பற்றி அதிகம் கூறாமல் எங்களது அவுஸ்திரேலிய பழைய மாணவர் சங்க செயற்பாடுகள் பற்றிச் சற்றுச் சுருக்கமாகக் கூறலாம் என நினைக்கிறேன். அதேபோல் எனது இந்த நிலைக்குக் காரணமாக வேலாயுதம் மகா வித்தியாலயமே அமைந்தது. அக் காலத்தில் திரு. ஏகாம்பரம் அவர்களே அதிபராக இருந்து பாடசாலையை வழி நடத்தினார். என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோருக்கு ஏற்படும் பிரச்சனைகள் அனைத்தும் அவுஸ்திரேலியாவுக்கு இடம்பெயர்ந்தோருக்கும் உண்டு. அங்கு வேலையைத் தேடும் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக வேலை தக்க வைத்துக்கொள்ளும் பிரச்சனையும் உண்டு. இலங்கையில் அரச வேலை கிடைத்தால் அது ஓய்வுபெறும் வரை நிரந்தரம். ஆனால் அங்கு அரச வேலை கிடைத்தாலும் அது கத்திமேல் நடப்பதை போன்றதே. எந்த நிமிடம் வேலை பறிபோகும் என்ற பயத்தோடு வேலை செய்ய வேண்டும்.


இதற்கு மேலதிகமாக காலநிலை மாற்றங்களுக்கும் கலாச்சாரப் பிரச்சினைகளுக்கும் எங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதில் சில நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கிறோம். இவ்வாறான சிக்கலான சூழ்நிலையிலும் வேலாயுதம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க அவுஸ்திரேலியாக் கிளையைத் தொடங்க வேண்டும் என்ற சிந்தனை எம்மத்தியிலே இருந்தாலும் அதற்குச் செயல்வடிவம் கொடுக்க முடியவில்லை.

ஏகாம்பரம் அதிபர அவுஸ்தீரேலியாவுக்கு விஜயம் செய்தபோது அவர் மீது கொண்ட மதிப்பு எங்களது சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்க உறுதுணையாக அமைந்தது.

கனடா, கொழும்பு பழைய மாணவர் சங்கங்களைப் போலன்றி எமது அவுஸ்திரேலியப் பழைய மாணவர் சங்கம் குறைந்தளவான அங்கத்தவர்களையே கொண்டுள்ளது. இருந்தும் நாம் எம்மால் முடிந்த உதவிகளைப் பாடசாலைக்குச் செய்ய முயற்சித்து வருகிறோம்.

எமது அவுஸ்திரேலிய செயற்குழு இதுவரை **3–4** முறை கூடியுள்ளது. நானும் ஒரு செயற்குழு உறுப்பினராக இருப்பதில் பெருமையடை கின்றேன். எமது பாடசாலைக்கு நிதிதிரட்டும் முகமாக இவ்வருட இறுதிக்குள் ஒரு குடும்ப ஒன்றுகூடலை நடத்துவதற்கு முதற்கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ் ஒன்று கூடலுக்குப் பழைய மாணவர்கள் மட்டுமன்றி எமது நண்பர்களின் குடும்பங்களையும் அழைக்க நாம் திட்டமிட்டுள்ளோம். இவ் ஒன்றுகூடலுக்கு இசைக்குழுவை ஒழுங்கு செய்வதற்கான பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன்.

அவுஸ்திரேலியாவில் இருக்கும் பழைய மாணவர்களுக்கு மேலதிகமாக New Zealand, Singapore போன்ற நாடுகளில் இருக்கும் பழைய மாணவர்களையும் நாம் எமது சங்கத்தில் இணைக்க முயற்சித்து வருகிறோம். அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கம் ஏகாம்பரம் அதிபர் உடன் மின்னஞ்சல், தொலைபேசி மூலம் தொடர்புகளைப் பேணிவருகிறது. இதன் மூலம் அவுஸ்திரேலியப் பழைய மாணவர் சங்க நடவடிக்கைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். எங்கள் பணி தொடரும் எனக் கூறிக்கொள்கிறேன்.



On left Rathnajothi (Coach) E. Aazhikumaran (Centre) on right Pradeep Samarasinghe (President) Sri Lanka Karate Do Association

# JUNIOR NATIONAL KARATE CHAMPIONSHIP 2009

## *Aazhikumaran Clinches Gold Medal*



E. Aazhikumaran won the gold medal in the under 12 events representing the North for the first time at the Junior Karate Championship organized by the Sri Lanka Karate Association that was concluded at the Sugathadasa Indoor Stadium on December 30, 2009.

The inaugural event was worked out in the presence of the Minister Hon. Gamini Lokuge, Mr. Rositha Rajapakse, Western Provincial Council Minister Upali Kodikara, Mr. Thilanga Sumathipala and Colombo Mayor. The event was organized by Pradeep Samarasihghe, President, Sri Lanka Karate Do Organization.

Approximately 6000 competitors participated in this event and the winners were awarded medals and certificates.

# எமது நினைவில் அகலா முன்னாள் ஆசிரியர்கள்

Kanapar Kanapathipillai
Vallipuram Velupillai
Aru Somasuntharampillai
S. Sivapathasuntharam

} திரு. வேலாயுதபிள்ளை அவர்களின் காலத்தில் ஆசிரியர்களாக சேவை செய்தோர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ச. கணபதிப்பிள்ளை | 24.08.1921 | 28.06.1961 | | தமிழ் |
| 2. வ. சுப்பிரமணியம் (V.S) | | | சைவப்புலவர் | |
| 3. சோ. அருணாசலம் | | | | |
| 4. இ. கனகசபாபதி | | 31.03.1957 | பண்டிதர் | தமிழ், சமயம் |
| 5. கு. தணிகாசலம் | | | | |
| 6. வே. முருகேசபிள்ளை | 01.09.1927 | | | சித்திரம், சமயம் |
| 7. க. உலகநாதர் | | | | |
| 8. வி. காசிநாதர் | 01.08.1927 | 31.10.1957 | | |
| 9. வி. கந்தப்பு | | | | |
| 10. சி. சுப்பிரமணியம் (C.S) | | | | |
| 11. ச. செல்லையா | | | | எண்கணிதம் |
| 12. சி. பொ. சிவபாதம் | | | B.A (Madras) | ஆங்கிலம் |
| 13. த. பத்மநாபன் | | | | ஆங்கிலம் |
| 14. க. ஆறுமுகம் | | | | ஆங்கிலம், கணிதம் |
| 15. பொ. சபாரத்தினம் | | | BSc.Dip.in.Edu | |
| 16. N.S. இராஜகோபால் | | | M.A (Madras) | ஆங்கிலம், சரித்திரம் |
| 17. K. இராமகிருஷ்ணப் பணிக்கர் | | 30.04.1957 | B.Sc | தாவரவியல், விலங்கியல், சுகாதாரம் |
| 18. க. முருகுப் பிள்ளை | | | | கேந்திரக் கணிதப் பொறி முறை வரைதல் |
| 19. வ. சு. கதிர்காமத்தம்பி | 01.08.1954 | 26.02.1977 | | உடற்பயிற்சி |
| 20. சி. பத்மநாதன் | 01.01.1952 | | | கணிதம், ஆங்கிலம் |
| 21. க. துரைரத்தினம் | 01.06.1952 | 15.09.1960 | B.A. (Cey) | சரித்திரம், குடியியல் |
| 22. வே. ஈசுரபாதம் | 01.11.1955 | 21.08.1984 | B.A. (London) | ஆங்கிலம்,சரித்திரம், குடியியல் |
| 23. க. பொன்னம்பலம் | 06.05.1957 | 30.06.1972 | B.Sc | உயிரியல், இரசாயனம் |
| 24. மு. குமாரசாமி | 12.01. 1959 | 22.07.1980 | Sc. Trd | விஞ்ஞானம் |
| 25. வை. கிருஷ்ணபிள்ளை | 16.09.1960 | | B.A | ஆங்கிலம், குடியியல் |
| 26. S. சிவபாதசுந்தரம் | 12.01.1972 | 31.01.1975 | B.Sc | தூயகணிதம், பிரயோக கணிதம் |
| 27. T. S. சிவப்பிரகாசம் | 01.08.1961 | | Eng. Trd | ஆங்கிலம் |
| 28. மு. சின்னத்துரை | 02.01.1967 | | Eng. Trd | ஆங்கிலம் |
| 29. க. கந்தையா | 01.07.1963 | | Gen. Trd | தமிழ் |

| | | | | |
|---|---|---|---|---|
| 30. S. றோய்காந்தராஜ் | 01.03.1963 | | B.ScDip.in.Edu | உயிரியல் |
| 31. ச. சேவற்கொடியோன் | | | B.A.Dip.in.Edu | ஆங்கிலம், சரித்திரம், குடியியல் |
| 32. இ. மகேசன் | 01.01.1964 | | Eng.Trd. (Maharagama) | சமயம், ஆங்கிலம் |
| 33. ஆ. கார்த்திகேசு | 17.11.1973 | 09.11.1980 | Isaimani | சங்கீதம் |
| 34. க. விநாயகம்பிள்ளை | 01.01.1967 | 30.06.1985 | Maths. Trd | கணிதம் |
| 35. செ. நவரத்தினசிங்கம் | 01.01.1969 | | B.Sc | இரசாயனம் |
| 36. ச. தீபூசியஸ் | 11.01.1969 | 01.02.1978 | B.Sc | பௌதிகம் |
| 37. அ. சின்னத்துரை | 01.09.1969 | 08.09.1981 | B.Sc | உயிரியல் |
| 38. பொ. வேலாயுதம் | 01.02.1971 | 31.03.1984 | B.Sc | தூயகணிதம்,பிரயோக கணிதம் |
| 39. க. ச. குலசிங்கம் | 12.03.1969 | 19.10.1982 | Eng. Trd (Palaly) | ஆங்கிலம், சமயம் |
| 40. த. ந. பஞ்சாட்சரம் | 01.09.1971 | 11.11.1982 | | ஆங்கிலம், சமயம் |
| 41. ச. சி. இராமசாமி | 17.02.1969 | 18.06.1984 | Gen.Trd | தமிழ் |
| 42. V. பூபாலசுந்தரம் | 17.01.1970 | 28.02.1977 | B.Com | வர்த்தகம் |
| 43. த. சங்கரப்பிள்ளை | 20. 01.1969 | 23.04.1974 | B.A | ஆங்கிலம் |
| 44. வே. மதிபாலசிங்கம் | 15.02.1973 | 09.12.1987 | Gen.Trd | தமிழ், சமயம் |
| 45. ஜோ. அருட்பிரகாசம் | 15.01.1974 | 06.12.1990 | Eng. Trd | ஆங்கிலம் |
| 46. வ. வே. நவரத்தினம் | 01.01.1973 | 07.11.1995 | Com. Trd | வர்த்தகம், சமயம் |
| 47. வே . கிருஷ்ணன் | 05.05.1978 | 15.06.1988 | B.A | ஆங்கிலம், சமூகக்கல்வி |
| 48. க. நடராசா | 01.05.1978 | 07.04.1990 | Art. Trd | சித்திரம் |
| 49. இ. சந்திரசேகரசர்மா | 15.02.1984 | 31.12.1990 | Sc. Trd | விஞ்ஞானம் |
| 50. சி. இராஜேந்திரா | 15.05.1975 | 14.10.1988 | Sc. Trd | விஞ்ஞானம் |
| 51. கோ. வித்தியாசாகரம் | 24.01.1977 | 01.02.....93 | B.A | சமூகக்கல்வி, ஆங்கிலம் |
| 52. பொ. சிவசெந்திநாதன் | 15.02.1984 | | B.Sc | கணிதம் |
| 53. திருமதி. ஜெ. குலசிங்கம் | 17.05.1983 | 01.01.1993 | Sp.Eng.Trd | ஆங்கிலம், சமயம் |
| 54. திருமதி. க. செல்வரத்தினம் | 15.02.1984 | 01.01.1984 | B.Sc | விலங்கியல், விஞ்ஞானம் |
| 55. செல்வி. இ. செல்வநாயகம் | 16.01.1985 | 26.06.1994 | | ஆங்கிலம் |
| 56. செல்வி. அ. கனகரத்தினம் | 01.05.1986 | 03.03.1993 | B.A | தமிழ், சமயம் |
| 57. திருமதி.சி.நளினிசாந்தி | 01.04.1989 | 31.12.1996 | B.A | தமிழ், சமூகக்கல்வி |
| 58. செல்வி.வி. மாரிமுத்து | 01.04.1989 | 01.01.1991 | B.A | தமிழ், சமூகக்கல்வி |
| 59. மா. இராஜஸ்காந்தன் | 30.03.1984 | .......1992 | B.Sc | கணிதம் |
| 60. ச. கைலாசபதி | 04.06.1984 | 01.01.1992 | Sp.Sc.Trd | விஞ்ஞானம் |
| 61. ச. புஸ்பதாஸ் | 06.07.1982 | 11.02.1994 | Maths.Trd | கணிதம் |
| 62. ப. க. ஆறுமுகம் | 01.01.1972 | 02.11.1995 | Gen. Trd | தமிழ், ஆங்கிலம் |
| 63. தி. சிவபாதசுந்தரம் | 01.01.1958 | | B.A | ஆங்கிலம், தமிழ் |
| 64. நா.வைத்தியானந்தன் | 01.03.1979 | | Voc.Trd. | வானொலித் தொழில்நுட்பம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 65. க. தவயோகநாதன் | 12.03.1990 | ........1995 | B.Sc | கணிதம் |
| 66. வி. நடராசா | 05.09.1988 | 18.11.1993 | Gen. Trd | |
| 67. A. நேசதுரை | 22.04.1975 | 30.04.1978 | B.A | ஆங்கிலம் |
| 68. கே. எஸ். பாஸ்கரதாசன் | 16.03.1977 | 06.11.1978 | Com.Trd | வர்த்தகம் |
| 69. S.A. இரத்தினம் | 22.02.1981 | 31.12.1985 | B.A | சமூகக்கல்வி |
| 70. க. சிதம்பரநாதன் | | | B.Sc | தூயகணிதம், கணிதம் |
| 71. S. வர்ணகுலசிங்கம் | | | B.Sc | பௌதிகம் |
| 72. S. கனகசபை | | | | |
| 73. R. கருணாகரன் | | | B.Sc | இராசாயனம் |
| 74. N. இராசரத்தினம் | | | B.A | தமிழ், சமூகக்கல்வி |
| 75. செல்வி.P. செல்வமலர் | | | | |
| 76. N. நாராயணபிள்ளை | | | | |
| 77. K. சிவபாதசேகரம் | | | Maths. Trd | கணிதம் |
| 78. N. இராமச்சந்திரன் | | | B.Com | வர்த்தகம், பொருளியல் |
| 79. செல்வி உமாஇராசமாணிக்கம் | | | | சங்கீதம் |
| 80. சி. தியாகராசா | | | B.Sc | தூயகணிதம், பௌதீகம் |
| 81. சே. ஏகாம்பரநாதன் | 06.05.1957 | 13.11.1974 | B.A.(Hons) (Cey) Dip.in.Edu | தமிழ், சமயம் |
| 82. K. குலசிங்கம் | | | Com.Trd | வர்த்தகம் |
| 83. கந்தையா | | | B.Sc | பௌதீகம் |
| 84. ச. சிவஞானசுந்தரம் | | | Maths. Trd | கணிதம் |
| 85. செ. சிவஞானசுந்தரம் | | | B.A | பொருளியல் |
| 86. பூபால் | 1947 | 1948 | M.A | |
| 87. அ. நடேசபிள்ளை(சென்னை) | | | B.A (Madras) | |
| 88. மு. ஆ. தங்கராசா | 01.01.1948 | 30.08.1961 | B.Sc (London) | கணிதம், இரசாயனம் |
| 89. வ. தம்பிப்பிள்ளை | 01.01.1956 | 31.12.1978 | B.A (Madras) | கணிதம் |
| 90. ஆ. ஜெகநாதன் | .........1988 | 01.12.2001 | B.Com | வர்த்தகம் |
| 91. சி. தேவராசா | 01.01.1979 | 15.06.1988 | B.Sc (Madras) | தாவரவியல், விஞ்ஞானம் |

# Velautham Maha Vidyalayam
# Notable Alumni

| | | |
|---|---|---|
| 1. | Prof. K. Kanapathipillai, Ph.D | Head of the Dept. of Tamil, University of Ceylon, Peradeniya |
| 2. | K. Alvappillai B.A.(Lond) C.C.S, O.B.E | Permanent Secretary |
| 3. | A. Veluppillai Ph.D. | Head of the Department of Tamil, University of Jaffna. |
| 4. | A. Kanthiah Ph.D. | Washington, U.S.A |
| 5. | S.P. Shivapatham, | Director of Education, Vavuniya |
| 6. | S. Murugesampillai | A.G.A |
| 7. | A. Somasuntharampillai | Accountant |
| 8. | K. Selvanayagam | UN Expert |
| 9. | A. Maniccavasagar | Director General, Telecom Regulatory Commission of Sri Lanka. |
| 10. | K. Ponnampalam | Education Officer (Science) |
| 11. | S. Sellathurai | Deputy Director of Education |
| 12. | S. Ehamparanathan | Deputy Director of Education |
| 13. | Raj Subramaniam | Accountant, Principal Executive Director, Sri Lanka Business Development Centre. |
| 14. | V. K.Sivapragasam, M.A | Lecturer, Teachers' Training College. |
| 15. | S. Antonymuthu | Lecturer, Teachers' Training College. |
| 16. | A. Sangarapillai | Engineer |
| 17. | K. Nadarajah | Accountant |
| 18. | V. Senathirajah | Accoutant |
| 19. | Dr. S. Yoganathan, MRCP | Medical Specialist |
| 20. | Dr. S. Sritharan | U.S.A |
| 21. | N. Sivakumar | Engineer |
| 22. | N. Ganesalingam | Engineer |
| 23. | Dr. K. Parimelalahan, MBBS | Doctor |
| 24. | N. Varatharajan | Deputy Director of Education |
| 25. | T. Mossekeran | Engineer |
| 26. | Dr. S. Srilogarajah | |
| 27. | S. Sivapatham | Engineer |
| 28. | K. Sivayogam | Engineer |
| 29. | K. Ragunathan | Veterinary Surgeon |
| 30. | E. Vinayakarajah, M.Sc | Production Manager Carlsberg, Vietnam |

| | |
|---|---|
| 31. K.P.Anandanadesan | Area Manager, Bank of Ceylon, Jaffna. |
| 32. N. Jeyachandran | Engineer, Australia |
| 33. R. Manivannan | Engineer |
| 34. V. K. Pooranakumaran | Engineer |
| 35. E. Shanmugarajah | Engineer - Singapore |
| 36. S. Tharmakulasingam | Engineer - Canada |
| 37. Dr. S. Elango | |
| 38. S. Raveendrathas | Engineer |
| 39. R. Mathivanan | Accountant |
| 40. S. Kanapathipillai, PhD, | Lecturer, University of New South Wales, Australia |
| 41. K. Ganendran | Software Engineer |
| 42. V. Sandrasegaram | Senior Project Engineer - Australia |
| 43. S. Ganeshamoorthy | Civil Engineer |
| 44. N. Ganeshalingam | Electrical Engineer |
| 45. S. Skanthakumar | Engineer |
| 46. K. Ramachandran | Engineer |
| 47. K. Ponnampalam | Retd. Education Officer (Science) |
| 48. Dr. S.Vigneswaramoorthy | Canada |
| 49. B. Nedumaran | |
| 50. M. Faleel Marikkar | Director, FORUT |
| 51. N. Selvakumaran | Dean, Faculty of Law, University of Colombo |
| 52. N. Sivakumar | Rtd. Deputy Legal Draftsman |
| 53. N. Veluppillai | Rtd. Legal Attache French Trade Commission |
| 54. S. Nanthakumar | Deputy Director of Education, Point Pedro |
| 55. B. Sivaji | Deputy Comissioner of Inland Revenue |
| 56. V. Thamotharampillai | Accountant |
| 57. S. Sadadcharanathan | Retd. Deputy Postmaster General |
| 58. R. Raveendran | Director, Tamil Unit, Rupavahini |
| 59. K. Ketheeswaran | Accountant |
| 60. V. Santhiranayagam | Engineer |
| 61. V. Thillainathan | Manager, Union Bank, Vavuniya. |
| 62. C. Kanthappa | |
| 63. Dr. R. Muralimanohar | |
| 64. A. Sooriyakumar | |
| 65. Dr. V. Denish | Colombo North Hospital |
| 66. K. Kamaleswaran | Deputy Director, Treasury |
| 67. N. Kugan | Accountant |

| | |
|---|---|
| 68. S. Ganesarajah | Accountant |
| 69. A. Sathiyakumar | |
| 70. R. Sooriyakumaran Ph.D | U.S.A |
| 71. K. Sivananthan | |
| 72. Dr. K. Thiruvatham | Cardiologist |
| 73. Dr. S. Sritharan | Cardiologist |
| 74. V. Thuruvasangary | Agricultural Scientist |
| 75. K. Thevasigamany | C.A.S, G.A |
| 76. P. Sabaratnam | Principal |
| 77. K. Ragunathan | Engineer, Australia. |
| 78. P. Ragupathy | Engineer, U.K |
| 79. K. Sathkunarajah | Accountant, Australia. |
| 80. Siva Krishnamoorthy | Retd. Vice Principal, Colombo Hindu College |
| 81. Bala Vairavanathan | Retd Adm. Officer, Departmanent of Hindu Religious and Cultural Affairs, Colombo. |
| 82. Dr. K.M. Velummylum | Retd. Director General of Health Services |
| 83. Dr. J.R.J. Rohi Baskaran | Base Hospital, Point Pedro |
| 84. M. Sivalingam | Local Editor, "THE VIRAKESARI", Express News Papers (Ceylon) Ltd |
| 85. M. Thayaparan | Deputy Superitendent of Customs, Colombo. |
| 86. M.B. Muthukumaru | Retd. Teacher, Jaffna Hindu College. |
| 87. N. Suriyakumar | Lecturer, Brunei |
| 88. M. Nadarajah | Retd. Controller, Department of Posts. |

# Velautham Maha Vidyalayam

## Head Teachers

| | | |
|---|---|---|
| Mr. K. Subramaniam | | |
| Mr. K. Suntharachari | | |
| Mr. V. Arunachalam | As per signature in the Log Book | 1938 |
| Mr. S. Pasupathi Iyer | As per signature in the Log Book | 29.01.1946 |

## Principals

| | | |
|---|---|---|
| Mr. V. Natarajah | As per signature in the Log Book | 04.06.1946-1947 |
| Mr. T. Ramanathapillai | | 1947 - 30.08.1961 |
| Mr. M.A. Thangarajah | | 31.08.1961 - 31.12.1970 |
| Mr. V. Thambipillai | Grade II | 01.01.1971 - 07.02.1977 |
| Mr. S. Ehamparanathan | SLEAS Class III | 08.02.1977 - 07.07.1991 |
| Mr. C. Thevarajah | Grade I | 08.07.1991 - 23.06.1994 |
| Mr. R. Gnanasegarampillai | Grade I | 26.06.1994 - 01.12.2001 |
| Mr. A. Jeganathan | | 02.12.2001 - 28.01.2009 |
| Mr. S. Thiraviyarajah | Grade II - 1 | 28.01.2009 - To date |

## வேலாயுதம் ம. வி. பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை 2010



இருப்பவர்கள் - (இ-வ): சி. இராஜேந்திரா, மு. தயாபரன், ந. ஜெயச்சந்திரன், வி. சேதுநாயகம், சே. ஏகாம்பரநாதன், மு. சிவலிங்கம், சிவா கிருஷ்ணமூர்த்தி, ச. சடாட்சரநாதன், இராஜ் சுப்பிரமணியம்.

நிற்பவர்கள் - (இ-வ) : ஆ. வேல்முருகு, பால வைரவநாதன், வ. அருளானந்தசிவா, வை. சிற்சபேசன், இரா. இரவீந்திரன், க. கமலேஸ்வரன், கா. கணேசலிங்கம், சி. வர்ணகுலசிங்கம், சே. சிறீரங்கநாதன், எஸ். கௌரி சங்கர், எஸ். பாலகிருஷ்ணன், எஸ். பாலசங்கர், ஜீ. சொக்கலிங்கம்.

## வேலாயுதம் ம. வி. பழைய மாணவர் சங்கம்- பருத்தித்துறை 2010



இருப்பவர்கள்-(இ-வ: )திரு. கி. குகநாதன் (செயலாளர்), திரு. க. ப. ஆனந்தநடேசன் (தலைவர்), திரு. பொ. அரவிந்தன் (பொருளாளர்)

நிற்பவர்கள்- (இ-வ): திரு. கி. நகுலதாஸ் (உறுப்பினர்), திரு. க. கனகேஸ்வரன் (உபசெயலாளர்), திரு. கி. சத்தியமூர்த்தி (உறுப்பினர்), திரு. வீ. கணேசலிங்கம் (உறுப்பினர்), திரு. தே. சுதிர்தன் (உறுப்பினர்)

சமூகமளிக்காதவர்கள் - திரு. சி. பத்மநாதன் (உபதலைவர்), திரு. செ. மாணிக்கவாசகர் (உறுப்பினர்), திரு. பே. பிறேம் குமார் (உறுப்பினர்), திரு. அ. ரவிச்சந்திரன் (உறுப்பினர்), திரு. வீ. சேந்தன் (உறுப்பினர்), திரு. ஜெ. சந்திரப்பிரகாசம் (உறுப்பினர்).

## வேலாயுதம் ம. வி. பழைய மாணவர் சங்கம்- அவுஸ்திரேலியக் கிளை 2010



(இ-வ): வி. சற்குணராசா, ந. ஜெயச்சந்திரன், வ. இளங்கோவன், ப. சிவராசா, எஸ். சிறீஸ்கந்தராசா, வ. சந்திரசேகரம், ந. இராமகிருஷ்ணன் (தலைவர்), இ. மதிவாணன் (செயலாளர்).

## வேலாயுதம் ம. வி. பழைய மாணவர் சங்கம்- கனடாக் கிளை 2010



இருப்பவர்கள்- (இ-வ): திரு. வி. சுந்தரலிங்கம், வி. சிவபிரகாசம், பி. கணேசமூர்த்தி, ஏ. பொன்னம்பலம், கே. சுந்தரலிங்கம், ஆர். நவரட்ணராஜா, சி. ஜெகநாதன்.

நிற்பவர்கள்- (இ-வ: ) திரு. குகராஜா, ஏ. நற்குணம், கே. கோபிநாத், ஏ. மாணிக்கவாசகர், ஆர். இரவீந்திரன், பி. சொக்கலிங்கம், எஸ். சிவஞானசுந்தரம், எஸ். மனோகரன், எஸ். விக்னேஸ்வரன்.

# Velautham Maha Vidyalayam - Point Pedro

## OBA Colombo Branch

(Executive Committee Elected on 23.07.2005)

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | Mr. S. Ehamparanathan | President |
| 2 | Mr. Raj. Subramaniyam | Vice President |
| 3 | Mr. A. Maniccavasagar | Vice President |
| 4 | Mr. M. Kumarasamy | Secretary |
| 5 | Mr. S. Sadachcharanathan | Treasurer |
| 6 | Mr. T. Shanmuganatha Sarma | Asst. Secretary |
| 7 | Mr. R. Manoharan | Asst. Treasurer |
| 8 | Mr. M.Sivalingam | Ex.Co.Member |
| 9 | Janab. M.F. Marikkar | Ex.Co.Member |
| 10 | Mr. V. Maniccavel | Ex.Co.Member |
| 11 | Mr. V. Senathirajah | Ex.Co.Member |
| 12 | Mr. S. Gowrisangar | Ex.Co.Member |
| 13 | Mr. R. Thangeswaran | Ex.Co.Member |
| 14 | Mr. R. Raveenthiran | Ex.Co.Member |
| 15 | Mr. S. Nadaraja | Ex.Co.Member |
| 16 | Mr. R. Mathivaanan | Ex.Co.Member |
| 17 | Mr. K. S. Nadarajah | Ex.Co.Member |
| 18 | Mr. G Soccalingam | Ex.Co.Member |
| 19 | Mr. V. Rathakrishnan | Ex.Co.Member |
| 20 | Mr. V. Thurapathan | Ex.Co.Member |

# J/Velautham M. V. Point Pedro

## OBA Colombo Branch

Executive Committee Elected on 22.04.2006

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | Raj Subramaniyam | Vice President |
| 3 | S. Rajendra | Vice President |
| 4 | M. Kumarasamy | Secretary |
| 5 | S. Nadarajah | Treasurer |
| 6 | T. Shanmuganatha Sarma | Asst. Secretary |
| 7 | R. Manoharan | Asst. Treasurer |
| 8 | M.Sivalingam | Ex.Co.Member |
| 9 | S. Sellathurai | Ex.Co.Member |
| 10 | M. Thayaparan | Ex.Co.Member |
| 11 | B. Vairavanathan | Ex.Co.Member |
| 12 | S. Gowrisankar | Ex.Co.Member |
| 13 | R. Raveenthiran | Ex.Co.Member |
| 14 | C. Rathnavadivel | Ex.Co.Member |
| 15 | V. Maniccavel | Ex.Co.Member |
| 16 | S. Navarathnarajah | Ex.Co.Member |
| 17 | V. Thurupathan | Ex.Co.Member |
| 18 | G Soccalingam | Ex.Co.Member |
| 19 | S. Sivakrishnamoorthy | Ex.Co.Member |
| 20 | S. Sadachcharanathan | Ex.Co.Member |

# Velautham Maha Vidyalayam

## OBA Colombo Branch

Office bearers elected at AGM on 05.05.2007)

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | M. Thayaparan | Vice President |
| 3 | M. Yoganathan | Vice President |
| 4 | M. Sivalingam | Secretary |
| 5 | C. Ratnavadivel | Asst. Secretary |
| 6 | S. Rajendra | Treasurer |
| 7 | R. Manoharan | Asst. Treasurer |
| 8 | Raj Subramaniam | Ex. Comm. Member |
| 9 | S. Sellathurai | Ex. Comm. Member |
| 10 | G Soccalingam | Ex. Comm. Member |
| 11 | M. Kumarasamy | Ex. Comm. Member |
| 12 | T. Shanmuganatha Sharma | Ex. Comm. Member |
| 13 | V. Maniccavel | Ex. Comm. Member |
| 14 | S. Navarathnarajah | Ex. Comm. Member |
| 15 | V. Thurupathan | Ex. Comm. Member |
| 16 | S. Sadachcharanathan | Ex. Comm. Member |
| 17 | R. Raveendran | Ex. Comm. Member |
| 18 | R. Gnanasegarampillai | Ex. Comm. Member |
| 19 | Siva Krishnamoorthy | Ex. Comm. Member |
| 20 | N. Yogaranjan | Ex. Comm. Member |

| | | |
|---|---|---|
| 1 | V. Senathirajah | Auditor |
| 2 | K. Sriranganathan | Auditor |

# Velautham Maha Vidyalayam

## OBA Colombo Branch

Office bearers elected at AGM on 27.04.2008

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | M. Thayaparan | Vice President |
| 3 | V. Sethunayagam | Vice President |
| 4 | M. Sivalingam | Secretary |
| 5 | M. Yoganathan | Asst. Secretary |
| 6 | S. Rajendra | Treasurer |
| 7 | R. Manoharan | Asst. Treasurer |
| 8 | Raj Subramaniam | Ex. Comm. Member |
| 9 | S. Sellathurai | Ex. Comm. Member |
| 10 | G Soccalingam | Ex. Comm. Member |
| 11 | K. Kamaleswaran | Ex. Comm. Member |
| 12 | B. Vairavanathan | Ex. Comm. Member |
| 13 | V. Maniccavel | Ex. Comm. Member |
| 14 | S. Navarathnarajah | Ex. Comm. Member |
| 15 | V. Thurupathan | Ex. Comm. Member |
| 16 | S. Sadachcharanathan | Ex. Comm. Member |
| 17 | R. Raveendran | Ex. Comm. Member |
| 18 | R. Gnanasegarampillai | Ex. Comm. Member |
| 19 | Siva Krishnamoorthy | Ex. Comm. Member |
| 20 | N. Yogaranjan | Ex. Comm. Member |

| | | |
|---|---|---|
| 1 | A. Adchiakumar | Auditor |
| 2 | K. Ganeshalingam | Auditor |

# Velautham Maha Vidyalayam

## OBA Colombo Branch

Office bearers elected at AGM on 03.05.2009

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | M. Thayaparan | Vice President |
| 3 | V. Sethunayagam | Vice President |
| 4 | M. Sivalingam | Secretary |
| 5 | M. Yoganathan | Asst. Secretary |
| 6 | S. Rajendra | Treasurer |
| 7 | A. Velmurugu | Asst. Treasurer |
| 8 | Raj Subramaniam | Ex.Co.Member |
| 9 | S. Sellathurai | Ex.Co.Member |
| 10 | G Soccalingam | Ex.Co.Member |
| 11 | R. Manoharan | Ex.Co.Member |
| 12 | B. Vairavanathan | Ex.Co.Member |
| 13 | S. Sadachcharanathan | Ex.Co.Member |
| 14 | S. Navarathnarajah | Ex.Co.Member |
| 15 | R. Raveendran | Ex.Co.Member |
| 16 | V. Senathirajah | Ex.Co.Member |
| 17 | C. Manickavasagar | Ex.Co.Member |
| 18 | S. Thangavelautham | Ex.Co.Member |
| 19 | V. Sitsabesan | Ex.Co.Member |
| 20 | A. Somathevan | Ex.Co.Member |

| | | |
|---|---|---|
| 1 | K. Ganeshalingam | Auditor |
| 2 | K. Kamaleswaran | Auditor |

# Velautham Maha Vidyalayam

## OBA Colombo Branch

Office bearers elected at AGM on 18.04.2010

| S/No | Name | Post Held |
|---|---|---|
| 1 | S. Ehamparanathan | President |
| 2 | M. Thayaparan | Vice President |
| 3 | Raj Subramaniam | Vice President |
| 4 | M. Sivalingam | Secretary |
| 5 | M. Yoganathan | Asst. Secretary |
| 6 | V. Sethunayagam | Treasurer |
| 7 | Siva Krishnamoorthy | Asst. Treasurer |
| 8 | S. Rajendra | Ex.Co.Member |
| 9 | K. Kamaleswaran | Ex.Co.Member |
| 10 | G Soccalingam | Ex.Co.Member |
| 11 | A. Velmurugu | Ex.Co.Member |
| 12 | B. Vairavanathan | Ex.Co.Member |
| 13 | S. Sadachcharanathan | Ex.Co.Member |
| 14 | V. Arulananthasiva | Ex.Co.Member |
| 15 | R. Raveendran | Ex.Co.Member |
| 16 | V. Sitsabesan | Ex.Co.Member |
| 17 | S. Balakrishnan | Ex.Co.Member |
| 18 | S. Balasankar | Ex.Co.Member |
| 19 | S. Varnakulasingam | Ex.Co.Member |
| 20 | S. Gowri Sankar | Ex.Co.Member |

| | | |
|---|---|---|
| 1 | K. Ganeshalingam | Auditor |
| 2 | K. Sri Ranganathan | Auditor |

| | | |
|---|---|---|
| 1. | திரு. V. தில்லைநாதன் | இரத்மலானை |
| 2. | திரு. V. மனோகரன் | புலோலி |
| 3. | திரு. K. பொன்னம்பலம் | கனடா |
| 4. | திரு. K. தங்கராசா | பருத்தித்துறை |
| 5. | திரு. சிவா கிருஷ்ணமூர்த்தி | வெள்ளவத்தை |
| 6. | திரு. N. குகன் | பருத்தித்துறை |
| 7. | திரு. A. மாணிக்கவாசகர் | தெஹிவளை |
| 8. | திரு. M. சிவலிங்கம் | வத்தளை |
| 9. | திரு. V. அருளானந்த சிவா | வெள்ளவத்தை |
| 10. | திரு. N. மோகரஞ்சன் | சொய்சாபுர |
| 11. | திரு. A. வேல்முருகு | சொய்சாபுர |
| 12. | திரு. S. சுரேஷன் | வெள்ளவத்தை |
| 13. | திரு. S.K. சின்னத்தம்பி | வெள்ளவத்தை |
| 14. | திரு. V.N. உமாபதி | சொய்சாபுர |
| 15. | திரு. S. இராஜேந்திரா | வெள்ளவத்தை |
| 16. | திரு. S. பாலகிருஷ்ணன் | பம்பலப்பிட்டி |
| 17. | திரு. V. சேதுநாயகம் | வெள்ளவத்தை |
| 18. | திரு. V. சிற்சபேசன் | வெள்ளவத்தை |
| 19. | திரு. G. சொக்கலிங்கம் | மட்டக்குளி |
| 20. | திரு. K. கணேசலிங்கம் | வெள்ளவத்தை |
| 21. | திரு. S. விக்கினேஸ்வரமூர்த்தி | சொய்சாபுர |
| 22. | திரு. S. ஏகாம்பரநாதன் | வெள்ளவத்தை |
| 23. | திரு. S. சடாட்சரநாதன் | வெள்ளவத்தை |
| 24. | திரு. ஆ. ஜெகநாதன் | பருத்தித்துறை |
| 25. | திரு. பாலவைரவநாதன் | வெள்ளவத்தை |
| 26. | திரு. G. கௌரி சங்கர் | இரத்மலானை |
| 27. | திரு. மு. தயாபரன் | வெள்ளவத்தை |
| 28. | திரு. S. பாலசங்கர் | வெள்ளவத்தை |
| 29. | திரு. மு. யோகநாதன் | பம்பலப்பிட்டி |

இம்மலர் உங்கள் கைகளில் மலர அன்பளிப்பு
வழங்கிய பெருமக்கள்.

# “வேலாயுதம்”

## மலர் வெளியீட்டுக்குழு

- திரு. சே. ஏகாம்பரநாதன்
- திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி
- திரு. பால. வைரவநாதன்
- திரு. மு. சிவலிங்கம்
- திரு. மு. தயாபரன்
- திரு. இரா. இரவீந்திரன்


*வெளியீடு*

**வேலாயுதம் மகாவித்தியாலயம்**

பழைய மாணவர் சங்கம் – கொழும்பு.

71A, பீற்றசன் ஒழுங்கை

கொழும்பு – 6

# வேலாயுதம்

1895 அழகே 2010



யா வேலாயுதம் மகாவித்தியாலயம்

கல்வி அழகே அழகு

DESIGNED & PRINTED BY UNIE ARTS +94 11 2330195